# உரையாசிரியர்களும் உரைமரபுகளும்

கூறு 1 : உரையின் தோற்றமும் வளர்ச்சியும்

கூறு 2 : இறையனார் - களவியல் உரை

கூறு 3 : இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளாதிகார உரை

கூறு 4 : சேனாவரையர் - தொல்காப்பியம் சொல்லதிகார உரை

கூறு 5 : பேராசிரியர் - தொல்காப்பியம் பொருளாதிகார உரை

கூறு 6 : நச்சினார்க்கினியர் - சீவகசிந்தாமணி உரை

கூறு 7 : பரிமேலழகர் - திருக்குறள் உரை

கூறு 8 : அடியார்க்கு நல்லார் - சிலப்பதிகாகர உரை

கூறு 9 : பெரியவாச்சான்பிள்ளை - திருப்பாவை உரை

கூறு 10 : பண்டிமணி - திருப்பாவை உரை (கதிர்மணி விளக்கம்)

# கூறு 1

## உரையின் தோற்றமும் வளர்ச்சியும்

தொன்மையான மொழி தமிழ்மொழியாயினும் அம்மொழியைப் புலவர்கள் காலந்தோறும் காத்து வளர்த்துப் பெருமை சேர்த்து வருகின்றனர். தமிழ் மொழி போற்றதற்கும் கற்பதற்கு இனிமையானது வளமானது மேன்மையானது எண்ணினால் இன்புறச் செய்வது. நூல்கள் தோன்றிய காலத்தில் அவை யாவரும் புரிந்து கொள்ளும் நிலையில் இருந்தன கற்றலின் கேட்டலே நன்கு என்ற சொற்களினால் ஒருவர் கூறுவதைக் கேட்டே கல்வி பயின்ற வழக்கம் மிகுதியும் உள்ளனவற்றைத் தெரிந்து கொள்ளலாம். எழுத வேண்டியவற்றை ஓலைச்சுவடிகளில் எழுதிப் போற்றிக் காக்க வேண்டிய நிலை இருந்தது. பலர் ஒரே சுவடியைக் கற்கும் நிலை இருந்தது. ஒருவர் படிக்க அதினை மற்றவர் கேட்டு அறியவும் செய்தனர். மிகுதியானவற்றை வாயாலே விளக்க வேண்டியும் இருந்தது. இந்நிலை நாடெங்கும் பரவி இருந்தது.

**செவி வழிச்செல்வம்:**

மாணாக்கர்களுக்கு ஆசிரியர் வாய்மொழியாகப் பழைய நூலுக்கு உரையும் விளக்கமும் கூறி வந்தார். பல தலைமுறையைத் தாண்டி வரும்போது அதற்கேற்ப பல விளக்கங்களையும் கருத்துக்களையும் சேர்த்துக் கொண்டு வளர்ந்து வந்தது. மாணவன் கேட்ட வினாக்களுக்கு ஆசிரியர் தக்க விடைகளைக் கொடுத்தனர். ஆசிரியர் - மாணவன் பிணைப்பு பெற்று கற்ற பரம்பரையிடையே செல்வாக்கு அடைந்து உரைகள் வளர்ந்து வந்தன. ஆசிரியர் தம் மாணாக்கர்களுக்கும் தந்தை தம் மக்களுக்கும் தாம் வழி வழியாகக் கேட்டு வந்த உரைகளை மரபு பிறழாமல் எடுத்துக் கூறி விளக்கினர். வாழையடி வாழையாக முன்னோர் கூறியவரை பின்னோர்க்கு எடுத்துக் கூறினர். வாய்மொழியாகப் பல உரைகள் பரவி வந்தன. உரை வந்த வரலாற்றை இவ்வாறு தெரிந்து கொள்ளலாம்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கிரனார் தம் மானார் கீரங் கொற்றனார்க்கு உரைத்தார். அவர் தேனூர் கிழார்க்கு உரைத்தார். அவர் படியங் கொற்றனார்க்கு உரைத்தார். அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார்க்கு உரைத்தார். அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்கு உரைத்தார். அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார். அவர் மாதவனார் இள நாகனார்க்கு உரைத்தார். இங்ஙனம் உரை வளர்ந்த வரலாறு கூறப்பறுெகிறது.

**செல்வாக்குப் பெற்ற வாய்மொழி:**

வாய்மொழி உரை ஏட்டிய எழுதப் பெற்றாலும் உரையாடல் செய்வது போல உள்ளது. நேரடியாக ஏட்டில் உரை எழுதுபவர்கள் பழைய மரபைத் தம்மையும் அறியாமல் மேற்கொண்டனர். வாய்மொழி தன் செல்வாக்கை எழுத்திலும் நிலை நாட்டியது. இறையனார் அகப்பொருள் உரையும் சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரையும் பேராசிரியர் திருக்கோவையாருக்கு எழுதிய உரையும் காலிங்கா திருக்குறளுக்கு எழுதிய உரையும் ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் கூறும் வகையில் வினா விடையாக உள்ளன.

**வளர்ச்சியின் பாதையில் உரை:**

வழி வழியாக நூல்களுக்கு உரைகேட்டுப் பழகியவர்களுக்குத் தொடக்கத்தில் விரிவான உரையோ விளக்கமா உரையோ எழுதவில்லை முதன் முதலில் அரிய சொற்களுக்குப் பொருளும் சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் வகையும் சில வரலாற்றுக் குறிப்புக்களையுமே மிகச் சுருக்கமாய் நினைவிற்காக எழுதி வைத்தனர். காலம் செல்லச் செல்லக் கருத்துக்களும் வளர்ந்தன. குறிப்புரையுடன் முன்னோர் கூறி வந்த விளக்கம் மேற்கொள் யாவும் விரிவடைந்தன. அவற்றையும் ஏட்டில் எழுதும் நோக்கம் ஏற்பட்டது. விரிவுரையுக் விளக்க உரையும் தோன்றின எடுத்துக்காட்டும் மேற்கொள் விளக்கமும் பெருகின. இவற்றையும் திறம்படக் கூறுவோர் இரண்டொருவரே தோன்றினர். அவர்களே அவற்றை எழுதி வைத்தனர். மயிலைநாதர், உரையின் பல்வேறு வகைகளை விளக்குகின்றார். நூலுரை உரைவிரி எனும் இவை ஆறு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொடர் தொகை மொழி, இவை நூலை ஒக்கும் உரை, நூற்கு உரை, நூலதுஉரை, நூற்கண் உரை, நூலன்னா உரை, நூலும் உரையும் என்றும் உரையை விரி, உரைக்கு விரி உரையது விரி உரைக்கண்விரி, உரைக்கும் விரி, உரை விரிவுடையது என்று நன்னூல் நூற்பா உரைப்பகுதி உரைகளைப் பற்றி விளக்குகிறது.

**செய்யுள் வடிவ உரைகள்**

உரைநடையில் மட்டுமன்றி, செய்யுள் வடிவிலும் சில உரைநூல்கள் தோன்றின. டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், செய்யுள் வடிவில் தோன்றிய உரைகளைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

“ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுள் உருவத்திலேயே உரை இயற்றுவதும் உண்டு. இது வடமொழியில் பெருவழக்கு. தமிழ் நூல்களிலும் சிவஞான போதத்துக்குரிய உதாரண வெண்பாக்களும்,

சித்தியார் முதலியனவும் உரைநிலையிலேயே உள்ளன. தேவாரப் பதிகங்களில் பாசுரம் முதலிய சிலவற்றிக்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் சொல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுள் உருவத்தில் உரையுண்டு. தனியே குறளுரை என்னும் பெயர் பெறாவிட்டாலும், அவை உரைகளின் தன்மையை உடையனவே.''

திருக்குறளுக்குப் பல உரைகள், செய்யுள் உருவில் தோன்றின. குறட்பா ஒன்றைக்கூறி, அதன் கருத்தை விளக்க ஏதேனும் ஒரு கதையோ வரலாறோ உதாரணம் காட்டி, பாடல் இயற்றும் வழக்கம் இலக்கிய உலகில் தோன்றியது.

''இரங்கேச வெண்பா, சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணம் கூறும் நூல்கள் உரை வகைகளிலே உதாரணம் கூறுதலும் ஒன்று ஆதலின், முற்கூறிய நூல்கள் திருக்குறளின் உரை நூல்கள் என்றே கூறல் தகும்'' என்று அவர் கூறுகின்றார்.

இவையேயன்றி, பழைய விருத்த நூல் ஒன்றும் உள்ளது அண்மைக் காலத்தில், திருக்குறள் அகவல் குட்டிக்குறள் திருக்குறள் இசைமாலை ஆகியவையும் செய்யுள் உருவில் திருக்குறளுக்கு உரை நூல்களாகத் தோன்றியுள்ளன.

சிவஞான சித்தியாருக்கு, குருஞான சம்பந்தர் செய்யுள் வடிவில் 'ஞானாவரண விளக்கம்' என்ற பெயரில் சூத்திரக் கருத்துகளை விளக்கி எழுதினார்.

பாவேந்தர் பாரதிதாசன், குறுந்தொகைப் பாடல்கள் சிலவற்றை, இக்காலத்தவர் எளிதில் பொருள் உணர்ந்து கற்கும் வகையில் அகவற்பாக்களில் தந்துள்ளார்.

கவிஞர் கண்ணதாசன் முத்தொள்ளாயிரப் பாடல்கள் சிலவற்றிக்குச் செய்யுள் வடிவில் விளக்கம் தந்துள்ளார்.

**நூலாசிரியரே எழுதிய உரைகள்:**

ஒருவர் எழுதிய நூலுக்குப் பிறர் உரை எழுதிய மரபு போய், நூலாசிரியரே உரை எழுதும் வழக்கமும் ஏற்பட்டது.

தமிழ் மொழியில், நூலாசிரியரே உரை எழுதும் வழக்கத்திற்குக் கால்கோள் செய்தவர் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய ஐயனாரிதனார் என்னலாம். அவர், புறப்பொருள் இலக்கணத்தைக் கூறும் சூத்திரங்கள் எழுதி, அவற்றின் கீழே துறைகளை விளக்கும் கொளுக்களை அமைத்து, ஒவ்வொரு துறையினையும் விளக்கும் வெண்பா ஒன்றையும் (மருட்பாவும் உண்டு) இயற்றியுள்ளார்; தாம் வகுத்த புறப்பொருள் இலக்கணத்திற்குத் தாமே இலக்கிய மேற்கோளையும் அமைத்துள்ளார்.

17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதர், பிரயோக விவேகம் என்னும் இலக்கண நூலை இயற்றி, தாமே அதற்கு உரையும் எழுதினார்.

இலக்கண விளக்கம் இயற்றிய வைத்திய நாத தேசிகரும், இலக்கணக் கொத்து இயற்றிய சாமிநாத தேசிகரும் தம் நூல்களுக்குத் தாமே உரை எழுதியுள்ளனர்.

இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சாமிநாத தேசிகர்,

நூல்செய் தவன்அந் நூற்குஉரை எழுதுதல்
முறையோ எனிலே அறையக் கேள்நீ

என்று வினாவும் விடையுமாகத் தொடங்கித் தம் கருத்துக்களை விரித்துரைக்கின்றார்.

முன்பின் பலரே! என்கண் காணத்
திருவா ரூரில் திருக்கூட் டத்தில்
தமிழுக்கு இலக்கு ஆகிய வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துஉரை எழுதினன்;
அன்றியும் தென்திசை ஆழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் தமிழ்ப்பிர யோக விவேகம்
உய்த்துஉரை எழுதினன்; ஒன்றே பலவே!

(இலக் -7)

என்று நூலாசிரியரே உரை எழுதியுள்ளதக் கூறித் தாமும் அவ்வாறே செய்ததாகக் கூறுகின்றார்.

நூலாசிரியரே உரை எழுதிவிட்டால், கட்டி முடித்து கட்டடம் போல், உரை வளர்ச்சி நின்றுவிடும். மற்றோர் உரை தோன்ற வாய்ப்பு இல்லை. நூலைப் படிப்பவர்களுக்கு வேறு வகையான விளக்கமோ, கருத்தோ தோன்றினாலும் அவற்றைக் கொள்ளத் தடையாக இருக்கும்.

தம் புலமை மாண்பைத் தாமே பாராட்டிக் கூறும் ஆசிரியரை உலகம் எள்ளி நகைக்கும், மேலும் நூல் எழுதும் ஆசிரியர், நயங்களையும், சிறப்புகளையும் கருதிப் பாடல் இயற்றுவதில்லை.

இவற்றை எல்லாம் நோக்கும்போது, நூலாசிரியரே உரை எழுதுவதால் பயன் மிகுதியாக இல்லை என்னலாம்.

**மறுப்புரை**

உரையாசிரியர்கள், தமக்கு முன் உரை எழுதியவர் கூறியுள்ள வேறுபட்ட கருத்திற்கு மறுப்புரை கூறி, தம்கருத்தை நிலைநாட்டுவது வழக்கம். திருவாரூர் வைத்தியநாத தேசிகர் எழுதிய 'இலக்கண விளக்கம்' என்னும் நூலை மறுத்து, சிவஞான முனிவர் (18ஆம் நூற் இறுதி) 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் பெயருடன் மறுப்புரை எழுதினார். விளக்கம் என்பதற்கு, விளக்கு (விளக்கு + அம்) என்பது பொருள். சூறாவளி என்பது சுழன்று வீசும் கடுங்காற்று வைத்தியநாத தேசிகர் ஏற்றிவைத்த இலக்கண விளக்கை அணைக்க, சிவஞான முனிவர் சூறைக்காற்றை தமிழறிஞர். சி.வை.தாமோதரம் பிளளை 'அநியாய கண்டனம்' என்று கூறியுள்ளார். தமிழில், ஒரு நூலை எதிர்த்து எழுதிய மறுப்புரை நூல் இஃது ஒன்றேயாகும்.

**வசனம்**

இராமாயணம் பாரதம் கந்தபுராணம் முதலிய புராண இதிகாசக் கதைகளைப் பொது மக்களிடையே பரப்பும் முயற்சியில் ஈடுபட்டவர்கள். பழங்கதை கூறும் வசன நூல்களை இயற்றினர். சிறிதளவு பழஞ்செய்யுள்களைக் கற்று இன்புற இயலாதவர்களும் பயனடையும் பொருட்டு, காப்பியங்களில் உள்ள செய்யுள்களின் கருத்தைத் தொகுத்து வழங்கினர்.

இந்த நன்முயற்சியின் பயனாய், சிறந்த காப்பியக் கதைகள், கவிஞாகளின் செய்யுள் நலங்களோடு உரைநடையில் கிடைத்தன. பாடல்களின் கருத்தை மாற்றாமல் - கூட்டாமல் - குறைக்காமல் கதைப் போக்கைத் தழுவிப் பொழிப்புரை ஏற்பட்டதால், பெரும்பயன் விளைந்தது. பொழிப்புரைகளாகிய வசன நூல்கள், காப்பிய மாளிகைகளின் மேலே ஏறிப் பார்த்து மகிழ உதவுகின்ற ஏணிகள் ஆயின.

சங்க நூல்களாகிய எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் ஒவ்வொன்றாக வெளியான போது, யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் ந.சி.கந்தையா பிள்ளை அந்நூல்களுக்கு வசனம் எழுதி, தமிழ் கற்கும் மாணவர்களுக்கு உதவி செய்தார்.

## உரை எழுதாக் கொள்கை

பக்தி நூல்களுக்கு உரை எழுதுவது கூடாது என்ற கொள்கைத் தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருந்து வந்தது. ஆழ்வார்கள் அருளிய பக்திப் பாடல்களுக்கு உரை எழுதும் முயற்சி தோன்றியபோது, அக்காலத்தில் இருந்த வைணவ பெரியோர்கள் அம்முயற்சியைக் கண்டித்தனர்; தடுத்தனர்.

சைவ சமய நூல்களுக்கு இத்தகைய முயற்சி பழங்காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. கற்றறிந்த சைவப் பெரியோர்களும், "அருட்பாடல்களுக்கு நாமா உரை எழுதுவது" என்று தயங்கி ஒதுங்கி விட்டனர்.

ஒரு நூலுக்கு வழங்கிய பல்வேறு உரைகளையும் தொகுத்துக் காண வேண்டும் என்ற ஆர்வம் இக்காலத்தில் ஏற்பட்டுள்ளது. பலருடைய கருத்துக்கையும் ஓரே இடத்தில் காணும் வேட்கை பிறந்துள்ளது. உரை வேற்றுமைகளைக் கண்டு நல்லனவற்றையும் அல்லனவற்றயையும் சீர் தூக்கும் நோக்கம் வளர்ந்து வருகிறது.

புகழ்பெற்ற உரையாசிரியர்களின் பொருந்தாத கருத்துக்களை மறுக்கும் துணிவு தலைதூக்கியுள்ளது. யார் சொல்லுகிறார்கள் என்று பார்க்கும் நிலைமை மாறி, என்ன சொல்லுகிறார்கள் என்று நுணுகி நோக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது.

திருக்குறளுக்கு உள்ள பழைய உரைகளைத் தொகுத்து, உரைவளம், உரைக்கொத்து, உரை வேற்றுமை ஆகிய பயனுள்ள் நூல்கள் வெளிவந்துள்ளன. நாலடியார் உரை வளம் ஒன்றும் வெளிவந்துள்ளது. தொல்காப்பிய உரைவளம வெளிவந்துள்ளது.

## புதிய முயற்சிகள்

இக்காலத்தில் பழம்பெரும் நூல்களுக்கு மிக எளிய உரைகள் எழுதி அவற்றை மக்களிடம் பரப்பும் முயற்சி நடைபெறுகிறது. இம்முயற்சி செயலாக மலர்ந்து பெரிதும் வெற்றி பெற்றுவிட்டது.

பழைய உரைகளைத் திருத்தமாக வெளியிடுதல், உரையில் வழுவுள்ள இடங்களை ஆராய்ந்து உண்மை உரைகாணுதல், சிறந்த பாடம் கண்டு போற்றுதல், உரைக்கும் விளக்கம் தரல், கடினமான உரைப்பகுதிக்கு எளிய நடையில் விளக்கம் எழுதுதல் ஆகிய நல்ல முயற்சிகள் நடைபெறுகின்றன.

எதையும் எளிதாக விரைவில்பெற நினைக்கும் மக்களின் மனநிலை, பரபரப்பான வாழ்க்கை முறை, ஆழ்ந்து சிந்தித்துத் தெளிய வாய்ப்பில்லாத சுற்றுச் சுழல், பல்வேறு செய்திகளையும் அறிந்திருக வேண்டிய நெருக்கடி ஆகியவற்றை நோக்கும்போது, இக்காலத்துப் புதிய முயற்சிகள் பெரிதும் பயனுள்ளவை என்பது விளங்கும்.

## கூறு 2

## இறையனார் - களவியலுரை

உரைகளில் காலத்தால் முற்பட்டது இறையனார் களவியலுரை. தமிழில் தோன்றிய முதல் உரைநூல், மற்ற உரைகளுக்கு இது வழிகாட்டியாய்த் திகழ்கிறது. சிறந்த அகப்பொருள் இலக்கணநூல் களவியல் என்பது சிறப்பினாற் பெற்ற பெயர் என்றும் 'களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன் என்றும் இந்நூலின் உரையாசிரியர் கூறிகின்றார். இந்நூல் களவு கற்பு என்ற இரு பிரிவுகளை உடையது. களவினுள்ள 33 நூற்பாக்களும் கற்பினுள் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்கள் உள்ளன. ஒட்டக்கூத்தர் இதனை 'அமுத சூத்திரம் அறுபதாய்ச் சபை நூல்' என்று போற்றியுள்ளார்.

இந்நூலை இயற்றியவர் இறையனார் இறையனாரை இந்நூலின் உரை மதுரை ஆலவாய்ச் சோமசுந்தரம் கடவுள் என்று குறிப்பிடுகின்றது. குறுந்தொகையில் இறையனார் என்னும் புலவர் இயற்றிய 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற அகப்பாட்டு நக்கீரையும் விரிசடைக்கடவுளரையும், பாண்டியனையும் இணைத்துக் கதை புனைய இடம் தந்தது. அவ்வாரே இந்நூலாசிரியர் பெயரும் கதை தோன்ற இடம்தந்தது. சோம சுந்தரக்கடவுள் அருளியதாகக் கருதி இந்நூல் 'முதல் நூல்' என்றே குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியம் கூறும் அகப்பொருள் இலக்கணத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இந்நூல் கூறுகிறது. தொல்காப்பியத்தின் வழி நூல் ஆகும். முதன் முதலில் அகப்பொருளைக் கற்பனை வளம் செறிந்த இன்ப நாடகமாக ஆக்கி மகிழ்ந்தவர் இவ்வுரையாசிரியரே. கோவை நூல்களுக்கு வித்திட்டவர். நம்பி அகப்பொருளும் அதற்குப்பின் தோன்றி பல அகப்பொருள் இலக்கணங்களும் இவ்வுரையின் ஒளியால் விளக்கம் அடைந்தன.

சங்க காலத்தில் எழுந்த இறையனாரகப் பொருளுக்குப் சங்கம் புலவராகிய நக்கீரரே முதன்முதலாக உரை கூறினாரென்றும் அவ்வுரை பல ஆண்டுகளாக கர்ண பரம்பரையாக வந்த பின்னரே ஏட்டு வடிவத்தில் அமைந்ததென்றும் தெரிகின்றது.

இறையனார் களவியல் உரையின் சிறப்பினை உணர்ந்த சான்றோர் பலர் இவ்வுரைக்குப் பாராட்டுரைகளை வழங்கியுள்ளனர். அப்புகழ்மாலைகள்

அவ்வுரையின் சிறப்பினையும் சீர்மையினையும் நன்கு வெளிப்படுத்தும் சான்றுகள் ஆகும்.

**உரைமரபு**

“நூல் முழுவதும் நூலாசிரியரின் குரலைவிட, உரையாசிரியரின் குரலே மேலோங்கி நிற்கின்றது; உரையாசிரியர் கூறும் கருத்தும் விளக்கமுமே கற்போர் நெஞ்சத்தில் ஆழப்பதிக்கின்றன. உரையரிசிரியர் நம் எதிரே நின்று உரையாடுவது போன்ற மன நிலையை உரையின் வரியலாக உண்டாக்கி விடுகின்றனர்.

**நடைச்சிறப்பியல்பு** : ஏனைய இலக்கண, இலக்கிய நூல்களுக்கு இல்லாத சிறப்பியல்புகள் பல இக்களவியலுரைக்கு மிகவுண்டு, இச் சிறப்புக்களுள் ஒன்று இவ்வுரையின் தொடரமைப்பு. சிறுசிறு தொடராக அமைத்து, அத்தொடரை முடித்து, முடிக்கும் வினைமுற்றை, வினைஎச்சமாக்கி அடுத்து வரும் தொடரின் தொடக்கச் சொல்வாக்குகின்ற நடையமைப்பினை மிகுதியாக இவ்வுரையில் காணமுடிகிறது. இவ்வாறு மிகுதியாக எழுதிப் போகும் அந்தாதிப் போக்கினை வேறு உரையாசிரியர்களிடம் காண்பது அரிது.

“என்று சொல்லி, ‘நீயாகாதே இவ்வகை மேதக்கன எய்தற் பாவாய்’ எனத், தலைமகனும் அவ்விடம் நோக்கிச் செல்லும். சென்றவிடத்துத் தனியளாய் நின்ற தலைமைகளை எதிர்ப்படும். எதிர்ப்படவே, தலைமகள் காணும். காணமே ஆற்றாமையான் இறந்துபட்டான் கொல்லோ என்னும் அச்சம் நீங்கும். நீங்கத் தன் தன்மையன் ஆயினாள்.”

(இறை, 1, உரை ப.55)

“என்னை, பிறிதொன்று கட்டியுணருந்தன் மைத்தன்று இக்குலமாகலானும், அதுவே சொல்லுதற் பயத்தது தங்கருமமாகலானும், அறியாதேயுஞ் சொல்லுப. சொல்ல இவள் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும் ; செய்விக்கத் தலைமகற்குக் கற்பழியும்.”

(இறை 1, உரை, ப.95)

**செய்யுளோசை:** சிறத்தல் களவியலுரையில் செய்யளோசை சிறந்து நிற்கின்றது. அக்கால உரைநடையில் வளர்ச்சிப் பழநிலையை இவ்வியல்பு வலியுறுத்தும், இவ்வியல்பினை ஆராயும் இடத்து, “நக்கீரர் உரையே தமிழில் முதன் முதலாகத் தோன்றிய உரைநடையாகும். ஆகவே ஏட்டின் எழுதும்போது, செய்யுளையே எழுதிப் பழகியவர்களுக்கு, செய்யுளல்லாத மற்றொன்றை எப்படி

அமைப்பது என்ற திகைப்பு இருந்திருத்தல் இயல்பே. அதனாலும் நக்கீரர் தம் உரை நெடுங்காலம் வாய்மொழியாகவே வழங்கி வந்தமையாலும், இதனுள் செய்யுளோசை அதிகம் பயிலக் காணலாம். சிறப்பாக இவர் வருணனை சொல்லுமிடங்களில் செய்யுளோசை அதிகம் பயிலக் காணலாம்.'' என்று மு.அருணாசலம் ஆய்வுரை வழங்குவார்.

எதுகை மோனைகள், அளபெடைகள், தனிச்சொற்கள், விழுமிய சொற்கள், எழிலார்ந்த இயற்கை வருணனைகள் ஆகிய செய்யுள் மரபுகளைக் களவியலுரையில் கண்டுணர முடிகின்றது.

களவியலுரையில் வருகின்ற ஒரு வருணனைப் பகுதியினை எடுத்துக் காட்டி, அதன்கண் செய்யுள் வடிவம் பொருந்திக் கிடப்பதனை விளக்கிக் காட்டியுள்ளார், வி.செல்வநாயகம். அப்பகுதி வருமாறு:

``(அவள்) சந்தனமும் சண்பகமும்
தேமாவும் தீம்பலவும்
ஆசினியும் அசோகும்
கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து
ஞாகமும் திலகமும் நறவும் நந்தியும்
மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து
பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்து
பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து
வணடறைந்து நேனார்ந்து
வரிக்குயில்கள் இசையாட, தண்தென்றல் இடைவிராய்த்
தனியவரை முனிவுசெய்யும் பொழிவது ஈடுவண்,
ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல்,
விசும்பு துடைத்து பசும்பொன் பூத்து,
வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதொரு
வெறியுறு நறுமலர் வேங்கை கண்டான்.''

(இறை 2, உரை ப.32)

``இவ்வுரைப் பகுதியின் கண் இடையிடையே எதுகை மோனை முதலிய ஓசைப்பண்புகள் வாய்ந்த சொற்றொடர்கள் வந்துள்ளன. அவற்றைப் பொருளறிந்து படிக்கும் போது செய்யுளொன்றைப் படிக்கும் நேரத்தில் எம்மிடத்தின் உண்டாகும் உணர்ச்சி எத்தகையதோ அத்தகையதோர் உணர்ச்சி எம்மனத்தில் எழுகின்றது.. மேலே காட்டிய உரைநடைப்பகுதி, சொற்கள் தம்முன்னே ஓசையும் தொடையும்

ஒன்றுபட்டும் வேறுபட்டும் ஒலித்தும் பொருள்முடிவு பெற்றதும் செல்லுமாற்றுக்கு இயைய வெவ்வேறு தொடர்களாகப் பிரித்து வாசிக்க அமைந்திருக்கின்றது.

**பன்னூற் பயிற்சி பளிச்சிடல் :** ஒரு மூல நூலின் கருத்தனை விளக்க வரும் உரையாசிரியர் அம்மொழியில் அமைந்துள்ள பிற நூற்சான்றுகளைக் காட்டி விளக்க முனைவர். இதேப் போன்று பிறமொழிப் பயிற்சி காரணமாக அம்மொழி நூல்களையும் மேற்கோள் காட்டுவர். இவ்வுரை மரபினைக் களவியலுரைகாரரிடமும் நாம் கண்டு தெளிய முடிகின்றது. சில இடங்களில் இவ்வுரையாசிரியரின் பிறதுறை அறிவும் வெளிப்பட்டு நிற்கின்றது.

இவர் உரைப்பது இவண் கருதத்தகும். தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றைச் (தொல், சொல், இடையியல் 3, வினையியல் 49; தொல் அகத்திணை 3-12, 20, களவியல் 22, கற்பியல் 45, பொருளியல் 52, மரபியல் 91, 98) சுட்டிக் காட்டி இவர் தம் கருத்தினை நிறுவுகின்றார், இவர்.

“வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.”
“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்பொருள் காண்ப தறிவு.”
“சிறைகாக்கம் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.”

ஆகிய பல குறட்பாக்களைப் பயன்படுத்தியுள்ளார். அகப்பொருள் நூற்பாக்களுக்குச் சான்றுப்பாடல் காட்ட வேண்டிய இடங்களிலெல்லாம் இவர் சங்க இலக்கிய பாடல்களை மேற்கோள் காட்டித் தம் உரையினை மேன்மையுறச் செய்கின்றார்.

தலைவன், தலைவியை வியந்துரைத்தலைக் கூறுமிடத்து இவ்வுரையாசிரியர் சிலப்பதிகாரக் கானல்வரிப் பாடலை (“துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்மாய்வன்..”) எடுத்துக்காட்டுகின்றார். அகநானூற்றை இவர், ‘நெடுங்தொகைப் பாட்டு’ (இறை. 4, உரை, ப.61) என்றே குறிப்பிடுகின்றார்.

நன்னூல் நூற்பாக்களும் இவர் உரையின்கண் பயின்று வரக் காண்கின்றோம். (இறை. 1, உரை, ப.14)

“குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்
முழவியம்ப லாமந் திரிகை.”

என்று கூத்த நூலுடையாருஞ் சொன்னாராகலின் என்பது'' (இறை. 1, உரை, பக்.172, 173) எனவும், "செம்பூட்சேயார் கூற்றியல்'' (இறை. 1, உரை, ப.199) எனவும் இவர் கூறுவன மேலே கண்ட கருத்திற்குச் ˙ சான்றாகும்.

**பிற உரைகளை மறுத்தல்** : உரையாசிரியர்கள் தமக்கு முன்னுள்ள உரைகளை மறுத்துரைக்கும் இயல்பினையும் ஆங்காங்கே கையாண்டுள்ளனர். இறையனார் களவியல் உரையாசிரியரும் தமக்கு முன்னெழுந்த பலவுரைகளை மறுத்துச் செல்கின்றார். ஓரிரு சான்றுகள் காண்போம்.

களவினுள் தங்கி ஒழுகும் ஒழுக்கம் இவ்வளவு காலமல்லது இல்லை என்பதனை வரையறுத்துக் கூறும் களவியல் நூற்பா,

"களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப.'' (இறை.32)

என்பதாகும். இதன் உரையில் ஆசிரியர் இரு உரையாசிரியர் தம் கருத்துக்களை மறுத்துரைக்கின்றார்.

"இனி, ஒரு திறந்தார், திங்கள் இரண்டினகம் என்பதனைச் சொல்லுமாறு:

பிறைத்திங்கள் மதித்திங்கள் என இரண்டு; அவற்றுள் பிறைத் திங்கள் முன்னொளியாய்ப் பின்னிருளாம்; மதித்திங்கள் பினனொளியாய் முன்னிருளாம்; அவ்விரண்டும் சந்தித்து நின்ற இருட் காலத்தாக என்றவாறு, அது பொருந்தாது; என்னோ காரணமெனின், இரவுக் குறிக்கே சொல்லினமையான். அல்லதூஉம் காலவரையின்றி எஞ்ஞான்றும் இருட்டிங்கட்கண்ணே களவொழுக்க வேண்டப்பட்டதாம் என்பது.

இனி, ஒரு சாரார், 'திங்களிரண்டினகம்' என்பதனை ஒரு திங்களை இரண்டு கூறிட்ட ஒரு கூறு என்று பதினைந்து நாளாகச் சொல்லுப. அதுவும் பொருந்தாமை அறிந்து கொள்க.'' (இறை. 32, உரை, ப.155)

**உரை நயம்**

"நயம் செறிந்த நடையழகு காணப்பெறும் இடங்களில் அவர்கள் (உரையாசிரியர்கள்) இலக்கிய ஆசிரியர்களாகத் திகழ்கின்றனர்; விளக்கம் தந்து குறிப்புகள் வரையும் போது உரையாசிரியர்களாக விளங்குகின்றனர்; தடை விடைகளாலும் நுட்பக் கருத்துகளை நுண்மாண் நுழைபுலத்தால் அ∴காய்வும்

அகவாய்வும் செய்து வெளிப்படுத்தும் தன்மையாலும் அவர்கள் திறனாய்வாளராகத் திகழ்கின்றனா். எனவே, இலக்கிய உரையாசிரியர்கள் பணி பன்முகப் பணியாக இலங்குகிறது என்ற அறிஞர் இரா.குமாரவேலனின் கூற்று இலக்கணவுரையாகிய களவியலுரைக்கும் நனி பொருந்தும் எனலாம்.

**வினா – விடைப் போக்கு:** “உலக வழக்கிலே ஒரு பொருளைக் குறித்து வினாவுவாரும் செப்புவாரும் கூறும் கூற்றை ஒத்ததோர் நடை இவ்வுரையின்கண் வந்துள்ளது என மேலே குறித்தோம். அந்நடை வகைக்கும் வெண்பாவிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியன் மாணவனுக்கு ஒன்றை விளக்கும் போது எழுப்பும் வினாக்களும் அவற்றிற்று அவன் கூறும் விடைகளும் பேச்சில் எவ்வாறு அமையுமோ அவ்வாறே எழுத்திலும் அமைதலை மேலே காட்டிய (“இனிப் பயன்உரை, ப.9) உரைப் பகுதியிற் காணலாம்.” என்று அறிஞர் வி.செல்வநாயகம் கூறிவிட்டுப் பின்வருமாறு அவ்வுரைப் பகுதியினை வினா-விடையாக அமைத்துக் காட்டுவார்:

ஆசிரியன் : இனிப் பயனென்பது இது கற்க இன்னது பயக்கும்.

மாணாக்கன் : இது கற்க இன்னது பயக்கு மென்பதறியேன்; யான் நூற் பொருள் அறிவல்

ஆசிரியன் : சில்லெழுத்தினான் இயன்ற பயன் அறியாதாய், பல்லெழுத்தினான் இயன்ற நூற்பொருள் எங்ஙனம் அறிதியோ பேதாய்? இன்னது பயக்கு மென்பது அறியல் வேண்டும்.

மாணக்கன் : என் பயக்குமோ இது கற்க?

ஆசிரியன் : வீடுபேறு பயக்கும்.

மாணக்கன் : என்னை? இது களவியலன்றே! இது கற்க வீடுபேறு பயக்குமா றென்னை? களவு, கொலை, காமம், இணை, விழைச்சு என்பனவன்றோ சமயத்தாரானும் உலகத்தாரானும் கடியப்பட்டன? அவற்றுள் ஒன்றன்றாலோ இது?

ஆசிரியன் : அற்றன்று, களவெனுஞ் சொற்கேட்டுக் களவு தீதென்பதூஉங், காம மென்னுஞ் சொற்கேட்டுக் காமந் தீதென்பதூஉ மன்று; மற்றவை நல்லவாமாறுமுண்டு.”

மேற்கண்டவாறு வினாவும விடையுமாக வருகின்ற பகுதிகளை இவ்வுரைக்கண் மிகுதியும் காணமுடிகின்றது. இவ்வாறு அமையும் உரைநடையும் ஒரு வகையில் நயமுடையதாகவே அமைகின்றது எனலாம்.

"அ∴தேயெனின், 'ஐந்திணை' என்பதன் முன்னர்க் களவு" என்னுஞ் சொல் எத்திறத்தான் வந்தது? ஒரு சொன்முன் ஒரு சொல் வருங்கால் பயனிலை வகையானும், தொகைநிலை வகையானும், எண்ணுநிலை வகையானும், என மூன்றினுள் ஒன்று பற்றியதன்றே வருவது; அவற்றுள், இ∴து எவ்வகையான் வந்ததோ எனின், தொகைநிலை வகையான் வந்தது என்பது."

(இறை. 1, உரை ப.24)

"அ∴தேயெனின், 'இரத்தல் கிழவோன் மேற்றே' என்னாது, 'குறையுறுதல்' என்றது எற்றிற்கோ எனின், இரத்தல் என்பது, குறையுடையார் செய்யுஞ் செய்கை செய்து ஒழுகுவது; குறையுதல் என்பது, இக்குறை இன்றி இ∴து இவ்வுரையாசிரியரின் பண்பாக அமைந்துள்ளது.

**சொற்பொருள் விளக்கம்** : சில சொற்களின் பொருளை இறையனார் களவியல் உரையாசிரியர் மிக நுணுக்கமாக விளக்கிப் போகின்றார். பாயிரம் என்ற சொல்லிற்கு இவ்வுரையாசிரியர் கூறுகின்ற விளக்கம் வருமாறு "பாயிரம் என்ற சொற்குப் பொருள் யாதோ எனின் புறவுரை என்றவாறு" (இறை 1. உரை, ப.2). இன்னும் சில சான்றுகளைக் காண்போம்.

"கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல்"

(இறை. 1. உரை ப.15)

"அன்பு எனப்பட்டது, தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி." (இறை 1. உரை ப.16)

"நிறை என்பது என்னோ எனின், காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்.

ஓர்ப்பு என்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல் என்பது

கடைப்பிடி என்பது கொண்ட பொருள் மறவாமை (இறை.2, உரை ப.33)

“மொழிமாற்றுதல் என்பது, செய்யுள் கிடந்தவாறு செய்யலாகாத வழிச் செய்வது.” (இறை 3, உரை ப.58)

இவ்வுரை கூறம் சொற்பொருளின் எல்லாம் தலைசிறந்து விளங்கும் சொற்பொருள், தமிழ் என்ற சொல்லிற்குக் கூறும் பொருள் ஆகும். “இந்நூல் என நூதலிற்றோ எனின் தமிழ் நுதலிற்று என்பது” (இறை 1, உரை, ப. 5) இங்கே தமிழ் என்ற சொல்லிற்கு அகப்பொருள் என்ற பொருளை இவ்வுரை குறிக்கின்றது.

**கருத்து விளக்கம் கூறல்** : களவியல் உரைகாரர் சில கருத்துக்களை விளக்கும் போது மிக நயமாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார். இதனை பின்வரும் சான்றுகளால் உணரமுடிகிறது.

‘உரை வழிகாட்டி’ நக்கீரனார் - களவியலுரை

“கருத்தன் என்பது –தச்சன் எடுத்த மாடம், கொல்லன் செய்தவாள்;

ஏதும் கருத்தன் என்பது – ஏவினானைக் கருத்தாவாகச் செய்வது; அரசர் தொட்ட குளம்; அரசர் எடுத்த தேவகுலம் இத்தொடக்கத்தன.

இனிக் கருவிக் கருத்தன் என்பது – வாள் எறியும், கரிகை குற்றும், இம்மிடா நாற்குறுணி அரிசிச்சோறு அடும் என இத்தொடக்கத்தன;

இனிக் கருமக் கருத்தன் என்பது – திண்ணை மெழுகிற்று, காலங்கழுவிற்று, மரங்குறைந்தது என்று சொல்லுவது.” (இறை 19, உரை, பக் 112, 113)

இதே போன்று அம்பல், அவர் குறித்த கருத்து விளக்கமும் நயமாக அமைகின்றது எனலாம்.

“**அம்பல்** என்பது சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்லுவதாயிற்று; இன்னதின் கண்ணது என்பது அறியலாகாது என்பது.

**அலர்** என்பது இன்னானோடு இன்னாளிடை. இதுபோலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது.

**அம்பல்** என்பது, பெரும்போதாய்ச் சிறிது நிற்க அவரும் என் நிற்பது.

**அலர்** என்பது, அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமையென வேற்றுமை சொல்லப்பட்டதாம்.”

இவ்வுரைகாரர் தம் கருத்து விளக்கத்திற்குப் பயன்படுமாறு அமைகின்ற இலக்கியச் சான்றுகளையும் மேற்கோள்காட்டி, அவ்வாறு மேற்கோள் காட்டியுள்ள பகுதிக்கும் நல்லதொரு விளக்கம் எழுதிச் செல்கின்றார். இதனைப் பின்வரும் உரைப்பகுதியிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது.

''அங்ஙனமாயின், தோழி காவவொடு மாறுகொள்ளாதோ எனின், கொள்ளாது, தோழிக்கு அற்றத்தொடு நிற்குமாகலான், என்பது. காவலொடுமாறு கொள்ளினும் காவற்குற்றப்பட்டேன் என்று தோழி இறந்துபடாமைக் காக்கும் விதி என்பது. அ∴தே எனின், நிகழ்ந்த ஒழுக்கம் மறைத்துக் களைந்து, படைத்து தொழிந்தமையார் பொய்யுரைத்தவாறாம் பிற எனின், பொய்யுரைக்கப்பட்ட தாகாது; என்னை, பழியும் பாவமும் அதனால் வாராமையின்.

என்னை,

''பொய்ம்மையும வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்''

என்றாராகலின் குற்றமின்று என்பது.''

(இறை 29, உரை ப.142)

**நாடகப் பாங்கு** : ''உரையாசிரியர் சிக்கலில்லாமல் ஓர் நாடகப் பாங்கில் நேர்முகமாகவே பொருளைச் சொல்லிக் கொண்டு போகிறார். வருணனை யொன்று தான் நீண்டுபோகுமே ஒழிய ஏனைய பகுதிகள் யாவும் சிறுசொற்களாகவே நிற்கும். இவ்வாறே இவரது உரையுள், கிளவிக் குரியாரைப் பாத்திரமாக வைத்துக் காட்டுமிடமெல்லாம், சில சொற்களோடு கொண்ட சிறு வாக்கியங்களாய் அமைத்து எழுதுகிறார். அதனால், இவ்விடங்கள் ஒவ்வொன்றும் ஒரு நாடகக் கட்டம் போலவே நடைபெறும்.''

''இனித் தெருளாளாயின், 'இரவுக்குறி வாரா வரைவல், என்றும். அது கேட்ட தோழி இரவுக்குறியது. ஏதங்காட்டி மறுக்கும் யாங்ஙனம் மறுக்குமோ எனின் 'அரவும் உருமும் புவியும் எண்கும் வெண்கோட்டி யானையும் என்று இவற்றது ஏதுமுடைத்து; ஏற்றழிவுடைத் தாய அருவரையிடத்து ஒரு வேல் துணையாக நீர் ஆரிருள் நெடுநாள் வரவு ஆற்றுநீர்மையாளோ?'' என்னும் என்பது கேட்ட தலைமகன் ஆற்றுவானாயின், வரைந்து எய்தும்; ஆற்றானாயின் இறந்துபடும் எனக்கருதி, இறந்துபாட்டு அச்சத்தினால் இரவுக்குறி நேரும்; நேர்ந்தால் தலைமகற்கு, நீன்னாட்டார் என்ன பூயினர்? என்ன சாந்தினர்? என்ன மரத்தின் கீழ்

விளையாடுப?' என்னும். அது கேட்டுத் தலைமகன், 'முன்னெல்லாம் எனக்கு மறுத்தாள் என்றே, மறுத்தான் இது சொல்லிற்கு ஒரு காரணம் நோக்கி என உணர்ந்து, தானும், 'நின்னாட்டார் என்ன வினவினர்? என்ன சாந்தினர்? என்ன மரத்தின்கீழ் விளைபடுப? என்னும், என்றக்கால் தோழி, காந்தளும் வேங்கையும் சூடுதும், சந்தனச் சாந்து பூசுதும்; வேங்கை மரத்தின்கீழ் விளையாயடுவதும்' என்னும்''

(இறை, 18, உரை, பக்.10-111)

இவ்வாறு உரையாடற் பாங்கில் அமையும் தன்மையைப் பிற உரைகளில் இவ்வுளவு சிறக்கக் காணவியலாது.

**இலக்கண விளக்கம்** : களவியல் நூல் அகப்பொருள் சார்ந்தது. எனினும் இதன் உரையினூடே இலக்கணச் செய்திகளை மிக நயமாகவும் தெளிவாகவும் விளக்கிப் போகின்றார். தொல்காப்பிய நூற்பாக்களுக்குச் சுருக்கமான முறையில் மிகத் தெளிவாகக் களவியல் உரைகாரர் விளக்குகின்றமை இவண் அறியத் தரும் செய்தியாகும்.

''இனி, என்மனார் என்பது 'என்ப' என்னும் முற்றுச் சொல்,

''குறைக்கும் வழிக் குறைத்தல்: (எச்சவியல் :7)
என்பதனாற் பகரம் குறைத்து,
விரிக்கும் வழி விரித்தல் (எச்சவியல் :7)

என்பதனால், 'மன், ஆர் என்பன இரண்டு இடைச்சொற் பெய்து விரித்து, 'என்மனார்' என்று ஆயிற்கு''

(இறை, 1 உரை பக்28)

என்பது இவ்வகையில் குறிப்பிடத்தக்க சான்றாகும்.

''அதுவே

தானே அவனே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்''

என்ற இரண்டாம் நூற்பாவின் உரையில் ஆசிரியர் ஏகாரம் பற்றிப் பின்வருமாறு பேசுவார். அவ்வுரைப் பின்வருமாறு:

''நின்ற ஏகாரம் ஐந்து ஏகாரத்துள்ளும் என்ன ஏகாரமோ எனின், ஆண் குழுவின் இவனையே பிரித்து வாங்கினமையானும், பெண்குழுவின் இவனையே

பிரித்து வாங்கினமையானும் பிரிநிலை ஏகாரம் எனப்பட்டார் பலவற்றுள் ஒன்று பிரிப்பது பிரிநிலை ஏகாரம் எனப்படும் ஆகலான் என்பது.''

(இறை. 2, உரை, ப.29)

''இனி, நாறுந்தகைமையவே என்பது, ஐந்து ஏகாரத்துள்ளும் இவ்வேகாரம் வினாவின்கண் வந்த ஏகாரம் எனக் கொள்க.

''தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைக் தேகா ரம்மே'' (இடையியல் -9)

என்பவாகலின்.'' (இறை 2, உரை, ப

56 ஆவது நூற்பாவின் விளக்கவுரையில் பொருள்கோள் குறித்து இவர் விரிவாகச் சான்றுப்பாடல் தந்து விளக்குவது மனங்கொள்ளதக்கது.

''கோள் என்பது, ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை; அ∴து ஐந்து வகையாக விற்பூட்டு, விதலை யாப்பு, பாசி நீக்கு கொண்டு கூட்டு ஒருசிறைநிலை என்றவற்றுள் இன்னதோர் பொருள் கொண்டு நின்றது இப்பாட்டு என்ற அறிவது...

**விற்பூட்டு** என்பது, தலையும் கடையும் பொருள் கொள்வது;

**விதலை யாப்பு** என்பது, தலையும் இடையும் கடையும் பொருள் கொள்வது;

**பாசிநீக்கம்** என்பது, சொற்றோறும் அடிதோறும் பொருளேற்று நிற்பது;

**கொண்டு கூட்டு** என்பது, சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுமாறு அறிந்து கொள்வது;

**ஒரு சிறை நிலை**யென்பது ஒரு பாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒரு வழி நிற்பது.''

(இறை.56, உரை, பக்.200.201)

நன்னூனார் இவை எட்டு வகை (நன்.411) என்று விரிவுப்படுத்தி விளக்குகின்றார்.

**தொகைப் பொருள்களை விளக்குதல்** : களவியலுரை பேராசிரியர் தம் உரையினகத்து ஆங்காங்கே தொகை கொடுத்துக் கூறப்படும் செய்திகளை –

தொகைப்படுத்தப் பெறும் குறியீடுகளை-விரிவாக விளக்கிச் சென்றுள்ளார். அவற்றுள் ஒன்று எண்வகை மணம்.

‘‘இனி, அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள் என்பது; அந்தணர் என்பார் பார்ப்பார்; அருமறை என்பது வேதம்; மன்றல் என்பது மணம்; எட்டு என்பது அவற்றது தொகை கொடுத்துச் சொன்வாறு, அவை யாவையோ எனின் - பிரமம் பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தவர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என இவை.’’

(இறை. 1, உரை, பக்.25-27)

மேற்கூறிய எட்டினையும் இவ்வுரைகாரர் விரிவாக விளக்கியுள்ளார். இதேபோன்று அமைவதே சூத்திரக் கிடக்கை பற்றிய செய்தியும்.

‘‘சூத்திரக்கிடக்கை நான்கு வகைப்படும்; ஆற்றெழுக்கு, அரிமா நோக்கு, தவளைப்பாய்த்து, பருந்து வீழ்க்காடு என.’’ (இறை, 4, உரை, 60)

இயைபு கூறல்: திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் ஒரதிகாரத்திற்கும் அடுத்த அதிகாரத்திற்கு இயைபு கூறிப் பொருத்தம் காட்டுவார். இறையனால் களவியலுரை ஆசிரியரும் ஒரு நூற்பாவிற்கும் அடுத்த நூற்பாற்விற்கும் உரிய இயைபினை எடுத்து விளக்கும் நுட்பத்தைக் கையாண்டுள்ளார்.

‘‘இரந்து குறையுறாது...’’ எனத் தொடங்குகின்ற ஆறாவது நூற்பாவிற்கு இவ்வுரையாசிரியர் பின்வருமாறு இயைபு காட்டுவர். ‘‘இரந்து குறையுறாது... உரியவென்ப’’ என்பது என்னுதலிற்றோ எனின், மதியுடம் படுக்குந் திறம் இ∴து என்பது உணர்த்துதல் நுதலிற்ற மேற்சூத்திரத்தினோடு இயைபு என்னையோ எனின், மேல் பணிந்த மொழியால் தோழியை இரந்து பின்னிற்கும் எனப்பட்டது; அங்ஙனம் இரந்து பின்னின்ற இடத்து, ‘எத்திறத்துக்கெல்லோ இவனுடைய குறை’ என்று ஐயப்பட்டு நிற்ப தல்லது, இன்னதென்று உணராளன்றே! உணராமையால் ‘என் குறை இன்னது என்று அறிவித்து இரந்து பின்னிற்பென்’ என்னும் கருத்தினால் இது செய்யும் என்பது இயைபு.’’

(இறை. 6, உரை, ப.65)

‘‘இனி, ஓதற்குப் பிரியும் பிரிவு முன் வைக்கப்பட்டது தலையான பிரிவாகலானும் உயர்ந்தோர்க்கு உரித்தாகலானும் என்பது. பரத்தையிற் பிரிவு பின் வைக்கப்பட்டது காமம் பின் வைத்து எண்ணப்படுமாகலான் என்பது.

(இறை. 35, உரை, ப.158)

இவ்வுரையிற் காட்டப்படும் இவ்வைப்பு முறைக்கு அடிப்படையாக அமையும் நூற்பா,

"ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்க ஆறே அவ்வயிற் பிரிவே"

என்பதாகும்.

**உவமை நயம்:** கருத்தை தெளிவுபடுத்த வருவது உவமை. அவ்வகையில் இவ்வுரை நூலார் பற்றுபல நல்ல உவமைகளைக் கையாண்டு உரையின் நயத்தினைப் பெருக்கியுள்ளார். "இவ்வுரை முழுவதும் சிறந்த உவமைகள் பல இடம் பெற்றுள்ளன. வேறு எவ்வுரையிலும் இத்தனை உவமைகள் இல்லை என்னலாம். உவமைகளின் சிறப்பே, உரையாசிரியரின் புலமை மாண்பை வெளிப்படுத்தும் சிறந்த அளவு கோலாய் உள்ளது. இவ்வுரையில் இடம் பெற்றுள்ள பல உவமைகளைப் பிற்கால உரையாசிரியர்கள் எடுத்தாண்டுள்ளார்" என்பது பேராசிரியர் மு.வை. அரவிந்தனின் கருத்து.

பாயிரத்தின் சிறப்புக் குறித்து இவ்வுரை கூறுகின்ற உவமை இலக்கிய நெஞ்சங்களை எல்லாம் பிணிக்கும் தகைமையதாக உள்ளது. அவ்வுவமை இதோ:

"பருப்பொருட்டாகிய பாயிரங்கோட்டாற்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்' என்பதாகலானும், பாயிரம் உரைத்து உரைக்க என்பது மரபு என் போலவோ எனின், 'கொழுச் சென்ற வழித் துன்னூசி இன்து செல்லுமது போல' என்பது."

பாயிரத்தின் இன்றியமையாமையினை வலியுறுத்த வந்த உரைகார் மிகச்சிறப்பான –நயமான-அடுக்கான உவமைகளைப் பயன்படுத்தியுள்ளமை அறிந்து இன்புறத்தக்கதாகும்.

"பாயிரம் என்ற சொற்குப் பொருள் யாதோ எனின் புறவுரை என்றவாறு, ஆயின், நூல் கேட்பான் புகுந்தே நூல் கேளாது புறவுரை கேட்டு என்பயன் எனின், நுற்குப் புறனாக வைத்தும் நூற்கு இன்றியமையாதது, ஆதலின் என்க. என் போலவோ எனின், கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும்

போலவும், தகைமாண்ட நெடுஞ் சுவர்க்கு வகை மாண்ட பாவை போலவும் என்பது.''

(இறை.1, உரை, பக். 1-2)

''இனிக் காட்சியும் தம் உணர்வினர் அல்லராகலும் உடன் நிகழுமே, யெனின், காட்சி என்னுங் காரணத்தால் தம் உணர்வினர் அல்லராதற்றன்மை நிகழற்பாற்றன்று ஒரு காலத்து ஓரிடத்து ஒருங்கு தோற்றின பொருள் ஒன்றனை ஒன்று முடித்தன எனப்படாமை காண்டும். ஆவிற்கும் இரு கோடு போல என்பது.''

(இரை.2, உரை, ப.30)

தலைவனும் தலைவியும் எதிர்ப்படுதலைக் குறிக்க வந்த இவ்வுரைகாரர், ''அ∴தியாங்ஙனமோ எனின், வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை, தென்கடலிட்ட ஒரு கழி சென்று சேர்ந்தாற் போலவும், வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம் கதிவழுவித் தலைப்பெய்தாற் போலவும் தலைப் பெய்து, ஒருவர் ஒருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியர் ஆவார்.'' (இறை.2, உரை, ப.23) என்று கூறுவார் நிலையினை விளக்குமிடத்து இவ்வுரையுள் வரும் உவமை வருமாறு: ''புலனாக, அதனைக் கண்டு நீருடை நிலத்து நிவந்த நீள்மரம் வெப்பத்தால் தெறப்படாதது போல, யான் உழையேனாக இவ்வேறுபாடு இவட்கு ஆகாதன்றே!

(இறை. 2, உரை, ப.43)

உவமை அடுக்கி வருதற்கு இன்னும் ஒரு சான்று காண்போம்: ''..பிரிவு என்பது ஒன்று உண்டு போலும் கேட்டதகைமையால் அது தம் காதலரைக் காணாது.'' கேளாது கையின் அகன்று மெய்யின் நீங்குவது எனக் கலங்கிக் கார் மருங்கின் மின்னுப் போலவும், நீர்மருங்கிற் கொடி போலவும், தளிரும் முறியும் ததைந்து, குளிரும் நளிரும் கவினி எழாநின்றதொரு கவின்பெறு கொடிப்போலும் காரிகை, கண்ணாடி மண்டிலத்து ஊதுஆவி போலக் காண ஒளி மழுங்கிக், கனல்முன் இட்டமெழுகுப் பாவை போல மனம் உருகிப் பசந்து காட்டினாள்.''

(இறை.2, உரை, பக். 44 - 45)

களவியல் உரையாசிரியர் சில நடைமுறை உவமைகளையும் எடுத்தாண்டு தம் உரைக்கு ஓர் ஏற்றம் தந்துள்ளார். இதனை, ''வழிப் போகா நின்றான் ஒருவன் பிழைத்துச் சேறானும் சாணகமானும் மிதித்தவிடத்துக் காலைக் கழீஇப் பாதுகாத்துத் தன் இல்லம் புக்கதுபோல, அவனும் ஞாலொழுக்கக் குணங்களின்

வழியே சொல்லாநின்றான் இழுக்கினால்'' (இறை. 3, உரை, ப.47) என்பது கொண்டும், ''என்னை மூடி வேவா நின்றதோர் கலத்தை மூடி திறந்துவிடத்து அகத்துநின்ற வெபபங்குறைபடும்; அதுபோல, இவட்கும் அயர்வுயிர்ப்பாம், அச்சொற்கள் புறப்படுதலான் என்பது'' (இறை. 30, உரை, ப.144) என்பது கொண்டும் அறியலாகும்.

குழந்தையின் அழுகையினை உவமைகாட்டி இவர் விளக்குமிடம் நனி நயமாக உள்ளது. அப்பகுதி வருமாறு; ''தலைமகன் கேட்பின் இன்னதொன்றாம், தோழி கேட்பின் இன்னதொன்றாம், யாருங் கேட்பாரில்லையாயின் இன்னதொன்றாம் என்று ஒரு பயன் சிந்தித்துச் சொல்லுமோ எனிற், சொல்லான்; குழிவி அழுதாற்போன வேட்கை மிகுதியாற் சொல்லினவிடத்து அப்பயன் நிகழும். குழவி அழுகின்றது, 'எனக்குப்பால் தம்மின்; நீர் ஆட்டுமின்'' என்றழாது, துக்கம் வந்ததாக அழும்; அழ, அறிவார் பயன் எய்துவிப்பர் என்பது.''

(இறை.30, உரை, ப.144)

இன்னும் சிலவிடங்களில் இவ்வாசிரியர் நல்ல உவமைகளைக் காரணங்களாகக் கூறிக் கருத்தினை நிறுவுகின்றார்.

''அ.'.தேயெனின் 'ஐந்து திணை' என்னும், ஐந்து சாண், ஐந்து கணம் என்றது போல எனின் அறியாது கடாவினாய் ஐந்து தலையுடைய நாகத்தை ஐந்தலை நாகமும் என்ப. ஐந்து தலை நாகமும் என்ப; இருமுடியும் உடைத்து.''

(இறை. 1, உரை, ப.24)

''என்னை, இருட்டகத்து விளக்குக் கொண்டு புக்கால் விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது; விளக்கு வந்த பின்னரும் இருள் நீங்காது; விளக்கு வருதலும் ஞானவொழுக்கக் குணங்களது தன்மையழிவும் உடனே நிகழும்.

(இறை. 2, உரை, ப.31)

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் காட்டுகின்ற உவமைகள் யாவுமே இலக்கியச் செவ்வியும் தரமும் வாய்ந்தவைகளாக உள்ளன. 'ஆங்கில இலக்கியத்தில் Miltonic Simile என்று கூறுவதற்கு இணையாகக் களவியல் உரைகாரரின் உவமைகளைக் கூற ஒண்ணும்.

**பழக்க வழக்கங்களைக் கூறல்** : உரை விளக்கத்தின் போது உரையாசிரியர்கள் நம் கால நடைமுறை வழக்கங்களைச் சுட்டிச் செல்வது இயல்பே. களவியலுரையிலும் இப்பண்பினைக் கண்டு தெளிய முடிகின்றது.

**கனவுக்குத் தண்டனையாகக் கை குறைப்பர்** : கண்ணை ஆழப்படுத்துவர்; கழுவேற்றுவர். இதனை, ''மற்று உலகத்துக் களவாயின எல்லாம், கைகுறைப்பவும் கண் சூலவும் கழுவேற்றவும் பட்டுப் பழியும் பாவமும் ஆக்கிக் நகரத் தொடக்கத்துத் தீக்த்திகளில் உய்க்கும்'' (இறை. 1, உரை, ப.25) என்பதனால் உணரவாகும்.

அக்காலத்து மக்கள் உரையூரையே சிறந்த ஊராகக் கருதினர் என்பதனை, ''ஊர் எனப்படுவது உறையூர்'' என்ற இடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப'' (இறை.1, உரை, ப.25) என வருகின்ற உரைப்பகுதி கொண்டு தெளிய முடிகின்றது.

இவ்வுரையாசிரியர் காலத்து விழாக்களைப் பற்றி 16 ஆம் நுற்பாவின் விளக்கவுரையினால் அறிந்து கொள்ள முடிகின்றது. ''ஊர் துஞ்சாமை என்பது – ஊர் கொண்ட பெருவிழா நாளாய்க் கண்படையில்லையாமாக, அதுவும் இடையீடாம் என்பது. அவை, மதுரை ஆவணியவிட்டமே, உரையூர்ப் பங்குனியுத்திரமே, கருவூர் உள்ள விழாவே என இவைபோல்வன''

(இறை. 16, உரை, ப.101)

அக்காலக் காவலர்களைப் பற்றி அறிய வேண்டுமா? இதோ! காவலர் என்பார் காப்பாளர், ஊர் காத்தல இடங்காத்தல் என இவற்றைக் கடிது காத்தும் என்று, காவலாளர் ஏமஞ்சூழ்ந்து கை விளக்கினொடு திரிதருவாரன்றே, அப்பெற்றியான பொழுதும் இடையீடாம் என்பது.''

(இறை, 16, உரை, ப. 101)

மன்னர்கள் அரசியல் தலைவர்களுள் தகுதி மிகுதியும் வாய்த்தார்க்கு 'ஏனாதி' என்ற பட்டம அளித்ததோடு மோதிரம் அணிவித்தும் சிறப்பித்தமையினை (இறை. 2, உரை, ப. 30) இவ்வுரையிலிருந்து நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**பிற சிறப்புக்கள்** : மூன்று சங்கங்களைப் பற்றிய குறிப்புக்களை இவ்வுரையிலிருந்தே முதற்கண் பெறுகின்றோம். (இறை. 1, உரை, பக். 5-6) மேலும்

இந்நூலின் உரையில் பாண்டிக்கோவைப் பாடல்கள் 327 எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இதன் அடிப்படையை எண்ணும்போது கோவை நூலின் தொடக் காலக வளர்ச்சி பெறப்படும். இக்களவியலுரைகாரர் பரிபாடல், முதுநாரை, முகுருகுரு, களரியாவிரை, அகத்தியம், கலி, குருகு, வெண்டாளி, வியாழமலை அகவல், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம், நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, சிற்றிசை, பேரிசை ஆகிய பற்பல நூல்களின் பெயர்களையும் குறிப்பிடக் காண்கின்றோம்.

மேற்கண்ட பல்வேறு சிறப்பியல்புகளும் உரை நயன்களும் இறையனார் களவியல் உரையில் நிறைந்து கிடப்பதனால் தொட்ட இடமெல்லாம் இனிக்கின்ற பலாச்சுவை போல இது விளங்குதல் வெள்ளிடைமலை, இத்தகைய சிறப்புநிலை கருதியே தனித்தமிழ் இயக்கத் தந்தையான மறைமலையடிகள், ‘‘பளப்பளப்பான பல நிறச் சலவைக் கற்கள் அழுத்திப் பொன்மினுக்குப் பூசிப் பல பல அடுக்கு மாடங்கள் உடைத்தாய் வான்முகடு அளாய், காண்பார். கண்ணுங் கருத்துங்கவரும் நீர்மைத்தாய் உயர்ந்தோங்கி நிற்கும் எழுநிலை மாடம்போல், ஆசிரியர் நக்கீரனாரது உரை நிவந்து நிற்றலும், அம்மாடத்தின் அருகே புல்வேய்ந்த குடிலும், ஓடு மூடியதொரு சிற்றினும் ஏழைமைத் தோற்றமும் உடையவாய்த் தாழ்ந்து நிற்றல்போல் இளம்பூரணர், பேராசிரியர் உரைகள் பீடு குறைந்து நிற்றலும் பிரிந்து இனிது விளங்கா நிற்கும்.’’ என இந்நூலினை இமயத்தின் உச்சியில் ஏற்றி வைத்துப் போற்றுகின்றார்.

# கூறு 3

## இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகார உரை

தொல்காப்பிய முழுமைக்கும் உரை எழுதிய இளம் பூரணர். பிறர் உட்புகுந்து காண முடியா வண்ணம் இருண்டு கிடந்த தொல்காப்பியம் என்னும் சரக்கறையுள் தம் அறிவென்னும் அவியா விளக்கைக் கொண்டு துருவி ஆங்கே குவிந்து கிடந்த அரதனக் குவியல்களை உலகிற்கு முதலில் விளக்கிக் காட்டிய பெருந்தகையார் அறிதற்கரிதாகிய தொல்காப்பியக்கடலை தம் மதிவலி கொண்டு கடைந்து முதன் முதலில் இலக்கண அமுதம் அளித்த பெரியார்'' என்று புலவர் போற்றும் சான்றோர்க்குரியவர் இவர். இவர் 'உரையாசிரியர்' என்று சிறப்புப் பெயரால் தமிழலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். மயிலை நாதர் இளம்பூரணரைத் 'துறவி' என்று குறிப்பிடுகின்றார். நன்னூலின் பத்து வகை எச்சங்களையும் குறிக்கும் 'பெயர்வினை என்னும் சூத்திரத்திற்கு உரையும் விளக்கமும் எழுதிய பின் இ∴து ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமில் மாதவர் ஓதிய உரை என்று உணர்க என்று குறிப்பிடுகின்றார்.

இளம் பூரணர் தம் உரையில் புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பெருங்கலவிருத்தி ஆகியவற்றிலிருந்து மேற்கோள் தந்து விளக்குவதால் அந்நூல்களுக்குப்பின் வாழ்ந்தவர் எனலாம். இவரது கருத்தை நன்னூலார் மேற்கொண்டிருப்பதால் இவர் காலம் பதினோராம் நூற்றாண்டாக இருக்கலாம்.

**பெயர்:**

'இவர் பெயர் பூரணர். முழுதுலகிறைஞ்ச முற்றொருங்குணர்ந்தோனாகிய அருகன் இயல்புகளுள் ஒன்றாகிய அனந்த ஞானம் என்ற பூரணத் தன்மையை உணர்த்தும் பெயர் இவருக்கு இடப்பெற்றது போலும்; இளமையில் துறவு பூண்டு மெய்ந்நெறியை நாடி நின்றமையால் இளம்பூரண அடிகள் எனப்பட்டார் என்று கருதலாம். அருக சமயத்தில் வந்தமை பற்றி இவருக்கு இப்பெயர் இடம் பெற்றிருக்கலாம், அல்லது இவரது தகுதி பற்றியும் காரணப் பெயராகவும் இப்பெயர் அமைந்திருக்கலாம்.'' என இளம்பூரணர்' என்னும் பெயர் பற்றிய தம் கருத்துக்களைக் கூறுகிறார் அறிஞர். மு. அருணாசலம். 'தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் பூரணமான உரை எழுதி அல்வுரை இன்று வரை நிலவுமாறு வைத்த பெருமை இவருக்குரியது. இவர் பெயர் பூரணர் என்று இருந்ததனாலே இந்தப் பூரணமும் தொல்காப்பிய உரையாசிரியர் மரபில் இவர்

ஒருவருக்கே வாய்த்தது போலும்!” என அவரே பிறிதொரு நூலில் குறிப்படும் கருத்தும் ஈண்டு நினைவு கூரத்தக்கதாகும்.

**சமயம்:**

இளம்பூரணர் சமண சமயத்தைச் சார்ந்த ஒரு துறவி என்பதை உறுதி செய்வதற்குச் சான்றுகள் பல கிடைக்கின்றன.

‘பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இரு வகைப்படும். அவையாவன, போகம் நுகர்தலும் வீடு பெறுதலும் என. அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க்கல்லது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க் கெய்துவது’ என இளம்பூரணர் களவியலின் முதற்சூத்திர விளக்கத்தில் (பொருள்.89) எழுதுகின்றார். இங்கே அவர் துறவறத்தில் இருப்போரே முதலில் வீடுபேறு அடைவர் என்னும் சமண சமயக் கோட்பாட்டிகை எடுத்துக்காட்டியுள்ளார்.

‘எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்ப.·.து என்ப’

என்பது எழுத்ததிகாரத்தின் தலைச்சூத்திரம். (எழுத்து, 1) இச்சூத்திர விளக்கத்தில் இளம்பூரணர், “அகரம் தானும் இயங்கித் தனி மெய்களை இயக்குதற் சிறப்பான், முன் வைக்கப்பட்டது. னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின் வைக்கப்பட்டது” எனக் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களான சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் உரையைத் தழுவியும் மறுத்தும் உரை எழுதுகின்றனர். சேனாவரையரின் காலம் கி.பி.13 ஆம் நூற்றாண்டு; நச்சினாக்கியரின் காலம் கி.பி.14ம் நூற்றாண்டு, எனவே இளம்பூரணர் கி.பி.13ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பது தெளிவு.

**உரை மரபுகள்:**

இளம்பூரணரை நாம் போற்றுவது, அவர் தொல்காப்பியத்திற்கு முதன்முதலாக உரை எழுதினார் என்பதற்காக மட்டுமன்று; செம்மையான, பின்வருவோர் பின்பற்றத் தகுந்த உரை மரபுகள் பலவற்றை அவர் தோற்றுவித்தார் என்பதற்காகவே நாம் அவரைப் பெரிதும் போற்றுகிறோம்; ‘உரை முன்னோடி’ (Pioner)” எனப் பாராட்டுகிறோம். அறிஞர்.மு.அருணாசலம் கூறுவது போல்,

‘இளம்பூரணர் உரை செய்த முகூர்த்தம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு நல்ல முகூர்த்தம்’ பின் தொடர்ந்து உரையாசிரியர் திருக்கூட்டம் ஒன்றே கூறுவாயிற்று; பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் கல்லாடர், தெய்வச்சிலையார் எனப் பலரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுத முற்பட்டனர். காலப்போக்கில் இத்துணை உரைகளும் உரையாசிரியர்களும் தோன்றுவதற்கு அடிப்படையான காரணராய் அமைந்தவர் இளம்பூரணர் ஆவார்.

மூல நூலாசிரியரிடத்துப் பெருமதிப்பு வைத்து எழுதுதல், பிற மொழிப் பயிற்சியோடு உரை எழுதுதல் வினா விடைப் பாங்கு, சொற்பொருள் தருதல், பல துறையறிவோடு உரை வரைதல், பல்வேறு நூல்களிலிருந்து புலப்படும் வகையில் எழுதுதல், பாட வேறுபாடுகளைத் தருதல் முதலான உரை மரபுகள் பலவற்றைக் கையாண்டு உரை எழுதியுள்ளார். இளம்பூரணர். இனி, இவ் உரை மரபுகள் குறித்து ஒவ்வொன்றாகக் காண்போம்.

**நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்தல்**

‘நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்துவதே உரையின் ஒழுக்கம். தன் கருத்து எதுவாக இருந்தாலும் இன்னொருவன் எழுதிய நூலில் அதனை ஏற்றிக் கூறலாகாது. அப்படிச் செய்வது உரை வழுவாகும்.’’ என்பது அறிஞர் வ.சுப.மாணிக்கம், நூலுள் ஆழ்ந்திருக்கும் ஆசிரியரின் உள்ளத்தைக் காண்பதே – அவரது கருத்தை வெளிப்படுத்துவதே-உரை மரபுகளுள் அடிப்படையானதும் தலைமையானதும் ஆகும். இளம்பூரணர் மூல நூலாசிரியரான தொல்காப்பியரிடத்துப் பெரு மதிப்பு வைத்து உரை எழுதியுள்ளார். மூல நூலைப் போற்றி எழுதும் பண்பினை அவரது உரையில் படிக்கக் காணலாம்.

தொல்காப்பியர் பிற நூலாசிரியரைப் போல் தம் நூலுள் அறமும் பொருளும் விரித்துக் கூறவில்லை; இன்பப் பகுதியும் வீரப் பகுதியுமே விரித்துக் கூறியுள்ளார். இதற்கான காரணத்தை இளம்பூரணர் பொருளதிகாரத்திற்கு எழுதிய முன்னுரைப் பகுதியில் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். ‘‘பிற நூலாசிரியர் விரித்துக் கூறினாற் போல, அறமும் பொருளும் விரித்துக் கூறாதது என்னையோ வெனின், உலகத்தில் நூல் வெய்வார் செய்கின்றது அறிவிலா நாரை அறிவு கொளுத்த வேண்டியன்றே; யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்து ஓதுவாராயின, ஓதுகின்றதனாற் பயன் இன்றாமாதலால், முன்னூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் மரபு என்று உணர்க. அஃதேல் இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின், காமப் பகுதியும் வீரப் பகுதியும் என்க. இன்பம

காரணமாகப் பொருள் தேடும் ஆகலானும் பொருளாளே அறஞ்செய்யும் ஆகலானும் இன்பமும் பொருளும் ஏற்றம் என ஓதினார் என உணர்க.'' என்னும் அவரது கருத்து விளக்கம் தொல்காப்பியத்திற்கு ஏற்றம் தருவதாகும். அவரது நோக்கத்தினைத் தெள்ளிதின் புலப்படுத்துவதாகும்.

'என்றன் பாட்டுத் திறத்தாலே-இவ் வையத்தைப் பாலித்திட வேணும்' எனப் பராசக்தியிடம் வேண்டினார் கவியரசர் பாரதியார். இதுபோல், தொல்காப்பியரும் 'இலக்கியம் மனித வாழ்வின் மேம்பாட்டிற்குப் பயன்பட வேண்டும்' என்னும் கருத்தினைக் கொண்டுள்ளார். அவர் செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாகப் 'பயன்' என்பதைக் கூறியுள்ளார். 'இது நனி பயக்கும் இதன்மாறு என்னும் செய்யுளியல் நிலைக் கிளவி பயன் எனப்படுமே' என்னும் செய்யுளியல் நூற்பாலின் (பொருள். 504) உரை விளக்கத்தில் இளம்பூரணர், ''இவ்வகையினால் யாதானுமொரு செய்யுளாயினும் பயன்படக் கூறல் வேண்டுமென்பது கருதிப் பயனென ஒரு பொருள் கூறினார். என எழுதித் தொல்காப்பியரின் கொள்கையைத் தெளிவுப்படுத்துகின்றார்.

'இந்நூல் உலக வழக்கே நோக்குதலானும் ...

(பொருள். 90)

'உலகத்துள்ளார் இலக்கணமெல்லாம் உரைக்கின்றாராகலின், இவ்வாசிரியர் உரைக்கின்ற வாற்றான் நிகழ்தல் பெரும்பான்மையாகவும்...

(பொருள். 98)

'இந்நூல் வழக்குஞ் செய்யுளும் பற்றி நிகழ்தலின்..

(பொருள்.166)

'இ:.த உவமையின் பாகுபாடு என்பது இவ்வாசிரியர் கருத்து

(பொருள்.280)

'...பிற நூலாசிரியர் கூறிய இலக்கணமும் இவ்வாசிரியர்க்கு உடம்பாடென்று கொள்க'

(பொருள். 373)

'...எனவும் கூறுதல் இவ்வாசிரியர் கருத்தென்று கொள்க'

(பொருள்.456)

இளம்பூரணரின் உரையில் இடையிடையே வரும் இவ்வரிகள், தொல்காப்பியரின் கருத்தை வெளிப்படுத்துவதில் அவர் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கின்றார் என்பதைக் காட்டுவனவாகும்.

இளம்பூரணரின் வடமொழி அறிவைக் காட்டும் சான்றுகள் ஒன்றேனும் அவரது தொல்காப்பிய உரையில் இல்லையா வடமொழிச் சார்பைக் காட்டும் சான்றுகள் தான் இல்லையே தவிர, வடமொழி அறிவைக் காட்டும் சான்றுகள் அவரது உரையில் நிறையவே காணப்படுகின்றன. காட்டாக சிலவற்றைக் காண்போம்.

1. புகழ்பெற்ற வடமொழி இலக்கண நூலாக பாணனீயத்தை இரண்டு முறை இளம்பூரணர் தம் உரையுள் குறிப்பிட்டுள்ளார். அவர் பாணினீய ஆசிரியன் 'பாணினியார்' (பொருள். 656) என மதிப்போடு சுட்டுவது கருதத்தக்கதாகும்.

2. மனைவியின் இயல்பினைப் பற்றி கூறும் வடமொழிக் காமதந்திர நூலினை இளம்பூரணர் கற்பிட உரையுள் குறிப்பிட்டுள்ளார். 'அவை மனையாளை பற்றி வருதலிற் காம தந்திரத்துட் பாரியாதிகாரமெனக் கூறுப்பட்டன. (பொருள். 151) என்பது அவரது உரைக் குறிப்பது.

3. வடமொழிச் சொல்மூலம் காட்டும் போக்கு இளம்பூரணரிடம் ஆங்காங்கே காணப்படுகின்றது. சான்றுகள் வருமாறு:
   **"படிமை'** என்பது ப்ரதிமா என்னும் வடமொழி திரிபு." (பொருள் - 30)
   **"ஆணை**யென்பது ஆக்கினை. வடமொழித் திரி (பொருள். 495)
   **"உத்தி**யென்பது வடமொழிச் சிதைவு." (பொருள். 656)
   **"உயிர்த்தல்** என்பது சுவாதம் எனினும அமையும்." (பொருள். 109)

4. இளம் பூரணர் தம் சொல்லாதிகார உரையுள் பின்வரும் வடமொழி கலந்த சுலோகம் ஒன்றை எடுத்துக் காட்டியுள்ளார்:

   "திரிதிரி சுவாகா கன்று கொண்டு
   கறவையும் வத்திக்க சுவாகா" (சொல். 443)

இச் சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது, இளம்பூரணரின் வடமொழிப் பயிற்சி தெள்ளதின் புலனாகின்றது; அவர் பிறமொழி மரபுகளை விலக்கித் தமிழ் மரபினை ஒட்டியே உரை எழுதிச் சென்றிருப்பதும் நன்கு விளக்கம் பெறுகின்றது.

**வினாவிடை நெறி**

வினா விடைப் பாங்கில் எழுதிச் செல்வது பண்டை உரையாசிரியர்கள் கடைப்பிடித்த நெறிகளுள் ஒன்றாகும். கற்பவர்க்குத் தெளிவு செய்யும் நோக்குடன்

அன்னோர் இடையிடையே வினாக்களைத் தொடுத்து, தக்க விடைகளையும் எழுதிச் சென்றனர். இளம்பூரணர் உரையிலும் இந்நெறியின் செல்வாக்கினை மிகுதியாகக் காண்கிறோம்.

தொல்காப்பியர் ஓதற் பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, தேவர் காரணமாகப் பிரியும் பிரிவு என்னும் அறுவகையான பிரிவுகளைப் பற்றிய கருத்துக்களை அகத்திணை இயலில் (பொருள். 27-37) கூறியுள்ளார். அவர் பாரத்தையிற் பிரிவு பற்றி அகத்திணை இயலில் யாதும் கூறவில்லை. “இத்துணையும் பிரிவு அறுவகைப்படும் என்றவாயிற்று. அ∴தேல் பரத்தையிற் பிரிவு என்பதோ எனின், அது நிலம் பெயர்ந்து உரையாமையானும், இவைபோல் சிறக்காமையானும், அறமுறைமை செய்யப் பிரிதலும் பொருள் காரணமாகப் பிரிதலுமின்றிப் பிரிதலினானும், கற்பியலுள் கூறப்படும் என்க.” (பொருள்.30) எனத் தொல்காப்பியர் அகத்திணை இயலில் பரத்தையர் பிரிவு பற்றிக் கூறாமைக்கான காரணங்களை வினாவிடை நெறி நின்று விளக்குகின்றார் இளம் பூரணர் இங்ஙனம் ‘எனின்’ என்ற சொல்லால் தொடுக்கப்பட்டு ‘என்க’ என்ற சொல்லால் முடிக்கப்படும் வினா விடைப் பாங்கினை இளம்பூரணர் நடையில் பரக்கக் காணலாம். பிறிதோர் எடுத்துக்காட்டு; “வாழ்த்தல் என்பது பிறனை வாழ்த்துல், ‘வாழியாதன் வாழி’ (ஐங்குறு என்றும், ‘எங்கோ வாழிய குடுமி’ (புறம். 9) என்றும் இவ்வாறு வருவழி ஆண்டு வரும் மன நிகழ்ச்சி மெய்பாடாம்; அ∴தேல் வைதலும் மெய்ப்பாடாதல் வேண்டும் அது வெருட்சியின் முதிர்வு. இது அன்பின் முதிர்வாகாதோ எனின், அன்பின்றியும் அரசன் முதலாயினாரைச் சான்றோர் வாழ்த்துதலின் அடங்காதென்க.” (பொருள். 256) மெய்ப்பாட்டியலில் வரும் இப்பகுதி படிப்பவர் சிந்தனைக்கு விருந்தாக வல்லதாகும்.

‘எனின்’ என்ற சொல்லால் தொடுக்கப்பட்டு, ‘என்க என்ற சொல்லின்றி முடியும் பாங்கினையும் இளம்பூரணரின் நடையில் காண முடிகின்றது. ஓர் எடுக்காட்டு “களவின்கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியாற் கூட ஒழுகிய வழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமோ எனின் அ∴தாகாதென்றற்குக் கரணமொடுபுணர என்றார்”. (பொருள். 140)

இளம்பூரணர் தம் உரையுள் ஆங்காங்கே சுவையான நயமான – சொற்பொருள் விளக்கங்களை எழுதிச் செல்கின்றார். அவ்விளக்கங்கள் அருமையும் எளிமையும் அழகும் பெற்றுக் திகழ்கின்றன. ஈண்டு, அவற்றுள் குறிப்படதக்க சிலவற்றைக் காண்போம்:

**“நாடக வழக்காவது,** சுவைபட வருவனயெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். உலகியல் வழக்காவது, உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது.” (பொருள்.56)

**“பெருமையாவது** பழியும் பாவமும் அஞ்சுதல், உரன் என்பது அறிவு.”

(பொருள். 95)

**“எழில் என்பது** அழகு. அது மிக்குங் குறைந்தும் நீடீயும் குறுகியும நேர்தி உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புக்கள் அவ்வளவிற்கு குறையாமல் அமைந்த வழி வருவதோர் அழகு.” (பொருள். 243)

**“ஆக்கம்** என்பது ஒன்றன் பரிணாமங் கண்டு வியத்தல் அது தன்னளவின்றி நன்னிலஞ் சார்பாகத் தோன்று மரமுதலாயின ஆகியவழி வியத்தலும், நல்கூர்ந்தான் யாதொன்று மிலாதான் ஆக்கமுற்றானாயின், அதற்குக் காரண முணராதான் அது கண்டு வியத்தலும், இளையான் வீரங்கண்டு வியத்தலுமாம்.” (பொருள். 251)

**“வியப்பென்பது** தம்மைப் பெரியராக நினைத்தல் (பொருள். 270)

**“ஆராய்ச்சி** என்பது ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென வாராய்தல், ஆராய்தல் எனினுந் தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்.” (பொருள்.256)

**“நடுவு நிலைமையாவது** ஒரு மருங்கு ஓடாது நிகழும் மன நிகழ்ச்சி.”

(பொருள். 256)

‘தொடர்பு பற்றாதே வருத்த முற்றார்மேல் செல்வது அருள், தொடர்பு பற்றிச் செல்வது அன்பு’ என்னும் பரிமேலழகரின் விளக்கம் (குறள் 757) இன்று பலராலும் பாராட்டிக் கூறப்படுகின்றது. ஆயின், பரிமேலழகருக்கு முன்பே, இளம்பூரணர் அருள் என்பதற்கும் அன்பு என்பதற்கும் இத்தகையதொரு விளக்கத்தினை அளித்திருக்கின்றார் என்பதை அறியும்போது வியப்பினும் வியப்பாக உள்ளது. ‘அருளாவது எல்லாவுயிர்க்கும் அளி செய்தல். அன்பு என்பது பயின்றார். மாட்டுச் செல்லுங் காதல்.’ (பொருள். 256) என்பது இளம்பூரணர் மெய்பாட்டியல் நூற்பா ஒன்றில் எழுதியுள்ள விளக்கம்.

**பலதுறையறிவு:**

ஒரு நூல் இலக்கிய அறிவை மாத்திரம் தருவதில்லை. மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுகளும் அமையப் 'படைப்பது. இலக்கியம். அத்தகைய இலக்கிய கலைக்குப் பொருள் காண வேண்டும் எனின், பொருள் காண்பார்க்குப் பல துறையறிவு வேண்டும் என்பது தானே விளங்கும்.'' என்பர் அறிஞர். இளம் பூரணரின் தொல்காப்பிய உரைகளைப் பயில்வார்க்கு அவரது பல துறையறிவு நன்கு விளங்கும்.

> ''பூப்பின் புறப்பாடு ஈரறு நாளும்
> நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்
> பரத்தையிற் பிரிந்த காலை யான''

என்பது கற்பியலில் தலைவனுக்கு உரியதோர் மரபினை உணர்த்தும நூற்பா (பொருள். 185). தலைவன் பரத்தையிற் பிரிந்திருந்த காலத்துத் தலைவிக்குக் பூப்பு நேரலாம். இச்செய்தியைக் கேள்விப்பட்ட தலைவன் உடனே வீட்டிற்கு வந்துவிட வேண்டும்; தலைவியை விட்டுப்பிரியாமல் பன்னிரண்டு நாளும் அவளுடன் உறைய வேண்டும். 'இதனால் என்ன பயன்? என்ற வினாவிற்கு இளம் பூரணரின் உரை விளக்கம் தக்க விடையில் தருகின்றது. அவ் விளக்கம் இதோ: ''பரத்தையர் சேரி யானாயினும் பூத்தோன்றி மூன்று நாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றவாறு இதனாற் பயன் என்னையெனின் அது கருத்தோன்றும் காலம் என்க.'' இளம்பூரணருக்கு இருந்த பாலியல் அறிவை இப்பகுதியால் உணர முடிகின்றது.

புறத்திணை இயலில் வாகைத் திணை பற்றிய நூற்பாவில் 'மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறி ஆற்றிய அறிவன்' (பொருள். 74) எனக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். ''அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றதலாவது, பகலும் இரவும் இடைவிடால் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளுந் தூமமும் மீன் வீழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல். ஆதலான் 'மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்' என்றார்.'' என இவ்வரிகளுக்கு இளம்பூரணர் எழுதும் உரை விளக்கம் அவரது வானியல் புலமைக்குக் கட்டியும் கூறுவதாகும்.

நாட்டுப் புறவியலிலும் இளம்பூரணருக்கு நல்ல தோய்வு உள்ளது. 'உன்னம்' என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும்.'' (பொருள். 63) என அவர் நாட்டிலே வழங்கும்

நம்பிக்கையைப் புறத்திணை இயலில் கரந்தைத் திணை பற்றிய நூற்பாவின் விளக்கத்தில் எடுத்துக்காட்டுகின்றார். “அச்சுப் போல பூப்பூக்கும், அமலேயென்னக் காய்க்கும்” (பொருள். 478) என்பது செய்யுளியலில் வரும் பிசிக்கும் இளம்பூரணர் தரும் எடுத்துக்காட்டு.

**நாகரிமும் பண்பாடும்**

இளம்பூரணர் உரையின் வாயிலாக அவர் காலத்தில் தமிழகத்தில் நிலவிய நாகரிக, பண்பாட்டு நிலைகளையும், பழக்க வழக்கங்களையும், அறக் கருத்துக்களையும், நம்பிக்கைகளையும், சடங்குகளையும், பேச்சு வழக்குகளையும் தெரிந்து கொள்கிறோம். இவ் வகையில் குறிப்பிடத்தக்க .....சுவையான செய்திகளை இங்கே காண்போம்.

**‘ஏனாதி’, ‘காவிதி’, ‘எட்டி’** என்பன அக்காலத்து ஒருவரைப் பாராட்டுமுகமாகக் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் ஆகும். (சொல். 163)

‘அறஞ்செய்தான் சுவர்க்கம் புகும் : தாயைக் கொன்றான். நிரயம்புகும்’ (சொல். 237) எனவும், ‘உயர்வுதாம் பல: குலத்தால் உயர்தலும், தவத்தால் உயர்தலும், நிலையில் உயர்தலும், உபகாரத்தால் உயர்தலும் என’ (சொல். 87) எனவும் இளம்பூரணர் காட்டும் உதாரணங்கள் சிறந்த நீதிகளாகவும் விளங்குகின்றன.

வினாவிற்கு விடையாக உறுவது கூறுதலும் வழுவாகாது என்பதற்கு, “சாத்தா, உறையூர்க்குச் செல்லாயோ? எனின் கடமுடையார் வளைப்பர்; பகைவர் எறிவர்’ என்பது” (சொல். 15) என்னும் எடுத்துக்காட்டினைச் தருகின்றார் இளம்பூரணர்.

“பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோவியிலுள்ளும் இல்லை’ (சொல்.34) என்பது மன்னாப் பொருளுக்கு - இல்லாப் பொருளுக்கு - இளம்பூரணர் கூறும் எடுக்காட்டு ஆகும்.

‘ஆக்கந்தானே காரண முதற்றே’ என்றும் கிளவிய நூற்பாவின் உரை விளக்கத்தில் (சொல். 21) ‘கடுவும் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின என்னும் எடுத்துக்காட்டினைத் தருகின்றார் இளம்பூரணர் அக்காலத்து மகளிர் தம் கூந்தலைப் போற்றி வளர்த்த பாங்கினை இதனால் அறிகிறோம்.

**மேற்கோள் காட்டுதல்:**

இளம்பூரணர் தொல்காப்பிய நூற்பாவிற்குத் தாம் கூறும் உரை விளக்கம் ஒவ்வொன்றிற்கும் இயன்ற வரை தமக்கு முன் தோன்றிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிக் கொண்டே செல்கிறார். இ∴து ஓர் அரிய இயல்பாகும். எல்லோருக்கும் நன்கு அறிமுகமான நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவதுடன் நில்லாது, இன்று மறைந்து போன அரிய பல நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவது, இளம்பூரணர் தமிழ் உலகிற்கு ஆற்றியுள்ள பேருதவி ஆகும். இளம்பூரணரின் பொருளதிகார உரையில் பயில்வார் அவருக்கு இருந்த பரந்துபட்ட நூலறிவை எளிதில் உணரக்கூடும்.

எட்டுத்தொகை நூல்கள் எல்லாவற்றிலிருந்து இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். அவரது உரையினால் (பொருள். 428) ‘ஆயிரம் விரித்து அணங்குடை அருந்தலை’ எனத் தொடங்கும் பரிபாடலில் கடவுள் வாழ்த்துப் பாடல் நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ளது.

பத்துப்பாட்டுள் சிறுபாணாற்றுப் படை நீங்கலாகப் பிற பாட்டுக்கள் ஒன்பதையும் இளம்பூரணர் எடுத்துக் காட்டியுள்ளார். திருமுருகாற்றுப் படையை’ அவர் ‘புலவராற்றுப்படை’ எனக் குறிப்பிடுகிறார்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள், திருக்குறள் நாலடியார், பழமொழி, திரிகடுகம், களவழி நாற்பது, கார் நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை என்னும் பதினொரு நூல்களிலிருந்தும் இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். அவர் கைந்திலைப் பாடல்கள் பலவற்றைக் காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

காப்பியங்களுள் சிலப்பதிகாரத்தை இளம்பூரணர் மிகுதியாகக் குறிப்பிட்டுள்ளார். காட்டாசு, “சேரன் செங்குட்டுவனார் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவு சிலப்பதிகாரத்திற் கண்டு கொள்க.” (பொருள். 30) என வரும் உரைப்பகுதியைச் சுட்டலாம். மணிமேகலை, சிந்தாமணி, சூளாமணி ஆகியன இளம்பூரணர் எடுத்தாண்டுள்ள பிற காப்பியங்கள் ஆகும்.

புறப்பொருள் வெண்பா மாலை, இறையனார் களவியல், பிங்கல் நிகண்டு, தமிழ் நெறி விளக்கம் ஆகியவை இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ள இலக்கண நூல்கள் ஆகும்.

மறைந்து போன தமிழ் நூல்களான அகத்தியம், செயிற்றியம், காக்கைபாடினியம், பரிமாணச் சூத்திரம், பன்னிரு படலம் ஆகியவற்றையும் இளம்பூரணர் எடுத்தாண்டுள்ளார்.

இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ள பிற நூல்களுள் ஆசிரிய மாலை, குணநாற்பது, சிற்றெட்டகம், தகடூர் யாத்திரை, பாண்டிக் கோவை, பெரும் பொருள் விளக்கம், மார்க்கண்டேயனார் காஞ்சி, முத்தொள்ளாயிரம், விளக்கத்தனார் கூத்து என்பன குறிப்பிடத்தக்கன.

இளம்பூரணர் தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர்; ஆதலின், அவர் கொண்ட சில பாடங்கள் மிகப் பழமையானவை என்று கருத இடமுள்ளது. பின்வந்த உரையாசிரியர்கள் கூறும் பாடங்களை விட, இளம்பூரணர் கொண்டுள்ள பாடங்களே பெரும்பாலும் சிறப்பாகவும் பொருத்தமாகவும் உள்ள பாங்கினைக் காண முடிகின்றது.

‘இருவகைக் குறி பிழைப் பாகிய இடத்தும்..’ எனத் தொடங்கும் களவியல் நூற்பா (பொருள். 105) தலைவனுக்கு உரிய கூற்றுக்களை உணர்த்துவதாகக் கொண்டு உரை விளக்கம் எழுதுகின்றார் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியர், அந் நூற்பாவின் இறுதியில் உள்ள ‘கிழவோன்’ என்ற சொல்லுக்குக் ‘கிழவோள்’ என்ற வேறுபாடம் கொண்டு, அந்நூற்பா தலைவிக்கு உரிய கூற்றுக்களை உணர்த்துவதாக உரை விளக்கம் எழுதுகின்றார். இரு பாடங்களுள், இளம்பூரணர் கொண்ட பாடமே பொருத்தமாக உள்ளது; நூற்பாவின் பொருள் அமைப்புத் தலைவன் கூற்றுக்கே பொருந்துவதாக உள்ளது களவொழுக்கத்துத் தலைவியின் இயல்புக்குச் சிறிதும் ஒத்துவாராத இந்நூற்பாவினை நச்சினார்க்கினியர் தலைவி கூற்றாகக் கொண்டிருப்பது வியப்பாக உள்ளது.

‘அலரில் தோன்றுங் காமத்திற் சிறப்பே’ என்னும் நச்சினார்க்கினியரின் பாடத்தினும், அலரில் தோன்றும் காமத்து மிகுதி’ (பொருள். 161) என்னும் இளம்பூரணரின் பாடமே சிறப்பாக உள்ளது.

‘உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்’ (பொருள்.51) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். ‘உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென, உள்ளுறுத்த இறுவதை உள்ளுறை உவமம்’ என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம். இரண்டனுள், இளம்பூரணரின் பாடமே இயல்பாக உள்ளது.

பொருளியலுள் நச்சினார்க்கினியர்,

“இறைச்சி தானே பொருட் புறத்துவே” என்று பாடம் கொண்டுள்ளார். ஆனால் இளம்பூரணரோ, “இறைச்சி தானே உரிப்புறத் ததுவே” என்று பாடம் கொண்டுள்ளார். “உள்ளுறை உவமம், இறைச்சி பற்றிய தொல்காப்பியர் கருத்துக்களை நினைவில் கொண்டு பார்த்தால், ‘உரிப்புறத்தது’ என்ற பாடம் பொருத்தமாய் இருக்குமோ என்று எண்ண வேண்டியுள்ளது’ என்கிறார் பேராசிரியர் மு.வை.அரவிந்தன்.

பொருளதிகாரத்தின் ஏழாவது இயலை இளம்பூரணர் ‘உவமையியல்’ எனச் சுட்ட, பேராசிரியரோ ‘உவமவியல்’ எனக் குறிப்பிடுவார்.

‘விருந்தே தானும், புதுவது புனைந்த யாப்பின் மேற்றே’ (பொருள். 540) என்பது இளம்பூரணர் கொண்டுள்ள பாடம். ‘விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே’ என்பது பேராசிரியர் கொண்டுள்ள பாடம். யாப்பு என வருவதால் ‘கிளந்த’ என்ற சொல்லை விட, ‘புனைந்த’ என்ற சொல் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

**உரை நயங்கள்**

இலக்கணப் புகழ் சான்ற தொல்காப்பியம் இலக்கிய நயமும் பொருந்திய நூலாகும். காப்பிய இலக்கியம் சிற்றிலக்கியம், நீதி இலக்கியம், புதின இலக்கியம் என்பன போல தொல்காப்பியம் ‘இலக்கண இலக்கியம்’ என்ற புதுப்பெயரைப் பெறும் தகுதி படைத்தது என்பது அறிஞர் கருத்து.

தொல்காப்பியத்திலும் அதன் உரைகளிலும் நயக்காண்பது ஒரு தனிக்கலை. அத்தகைய நயக்கலையை நாம் பார்க்கவும் வளர்க்கவும் கடமைப்பட்டுள்ளோம். தொல்காப்பிய உரையாசிரியர்களுக்கு அந்நூலில் நயத்தன்மை உண்டு என்பதில் ஐயப்பாடு இல்லை. அன்னவர் உரைகளில் நயக் குறிப்புகள் மண்டிக் கிடப்பது அந்நோக்கோடு தொகுத்துப் பார்ப்பார்க்குப் புலனாகும். இனி, இளம்பூரணர் தொல்காப்பிய உரையுள் காட்டியுள்ள பல்வேறு நயங்களை நிரலே காண்போம்.

**சொல் நயங்கள்:**

‘வெல்லும் சொல் இன்மை அறிந்து, திறன் மிகுந்த சொற்களைக் கையாளுவது (குறள் : 645) பெரும்புலவரின் இயல்பு. அவர் கையாண்டுள்ள சொற்களின் வன்மையையும் வனப்பையும் எடுத்துக்காட்டுவது ‘மாசற்ற சில

சொல்ல’லில் வல்லவர் (குறள் : 649); சொற்களை வலியறிந்து, காலம் அறிந்து, இடன் அறிந்து, அளவறிந்து ஆளும் ஆற்றல் மிக்கவர். இளம்பூரணரோ தொல்காப்பியரது சொற்களில் காணலாகும் நயங்களை எடுத்துக்காட்டுவதில் ஆற்றல் மிக்கவர். அவர் காட்டும் சொல் நயங்களுக்குச் சில சான்றுகளைக் காண்போம்.

‘கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்’ (பொருள் - 68) என்பது புறத்திணை இயலில் உழிஞைத் திணை குறித்து வரும் நூற்பாவின் தொடக்கவரி, ‘பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றமும்’ என்பது இவ்வரியின் பொருள். ‘கொள்ளார்’ என்பதற்குப் ‘பகைவர்’ என்பது சொற்பொருள்; ஆயின் இளம்பூரணரோ ‘கொள்ளார் தன்னை இறையெனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும்’ என நயமாகப் பொருள் விளக்கம் தருகிறார்.

‘முன்னிலை அறன் எனப்படுதல் என்று இருவகைப் புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்’ (பொருள். 112) என்பது களவொழுக்கத்தில் தோழிக்கு உரிய கூற்று வகைகளுள் ஒன்று. தோழி இளைய தலைமுறையைச் சார்நதவள்; செவிலித் தாயோ முதிய தலைமுறையைச் சார்ந்தவள்; அவள் தோழியின் தாயும் கூட, சொல்லுகின்ற செய்தியோ நுட்பமானது; தலைவியின் காதல் ஒழுக்கத்தைப் பற்றியது; இதனைப் பற்றித் தோழியும் தலைவியும் மனம் திறந்து நிரம்பப் பேசிக் கொள்ளலாம்; ஆனால் தோழி தாயிடம் இதனைப் பற்றிப் பேசும் போது எப்படிப் பேசுவாள்,? தொல்காப்பியர் ‘தாயிடைப் புகுப்பினும் என்ற நயமான சொல்லாட்சியைக் கையாளுகிறார். ‘புகுப்பினும் என்ற தொல்காப்பியரின் சொல்லுக்கு; ‘முன்னிலை வகையானாதல் அறத்தொடு நிலை வகையானாதல் இவ்விரு வகையானுந் தலைவற்கும் தலைவிக்கும் தனக்குங் குலத்திற்கும் குற்றந் தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டுப் புகுதவிடுத்தல். புகுத விடுத்தலாவது நிரம்பச் சொல்லாது தோற்றுவாய் செய்தல்’ என இளம்பூரணர் நயவுரை வழங்குகிறார்.

### அடைமொழி நயங்கள்:

பொருள் பொதிந்த அடைமொழித் தொடர்கள் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களில் மண்டிக் கிடக்கின்றன. இவ் அடைமொழிகளின் நயங்களை இளம்பூரணர் தம் உரையுள் ஆங்காங்கே எடுத்துக்காட்டியுள்ளார்.

‘செங்கடு மொழியால் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும்.’’

என வரும் களவியல் நூற்பாப் பகுதியில் (பொருள். 112) தோழியின் கூற்றுக்குச் செம்மை, கடுமை என்ற இரண்டு அடைமொழிகளைக் கையாளுவார் தொல்காப்பியர் கொடுங்கடுமொழி என்றால் மனத்திலும் சொல்லிலும் இரண்டிடத்தும் வெறுப்பு என்றாகும். செங்கடுமொழி என்றதனால் செம்மை மனத்தகத்து அன்பையும், இனிமையையும் கடுமை வாயளவில்-சொல்லளவில்-கசப்பையும் கொடுமையையும் குறிக்கும் என நயம் உரைப்பார் இளம்பூரணர். ‘‘செங்கடுமொழி என்றது – கொடிய கடுமொழயேயன்றி மனத்தினான் இனியளாகிக் கூறும் கடுமொழி’’ என்பது அவரது அருமையான உரை விளக்கம்.

‘எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார் என்னும் கற்பியல் நூற்பாவில் (பொருள். 173) வரும் எண்ணரும் பாசறை’ என்ற அடைமொழித் தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரை விளக்கம் படிப்பவர் நெஞ்சை அள்ளுவதாகும்: ‘‘நினைத்தற்கரிய பாசறைக் கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்றவாறு. நினைத்தற்கருமை-மாற்றாரை வெல்லுங் கருத்து மேற்கோடலிற் றலைமகளிரை நினைக்கலாகாதாயிற்று.’’ ‘மாற்றாரை வெல்லதும் குறிக்கோள் கொண்ட தலைமகள் பாசறையில் இருக்கும்போது தலைமகளை நினைக்க மாட்டான்’ என்னும் இளம்பூரணரின் கருத்து விளக்கம் நயமும் நுட்பமும் பொருந்தியதாகும்.

‘‘தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியும்’’

என வரும் கற்பியல் நூற்பாவில் (பொருள். 145) ‘மாயப்புரத்தை’ எனப் பரத்தையைச் சுட்டுவார் தொல்கர்பியர். ஈண்டு அவர் ‘மாயம்’ என்ற அடையைப் பயன்படுத்துவது ஏன்? ‘மாய மான்’, ‘மாய மனிதன்’ என்ற போது மாயமல்லாத மான்களும் உள, மாயமல்லாத மனிதர்களும் உளர் என்பது பெறப்படும். மாயம் எல்லா மானுக்கும், எல்லா மனிதர்க்கும் இயல்பில்லை. ஆனால் ‘மாயப்புரத்தை’ என்னும் போது மாயமல்லாத பரத்தைகளும் உண்டு எனப் பொருள்படுமா? எல்லாப்பரத்தையருமே மாயமுடையவர்கள் தாம். மாயம்பரத்தைக்கு இயல்ப. அது அவள் பண்பு. பரத்தை என்றாரே மாயமுடையவன் என்பது தெளிவு. ஆதலின் மாயம் என்பது அவள் பண்பு காட்டும் இயல்படை. அந்த அடைமொழி இல்லாவிட்டாலும் பரத்தை என்ற அளவிற் சொன்னாலும் மாயப் பரத்தைக்குப் பண்பாகி இனஞ்சுட்டாது வந்தது’’ என்று தொல்காப்பிய இலக்கண நெறி நின்று அடை நயம் கூறுகிறார் இளம்பூரணர்.

**தொடர் நயங்கள்:**

தொல்காப்பியத்தில் காணலாகும் அழகிய தொடர்களில் தம் நெஞ்சைப் பறி கொடுத்தவர் இளம்பூரணர் அவர் காட்டும் தொடர் நயங்கள் பன்முறை பயின்ற இன்புறத்தக்கனவாகும்.

''முதல்கரு உரிப்பொருள் என்றே மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.''

என்பது அகத்திணை இயலில் வரும் மூன்றாம் நூற்பா (பொருள்.3) இந்நூற்பாவில் இடம் பெற்றுள்ள 'முறை சிறந்தன' என்னும் தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள இனிய உரை விளக்கம் வருமாறு: ''முறைமையாற் சிறந்தலாவது: யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும், கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம், முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பது உம், உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும். என்பதூஉம் ஆம். அவை ஆமாறு முன்னர்க் காணப்படும் அ∴தேல், ஒரு பொருட்கு ஒரு காரணம் கூறாது மூன்று காரணம் கூறியது என்னை எனின், உயர்ந்தோர் என்ற வழிக் குலத்தினால் உயர்ந்தாரையும் காட்டும்; கல்வியான் உயர்தாரையும் காட்டும், செல்வத்தான் உயர்ந்தாரையும் காட்டும்; அதுபோலக் கொள்க.''

''உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய.''

என்பது பொருளியலில் வரும் ஒரு நூற்பா (பொருள். 198) தலைவி, தோழி, நற்றாய், செவிலி ஆகியோர் இந் நூற்பாவில் குறிப்பிடப்படும் 'நால்வர்' ஆவர். இவர்களுக்கு இடையே நிலவிய நட்பின் நெருக்கத்தையும் ஆழத்தையும் தொல்காப்பியர் 'செயிர்தீர் சிறப்பின் நால்வர்' என்னும் தொடரால் புலப்படுத்தியுள்ளார். ''செயிர்தீர் சிறப்பின் நால்வர்' என்னும் தொடரால் புலப்படுத்தியுள்ளார். ''செயிர்தீர் 'சிறப்பின் என்றமையான் ஏனையோர் போலாது இவர் நால்வரும் ஒரு நீர்மையர் என்று கொள்க. இதனாற் சொல்லியது என்னையெனின், இந்நால்வரும் ஆக்கமுங் கேடும் ஒருவர் மாட்டு வந்துழித் தமக்குற்றது போல் நினைபராதலான் ஒருவரையொருவர் இன்றியமையாது ஓருயிர் போல்வர் எனவும், நாணமும் மடனும் நால்வர்க்கும ஒக்கமாகலான் அவலமாகிய

வழியும் வருத்தம் ஒக்கும் எனவும் கூறியவாறு'' என இத்தொடரின் நயத்தினை விளக்குவார் இளம்பூரணர்.

**பெருள் நயங்கள்:**

நூற்பாவிற்கு உரை எழுதும்போது, அரிமா நோக்கோடு முன்னும் பின்னும் பார்த்து உரை எழுதுவது இளம்பூரணரின் இயல்பாகும். எளிய நூற்பா ஆயின், 'சூத்திரத்தாற் பொருள் விளங்கும்' என எழுதிச் செல்வதும் அவரது இயல்பாகும். தொல்காப்பிய நூற்பாக்கள் இரண்டனுக்குப் பொருள் எழுதும்போது இளம்பூரணர் காட்டியுள்ள நயங்களை ஈண்டுக் காண்போம்.

'தோழி தானே செவிலி மகளே' (பொருள். 123) 'சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே (பொருள். 124) என்பன களவியலில் அடுத்தடுத்து வரும் இரு நூற்பாக்கள். முன்னைய நூற்பா தோழிக்கு உரியதொரு சிறப்பினை உணர்த்துவது; பின்னைய நூறுபா தோழிக்கு உரியதோர் இயல்பினை உணர்த்துவது. ''களவியல் காலத்தும் இன்றியமையாளாகத் தலைவியால் வேண்டப்பட்டாள் செவிலி மகள் என்றவாறு, எனவே, பயின்றா ரெல்லாருந் தோழியராகார். அருமறை கிளக்கப்படுதலான் உடன் முலையுண்டு வளர்ந்த செவிலி மகளே தோழி எனப்படுவாள் என்றவாறு. அருமறை கிளத்தல் என்பதனை ஈண்டு வருவிக்க'' என்பது இளம்பூரணர் முன்னைய நூறுபாவிற்குத் தரும் விளக்கம். இந்நூற்பாவின் விளக்கத்தில் இதற்கு முந்திய 'ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின் தாயெனப் படுவாள் செவிலியாகும். (பொருள். 121) என்னும் நூறுபாவையும் இணைத்துப் பொருள் உரைக்கிறார் இளம்பூரணர். ''மேற்சொல்லப்பட்ட தோழிதான் சூழ்தற்கும் தலைவி சூழ்ச்சிக்கு உசாத்துணையாகியும் வரும் நிலைமையாற் பொலிவு பெறும் என்றவாறு, எனவே செவிலி மகள் என்னுந் துணையாற் பொலிவு பெறாள் என்றும் தோழியாவள் செவிலி மகளாதலேயன்றிச் சூழவும் உசாத்துணையாகவும் வல்லன் ஆதல் வேண்டும்'' என்றவாறு என்பது அடுத்த நூற்பாவிற்கு இளம்பூரணர் எழுதும் விளக்கம். இவ்விரு விளக்கங்கள் அகத்திணை இலக்கியத்தில் இடம்பெறும் தோழியின் பங்கினையம் பண்பினையும் தெள்ளிதின் உணர்த்தவல்லனவாகும்.

**நிரல் நயங்கள்:**

தொல்காப்பியர் தம் கருத்துக்களை 'நிரந்து இனிது சொல்லுத'லில் (குறள்:648) வல்லவராக விளங்குகிறார்; இளம் பூரணரோ 'வல்லவனுக்கு வல்லவன்'

என்பது போல் தொல்காப்பியரின் கருத்து நிரலுக்கு-வைப்பு முறைக்குதக்க காரணம் காண்பதிலே-காட்டுவதிலே-தனித்திறன் பெற்றவராகத் திகழ்கிறார்.

‘இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடுபுணர்ந்த ஐந்திணை மருங்கின்’ (பொருள்.89) என்ற களவியலின் தலைச்சூத்திரத்தைத் தொடங்குகிறார் தொல்காப்பியர். அவர் ‘அறமும் பொருளும் இன்பமும்’ என்று தொடங்காமல், ‘இன்பமும் பொருளும் அறனும்’ என்று தொடங்குவதன் காரணம் என்ன? “அறனும் பொருளும் இன்பமும் என்னாது, இன்பமும் பொருளும் அறனும் என்றது என்னை எனின், பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இரு வகைப்படும். அவையாவன, போகம் நுகர்தலும் வீடு பெறுதலும் என. அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க்லலது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க் கெய்துவது. அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரணமாகிய பொருளும் அப்பொருட்குக் காரணமாகிய அறனும் எனக் காரிய காரணம் நோக்கி வைத்தார் என்க” என இந்நிரலுக்கு நயமான காரணத்தினைக் கூறுகின்றார் இளம்பூரணர்.

**எடுத்துக்காட்டு நயங்கள்:**

எவ்வகைப் படைப்பும் பலருக்கு எளிதாக விளங்க வேண்டுமெனின், எடுத்துக்காட்டுக்கள் பலர் அறிந்து வழக்கினவாக இருந்தல் வேண்டும். மக்களின் நடைமுறைப் பேச்சுக்களினின்றும் வழக்க ஒழுக்கங்களினின்று இந்த எடுத்துக்காட்டுக்கள் அமையவேண்டும். ‘விளங்க உதாரணத்தது ஆகுதல்’ என்பது நூலுக்குச் சொல்லப்படும் பத்து அழகுகளில் ஒன்றாகும் (நன்னூல், நூ.13) இளம்பூரணர் இவ்வகையில் எளிமையானவர்; படிப்பவர்கள் எளிதில் புரியும் பொருட்டு நயமான எடுத்துக்காட்டுகளை ஆங்காங்கே கையாள்பவர்.

‘துள்ளல் ஓசை கலியென மொழிப’ (பொருள். 38) என்ற செய்யுளியல் நூற்பாவின் உரை விளக்கத்தில் இளம்பூரணர், “துள்ளலோசை கலிப்பாவிற்காம் என்றவாறு. துள்ளுதலாவது ஒழுகு நடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருவது. கன்று துள்ளிற்றென்றாற் போலக் கொள்க என்னும் அழகிய உவமையைக் கையாண்டுள்ளார்.

‘நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும், கலந்த மயக்கம் உலகம்’ என்பது மரபியலில் வரும் ஒரு நூற்பாவில் (பொருள். 635) தொடக்கப்பகுதி. இதில் இடம் பெற்றுள்ள கலத்தல், மயக்கம் என்ற இரு சொற்களை விளக்கும் போது இளம்பூரணர், “கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற்

போறல். மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றாதல் போறல் என்னும் இரு உவமைகளை எடுத்தாண்டுள்ளார்.

**கருத்து நயங்கள்:**

தொல்காப்பிய நெறியை அடியொற்றி, தம் காலத்து வளர்ச்சியையும் நினைவில் இருத்தி இளம்பூரணர் கூறுவதில் கருத்துக்கள் நயம் நிறைந்தவையாகும்: பொருள் பொதிந்தவையாகும்.

ஓதற் பிரிவு என்பது அகத்திணைக் கூறும் பிரிவு வகைகள் ஒன்று. (பொருள்.27) தலைவன் படிப்பதற்காக மேற்கொள்ளும் பிரிவு தமிழ்நாட்டிற்குள்ளேயே நிகழுமா? பிற நாட்டகத்தும் நிகழுமா? இவ்வினாவுக்கு இனியதொரு விடையினை அளிக்கின்றார் இளம்பூரணர். ‘‘ஓதற்குப் பிரிதலாவது, தமது நாட்டகத்தும் நிகழுமா? இவ்வினாவுக்கு இனிதொரு விடையினை அளிக்கின்றார் இளம்பூரணர். ‘‘ஓதற்குப் பிரிதலாவது, தமது நாட்டகத்து வழங்காது பிற நாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே, அவற்றினைக் கற்றல் வேண்டிப் பிரிதல்’’ என்பது அவர்கருத்து. இக்கருத்து இந்நூற்றாண்டிற்கும் முழுதும் பொருந்துகின்றது. உயர் கல்வி கற்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் நம்மவர் அயல்நாடுகளுக்குச் செல்லும் பயணத்தை இந்த அகலப் பிரிவு குறிக்கின்றது. திருமணமானவுடன் -பட்டம் பெற்றவுடன் பதவியில் அமர்ந்தவுடன்-நம் நாட்டில் பலரது கல்விக்கு முற்றுப்புள்ளி விழுந்து விடுகின்றது. திருமணத்திற்குப் பின்னும்-ஆய்வுப்பட்டம் பெற்று உயர்பதவியில் அமர்ந்த பின்னும்-தலைவன் பிறமொழியில் வழங்கும் நூல்களை பயில வேற்று நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்னும் தொல்காப்பியரின் கருத்தினை நம் மனங்கொள்ளும் வகையில் வெளியிடுகின்றார் இளம்பூரணர். நூற்கல்வியின்றிக் கையாற் பயிலும் தொழிற் கல்வியும், சிற்ப கல்வியும், படைக்கலக் கல்வியும் வேண்டும் என்பது அவரது குறிப்பு ஆகும்.

**பால் நயங்கள்:**

தொல்காப்பியம் பெரும்பகுதி கால் ஒழுக்கத்தினைக் கூறும் இலக்கணப் பால்நூல் ஆதலின், ஆண் பெண் நல்லுறவு பற்றிய நெறிகள் அதன் உரைகளிலும் குவிந்து காணப்படுகின்றன. இக் குறிப்புக்கள் பாலெழுச்சியைத் தூண்டுவனவல்ல; பாலறிவைத் தருபவை. இளம்பூரணர் உரையிலும் ஆண் பெண் நல்லுறவு பற்றிய இத்தகைய அரிய குறிப்புக்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இளைய நம்பியர் நங்கையர் எத்துணையோ பேர் நாள்தோறும் திரையரங்குகளிலும் கல்விக் கூடங்களிலும் நூலகங்களிலும் தெருக்களிலும் பொது

இடங்களிலும் தனி இடங்களிலும் ஒருவரை ஒருவர் சந்தித்துச் செல்கின்றனர். இந் நம்பியர் நங்கையரின் காட்சியெல்லாம் காதலாக அரும்புவதில்லை. அவை குறிப்பற்ற பொதுப் பார்வைகள். அகத்தில் காதல் நோக்கு இல்லாத போது எத்தனை முறை கண்களோடு கண்கள் நோக்கினும் அவை பொது நோக்கமேயாம். பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே' (புறம் 121) என்னும் கபிலரின் வாக்கு காதல் உலகிற்கும் பொருந்துவதாகும். ஆணும் பெண்ணும் காதலர் ஆக வேண்டும் எனில் அவர்களிடையே 'பொதுநோக்கு' ஒழிதல் வேண்டும் கண்ணொடு கண்ணினை நோக்கு ஒத்தல் வேண்டும். ஏன் கண்டோரெல்லாம் காதல் கொள்ளவில்லை என்ற ஐயத்தை எடுத்துக்கொண்டு, ஒருவரை ஒருவர் கண்ட போதெல்லாம் புணர்ச்சி வேட்கை தோன்றாது எனவும், என்றே ஒருநாட் பார்வையில் ஊழ்வினை வயத்தால் காதற்குறிப்பு புகுந்து விடும் எனவும், அதன்பின் காதற் செயல்கள் வளரும் எனவும் அடிப்படையை விளக்குகிறார் இளம்பூரணர். 'ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின், ஒத்த கிழவனும், 'கிழத்தியும் காண்ப' (பொருள். 90) என்னும் களவியல் நூற்பாவின் உரையில். 'ஒருவரையொருவர் கண்டுழியெல்லாம் புணர்ச்சி வேட்கை தேதாற்றாமையிற் பாலதாணையான் ஒருவரையொருவர் புணர்தற் குறிப்பொடு காண்ப என்றவாறு'' எனக் காதலின் தோற்றத்திற்கு அரிய விளக்கத்தினைத் தருகிறார் இளம்பூரணர் 'ஆண் பெண் பாலர்களைச் சந்திக்கச் செய்வது விதியில் வேலையன்று. அவர்கள் முதன்முறை சந்திக்கலாம்; பலமுறை சந்தித்தும் இருக்கலாம். இச்சந்திப்பெல்லாம் பாலதாணையில்லை. முதல் நாள் முதற்பார்வையிலோ, பின்னாள் பல பார்வையிலோ, ஒரு பார்வையைக் காதலொடு பார்க்கச் செய்வதே விதியின் ஆணை'' என்று இவ்விளக்கத்தின் வாயிலாகத் தெளிவாக உணர்த்துகின்றார் இளம்பூரணர்.

'வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை'

என்பது கற்பியலின் இறுதி நூற்பா (பொருள்.192) வினைமுற்றி மீளும் தலைவனுக்கு உரிய மரபினை உணர்த்தும் இந்நூற்பாவின் விளக்கத்தில் இளம்பூரணர் சுட்டியுள்ள நயம் வருமாறு: ''இடைச்சுர மருங்கிற் றவிர்தல் இல்லை' என்பது வழியில் இடையிற் தங்காது இரவும் பகலுமாக வருமென்பது கருத்து. தங்குவானாயின் மனையாள்மாட்டு விருப்பமின்றாம்'' துறவற நெறியைச் சார்ந்து நின்ற இளம்பூரண அடிகள், இப்பகுதியில் இல்லறமாம் நல்லறத்தின் இனிய பக்கத்தை – கணவனுக்கு மனைவியின் மீது இருக்கும் பேரன்பை-எடுத்துக்காட்டி இருப்பது எண்ணி எண்ணி இன்புறத்தக்கதாகும்.

**அரிய நங்கள்:**

பிறர் காண்டற்கரிய இலக்கிய நயங்களை இளம்பூரணர் தொல்காப்பியத்தில் கண்டுள்ளார். 'காட்டுவித்தால் ஆவர் ஒருவர் காணாதாரே' என்று ஆன்றோர் கூறி இருப்பது போல, இவ் அரிய நயங்களை, காட்டுவிக்கும் இளம் பூரணரின் துணையின்றி நம்மால் காண முடியாது.

'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான'

என்பது பொருளியலில் வரும் ஒரு நூற்பா (பொருள். 206) பெண்டிரது சிறப்பியல்புகளை உணர்த்தும் இந்நூற்பாவுக்கு, "செறிவு என்பது அடக்கம். நிறைவு என்பது அமைதி. செம்மை என்பது மனங்கோடாமை. செப்பு என்பது சொல்லுதல். அறிவு என்பது நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் அறிதல். அருமை என்பது உள்ளக் கருத்தறிதலருமை. இவை எல்லாம் பெண்பக்கத்தன" என உரை விளக்கம் எழுதுகிறார் இளம்பூரணர். இத்துடன் நில்லாது. இன்னும் ஒரு படி மேலே சென்று சிந்திக்கின்றார். அவர் தொல்காப்பியர் இந்நூற்பாவுக்கு முன்னே அறத்தொடு நிற்றல் பற்றிய மூன்று நூற்பாக்களை (பொருள். 203-205) அமைக்கிறார்; இந்நூற்பாவுக்குப் பின்னே வரைவு கடாவல் பற்றி நூறுபாவினை (பொருள்.207) வைக்கிறார். அறத்தொடு நிற்றல், வரைவு கடாவல் இரண்டும் அகத்திணை ஒழுக்கத்தில் இன்றியமையாத இடத்தினைப் பெறும் நுண்துறைகள்; தலைவி, தோழி, செவிலி, நற்றான் ஆகிய பெண்கள் சிறப்பிடம் பெறும் அரிய துறைகளை வளவளவென்று பேசிக்கொண்டு இராமல் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போல் நயத்தக்க நாகரிகத்தோடு குறிப்பாகச் சில சொல்ல வேண்டிய துறைகள் கேட்போராகிய தலைவன், தந்தை, தமையன்மான் முதலான ஆண்மக்கள் மனங்கொள்ளும் வகையில் பேச வேண்டிய துறைகள். இவ்வளவு உண்மைகளைப் எண்ணிப் பார்த்த இளம்பூரணர். "மேற்சொல்லிய அறத்தோடு நிலைவகையும் இனிக் கூறுகின்ற வரைவு கடாதற்கு பகுதியும் உண்மை வகையானும் புனைந்துரை வகையானும் கூறுங்கால் இவை பேதையராகிய பெண்டிர்க்கு இயையுமே என ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது" என நூற்ப விளக்ககத்தின் முடிவில் முத்தாய்ப்பு வைத்தாற்போல் எழுதி இருப்பது கற்றறிந்தார் நெஞ்சை அள்ளுவதாகும். 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைக், சான்றோன் எனக்கேட்ட தாய்' என்ற குறளின் (69) உரையில் வெண்ணியல்பான் தானாக அறியாமையின் கேட்ட தாய் எனக் கூறினார்." எனப் பரிமேலழகர் எழுதி இருக்கும் விளக்கத்தினையும், 'செறிவும் நிறைவும்' எனத் தொடங்கும் பொருளியல்

நூற்பாவுக்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரை விளக்கத்தினையும் ஒப்பு நோக்கிப் பயில்வோர்க்கு இளம்பூரணர் பெண்மைக்குத் தந்துள்ள சிறப்பிடம் இனிதே விளங்கும்.

“உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே”

என்னும் மெய்ப்பாட்டில் நூற்பாவில் (பொருள். 254) வெகுளி ஆகிய மெய்ப்பாடும் அதன் பொருளும் உணர்த்துகின்றார். தொல்காப்பியர். ‘உறுப்பாறை (அங்கமாயினவற்றை அறுத்தல்), குடிகோள் (கீழ் வாழ்வாரை நலிதல்) அலை (வைதலும் புடைத்தலும்), கொலை (கொல்லுதற்கு) ஒருப்படுதல்) என்னும் நான்கினாலும் வெகுளி பிறக்கும்’ என்பது இந்நூற்பாவின் பொருள். ஊடலில் தலைவிக்கும் வெகுளி பிறக்குமே, அதை ஏன் தொல்காப்பியர் வெகுளிப் பொருளில் சேர்க்கவில்லை? “ஊடற்கண்ணும் வெகுளி தோற்றுமால் எனின், அஃது இன்பத்திற்குக் காரணமாதலால். தலைமகள் புருவ நெரியும் வாய்த்துடிப்புங் கண்ட தலைமகற்கு வெருட்சி பிறவாது உவகை பிறக்கும். தலைமகன் வெகுளுவானாயின் அதற்பாற்படும்” என இவ்வினாவுக்கு அருமையான விடையினைக் கூறுவார் இளம்பூரணர். திருவள்ளுவர் காமத்துப்பாலின் இறுதி அதிகாரத்திற்கு ‘ஊடலுவகை’ எனப்பெயர் சூட்டியிருப்பதும் இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

சுருங்கக் கூறின், ‘தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்’ (பொருள். 407) என்னும் தொல்காப்பியர் கூற்று, இளம்பூரணர் உரைத் திறனுக்கும் முற்றிலும் பொருந்துவதாகும்.

## கூறு 4

## சேனாவரையர் - தொல்காப்பியம் சொல்லதிகார உரை

சேனாவரையார் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதியுள்ளார். இவர் தம் உரையில் எழுத்ததிகாரத்தை எழுத்தோத்து என்றும் பொருளதிகாரம் என்றும் உவம இயலை அணியியல் என்றும் குறிப்பிடுகின்றார். எழுத்ததிகாரத்திலிருந்து பல சூத்திரங்களை எடுத்து விளக்கிச் சொல்கின்றார். சேனாவரையர் என்ற சொல்லிற்கும் படைத்தலைவர் என்று பொருள் தென்பாண்டி நாட்டில் வாழ்ந்தவர். ஆசிரியர் மாணக்கர் வழிமுறையாகத் தம் முன்னோரிடமிருந்து புலமைத்திறம் பற்றித் தமக்குக் கிடைத்த நிலம், மனை ஆகியவற்றையே சேனாவரையர் சிவன் கோயிலுக்கு வழங்கினார். இவர் 13ம் நூற்றாண்டு பிற்பகுதியில் வாழ்ந்தார். திருமாலின் அடியவராய் இருக்கலாம் என்று கூறுவர். உரைநூலின் தொடக்கத்தில் விநாயகர், மாதொருபாகன், கலைமகள், அகத்தியர் குறித்த வாழ்த்துப் பாடல்களைப் பாடியுள்ளார்.

சேனாவரையர் ஆசிரியப் பணி செய்தவர். அவர் உரையில் ஆசிரியர் தன் மாணாக்கர்க்குப் பாடம் கூறும் முறையையும் அப்பொழுது தமக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் கூறுகிறார். கற்கும் முறை குறித்துக் கூறும் போது கற்பார்க்குச் சிறந்தது செவி, உரைத்தென உணர்ந்தான் சாத்தனது கற்றறிவு கற்று வல்லவன் ஆயினாள் நூலது குற்றங் கூறினான் என்று எடுத்துரைக்கின்றார். ஆசிரியரும் மாணக்கரும் பற்றிய செய்திகளை திருவீர ஆசிரியன், ஆசிரியன் பேரூர் கிழான், செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் மாணாக்கர்க்கு அறிவு கொடுத்தான் ஆசிரியனோடு மாணாக்கர் அறிவு கொடுத்தான். ஆசிரியனோடு மாணாக்கர் வந்தார் என்று குறிப்பிடுகிறார். உரையில் திட்பமும் நுட்பமும் கலந்துள்ளது. புலமைப் பெருமிதமும் ஆராய்ச்சி வன்மையும் கருத்துத் தெளிவும் உரை முழுவதிலும் உள்ளன. சுருங்கச் சொல்லி உயத்துணரும் இயல்பு உடையது தொல்காப்பியம் பற்றி முழுநோக்குடையவர் எழுத்தையும் பொருளையும் சிங்க நோக்காகக் கொண்டு விளக்கம் எழுதுகின்றார்.

**உரைமரபு**

“உரையாசிரியர்கள் நந்தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டு அளப்பரிதாம். காலம் பல கடந்தும் கன்னித் தமிழ் புகழ் குன்றாது பொலிந்திலங்குவதற்கு உரையாசிரியர்கள் ஆற்றிய பணி சொல்லுந்தரமன்று. இலக்கணக் கொள்கைகளை இனிது விளக்கி, மொழித்திறனை முட்டறுத்து, இலக்கியச் செல்வங்களை இணைத்துக் காட்டி, தமிழ்ப் பண்பாட்டினையும்

மரபினையும் விடாது குறிப்பிட்டு விளங்க உரைத்தவர்கள் உரையாசிரியர்களேயாவர். நூலாசிரியரின் உள்ளக் கருத்தினை நுண்ணிதின் உணர்ந்து, தொகுத்தும் வகுத்தும் விரித்தும் முறைப்படுத்தியும் தெளிவபெற எடுத்தெழுதும் புலமை சான்றவர்களாய் உரையாசிரியர்கள் விளங்கினார்.'' மேற்கண்டவாறு உரையாசிரியர்கள் பின்பற்றிய பொதுவான மரபுகளை நெறிகளை-வரையறுத்துக் கூறுவார், அறிஞர் சி. பாலசுப்பிரமணியன். இவ் அளவுகோலுக்கு ஏற்பச் சேனாவரையரின் உரையும் விளங்குகின்றது. சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துள் பின்பற்றியுள்ள உரைமரபுகளை ஒவ்வொன்றாகக் காண்பது சிறப்புடைத்து.

**நடைச்சிறப்பு**

சேனாவரையர் தாம் உரை எழுதப்போவது ஓர் இலக்கண நூலிற்கு என்பதனை நன்று நினைவிற் கொண்டே எழுதுகின்றார். இதனை அவர் உரை நமக்கு தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வெண்ணம் அவருக்கு இருந்த மையினாலேதான் சின்னஞ்சிறு தொடர்களைக் கொண்டு அவர் உரை எழுதிச் செல்கின்றார் போகின்றார். சின்னஞ்சிறு தொடர்கள் கற்பவர் உள்ளத்தைக் களிப்பில் ஆழ்த்துகின்றன. இ∴து அவருடைய நடையின் சிறப்பியல்பு என்று கூறலாம்.

வேற்றுமை மயங்கியல் பற்றி விளக்க வந்த சேனாவரையர் பின்வருமாறு எழுதக் காண்கின்றோம்: ''மேற்கூறப்பட்ட வேற்றுமை தம்முள் மயங்குறுமா உணர்த்தியும் எடுத்துக் கொண்டார். அம்மயக்கம் இருவகைப்படும் பொருள் மயக்கமும் உருபு மயக்கமுமென. பொருள் மயக்கமாவது தன் பொருளில் தீராது பிறிதொன்றன் பொருட்கண் சேறல். உருபு மயக்கமாவது தன் பொருளில் தீர்ந்து சேறல். 'யாத னுருபிற் கூறிற்றாயினும்' (சொல்.10) என்பதனான் உருபு மயக்கமுணர்த்தினார்; அல்லன வற்றனெல்லாம் பொருண்மயக்கமுணர்த்தினார். இவ்விருவகை மயக்கமுணர்த்துதலான், இவ்வோத்து வேற்றுமை மயங்கியலென்னும் பெயர்த்தாயிற்று. மயக்கமேயன்றி வேற்றுமை கோதிய இலக்கணத்திற் பிறழ்ந்து வழீஇ அமைவனவும் பிறவும் இயைபுடைய ஈண்டுணர்த்துதலான், இக்குறியின்மை நோக்கிச் சென்ற குறியெனவுணர்க.''

(தொல். சொல்.84, உரை, ப.73)

''அகரம் மூன்று காலமும் பற்றி வரும். ஆகாரம் எதிர்மறைவினையாய் மூன்று காலத்திற்கும் உரித்தாயினும், எதிர்காலத்துப் பயின்று வரும். அகரம், இறந்த காலம் பற்றி வருங்கால, கடதறவென்னு நான்கன்முன், அன்பெற்றும்,

பெறாதும் வரும். ஏனையெழுத்தின்முன் ரகார ழகார மொழித்து இன் பெற்று வரும். யகரத்தின் முன் சிறுபான்மை இன்னேயன்றி அன்பெற்றும் பெறாதும் வரும். நிகழ்காலகத்தின்கண் நில், கின்றென்பனவற்றோடு அன்பெற்றதும் பெறாதும் வரும். எதிர்காலத்தின்கண் பகர வகரத்தோடு அன் பெற்றும் பெறாதும் வரும்.''

(தொல். சொல்.216, உரை, ப.141)

மேற்கண்ட இரண்டு உரைப்பகுதிகளில் சேனாவரையரின் சின்னஞ்சிறு தொடர்களைக் காண்கின்றோம். இதனால் அவரது நடைச்சிறப்பு பளிச்சிடுகின்றது. ''சேனாவரையரது உரைநடை தருக்க முறைப்படி பொருளைத் தெளிவுபடுத்திக் காட்டுவதற்குரிய சிறந்த கருவியாக அமைந்துள்ளது.

**வடமொழிப் பயிற்சி**

முன்னைய உரையாசிரியராகிய இளம்பூரணர் கருத்துகளை ஆங்காங்கே மறுத்துரைக்கும்போதும், பிறவிடத்தும் சேனாவரையர் வடநூற் கருத்துக்களைத் தகுந்த முறையில் மேற்கோளாகக் கையாண்டு உரை எழுதிச் செல்வர் அவ்வாறு வடநூற் செய்திகளை மேற்கோள் காட்டி எழுதினமையினால் 'வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்' என்று சிவஞான முனிவர் அவரைப் பாராட்டுவார். சொல்லதிகார உரையில் ஏறத்தாழப் பதினைந்து இடங்களில் அவர் தம்முடைய வடமொழிப் புலமையை வெளிப்படுத்தியுள்ளார்.

வடமொழியின் இலக்கணக் கோட்பாடுகளையும் விதிகளையும் சேனாவரையர் மிகத்தெளிவாக விளக்கிக் செல்கின்றார். அதிகாரம் என்னும் சொல்லிற்கு அவர் சொல்லும் பொருளுக்குத் துணைச் சான்றாக வடமொழி இலக்கணத்தைக் கூறியுள்ளமை இவண் அறியதக்க ஒன்றாகும்.

''அதிகாரம் என்னும் சொற்குப் பொருள் பல உளவேனும், ஈண்டு அதிகாரம் என்றது ஒரு பொருள் நுதலி வரும் பல ஓத்தினது தொகுதியை என்ற. வடநூலாரும் ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்றியைதலையும், ஒன்றனதிலக்கணம் பற்றி வரும் பல சூத்திரத் தொகுதியையும் 'அதிகாரம்' என்ப.''

(தொல். சொல்.1, உரை, ப.3)

சேனாவரையர் பூர்வ மீமாம்சை என்ற நூலறிவு நிரம்பப் பெற்றவர். மேற்கண்ட வடநூலின் இருகண்கள் போன்றன வாக்கியபேதம், நியமவிதி என்னும் இரண்டும் ஆகும். சேனாவரையர் இவற்றை நன்கு அறிந்திருந்தவர் என்பதனை அவருடைய உரைப்பகுதிகள் வெளிப்படுத்துகின்றன.

ஒரு நூற்பா ஒரு முதன்மைக் கருத்தை உணர்த்துதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களை உணர்த்தினால், அது சிறப்புடையதாகாது. அவ்வாறு, ஒன்றுக்கு மேற்பட்ட முதன்மைக் கருத்துக்களை உணர்த்தும் நூற்பாவை வாக்கியபேதம் என்னும் குற்றம் உடையது என்று கூறுவர். இதனை உணர்ந்திருந்த சேனாவரையர், "இவ்வாறு பொருள் நுதலிற்றாக உரையாக்கால், சூத்திரம், ஒன்றாமாறில்லை என்க." என்று கிளவியாக்கத்தின் முதல் நூற்பாவின் இறுதியில் கூறியுள்ளார்.

மேலும் சேனாவரையர் வடமொழி விதிகளாகிய ஞாபகம், (நினைவுறுத்தல்) அநுவாதம் (வழிமொழிதல்), யோகவிபாகம் (கூட்டிப் பிரித்தல்), நேயம் என்று பல வடமொழி உத்திகளைக் குறிப்பிட்டுத் தொல்காப்பிய நூற்பாக்களுக்கு விளக்கம் கூறியுள்ளார்.

"தம் மரபினவே என்பதனைப் பிரித்து வேறோர் தொடராக்கிச் சொற்களை மரபு பிறழா தம் மரபினவே என மரபு வழுக்காத்ததாக உரைக்க. இது யோகவிபாகம் என்னும் நூற்புணர்ப்பு" என்பது சேனாவரையம் (தொல் சொல். 11, உரை, ப.13) யோகம் = கூட்டம், விபாகம் பிரித்தல், எனவே கூட்டிப் பிரித்தல் எனப் பொருள்படும் பொருள் பற்றி ஒரு நூற்பாவை இரண்டாக்குவது யோகவிபாகம் என்பர் சான்றோர்.

சேனாவரையர் காரகம், கருமகருத்தன், தாது ஆகிய வடநூற் கருத்துக்களையும் தம் உரையுள் விளக்குகின்றார். மேலும் அவர் வேற்றுமையியலுள் வடநூலுள் கூறப்படும் வடநூற் பொருள் வேற்றுமை குறித்து விரிவாக விளக்கியுள்ளார். மற்றுமோரிடத்தில் அவர், "குமரியென்பது, வடமொழிச் சிதைவாய் வடமொழிப் பொருளே உணர்த்தலின், விரவுப் பெயரேயாம்" (தொல். சொல். 196, உரை, ப.127) என மொழகின்றார். வடசொல் பற்றிய அவருடைய விளக்கத்தினை எச்சவியலுள் காண்கின்றோம்.

"அஃதேல், கரிதாகிய குதிரை, வட்டமாகிய பலகை என்பன அத்தொகையின் விரியாகலிற் பண்புத்தொகை பிரிக்கபடாதென்ற தென்னையெனின்: - அற்றன்று; தொகைப் பொரு ணுர்த்துதற்குப் பிறசொற் கொணர்ந்து விரித்தல்லது, தன் சொல்லான் விரியாமையின் அவை விரியெனப்படாது என்க. வடநூலாரும் பிரியாத் தொகையும் பிறசொல்லான் விரிக்கப்படு மென்றார்," என்று (தொல். சொல். 416, உரை, ப.217) பண்புத் தொகை பற்றி விரித்துக் கூறும்போது வடமொழிப் புலமையை அவர் புலப்படுத்துகின்றார்.

**பன்னூற் பயிற்சி**

சேனாவரையர் தம் உரையில் சங்கப் பாடல்களை மேற்கோள் காட்டிச் செல்வதனைக் காண முடிகின்றது. இலக்கண விதிகளை விளக்குமிடத்து அவர் நன்னூற் கருத்துக்களையும் தவறாது எடுத்தாண்டுள்ளார்.

''வினையெச்ச வகைகளை விளக்குமிடத்துப் ''பின் முன் கால் கடை..'' என்று தொடங்கும் நூற்பாவில், அவர் ''அன்ன மரபிற் காலங் கண்ணிய வென்ன கிளவியு மென்ற தனான், உண்பாக்கு, வேபாக்கு எனவரும் பாக்கீறும்.. கொள்க'' (தொல். சொல். 229, உரை, ப.151) என்று கூறுவார். இது நன்னூல் 343ஆம் நுற்பாவை அடியொற்றி அமைந்துள்ளது.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'' (நன். 462)

என்ற நன்னூல் நூற்பாவை அடியொற்றி அவர், ''கடிசொல் இல்லை காலத்துப் படினே'' என்ற நூற்பாவை விளக்கும்போது ''இனி ஒன்றென முடித்தலாற் புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உளவெனக் கொள்க.'' (தொல். சொல். 452, உரை, ப.241) என்று கூறுகின்றார். இவற்றால் நன்னூற் கருத்துக்களையும் வேண்டுமிடங்களில் அவர் பயன்படுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

இசைத்தமிழ்ப் புலமையும் சேனாவரையருக்கு இருந்தது என்பதனைப் பின்வரும் உரைப்பகுதியினால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

''இயற்பெயரெனினும் விரவுப் பெயரெனினும் ஒக்குமாயின், அவற்றுள் ஒரு சாரனவற்றிற்கு அப்பெயர் கொடுத்த தென்னையெனின் அவற்றது சிறப்பு நோக்கி அப்பெயர் கொடுத்தார், பாணியுந் தாளமும் ஒரு பொருளவாயினும் இசை நூலார் தாளத்துள் ஒரு சாரனவற்றிற்குப் பாணியென்னும் பெயர் கொடுத்தாற் போல வென்பது''.

(தொல். சொல்.174, உரை, ப. )

ஐந்திர நூற் கருத்தினையும் அவர் நன்கு அறிந்திருந்தவர் என்பதனை, ''ஐந்திர நூலார் விளி வேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக நேர்ந்தாரென்பது பெறப் பெறும். இக் கருத்து விளக்கியவன்றே, பாயிரத்துள் 'ஐந்திர நிறைந்த

தொல்காப்பியன்' எனக் கூறிற்றென்க (தொல். சொல். 74, உரை, ப.64) என்ற பகுதியினால் தெளிய முடிகின்றது.

தமிழ் நூல்களிலிருந்து பல சான்றுகளை மேற்கோள் காட்டி அவர் விளக்கிக் செல்லும் பாங்கு சிறப்பாக அமைந்துள்ளது. திருக்குறளைப் பல இடங்களில் அவர் மேற்கொள் சுட்டுவார்.

"வானோக்கி வாழு முயிரெல்லாம் மன்னவன்
னோனோக்கி வாழுங் குடி" (குறள். 542)

என்புழி, வானை நோக்கி வாழும் கோலை நோக்கி வாழும் என இரண்டாவது வருதலேயன்றி, வானோக்கி வாழு வானினோக்கி வாழும், கோலானோக்கி வாழும், கோலினோக்கி வாழும் என மூன்றாவதும் ஐந்தாவதும் வந்தவாறு கண்டு கொள்க." (தொல். சொல்.93, உரை, ப.78 என்பார்.

மேலும் அவர், விளிவேற்றுமை, இடையியல், உரியியல் ஆகிய இயல்களில் மிகுதியான இலக்கியச் சான்றுகளைச் காட்டியுள்ளார். மலைபடுகடா அத்தின் அடிகளை அவர் பல இடங்களில் எடுத்து ஆள்வதனால் அந்நூலில் அவருக்கு இருந்த தனிப்பற்று நன்கு புலனாகின்றது.

"வெயில்புறந் தரூஉம் இன்ன வியக்கத்து" (மலைபடு. 374)
"பேரிசை நவிர மேஎ உரையுங்
காரி யுண்டி" (மலைபடு. 82)
"இலம்படு புலவ ரேற்றகை நிறைய" (மலைபடு. 576)
"நுழை நூற் கலிங்கம்" (மலைபடு. 561)

என்ற அடிகளை அவர் உரியியலில் பயன்படுத்தியுள்ளார்.

இடையியல், உரியியல் ஆகிய இரண்டு இயல்களிலும்) குறுந்தொகை 14, 91, 138, அகநானூறு 1, 19, 22, 80, 118, 198, நற்றிணை 34, 108, 116, 223 மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை முதலியவற்றின் பாடலடிகளை மேற்கோள் காட்டிச் சொல்கின்றார். நாலடியார் (9, 11, 55) களவழி நாற்பது, திணைமாலை நூற்றைம்பது ஆகிய நூற்களின் பாடலடிகளையும் அவர் எடுத்தாண்டுள்ளார். புறநானூற்று அடிகளையும் அவர் பல இடங்களில் காட்டியுள்ளார். இவ்வாறு பழந்தமிழ் நூல்களை நன்கு கற்று, அவற்றுள் பயின்று வருகின்ற சான்றுகளை எல்லாம் தேர்ந்து தெளிந்து உரையினூடே விளக்கிக் செல்வது சேனாவரையரின் இயல்பு. இதனால் அவருக்கிருந்த பன்னூற் பயிற்சி நன்கு விளங்கும்.

“உரைநடையில் அமையும் பல்வேறு அணிகளுள் இடையிடையே மேற்கோள் காட்டுவதும் ஒன்று. ஓர் உரைநடை ஆசிரியர் தம் கருத்துக்கு அரண் செய்யும் வகையிலும் மேலும் தெளிவு வேண்டும் நிலையிலும் மேற்கோள்களைப் கையாளுகின்றார். அவர் இன்றியமையாது தேவைப்படும் இடங்களில் மட்டும் வலியுறுத்தும் பொருட்டு மேற்கோள்களைப் பயன்படுத்தலாம்; வேண்டுமென்றே மிகுதியான மேற்கோள்களைக் கொட்டி எழுதுவது கூடாது. சுருங்க கூறினால், உரைநடையில் மேற்கோள் ஆட்சி-இல்லற வாழ்க்கையில் ஊடலைப் போல் - உணவில் உப்பைப்போல-அளவாக இருக்க வேண்டும்” என்று இரா.மோகன் கூறுவது சேனாவரையரின் உரைக்கும் நனி பொருந்தும்.

**கூறும் பெயர்கள்**

சேனாவரையர் இலக்கண உரையிலும் கூடப் பண்டைத் தமிழ் அறிஞர்களின் பெயர்களையும், அரசர்களின் பெயர்களையும், சில இயற்பெயர்களையும்; விருதுப்பெயர்களையும் வேண்டிய இடங்களில் மேற்கோள்களாக எடுத்தாண்டுச் சிறப்பித்துள்ளார்.

இயற்பெயரும் சிறப்புப் பெயரும் அமையும் வரை குறித்த நூற்பாவினை விளக்கும்போது சேனாவரையர் “உம்மையால் தவம், கல்வி, குடி, உறுப்பு முதலாயினவற்றானாகிய பெயரும் கொள்ளப்படும். அவை முனிவனகத்தியன் எனவும், தெய்வப்புலவன் திருவள்ளுவன் எனவும், சேரமான் சேரலாதன் எனவும், குருடன் கொற்றன் எனவும் வரும்.” (தொல். சொல். 41, உரை, ப.34) என்று மொழிகுவார். இதே நூற்பாவுரையில் திருவீரவாசிரியன், மாந்தக் கொங் கேனாதி என்ற பெயர்களையும் அவர் காட்டுவார்.

ஏனாதி, காவிதி, எட்டி எனப் பண்டைய மன்னர்கள் வழங்கிய பட்டங்களையும் அவர் கையாண்டுள்ளார் (தொல். சொல் 41, 166 ஆகிய நூற்பாக்களின் உரை).

‘ஆல்’ உருபைக் கூறவந்த சேனாவரையர் “அகத்தியனால் தமிழுரைக்கப்பட்து” (தொல். சொல். 73, உரை, ப.62) என்பதனையும், வேறோர் இடத்தில் அவர் “கபிலரது பாட்டு, பரணரது பாட்டியல்” (தொல். சொல் 80, உரை, ப.69) என்பதனையும் சுட்டிக் கூறுகின்றனர்.

தொல்காப்பியன், கபிலன் என்ற பெயர்களையும் (தொல். சொல். 114, உரை, ப.30) சேரமான், மலையமான் (தொல். சொல். 132, உரை, ப.98), அருவாளன், சோழியன், அத்தி கோசத்தார், அம்பர் கிழான், பேரூர் கிழான், பட்டி

புத்திரர், கங்கைமாத்திரர் (தொல். சொல் 165, உரை, ப.111) சீத்தலைச் சாத்தன், கொடும்புற மருதி (தொல். சொல்.174, உரை, ப.117), பாரி (தொல். சொல். 259, உரை, ப.169, பெருஞ்சேந்தனார், முடத்தாமக் கண்ணியார் (தொல். சொல் 270, உரை, ப.172) ஆகிய இயற்பெயர்களையும், குடிப்பெயர்களையும், சிறப்புப் பெயர்களையும், அவர் சான்று கூறி விளக்குகின்றார்.

**பிறர் உரையினை மறுத்தல்:**

சேனாவரையர் தம்முடைய உரையில் மிகுதியான இடங்களில் 'உரையாசிரியர்' என்பது இளம்பூரணரையே குறிக்கின்றது. "இன் சாரியை வேற்றுமையுருபு பற்றியும் பற்றாதும் நிற்கும் என்று உரையாசிரியர் இரண்டாவது விரித்தாராலெனின்...." (தொல். சொல். 1, உரை ப.4) என்றும் "அஞ்சுவன் யான் என இறுதிச்சீர் ஈற்றயற்சீர் வயிற் சென்று திரிந்ததென்று உதாரணம் காட்டினாரானால் உரையாசிரியரெனின்..." (தொல். சொல். 408. உரை.ப.212) என்றும் குறிப்பிடும் இடங்களில் அச்சொல் இளம்பூரணரையே நேரடியாக உணர்த்தும். பிறர் உரையினை மறுத்து எழுதும் போதும் அன்னவர் மனம் புண்படாத வண்ணம் மறுத்துரைக்கும் திறனும் மரபும் சேனாவரையர்பால் காணலாகும். உரையினை மறுத்துரைத்து முடிவு கூறுமிடத்து அவர், 'அவருரை போலியுரையென்க' (தொல். சொல் 1, 5, 13), 'அவர்க்கது கருத்தன்றென்க' (தொல். சொல். 17, 26, 29), 'பிறர் மதமேற் கொண்டு கூறினார் என்க' (தொல். சொல். 13, 17, 26), 'நூலாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க' (தொல். சொல். 114, 415) என வாய்பாடமைத்து முடிக்கின்றார்.

"சேனாவரையர், தமக்கு முன் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிச் சென்ற இளம்பூரணர் கொள்கைகளை ஐம்பதிற்கு மேற்பட்ட இடங்களில் மறுத்து வேறு உரை கூறுகின்றார்... அவரிடம் பெருமதிப்பும் அச்சமும் கொண்டவராய் நயமாகத் தம் கருத்தை உரைக்கின்றார். இளம்பூரணர் உரைப்போக்கினை நன்கு உணர்ந்துள்ளார். அவரது கருத்தையும் கொள்கையையும் கசடறத் தெளிந்துள்ளார்." என்ற புகழுரை உண்மையுரையே! அவர் இளம்பூரணரை மறுத்துக் கூறியுள்ள இடங்கள ஒன்றிரண்டைக் காண்போம்.

"உரையாசிரியர் பிரிநிலை யென்றாராலெனின்; பிரிநலையாயின் ஆடூஉ வறி சொற்கு இலக்கணங் கூறுதலன்றிப் பிரித்து அதன் சிறப்புணர்த்துதலே கருத்தாமாகலின் அவ்வுரை போலியுரை என்க."

(தொல். சொல்.5, உரை, ப.8)

“ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும்’ என ஒரு சூத்திரமாக உரையாசிரியர் பிரித்தாராலெனின்: அங்ஙனம் பிரிப்பின் ஒன்று வினை மருங்கி னொன்றித் தோன்றுதலும் வினைவேறுபரூஉம் பல பொருளொரு சொற்கே இலக்கணமாய் மாறுகோடலானும் வினைபேறுபடுவன தாமே பொதுவினை கொண்ட வழி வினைவேறுபடாதனவாமென்பது அதனாற் பெறப்படாமையானும், அது போலியுரையென்க.”

(தொல். சொல். 54, உரை, ப.44)

மரபியலுள் வருகின்ற நூற்பாக்களைச் சொல்லதிகார உரையில் மேற்கோளாகக் காட்டிச் சேனாவரையர் இளம்பூரணர் கொள்கையை மறுப்பார்.

“மக, குழவி போல்வன கொள்க. இவற்றை உயர்திணைப் பெயரென்றாரால் உரையாசிரியரெனின்: மரபியனுள்,

“மகவும் பிள்ளையும் பறமும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்ப லான’ (மரபியல், 14)

எனவும்,

‘குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க் கொடை’

(மரபியல், 19)

எனவும்,

‘குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல மக்கட் கண்ணே’

(மரபியல். 23)

என உயர்திணைக்கு மோதிவைத்தாராகலின், அவை விரவுப் பெயரேயாம்; அதனான் அது போலியுரை யென்க.

(தொல். சொல். 174, உரை, ப.118)

**ஏனைய இலக்கணங்களில் புலமை**

சொல்லதிகாரத்திற்கு உரை எழுத முனைந்தாரேனும் சேனாவரையர், எழுத்து, பொருள், அணி ஆகிய பிற இலக்கணங்களையும் நன்க கற்றுத் துறை போயவர் என்பது அவருடைய உரையினால் புலப்படுகின்றது.

....”ஆயிரு திணைக்கும் இசைக்குமன சொல்லே” (1)

என்பதனை விளக்கும் போது அவர் ‘சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும், சாரியை உள்வழித் தன்னுருப்பு நிலையிலும்’ என வருகின்ற தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாவை (157) எடுத்துக்கூறி விளக்குகின்றார். வேற்றுமை மயங்கியலுள்ளும் அவர், ‘‘எழுத்தோத்தினுள் புள்ளியிறுதியு முயிரிறுகிளவியும்’’ என்ற எழுத்ததிகார நூற்பாவை (156) எடுத்துரைக்கின்றார். இவ்வாறு கூறுவது கொண்டு அவர் தொல்காப்பிய எழுத்ததிகாரப் புலமையும் நிரம்பப் பெற்றவர் என்பது இனிது தெளிவுறும்.

பொருளதிகாரப் புலமையும் நன்கு கைவரப் பெற்ற புலமையாளர் அவர் என்பதனைப் பெயர்ச் சொல்லின் இலக்கணம் கூறுமிடத்து எழுதும் உரை விளக்கத்திலிருந்து உணர முடிகிறது.

‘நஞ்சுண்டான் சாம்’ என்றால், நஞ்சுண்ணுதல் சாதற்குக் காரணம் என்பதே கருத்து. உண்டான் என்பதிலுள்ள ஆண்பால் விகுதியில் பொருள் நோக்கில்லை. ஆகவே நஞ்சுண்டல் சாதற்குக் காரணம் என்ற கருத்தில், ஒரு பால்மேல் வைத்து ஒருவன் ‘நஞ்சுண்டான் சாம்’ என்பானேயன்றி, ஆண்டுத் தோன்றும் ஆண்மையும் ஒருமையும் சாதற்குக் காரணம் என்னும் கருத்தில் ‘நஞ்சுண்டான் சாம்’ எனக் கூறமாட்டான். அதனால் சொல்லுவான் கருத்தோடு கூடிய பொருளாற்றலால் சாதல் ஏனைப்பாற்குமுரியது எனச் சொல்லுதல் சொல்லிலக்கணத்திற் பெறப்பட்டமையான் ஆசிரியர்

‘‘ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப’’

எனப் பொருளியலிற் கூறினார்; எனவே இந்நூற்பாவிற்கு இது உரையன்று என்றும் மறுப்புரைக்கின்றார். (தொல். சொல். 161, உரை, ப.109) இங்குப் பொருளியல் 28 ஆவது நூற்பாவைக் காட்டி விளக்குகின்றமையினால் சேனாவரையரின் பொருளிலக்கண அறிவு நன்கு வெளிப்படும்.

**பாட வேறுபாடு:**

சேனாவரையர் உரையிலிருந்து மிகுதியான பாடவேறு பாடுகளைக் காண இயலவில்லை; மிக அருகிய சான்றுகளையே காணமுடிகின்றது.

‘‘அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்’’ (316)

என்ற நூற்பாவிற்கு உரை கூறியபின் மற்றமொரு பாடம் இருப்பதனை அவர் தெளிவுப்படுத்துகின்றார்.

“அதிழ்வென்ற பாடமோதி, ‘அதிழ்கண் முரசம் என்று தாரணங் காட்டுவாருமுளர்” (தொல். சொல். உரை, ப.188) என்று அவர் காட்டுவது சான்றாகும்.

தொல்காப்பியர் கூறிய விதிகளுக்கு விளக்கம் கூறி வரும்போது அவரே விதிகளில் சிலவற்றை மாற்றியமைத்து இங்ஙனம் இந்நூற்பாவை அமைத்திருக்கலாமே என கூறிச் செல்கின்றார்.

அஃறிணைப் பெயர்கள் விளியேற்கும் வகையினை கூறும் நூற்பா,

“புள்ளியு முயிரும இறுதி யாகிய..” (151)

எனத் தொடங்குகின்றது. ஆனால் சேனாவரை உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் வழி கூறுகின்ற,

“அவைதாம்
இ உ ஐ ஒ வென்னு மிறுதி..” (120)

என்ற நூற்பாவின் விளக்கவுரையில்

“புள்ளி யிறுதி ஏயொடு வருமே”

என்று படைத்துக் காட்டுவார். இதுவும் பாடலே பாட்டின் தன்மையில் அமைவது எனலாம்.

**உரைத்திறன்**

“சேனாவரையர் உரை திட்பமும் நுட்பமும் வாய்ந்தது. அவருடைய புலமைப் பெருமிதமும், ஆராய...வன்மையும், கருத்துத் தெளிவும் உரை முழுவதிலும் காணலாம். இவ்வுரை செறிவும், சுருங்கச் சொல்லி உய்த்துணை வைக்கும் இயல்பும் உடையது. ஆற்றல் வாய்ந்த சொல்களை ஆராய்ந்து எடுத்து, ஆழமான பொருளைத் திணித்து ஆழ்ந்து பலமுறை கற்கும் வகையில் அமைத்துள்ள தருக்கநூல் முறை வழுவாமல் தடைவிடைகள் பல எழுப்ப உரையினை மறுத்துத் தம் கருத்தை நிலை நாட்டியுள்ளார்” அவருடைய உரைத்திறனில் நாம் புதிய புதிய உத்திகளைக் கண்டு இன்புறமுடிகிறது.

**வினாவிடைக் போக்கு:**

உரையாசிரியர்கள் அனைவருமே வினா விடைப் போக்கு உரை எழுதிப்போவர். என்றாலும் சேனாவரையர் பல வகையான போக்கினைச் சிறப்பாகக் கையாண்டு பற்றி பெற்றுள்ளார். மாணவர்க்கு விளக்கம் கூறும் வகையில் அவர் உரை அமைவதே காரணமாகலாம். மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணர வைத்தல் அவர்க்கு இயல்பாகலான் என்பது கூறாராயினார்'' (தொல். சொல். 1, உரை. ப.4) என்று அவர் கூறுவது நல்லதொரு சான்றாகும்.

ஆசிரியர் :''பொதுப்பிரி பாற்சொல் என்றாரேனும், ஒருவன் ஒருத்தி என்பனவற்றது பாலுணர்த்து மீறே கொள்ளப்படும்.

மாணவன் : என்னை?

ஆசிரியர் : எண்ணுமுறை நில்லா என்று விலக்கப்படுவன அவையே யாகலின்னெபது''

(தொல். சொல், 44, உரை, ப.36)

அவர், 'என் சொல்லியவாறோ எனின்...'' (43, உரை) என்றும் ''உயிரும் உடம்பும் அவ்வாறு கூறப்பட்டன என்று கொள்ளாமோ வெனின் - கொள்ளாம்..'' உரை ப.37) எனவும் கூறுவன வினாவிடைப் போக்கில் அமைந்துள்ளன.

**தருக்கமுறை:**

சேனாவரையரின் ஆழமான தருக்க நூற் புலமையின் திறத்தால் அவர் கூறுகின்ற உரை முடிபுகளும் கொள்கைகளும் நம் உள்ளத்தில் பசு மரணத்தாணிபோற் பதியக் காண்கின்றோம்.

''இந்நங்கை முலையின் இந்நங்கை கண் நல்ல என்னும் தொடக்கத்தன மயக்கம் இன்மையின் இலக்கண வழக்காய் வெனின்; அற்றன்று : ஒத்த பண்பு பற்றியன்றே பொருவுவது கண்ணொடு முலைக்கு ஒத்த பண்பின்மையால் பொருவுதல் யாண்டையது. ஒத்த பண்பு பற்றிய பொருவுதற் கண்ணது இவ்வாராய்ச்சி என்பது''

(தொல். சொல். 16, உரை, ப.16)

“அவை மெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப்பொருள் குறிப்பனவுமென இருவகைப்படும். அவற்றுள், பொய்ப்பொருள் குறிப்பனவும் பொருளுணர்த்துவனவேயாம். அல்லாக்கால், இல்லோன்றலைவனாக வருந் தொடர்நிலைச் செய்யுள் பொருளுணர்த்தாமையின், அவை புலவராற் கொள்ளப்படாவென்பது.”

(தொல். சொல். 155, உரை, ப.105)

இவ்வாறு தருக்க முறையில் விளக்கங்களை எழுதிச் சொல்லும் திறன் மிகச் சிறப்பாக இவரிடம் அமைந்துள்ளது.

**சொற்பொருள் விளக்கம்:**

நூற்பாக்களுக்கு உரை எழுதும்போது சேனாவரையர், சில சொற்களுக்கு வரையறுத்துக் கூறுகின்ற பொருள் விளக்கம் நனி சிறப்பாக அமைந்து, அவருடைய உரைத்தினை நன்கு வெளிப்படுத்தக் காண்கின்றோம்.

“வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான் இவ்வோத்துக் ‘கிளவியாக்கம்’ ஆயிற்று”

(தொல். சொல். 1, உரை, ப.3)

“**உறுப்பின் கிளவி** குருடு, முடம ் என்னும் தொடக்கத்தன. காதற்சொல் பாவை யானையென ஒப்புமை கருதாது காதல் பற்றி வருவன”

(தொல். சொல். 56, உரை, ப.46)

“**இயற்றுதலாவது** முன்னில்லதனை உண்டாக்குதல்

**வேறுபடுத்தலாவது** முன்னுள்ளதனைத் திரித்தல்.

**எய்தப்படுதலாவது** இயற்றுதலும் வேறுபடுத்தலுமின்றித் தொழிற் பயனுறுந் துணையாய் நிற்றல்.”

(தொல். சொல். 71, உரை, ப.59)

“**குறைத்தல்** சுருக்குதலும் சிறிதழக்கச் சிதைத்தலுமாம்’

**அறுத்தல்** சிறிதிழவாமற் சினையையாயினும் முதலையாயினும் இரு கூறு செய்தல்.” (தொல். சொல். 72, உரை ப.60)

**“இறப்பாவது** தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை, எதிர்வாவது தொழில் பிறவாமை.”

(தொல். சொல். 200, உரை ப.129)

காலம், உலகம், வினா, சொல். (57) ஆகியவற்றிற்குப் பொருள் கூற வந்த சேனாவரையர் அவற்றை தெய்வங்களுடன் தொடர்புபடுத்திக் கூறுவர். சொற்களுக்குப் பொருள் கூறுவதோடு இவர், சொற்களின் வேறுபாடுகளையும் புலப்படுத்துகின்றார்.

1. “இனம் : ஒரு சாதிக்கணணைந்த இனம்.

   சார்பு : அணைந்த சாதியன்றி ஒரு வாற்றானி யைபுடையது.”

(தொல். சொல். 54, உரை, ப.44)

2. “முற்று : பிறிதோர் சொல்லோடியையாது தாமே தொடராதற்கேற்கும் வினைச்சொல் முற்றாம்.

   எச்சம் : பிறிதோர் சொற்பற்றியல்லது நிற்றலாற்றா வினைச்சொல் எச்சமாம்.”

(தொல். சொல். 235, உரை, ப.155)

**இயைபு சுட்டல்**

ஓர் இயலுக்கும் அடுத்த இயலுக்கும், ஒரு நூற்பாவிற்கும் அடுத்த நூற்பாவிற்கும் இயைபு சுட்டிப் போகும் நயத்தினையும் சேனாவரையர் உரையில் காணலாகும். வேற்றுமை இயல் முதல் நூற்பாவினை விளக்குதற்கு முன்பு அவர், “நான்கு சொற்கும் பொதுவிலக்கணம் உணர்த்தினார். அதற்கிடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறைமையாயினும், வேற்றுமையிலக்கணம் உணர்த்துவதற்கு வேறிட மின்மையானும், பொதுவிலக்கணமாதல் ஒப்புமையானும், உருபேற்றல் பெயர்க்கிலக்கமாகலின் வேற்றுமையுணர்த்திப் பொயுருணர்த்தல் முறைமையாகலானும், கிளவியாக்கத்திற்கும் பெயரியற்குமிடையே வேற்றுமை யிலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டார். (தொல். சொல்.62, உரை, ப.51) என்று கூறும் இயைபு பொருத்தம் அறிந்தின்புறத்தக்கது.

பெயரின் இயல்பு கூறும் நூற்பாவினை (70) கீழ் அவர் பயனிலை கோடலும் உருபேற்றலுமாகிய பெயரிலக்கணம் ஈண்டுப் பெறப்படுதலின், அவற்றோடியையக் காலம் தோன்றாமையாகிய பெயரிலக்கணமும் ஈண்டே கூறினார்” (தொல். சொல்.

70, உரை, ப.58) என்கிறார். இதே போன்று பெயரியலின் தொடக்கத்திலும் (தொல். சொல். 155, உரை, ப.105) சேனாவரையர் இயல்பு வைப்பு முறைக்கு ஏற்றாற்போல இயைபு கூறிச் செல்கின்றார்.

**உவமைகள் சில**

தாம் கூற வரும் கருத்தினைத் தெளிவுபடுத்த வேண்டி உரையாசிரிகள் நல்ல உவமைகளைக் கையாண்டு தம் உரைக்கு மெருகேற்றுவர். அவ்வகையில் சேனாவரையரும் பொருத்தமான உவமைகளைக் கூறி உரை நயத்தைக் கூட்டுகின்றார். வழக்கில் பயின்று வரும் செய்திகளையும், பிற இலக்கணக் கருத்துக்களையும் உவமைகளாகக் காட்டுவது அவருடைய உரையில் காணப்படும் தன்மையாகும்.

'கிளவியாக்கம்' என்பதனை விளக்கும்போது ''நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை, அரிசியாக்கினார் என்பவாகலின்'' (தொல். சொல். 1, உரை, ப.3) எனவும், ''திங்கள் கரிது என்பதுபோலப் பிறழ உணர்ந்தார் வழக்காய் ஆராயப்படாதென்க'' (தொல். சொல் 19, உரை, ப.18) எனவும், ''ஈண்டிரட்டைக் கிளவி போன்றது, மக்களிரட்டை விலங்கிரட்டை போல வேற்றுமை உடையவற்றையன்றி இலையிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றையென்று உணர்க.'' (தொல். சொல் 48, உரை, ப.39) எனவும் அவர் கூறுவன சில சான்றாகும்.

''ஆ தீண்டு குற்றி போல'' (52, உரை)

எனவும்,

''இவ்வாடையும் அந்நூலா னியன்ற தென்றது போல'' (76, உரை)

எனவும் அவர் கூறும் உவமைகள் நம் நெஞ்சைத் தொடுகின்றன.

**புலமை விருந்து**

தொல்காப்பிய நூற்பாக்களில் ஆங்காங்கே காணப் பெறுகின்ற புலமை நயங்களைச் சேனாவரையர் நன்கு துய்த்து அவற்றை வெளிப்படுத்தியுள்ளார். அவர் ''கட்டுரைச் சுவை பட நின்றது'' என்ற தொடரினைப் பல இடங்களில் (நூற்பாக்கள்:10, 398) எடுத்துரைக்கின்றார்.

செய்யுளின்பத்தில் ஈடுபாடு மிக உடையவர் என்பதனை 108, 210, 220 ஆகிய நூற்பாக்களின் உரையினால் நன்கு அறிய முடிகின்றது.

“யாஅர் என்னும் வினாவின் கிளவி” (210) என்பதன் உரையில் அவர், “செய்யுளின்ப நோக்கி அளபெழுந்து நின்றது” என்பார். அவரே, பிறிதேரிடத்தில், இசைப் பொருளாவது செய்யுளின்பம்” (424, உரை) என்பார்.

“இயற் சொல்லுள் ஒரு சாரனவற்றை இயற்பெயரென்றாற் போல வென்பது. இதுவுமோர் நயம்” (தொல். சொல். 454, உரை, ப.242) என்று அவர் கூறுவது அவருடைய புலமை நயத்திற்கு ஒரு சான்று.

**வழக்குச் சான்று கூறல்:**

சேனாவரையர் தம் காலத்து நடைமுறைகளைப் வழக்குகளையும் தம் உரையில் ஆங்காங்கே சுட்டிக்காட்டிப் போகின்றார். இதனால் மக்களுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர் அவர் என்பது தெளிவு.

“ஆ தீண்டு குற்றி (மரக்கட்டை) (52, உரை) பற்றி அவர் கூறுவது கொண்டு அக்கால நடைமுறை தெரிய வருகின்றது.

“பெண்மகன் வந்தாள்” (195, உரை)

என்றும்,

“ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்” (73, உரை)

என்றும் அவர் கூறுவனவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

“மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று” (228, உரை)

என்றும்

“இதனை இக்காலத்து ஒகாரமாக வழங்குப” (281, உரை)

என்றும் அவர் வழங்குவன இவண் நினையத்தகும்.

விரைவுப் பொருளில் காலம் மயங்கி வருதலை உணர்த்தும் நூற்பாவின் உரை விளக்கத்தில் சேனாவரையர் மக்கள் பேச்சு வழக்கினை எடுத்துரைக்கின்றார்.

சோறு பாணித்தவழி உண்ணாதிருந்தானைப் போகல் வேண்டுங் குறையுடையானொருவன் இன்னும் உண்டில்லையே என்றவழி உண்டேன் போந்தேன் என்னும்; தொல். சொல். 241, உரை, ப.159) என்ற சான்று எண்ணி மகிழ்தற்குரியது.

சேனாவரையர் காலத்தில் வழங்கி வந்த நாட்டார் வழக்காற்றுத் கதை ஒன்று குறிப்பாக அவரால் காட்டப்படுகின்றது.

**நாகரிகமும் பண்பாடும்:**

சேனாவரையர் தம்முடைய உரையில் தம் காலப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் தகுந்த இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார். வணிகர்களின் வாழ்வியல் நிகழ்ச்சியினை அவர் பின்வரும் விளக்கத்தில் கூறுகின்றார்:

‘‘பயறுளவோ வணிகீர் என்று வினாயவழி உழுந்தல்லதில்லை; கொள்ளல்லதில்லை என அல்லதில் என்பான் பிறிதுபொருள் கூறியவாறு கண்டு கொள்க.’’

(தொல். சொல். 35, உரை, ப.30)

காட்டு வழியே செல்லும் யானை நூல் வல்லவன் ஒருவனை அவர் கூறுகின்றார். (தொல். சொல். 37, உரை, ப.31) ஏனாதி, காவிதி போன்ற விருதுகுளைச் சான்று காட்டுவதன் மூலம் அவருடைய அரசியல் அறிவு பெறப்படும். கடிசூத்திரம் எனப்படும் பொன்னாற் செய்யப்பட்ட அரைஞாண் பற்றியும் (76, உரை), நிலத்தொற்றி கலம் (80, உரை) பற்றியும் அவர் குறிப்பிடுவன அக்கால பண்பாட்டை வெளிப்படுத்தும்.

அக்கால அளவுப் பெயர்களையும் கூடச் சேனாவரையர் காட்டியுள்ளார். பதக்குத் தூணி, தொடிதுலாம் (தொல். சொல். 116, உரை, ப.92) கலனே தூணிப்பதக்கு, தொடியே க.்.சரை (தொல். சொல். 417, உரை, ப.219) ஆகிய அளவுப் பெயர்களை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் தம் காலத்துச் சாதிப் பிரிவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். பார்ப்பனச்சேரி (49), நான்மறை முதல்வர் (33), ஓதும் பார்ப்பான் (234), ஓதாப் பார்ப்பான் போன்றன அவர் காலச் சமுதாயப் பிரிவுகளை நமக்கு இன்று வரை உணர்த்துகின்ற சான்றுகள். யானைவனயைக் குறித்து அவர் மிகுதியான இடங்களில் (87, 95, 96,)மேற்கோள் காட்டிச் சென்றுள்ளார். யாழ் (117, 173), குழல் (117) போன்ற இசைக் கருவிகளையும் அவர் கூறியுள்ளார்.

சேனாவரையர் குறிப்பிடுகின்ற ஊர்களின் பெயர்கள் பலவாகும். கருவூரை அவர் பல இடங்களில் மேற்கோள் காட்டுதல் நம் நெஞ்சில் நினையத்தக்க செய்தியாகும்.

“கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா” (68) என்று “கருவூரின் கிழக்கு” (77, 110) என்றும் அவர் கூறுவது அறியத்தகும். உறையூர், சிராப்பள்ளி, வடவேங்கடம் தென்குமரி ஆகிய ஊர்களைச் சேனாவரையர் பின்வருமாறு கூறுவர்:

“உறையூர்க் கயனின்ற சிராப்பள்ளிக் குன்றை உறை யூர்க்கட் குன்று என்றும், வடபால் வேங்கடம் தென்பாற்குமரி என்பன வற்றை வடக்கண் வேங்கடம் தெற்கடற்குமரி என்றும் வந்தவாறு கண்டு கொள்க.” (தொல். சொல். 82, உரை, ப.70).

“குழிப்பாடி யென்னுமிடப் பெயர் இடத்தின் வேறாய ஆடைமேனிற்றல் ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலாம்.” (தொல். சொல். 115, உரை, ப.91)

“மாறோக்கம்” என்பது கொற்கை சூழ்ந்த நாடு இதனைச் சேனாவரையர், “புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார். இக்காலத்தும் பெண்மகனென்று வழக்குப’ (தொல். சொல் 164, உரை, ப.110) என்று கூறும் விளக்கத்தினூடே நாட்டின் பெயரும் இழையோடி நிற்கக் காண்கின்றோம்.

“செந்தமிழ் நிலமாவன வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின்றெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்” (தொல். சொல். 398, உரை, ப.205) என்று அவர் ஆறுகளையும் ஊர்களையும் எல்லையாகச் சுட்டிக் கூறுகின்றார். மேலும் அவர், பன்னிரு நிலங்கள் குறித்தும் பேசுகின்றார்.

இவ்வாறு சேனாவரையர் தொல்காப்பியச் சொல்லதிகார உரையினை வரையும்போது புலமை நுட்பம் பொருந்தவும், பண்பாடும் நாகரிகமும் இணைந்துவரவும், உரை மரபுகளையும் உரை நயங்களையும் சிறப்புறப் பின்பற்றியும் கற்பவரைக் கவர்கின்றார் எனலாம்.

“சேனாவரையம் தோன்றின நாள்முதல், வெகு சமீபகாலம் வரை, எல்லாத் தமிழ்ப் புலவர்களாலும் பயிலப் பெற்றும் பாராட்டப் பெற்றும் வந்திருக்கிறது. ஆசிரியர் சிறந்த வடமொழிப் பயிற்சி பெற்றிருந்ததால், அதைப் பயன்படுத்தித் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதி, அதன் நுட்பங்களை விளக்கியிருக்கிறார். அவர் பொருள் கூறி வாதம் செய்யும் திறனும் போற்றத்தக்கது” என்ற திரு.ஏ.வி.சுப்பிரமணிய ஐயரின் கருத்துரை மிகவும் பொருந்தும்.

# கூறு 5

## பேராசிரியர் - தொல்காப்பியம் பொருளதிகார உரை

தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், கடல் போல் பரந்த புலமையுடையவர். இவரது புலமைத் திறனைத் தொல்காப்பியம் பொருளதிகார உரையில் கண்டு வியக்கலாம். இப்பேராசிரியர் தம் உரைகளில் நன்னூல் தண்டியலங்காரம், யாப்பருங்கலம் ஆகிய நூலாசிரியர்களின் கருத்துக்களை எடுத்துக்கூறி மறுக்கின்றார். எனவே இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் எனலாம். பேராசிரியர் என்பது கல்வி ஒழுக்கம் ஆகியவற்றால் சிறந்து விளங்கியவரைக் குறித்து எழுந்த பெயர். பேராசிரியரைப் பின்பற்றி நச்சினார்க்கினியர் உரையெழுதியுள்ளார். பேராசிரியர் வேதம் கூறும் வைதிக நெறியைப் பின்பற்றுபவர் செய்யுளியலில் வாழ்த்தப்படும் பொருளாவன கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன என்று கூறுகிறார். இங்கு வைதீகச் சாயல் உள்ளது.

செய்யுளியலில் பாடல் கலிப்பா ஆகியவற்றின் வகைகளுக்கு உதாரணமாக இவர் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலிருந்தும் கலித்தொகை கடவுள் வாழ்த்தையும் மேற்கோள் காட்டுகின்றார். அப்பாடல்கள் திருமால் முருகன் சிவன் ஆகிய தெய்வங்களைப் பரவும் பாடல்களாகும் இவையேயன்றி இவர் காட்டும் வேறு சில தனிப்பாடல்களும் இத்தெய்வங்களைப் பற்றியதாகும்.

பேராசிரியர் என்ற பெயரில் சிலர் ஆசிரியர்கள் உள்ளனர். திருக்கோவையார் உரை எழுதிய பேராசிரியர், பொதுப்பாயிரம் செய்த பேராசிரியர், மயேச்சுரர் என்னும் பேராசிரியர், குறுந்தொகை உரை எழுதிய பேராசிரியர், பேராசிரியர் நேமிநாதர் என்பவர்களாவார்.

**சமயம்:**

பேராசிரியர் வைதிக நெறியைப் பின்பற்றுபவர் என்பதற்கு அவர் உரையுள் பல சான்றுகள் உள்ளன, காட்டாக ‘‘வாழ்த்தப்படும் பொருளாவன: கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசுரும் மழையும் நாடு மென்பன எனச் செய்யுளியலில் (பொருள். 421) வரும் உரைப்பகுதியைச் சுட்டலாம். இங்கே வைதிகச் சமயச் சாயலைக் காணலாம்.

இறையனார் களவியல் உரையை அவர் குறிப்பிடும் போது, ‘பிற்காலத்துப் பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும்... (பொருள். 649) எனக் கூறுகின்றார். இச்சான்றுகளால் அவர் வைதிக சமயத்தார் என்பது விளங்கும்.

**நாடு:**

பேராசிரியர் சோழ நாட்டினர் என்றும், அந்நாட்டின் மீதுமிகுந்த பற்று உடையவர் என்றும், சோழ மன்னரைப் புகழ்ந்திருக்கும் பாடல்களை அவர் மிகுதியாக மேற்கோள் காட்டுவதால் அறிகிறோம். ‘பொன்னி நன்னாட்டுப் பொருநன்’, ‘வென்னேற் சென்னி’ ‘காவிரி பரக்கும் தண்டலை மூதூரரோனே பேரிசை வளவன்., ‘நீ பல வாழிய வாய்வாட் சென்னி’ என்னும் தொடர்களைக் கொண்ட பாடல்களை அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

**காலம்:**

பேராசிரியர் இறையனார் களவியல் உரைகாரருக்கும் இளம்பூரணருக்கும், யாப்பருங்கல விருத்தி செய்த குணசாகருக்கும், தண்டியலங்கார ஆசிரியர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் என்பதை, அவரது உரையகத்துக் காணும் குறிப்புக்களால் அறிகிறோம்.

தண்டி முதலான அணிநூல் ஆசிரியர்களுக்குக் காலத்தால் பிந்தியவர் பேராசிரியர் என்பதனை இக்குறிப்பால் தெளியலாம்.

மெய்ப்பாட்டியலில் வரும் 25ஆம் நூற்பாவில் (பொருள். 273) உரை விளக்கத்தில்

“வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.”

என்னும் குறட்பாவில் (632) உள்ள ‘கற்றறிதல்’ எனப்தனைப் பேராசிரியர் கற்றலும் அறிதலும் என இரண்டாகப் பிரித்துக் கூறியிருப்பதைப் பரிமேலழகர் தம் உரையுள் மறுத்து எழுதியுள்ளார். “...’கற்று அறிதல்’ என்பதனைக் கற்றலும் அறிதலும் எனப் பகுப்பாரும் உளர்.

**தொல்காப்பிய உரை:**

பேராசிரியர் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை செய்திருக்க வேண்டும் என்பதற்குச் சில தெளிவான சான்றுகள் இருக்கின்றன. “அவை வெட்சி புள்ளும் ஒழிந்த திணையுள்ளுங் காட்டப்பட்டன.” (பொருள். 500) என்றும், “முன்னர் அகத்திணையியலுட் கூறினாம்” (பொருள். 392) என்றும், “அது நிலத்தான் முல்லையாயிற்றென்பது அகத்திணையியலுட் கூறினாம்.” (பொருள். 267) என்றும், “ஒழிந்தனவுங் கற்பியலுட் கூறியவாற்றான் அறிக” (பொருள். 502) என்றும்

அவரது உரையின் இடையிடையே வரும் குறிப்புக்கள், அவர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை இயற்றியுள்ளார் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஆகும்.

## உரை மரபுகள்

### சொற்பொருள் உரைத்தல்:

உரையாசிரியர் பின்பற்றும் அடிப்படையான மரபுகளுள் ஒன்று சொற்பொருள் உரைத்தல் ஆகும். இம்மரபினைப் பின்பற்றும் போது சொற்களுக்கு வெறும் அகராதிப் பொருளை மட்டும் தராமல், நயப்பொருளையும் நுண்பொருளையும் தருவது உரையாசிரியர் இயல்பாகும். இவ்வகையில் பேராசிரியர் காட்டியுள்ள சொற்பொருள் நயங்கள் பலப்பலவாகும். அவற்றுள் நயமான சிலவற்றைக் கீழே காண்போம்.

“**வறுமை** யென்பது போகத் துய்க்கப் பெறாத பெற்றுள்ளோம்”

(பொருள். 253)

“**கொடை** யென்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளுங் கொடுத்தல்.” (பொருள். 257)

“**தன்மையென்பது**, சாதித் தன்மை. அவையாவனயார்ப்பாராயிற் குந்தி மிதித்துக் குறுநடை கொண்டு வந்தது தோன்றலும், அரசராயின் எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து சேறலும், இடையராயிற் கோற்கையுங் கொடுமடியுடைமை விளித்த வீளையும் வெண்பல்லுமாகித் தோன்றலுமென்று இன்னோரன்ன வழக்கு நோக்கிக் கொள்க.” (பொருள். 260)

“**அன்** பென்பது, அருட்கு முதலாகி மனத்தினிகழுநேயம்; அ.்.துடையார்க்குப் பிறர்கட்டுன்பங் கண்டவழிக் கண்ணீர் விழுமாகலின் அவ்வருளானே அன்புடைமை விளங்குமென்பது.” (பொருள். 260)

“**உவமம்** என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல்.”

(பொருள். 276)

“**மெய்ப்பா** டென்பது சொற் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்.”

(பொருள் 313)

“**வனப்பென்பது,** பெரும்பான்மையும் பல உறுப்பு திரண்ட வழிப் பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும்.” (பொருள். 547)

“பா என்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்னசெய்யுளென்று உணர்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை.”
(பொருள். 313)

**மூல நூலாசிரியரைப் போற்றல்**

“எவரும் திறனாய்வுக்கு உட்பட்டவர் என்பது பொதுவிதி. எனினும் இதற்கு ஓர் விலக்குண்டு எனத் தமிழ் நூல்கள் புலப்படுத்துகின்றன. மூல நூலாசிரியனை அந்நூலுக்கு உரை செய்யும் உரையாசிரியர்கள் நேர்நிறம் செய்வார்களேயன்றி எதிர்திறம் செய்யார்கள்.

நூலாசிரியன் கருத்தை விளக்கிக் காட்டுவதும், அது தகாதது போல் ஒருகால் தமக்குப் பட்டாலும் அங்ஙனம் கூற முனையாது தக்கதாக இசைத்துப் போற்றுவதும் உரையாசிரியர்களின் பண்புகளாம்.” என்பர் அறிஞர் ப.சுப.மாணிக்கம். இப்பண்புத் திறனைப் பேராசிரியர் உரையில் சிறப்பாகக் காண்கின்றோம்.

“இவற்றுள் உதாரணம் காணாமையிற் காட்டாமாயினாம். இலக்கணம் உண்மையின் அமையுமென்பது” (பொருள். 577) என்றும், “அவை முற்காலத்துள்ளார் செய்யுளுட் காணாமையிற் காட்டாமாயினாம். இக்காலத்துள்ளனவேற் கண்டுகொள்க. இலக்கணம் உண்மையின் இலக்கியங் காணாமாயினும் அமையுமென்பது” (பொருள். 495) என்றும் பேராசிரியர் உரையின் இடையே வரும பகுதிகள், தொல்காப்பியரது இலக்கணத்தின்மீது அவர் வைத்திருக்கும் பெருமதிப்பைக் காட்டுவனவாம்.

பேராசிரியர், தொல்காப்பியரை ‘வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவ’ னாக (பொருள். 649) மதித்துள்ளார். இதனை, நண்டிற்கு “மூக்குண்டோவெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்.’ (பொருள்.586) என வரும் அவரது உரைப்பகுதியால் தெள்ளதின் உணரலாம். ‘நண்டிற்கு மூக்கு உண்டா, அல்லது இல்லையா என்பது பற்றித் தெரியாது; அதுபற்றிக் கவலையும் இல்லை; தொல்காப்பியர் உண்டு என்று கூறி இருக்கிறார் அல்லவா, அதனால் நண்டிற்கு மூக்கு உண்டு’ என்று எழுத வேண்டும் என்றால், பேராசிரியர் தொல்காப்பியரை எந்த அளவுக்கு மதித்திருக்க வேண்டும், சுருங்கக்

கூறின், பேராசிரியர், தொல்காப்பியர்மேல் வைத்திருக்கும் மதிப்பு நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; கடலினும் ஆழம் மிக்கது' எனலாம்.

'சிதைவு எனப்படுபவை வசையற் நாடின் (பொருள். 663) எனத் தொடங்கும் மரபியல் நூற்பாவுக்கு உரை எழுத வந்த பேராசிரியர், "இவ்வாசிரியர் எஞ்ஞான்றும் குற்றத்திற்கு இலக்கணங் கூறாராகலான் இக்கணத்தோடு கூறுந்துணைப் பயம்படுதலும் ஒருவாற்றாற் சிறப்பெனவே படுமென்பது... 'வசையற நாடின' என்றதனான் இங்ஙனம் குற்றமென்று வரையப்பட்டனவற்றைக் கொண்டு புகுந்து மற்றொரு பொருள் கொள்ளின் அவை வசையற்றனலாமென்பது" எனத் தொல்காப்பியரின் இயல்பினை தெளிவுறுத்துகின்றார். மேலும் அவர், "இவ்வாசிரியர் யாண்டும் இலக்கணமே கூறி இவ்விலக்கணத்திற் பிறழ வருதலைக் குற்றமென்று கொள்ள வைப்பினன்றி இவ்வாறு குற்றங்கட்கு இலக்கணங் கூறாதார் இது கூறினார். 'எதிர் மறுத்து உணரின் திறத்தவும் அவையே' (பொருள் 664) என வருகின்ற சூத்திரத்தான் இவையும் இலக்கணத்திற்கு உபகாரப்படுதலினென்பது… இது, மேற் குற்றம் பத்தும் கூறி இனிக் குணமும் பத்துள வென்கின்றது. மேலெல்லாம் இவ்வாசிரியன் இலக்கண வழக்கினையே விதந்தோதி அதனிற் பிறழ்ந்தது குற்றமென்று கொள்ள வைத்தான். இவ்வோத்தினுள் 'ஈரைங்குற்றமு'மென்பன சில குற்றம் கூறினான். இவையும் இலக்கணமே கூறினனென்பான் இவற்றை யெதிர் மறுத்துக்கொள்ள வென்றானென்பது இதனது பயன்: உள்ளது சொல்லுதலேயன்றி இல்லது சொல்லுதலும் நூலிலக்கண் மென்றறிவித்தலாயின்றி இல்லாத சொல்லுதலும் நூலிலக்கண் மென்றறிவித்தலாயிற்று" என விளக்கமாக எழுதி, நூற்பாவினுள் ஆழ்ந்திருக்கும் ஆசிரியரின் உள்ளத்தைத் திறந்து காட்டுகின்றார். இங்ஙனம் நூலாசிரியரின் உள்ளக் கருத்தை நுணுகி ஆராய்ந்து வெளிப்படுத்துவதே ஒரு நல்ல உரையாசிரியரின் தலையாய கடனாகும்.

"தமிழ் உரையாசிரியர்களைப் பொறுத்த வரையில் அனைவருமே மூல இலக்கியங்களைத் தொழுதற்குரிய உயர்பொருளாகவே கருதியிருந்தனர் எனலாம். அவர்கள் தம் உரையில் நல்லனவற்றையே கண்டு சொல்கின்றனர். ஆராய்கின்றனர். இலக்கிய ஆசிரியரிடம் அவர்கள் கொண்ட ஈடுபாடு மிகப்பெரிது. நூலாசிரியர்களையோ அவர்களின் இலக்கியப் படைப்பையோ ஒருக்காலும் குறைகூறிச் சொல்லிற்றிலர். உரையாசிரியர்கள் கண்டதெல்லாம் பசுமையான கருத்துகளே; பாராட்டும் திறனாய்வு (Appreciative Criticism), நடுநிலைத் திறனாய்வு (Judicial Criticism), பழிக்கும் திறனாய்வு (Destructive Criticism) என்ற மூன்று

வகைத் திறனாய்வில் உரையாசிரியர்கள் ‘‘பாராட்டும் திறனாய்’வையே மேற்கொண்டனர்.’’ என்னும் அறிஞர் இரா.குமரவேலனின் கருத்து இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

**பிற நூலார் கருத்தை மறுத்தல்**

மூல நூலாசிரியரைத் திறனாய்வுக்கு உட்படுத்தாத உரையாசிரியர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் திறனாய்வு செய்து கொள்ளத் தவறுவதில்லை; கருத்து மறுப்பும் மாறுபாடும் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளத் தயங்குவதில்லை. பேராசிரியர் இவ்வகையில் தமக்கு முன் தோன்றி நூலும் உரையும் எழுதிய ஆசிரியர்களின் கருத்துக்களைத் தக்க நியாத்துடன் சாடியும் மறுத்தும் எழுதியுள்ள இடங்கள் பலப்பலவாகும்.

முற்காலத்து நூல்களை மிகவும் போற்றியும் மதித்தும், பிற்காலத்து நூல்களைப் பெரிதும் மறுத்தும் தாக்கியும் எழுதிச் செல்வது பேராசிரியரின் இயல்பாகும். இவ்வகையில் அவர் வெளியிட்டுள்ள இரு ஆணித்தரமான கருத்துக்கள் வருமாறு:

‘‘பிற்காலத்து நூல் செய்வார் நூலிக்கணம் பிறழாமற் செய்யினும் முற்காலத்து நூலொடு பொருண்-மாறுபடச் செய்யின் அது மரபன்று.

(பொருள். 660)

‘‘ஈண்டுத் தனிச்சொல் வேண்டுமென்று பிற்காலத்து நூல் செய்தாரும் உளர். அது சான்றோர் செய்யுள் எல்லாவற்றோடும் பொருந்தாமையானும், பிற்காலத்தில் செய்த நூல் பற்றி முற்காலத்துச் செய்யுட்கெல்லாம் இலக்கணம் சேர்த்துதல் பயமின்றாதலானும் அ∴.தாமையாதென்பது.’’ (பொருள். 383)

உரைப்பதில் மட்டுமின்றி, மறுப்பதிலும் நயத்தை போற்றுவது-பின்பற்றவது-தமிழ் மரபு. பேராசிரியர் இம் மரபில் சிறந்து விளங்குகின்றார். இரு சான்றுகள் இதோ:

‘‘இனிப், பரிபாடலுங் கலிப்பாவினுள் அடங்கு மென்பாரும் உளர். கலியும் பரிபாடலுமென பெருத் தொகையுள் இரண்டு தொகை தம்மின் வேறாதலின் அவ்வாறு கூறுவார். செய்யுள் அறியாதாரென்பது; அல்லதூஉம், அராகவுறும் பில்லாத முழுகியவடியுங் கொச்சகக் கலியல்லாத கலிப்பாவினுள் உண்டாவதாலும் கொச்சகக் கலியுறழந்து வருதலும் உடையவாம், அவ்வாறு கூறினால் என மறுக்க.’’ (பொருள். 442)

“மற்றிதனை (செய்யுளியல்) யாப்பதிகார மென வேறோரதிகாரமாக்கி உரைப்பாருமுளர்; அங்ஙனங் கூறின் வழக்கதிகாரமெனவும் வேறு வேண்டுமென மறுக்க அல்லதூஉம் எழுத்துஞ் சொல்லும் பொருளுமென மூன்றற்கும் மூன்றதிகாரமாக்கி அதிகாரமொன்றற்கு ஒன்பதோத்தாகத் தந்திரஞ் செய்ததனோடு மாறு கொள்ளலாம். இதனை வேறதிகாரமென்பார்க்கென்பது.

(பொருள். 313)

இங்ஙனம் மறுத்து எழுதும் போது பெயர் சுட்டாமல் எழுதிச் சொல்லும் பாங்கினைப் பேராசிரியரிடம் காண்கிறோம்.

**பன்னூற் பயிற்சி:**

உரையாசிரியர்க்குத் தமிழ் இலக்கண இலக்கிய அறிவோடு, வரலாற்று அறிவும் வடமொழி அறிவும் இன்றியமையாதனவாகும். அன்னோர் கலைநூல் அறிவு கைவரப் பெற்றவராக விளங்குதல் வேண்டும்; அறிவியல் துறையிலும் ஓரளவு பயிற்சி உடையவராதல் வேண்டும்; சோதிட நூல், கனா நூல், மருந்து நூல், அடிசில் நூல் குதிரை நூல் முதலானவற்றை அறிந்திருத்தல் வேண்டும்.

உரையெழுதும் பணி மிகச் சிக்கலானது; அதற்குப் பல நூற் கல்வி இன்றியமையாதது’ என்பர் அறிஞர். பேராசிரியரோ பழுத்த தமிழ்ப் புலமை மட்டுமின்றி, பன்னூற் புலமையும் ஒருங்கே வாய்ந்தவராக விளங்குகிறார்.

அவர் தம் காலத்தின் இயல்பிற்கு ஏற்ப, வடமொழிப் பயிற்சியிலும் சிறந்து விளங்குகிறார். ‘எல்லாவாற்றானும் முற்ற உணர்ந்தோர் செய்த நூலன்மையின் அவை தேறப்படா; அல்லதூஉம் அவை தமிழ் நூலன்மையின் ஈண்டு ஆராய்ச்சியில் லென்பது’ (பொருள்.649) என்னும் பகுதியால் அவரது தமிழ் உள்ளத்தை நன்கு உணரலாம்.

“ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பாட்ட வழிக் கரந்தொழுகும் உள்ள நிகழ்ச்சி பெண்பாலதாகலாற் பெரும்பான்மையும் அவள் கண்ணே ஈண்டுக கூறுகின்ற மெய்ப்பாடு (புகமுகம் புரிதல் முதலானவை) சிறந்ததென்பது” (பொருள்.261) என்றும், “யாண்டென்பது ஒத்தவாறென்னையெனின் பன்னீர் யாண்டும் பதினாறி யாண்டுமே பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவமென்பது” (பொருள்.273) என்னும் பேராசிரியர் உரையின் இடையிடையே வரும் பகுதிகள் அவரது பாலியற் புலமையைத் தெள்ளிதின் புலப்படுத்துவனவாகும்.

**இலக்கிய வரலாற்றுச் செய்திகளும் உண்மைகளும்**

பேராசிரியர் உரையால் உணரலாகும் இலக்கிய வரலாற்றுச் செய்திகளும் உண்மைகளும் மிகப் பலவாகும். இன்றியமையாதன பின்வருமாறு:

1. ‘படர்ந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம், பூதபுராணம் என்பன சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப்படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு. நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உளதாயிற்று.’ (பொருள். 652) தொல்காப்பியத்தின் நிலைபேற்றுக்குப் பேராசிரியர் காட்டும் காரணம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

2. அதத்தியமே முற்காலத்து முதனூல்; தொல்காப்பியம் அதன் வழிநூல் (பொருள். 649) அகத்தியம் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என்னும் மூன்றினையும் அடக்கி நிற்பது (பொருள். 484) அகத்தியனார் ‘யாழ்நூல்) என்னும் ஒரு நூல் செய்தார் என்பது பேராசிரியர் கருத்து (பொருள். 363)

3. பன்னிரு படலம்: முதனூலாக ஐயனாரிதனார் வெண்பாமாலை என்னும் வழிநூல் செய்தார் (பொருள். 649)

4. தொல்காப்பியத்தின் வழித் தோன்றின நூல் பல்காப்பியம், பல்காப்பியர், பல்காயனார் முதலியோர் எழுத்தும் சொல்லும் பொருளும் எல்லாம் செய்திவர் செய்யுள் இலக்கணம அகத்தியத்துப் பரந்து கிடந்ததனைத் தொல்காப்பியர் சுருங்கச் செய்தலின், அருமை நோக்கி அன்னோர் பகுத்துக் கூறினார் (பொருள். 650).

5. மிறைக் கவி பாடுதல் மரபன்று; அவை சக்கரம் சுழிகுளம், கோமூத்திரிகை, ஏகபாதம், எழுகூற்றிருக்கை மாலைமாற்று என்றாற் போல்வன (பொருள். 645) இவை மந்திர வகையானன்றி, வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்கு உரிய அகனைந்திணைக்கு மரபன்று.

6. ஏனை உவமத்திலும் உள்ளுறை உவமமே செய்யுட்கும் பொருளிலக்கணத்திற்கும் சிறந்தது (பொருள். 300). வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும் (பொருள். 312) பேராசிரியரின் கருத்தில் உவமவியல் பொருளைப் புலப்படுத்துவதற்கு எழுந்ததேயன்றி, அணியை உணர்த்துவதற்காக

எழுந்ததன்று. பிற்காலத்தார் அணியிலக்கணத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை.

**மேற்கோள் காட்டுதல்:**

'முன்னோர் பொழிபொருளே யன்றி அவர் மொழியும், பொன்னே போல் போற்றுதல்' (நன்னூல் : 9) என்னும் நெறியை 'ஒல்லும் வகையெல்லாம ்ஓவாதே' பின்பற்றுபவர் பேராசிரியர். பண்டைத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலிருந்து அவர் எடுத்துக்காட்டியுள்ள மேற்கோள்கள் அவருக்கு இருந்த பரந்த நூலறிவையும் நிவைாற்றலையும் தெள்ளிதின் காட்டவல்லனவாகும்.

தொல்காப்பியத்துள் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களிலிருந்தும் பேராசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். 'தொல்காப்பியமென்பது பிண்டம்; அதனுள், எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகாரமென்பன படலம் எனப்படும்; அவற்றுள் ஓத்துஞ் சூத்திரமும் ஒழிந்த இரு கூறுமெனப்படும்' (பொருள். 484) என்பது அவர் கருத்து.

எட்டுத் தொகையுள் எட்டிலிருந்தும், பத்துப்பாட்டுள் குறிஞ்சிப் பாட்டு நீங்கலாக ஏனையவற்றிலிருந்து பேராசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். அவர் அகநானூற்றை 'நெடுந்தொகை' என்ற பெயராலும் சுட்டியுள்ளார் (பொருள். 548). 'மலைபடு கடாத்தினை ஆனந்தக் குற்றமெனப் பிற்காலத்தானொருவன் ஒரு சூத்திரங் காட்டுத'லை அவர் 'தன்னான் ஒரு பொருள் கருதிக் கூற'லுக்குக் (பொருள். 663) காட்டாகக் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறள், நாலடியார், ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார் நாற்பது, களவழி நாற்பது பழமொழி நானூறு ஆகியன பேராசிரியர் காட்டியுள்ளார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகியவற்றிலிருந்து அவர் மேற்கோள் தந்துள்ளார். முத்தொள்ளாயிரத்திலிருந்து அவர் மிகுதியான பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளார்.

**வினா விடைப் பாங்கு**

வினாவும் விடையுமாக எழுதிச் செல்லும் பாங்கினைப் பண்டை உரையாசிரியர்களிடம் பரக்கக் காணலாம். பேராசிரியர் உரையிலும், ஆங்காங்கே இப்பாங்கு படிந்திருக்குக் காண்கின்றோம்.

பேராசிரியர் செய்யுளியல் தலைச்சூத்திரத்திற்கு எழுதிய உரை விளக்கத்தில், “மற்றுச் செய்யுளுறுப் ஈண்டோதினார்; செய்யுள் யாண்டோதுபவெனின், அறியாது கடாயினாய், உறுப்பென்பன உறுப்புடைப் பொருளின் வேறெனப்படா; பொருள் எனப்படுவன உறுப்பே, அவற்ற திட்டத்தினை முதலென வழங்குபவாகலான் உறுப்பினையே சொல்ல யொழிந்தார்; முதற்பொருள் திலக்கணமென உறுப்பிலக்கணத்தினையே வேறுபடுத்துக் கூறலாவதின்மையானும் உறுப்புரைப்பவே அவ்வறப்புடைய பொருள் வழக்கியலாற் பெறலாமாகலானுமென்பது (பொருள். 313) எனக்கூறுகின்றார். ஆசிரியர் பாடம் கூற, அதைக் கேட்கும் மாணாக்கன் ஐயத்தினை எழுப்ப, அதற்கு ஆசிரியர் விடை கூறி விளக்கும் பாங்கில் இப்பகுதி அமைதிருப்பது மனங்கொளத்தக்கதாகம்.

‘கிழவி சொல்லின் அவளறி கிளவி’ என்றும், தோழிக்கு ஆயின் நிலம் பெயர்ந்து உரையாது’ என்றும் தலைவியும் தோழியும் உள்ளுறை யுவமம் கூறும்போது பின்பற்ற வேண்டிய நெறிமுறையினை எடுத்துக் கூறும் தொல்காப்பியர், ‘கிழவோற்கு ஆயின் இடம் வரைவின்றே’ (பொருள்.305) என்னும் நூற்பாவில் தலைவனுக்கு எல்லா நிலனும் உரியவாம் என்கின்றார். இத்நூற்பாவுக்கு எழுதிய உரை விளக்கத்தில் பேராசிரியர், தலைமகற்கு இடவறையறை இல்லை. வரையறையில்லவற்றுக்கு வரையறை கூறாமென முடியாவோவெனின், அங்ஙனமாயினுங் கிழத்திக்கும் தோழிக்கும் இடம் வரை மறுத்ததனைக் கண்ட மாணாக்கன் இவ்வாறே தலைமகற்கும் இடம் வரையறை யுண்டுகொலென்று கருதிற் கருதற்கவென்றற்கு இது கூறினா னென்பது” எனத் தெளிவுப்படுத்துகின்றார்.

**பாட வேறுபாடுகளைச் சுட்டல்**

பேராசிரியர் தம் உரையில் பல இடங்களில் பாட வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். தாம் கொண்டுள்ள பாடத்தின் வலிமையையும் பொருத்தத்தையும் எடுத்துக் காட்டும் அவர், பிறிதொரு சாரார் கொண்டுள்ள பாடத்தின் பொருத்தமின்மையையும் முரண்பாட்டையும் விளக்கிக் காட்டியுள்ளார். மூல நூலாசிரியர் கருத்திற்கு இயைந்து வரும் பழம்பாடத்தை அவர் போற்றிக் கையாண்டுள்ளார். இனி, அவர் தம் உரையுள் சுட்டிக்காட்டியுள்ள சில பாட வேறுபாடுகளைக் காண்போம்.

“புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.” (பொருள். 255)

என்பது மெய்ப்பாட்டியலில் மருட்கை (வியப்பு) பற்றி வரும் நூற்பா, இந் நூறுபாவின் உரை விளக்கத்தில் பேராசிரியர், ‘புதுமை’ என்பதற்கு மாறாக

‘முதுமை’ என ஒரு பாடம் வழங்குவதைச் சுட்டிக்காட்டிகின்றார். மேலும் அவர், அப்பாடத்தின் பொருத்தமின்மையும் எடுத்துக்காட்டுகின்றார். “புதுமையை ஆக்கத்துளடக்கி முதுமை யென்பது பாடமாகவும் உரைப்பட அன்னதோர் வழக்கின்மையானும் புதுமை ஒன்று ஒன்றாய் திரியுமெனப்பட்டு அவ்வாக்கத்துள் அடங்காமையானும் அஃதமையா தென்பது” என்பது அவர் எழுதும் மறுப்புரை ஆகும்.

“கிழவோட்கு உவமம் ஈரிடத்து உரித்தே” (பொருள். 304)

என்பது உவமவியலில் வரும் ஒரு நூற்பா. ‘தலைமகன் இரண்டிடத்தல்லது உள்ளுரையுவமை சொல்லப் பெறாள். இரண்டிடமென்பன; மருதமும் நெய்தலும் அந்நிலத்துப் பிறந்த பொருள் பற்றியல்லது உள்ளுரையுவமஞ் சொல்லுதல் கிழத்திக்குரித்தன்றென்பது கருத்து’ என இந்நூற்பாவுக்குப் பொருள் எழுதுகின்றார் பேராசிரியர் மேலும் அவர், “இனிக், ‘கிழவோட்கு உவமம் பிரிவிடத்து உரித்து’ என்பது பாடமாக உரைப்பாருமுளர். யாதானுமொரு நிலத்தாயினும் பிரித்திருந்தவிடத்து உள்ளுரையுவமங் கூறப்பெறுங் கிழத்தியென்பது இதன் கருத்து. பெருந்தண்வாடையின் முந்து வந்தோனென்பது பிரிவன்றாகலின் ஈரிடமென்றலே வலிதென்பது” என இந் நூற்பாவில் ‘ஈரிடத்து’ என்பதற்கு மாறாக வழங்கும் பிறிதொரு பாடத்தையும் சுட்டிக்காட்டி, தாம் கொண்டிருக்கும் பாடமே சரியானது என்பதையும நிறுவுகின்றார்.

## உரை நயங்கள்

### நிரல் நயங்கள்:

இறை வணக்கம், வரவேற்புரை, தலைமையுரை, வாழ்த்துரை, ஏற்புரை, நன்றியுரை, நாட்டுப் பண் என நிகழ்ச்சிகளுக்கு நிரல் இருப்பது போல், உயர்ந்த நூலாசிரியர்களின் கருத்துக்களிலும் நிரல் உண்டு. முன்னையது நிகழ்ச்சி நிரல் எனப்படுவது போல், பின்னையது கருத்து நிரல் எனப்படும். நூலாசிரியர் அமைத்துத் தந்துள்ள கருத்து நிரலுக்குக் காரணம் காண்பதுஉரை நயங்களுள் ஒன்றாகும். பேராசிரியர் உரையுள் காணலாகும். நிரல் நயங்களுக்கு இரு சான்றுகளைக் காண்போம்.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.” (பொருள். 251)

என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பாவில் எண் வகை மெய்ப்பாடுகள் நிரல்படுத்திக் கூறப்பட்டுள்ளன. இந்நிரலுக்கு காரணம் என்ன? ஆசிரியர் நகையை ஏன் முதலில் கூற வேண்டும்? அழுகையை ஏன் அடுத்து வைக்க வேண்டும்? உவகையை ஏன் இறுதியில் அமைக்க வேண்டும்? பேராசிரியரின் உரை விளக்கம் இவ் வினாக்களுக்கு உரிய விடைகளைக் கூறுகின்றது; மெய்ப்பாட்டு நிரலுக்கான காரணத்தை நயமாக விளக்குகின்றது.

“மாற்று நகை முன் வைத்ததென்னை யெனின், ‘பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருட்கும்’ (249) இவையென்னும் இயல்பில்லனவல்ல என்றதற்கு விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன் வைத்தானென்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன் பின் வைத்தான், அழுகையும் இளிவரலோடு இயைபுடைமையின். தானிளி வந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின் இளிவரலின் பின் வியப்பு வைத்தான். வியப்புப் பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதன்பின் வைத்தான். அவ் வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன் பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலை யாகலானும் எல்லாவற்றினும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்ததாகலானும் முதற்கணோதிய நகைக்கு இயைபுடைத்தாகலானும் உவகையை அவ்வீற்றுக்கண் வைத்தாதென்பது’ என நிரல் நயம் காட்டுவார் பேராசிரியர்.

> “பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
> சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு
> அளவியல் மரபின் அறுவகை யோரும்
> களவினிற் கிளவிக்கு உரியர் என்ப.” (பொருள். 501)

எனச் செய்யுளியலில் வரும் ஒரு நூற்பாவில் களவொழுக்கத்தில் கூற்று நிகழ்த்துதற்கு உரியோரின் வரிசைக் காணப்படுகிறது. “பார்ப்பா னென்பான், நன்றுந் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவானெனப்படும். பாங்கனென்பான் அவ்வாறன்றித் தலைமகன் வழிநின்றொழுகி வருமாகலின் அவனை அவன்பின் வைத்தான். தோழி அவன் போன்றும் பெண்பாலாகலின் அவளைப் பின் வைத்தான். செவிலி மாற்றருஞ் சிறுவரவிற்றாதலின் அவளை அவளின் பின் வைத்தான். அவரிற் சிறந்தமையிற் சீர்த்தகு சிறப்பிற் கிழவனையுங் கிழத்தியையும் அவர் பின் வைத்தான். அவ்விருவருள்ளுந் தலைமகளது கூற்றே பெருவரவினதாகலின் அவளை ஈற்றுக்கண் வைத்தான்” என்பது இவ் அறுவர் வரிசைக்குப் பேராசிரியர் கூறும் காரணம் ஆகும்.

“வரிசை அறிதலோ அரிதே.” (புறம். 121)

என்பார் கபிலர். எனவே வரிசையறிவு வேண்டும் என்பது பெறப்படும். பேராசிரியர் இவ் வரிசையறிவு நிரம்பப் பெற்றவர் ஆவார். அவர் தம் உரையில் இடையிடையே காட்டும் வைப்பு நயங்களால் இதனை உணரலாம்.

**அடைமொழி நயங்கள்:**

சிறுசிறு அடைமொழிகளில் பெரும்பெரும் நயங்களையும் நுட்பங்களையும் பொதிந்து வைப்பது நல்லிசைப் புலவர்களின் இயல்பாகும். தொல்காப்பியர் வாக்கில் இத்தகைய அடைமொழிகள் ‘அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்க’க் காண்கிறோம். ‘இலங்கைப் போர்க்குக் கலிங்கப் போர் ஒட்டிரட்டி’ என்பது போல், நயம் செறிந்த தொல்காப்பிய அடைமொழிகளுக்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்கள் காட்டும் நயங்களும் இருமடங்கு நயம் சேர்ந்தனவாக விளங்குகின்றன.

‘உள்ளப்பட்ட நகை’ (பொருள். 252), ‘விளிவில் கொள்கை அழுகை’ (253), ‘யாப்புற வந்த இளிவரல்’(254), ‘மதிமை சாலா மருட்கை’ (225), ‘பிணங்கல் சாலா அச்சம்’ (256), ‘சொல்லப்பட்ட பெருமிதம்’ (257), ‘வெறுப்பின் வந்த வெகுளி’ (258), ‘அல்லல் நீத்த உவகை’ (259) என எண் வகை மெய்ப்பாடுகளைப் பற்றிய நூற்பாக்களில் வரும் அடைமொழிகளுக்குப் பேராசிரியர் காட்டியுள்ள நயங்கள் மிக நுட்பமானவை. இந்நயங்களைப் பயில்வோர், இவ் அடைமொழிகளின் இலக்கிய வனப்பினை நன்கு உணர்வர்.

காட்டாக, ‘உள்ளப்பட்ட நகை’, ‘விளிவில் கொள்கை அழுகை,’ ‘அல்லல் நீத்த உவகை’ என்னும் அடைமொழிகளுக்குப் பேராசிரியர் எழுதியுள்ள நயக்குறிப்புக்களைக் காண்போம்:

“உள்ளப்பட்ட நகை நான்கு என்றதனான் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள, அவை ‘வறிதகத் தெழுந்தவாயண் முறுவலள்’ (அகம். 5) என்றாற்போல வருவனவெனக் கொள்க.”

“விளிவில் கொள்கை, கேடில் கொள்கை; அங்ஙனம் கூறிய மிகையானே அழுகைக் கண்ணீர் போல உவகைக் கண்ணீர் வீழ்தலும் உண்டு. அதனையும் அழுகைப்பாற் சார்த்தி உணரப்படும்.”

“அல்லல் நீத்த வுவகை” யென்றதனாற் பிறர் துன்பம் கண்டு வரும் உவகையும் உவகையெனப்படா தென்பது இதுவும் தன்கட் டோன்றிய பொருள் பற்றி வருமென்றார்க்குப் பிறன்கட் டோன்றிய பொருள் பற்றி வருமென்றார்க்குப் பிறன்கட் டோன்றிய இன்பம் பற்றியும் உவகை பிறக்கும். அஃதொப்பாறப்படுமெனின், அதுவும் அல்லல் நீத்த வுவகை யென்றதனான் உவகையெனப்படும்.

**தொடர் நயங்கள்:**

இலக்கண் உலகில் வழங்கும் கலைச்சொற்கள் (Technical Terms) கணக்கற்றவையாகும். இக் கலைச் சொற்களுள் சிலவற்றுக்குப் பேராசிரியர் தம் உரையின் இடையிடையே எழுதியுள்ள விளக்கங்கள் பயில்தொறும் பேரின்பம் பயப்பனவாகும். நுண்ணறிவும் நூலறிவும் ஒருங்கே கைவரப் பெற்ற ஒருவரே இத்தகைய சிறந்த விளக்கங்களை எழுதுதல் கூடும்.

**‘புகுமுகம் புரிதல்’,** ‘பாராட்டெடுத்தல்’, ‘உடம்பு நனி சுருங்கல்’, ‘கனவொடு மயங்கல்’ என்னும் தொடர்களுக்கு - இலக்கணக் கலைச்சொற்களுக்கு – பேராசிரியர் எழுதியுள்ள இனிய விளக்கவுரைகள் முறையே வருமாறு:

“புகுமுகம் புரிதல் என்பது ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும்பும் உள்ள நிகழ்ச்சி... அதாவது, தலைமகன் காண்டலைத் தலைமகள் வேட்டல் என்றவாறாம்; மற்றிது தலைமகற்கு உரித்தன்றோவெனின் அவன் தான் காண்பினல்லது நற்காண்டவை நயவான், அது தலைமையன்றாகலின்” (பொருள். 261)

“பாராட்டெடுத்தல்-புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்த் தலைமகனை இயற்பட நினைவுங் குறிப்பும்; இது பாராட்டென்னாது எடுத்தலென்றதனால் அதனை உள்ளமெடுத்தல் மேற்கொள்க. இது தலைமகற்கும் ஒக்கும்” (பொருள். 264).

**“உடம்புநனி சுருங்க** லென்பது, அவ்வுண்ணாமை உயிரிற் செல்லாது உடம்பிற் காட்டுதல்” (பொருள். 270)

**“கனவொடு மயங்க** லென்பது, அரிதினில் துயிலெய்தி வழித் தலைமகனைக் கனவிற் கண்டு பின்னர் அவனன்மையின் மயங்கும் மயக்கம்” (பொருள். 270)

**பொருள் நயங்கள்:**

தொல்காப்பிய நூற்பாக்களில் நயங்காண்பது ஒரு தனிக்கலை. அக்கலையில தனித்திறனும் தேர்ச்சியும் பெற்றவர் பேராசிரியர். அவர் இலக்கண நூற்பாவிற்கு இலக்கிய நயத்தோடு பொருள் கூறுவதில் வல்லவர். இக்கருத்திற்கு இரு சான்றுகளைக் காண்போம்.

"மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' (பொருள். 588)

என்பது ஆறறிவுயிர் கூறும் மரபியல் நூற்பா. இந்நூற்பாவுக்குப் பேராசிரியர் வரைந்துள்ள உரைவிளக்கம் வருமாறு:

'மக்களெனப்படுவோர் ஐம்பொறியுணர்வேயன்றி மனமென்பதோர் அறிவும் உடையர். அக்கிளைப் பிறப்பு வேறும் உள. முப்பத்திரண்டு அவயத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடுஉ மகடுஉ மக்களெனப்படும். அவ்வாறு உணர்விலுங் குறைவுபட்டாரைக் குறைந்தவகை அறிந்து முற்கூறிய சூத்திரங்களானே அவ்வப் பிறப்பினும் சேர்த்திக் கொள்ள வைத்தானென்பது. அவை, ஊமுஞ் செவிடும் குருடும் போல்வன. கிளையெனப்படுவார். மனவுணர்வுடையன உளவாயின அவையும் ஈண்டு ஆறறி வுயிராயடங்குமென்பது. 'தாமே' யெனப் பிரித்துக் கூறின்மையான் நல்லறியுடையாரென்றற்குச் சிறந்தாரென்பது கொள்க.".

"சுட்டிக் கூறா உவம மாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே"
(பொருள். 282)

என்பது உவவியலில் வரும் ஒரு நூற்பா. 'உவமத்திற்கும் பொருளுக்கும் பொதுவாகிய ஒப்புமைக் குணம் நான்கினையும் விதந்து சொல்லி உரையாதவழி, ஈவ்விரண்டினையும் எதிர்பெய்து கூட்டி ஆண்டுப் பொருந்தியதொன்று பொருந்தியது பற்றி வினை, பயன், மெய், உரு என்னும் நான்கினுள் இன்னது என்று சொல்லப்படும்' என்பது இதன் பொருள். "பவளம் போற் செந்துவர்வா' யென்பது சுட்டிக் கூறிய வுவமம்; என்னை? இரண்டிற்கும் பொதுவாகிய செம்மைக் குணத்தினைச் சொல்லியே உவமஞ் சொல்லினமையின். அது 'பவள வா' யென்கின்ற வழிச் சுட்டிக் கூறா வுவமமாம். ஆண்டுப் பவளத்தினையும் வாயினையுங் கூட்டிப் பார்த்துச் செம்மைக் குணம் பற்றி உவமஞ் செய்ததென்று அறியப்படும்; அல்லாக்கால், அல்லென்ற கல்லிற்கும் மெல்லென்ற இதழிற்கும்

உள்ளதோர் ஒப்புமை ஆண்டில்லையென்பது'' எனப் பொருந்திய ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாக இந்நூற்பாவின் பொருளைச் செவ்விதின் தெளிவுறுத்துவார் பேராசிரியர்.

**எடுத்துக்காட்டு நயங்கள்:**

'எவ்வகை இலக்கணமும் பலருக்கு எளிதாக விளங்க வேண்டுமெனின் உதாரணங்கள் பலர் அறிந்த வழக்காக இருந்தல் வேண்டும். மக்களின் நடைமுறைப் பேச்சுக்களினின்றும் வழக்கவொழுக்கங்களினின்றும் இந்த எடுத்துக்காட்டுக்கள் அமையவேண்டும் என்பர் அறிஞர். பேராசிரியர் இவ்வகையில் எளிமையானவராக விளங்குகிறார். அவர் தம் உரையகத்தே எல்லோருக்கும் எளிதில் விளங்கும் உதாரணங்கள் பலவற்றை எடுத்தாண்டுள்ளார்.

'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' என்பது உவமவியலில் வரும் ஒரு நூற்பா (பொருள். 283) உவமானமும், பொருளும் தம்மின் ஒத்தன் என்று உலத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும்' என இந்நூற்பாவிற்குப் பொருளுரைப்பார் பேராசிரியர். மேலும், அவரே உலகத்தார் மகிழும் வகையில் உவமை கூறுவது எப்படி என்பதற்கு இரு எடுத்துக்காட்டுக்களையும் தருவார். ''மயிற்றோகை போலுங் கூந்தல்' என்பதன்றிக், 'காக்கை சிறகன்ன கருமயிர்' என்று சொல்லின், அஃதொத்ததென்படாதென்றவாறு. புலி போலப் பாய்ந்தான்' என்பதன்றிப் பிழையாமல் பாயும் என்பதே பற்றிய 'பூசை போல பாய்ந்தான்' எனின், அதுவும் ஒப்பென்று கொள்ளாது உலகமென்றவாறு'' என்பது அவரது உரை விளக்கம் ஆகும்.

'கலங்கி மொழிதல்' (பொருள். 266) என்னும் மெய்ப்பாட்டுக்கு விளக்கம் எழுதும் போது, ''கையொடு பட்ட கள்வரைப் போலச் சொல்லுவனவற்றைக் தடுமாற்றம் தோன்றிச் சொல்லுதல்'' என வழக்குக் காட்டு ஒன்றைக் கையாண்டு தெளிவுபடுத்துவர் பேராசிரியர்.

**இலக்கண நயங்கள்**

பேராசிரியரின் உரைநடையில் காணப்படும் சிறப்புப் பண்புகளைக் குறிப்பிடுமிடத்து, 'சொற்களுக்கு உண்மைப் பொருள் கண்டு கூறுதல், பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ளுதற்கு இன்றியமையாத இலக்கணக் குறிப்புக்களையிடாமற் சுட்டிச் செல்லுதல் முதலிய பண்புகள் அவர் நடையைச்

சிறப்பித்து நிற்கின்றன என்பார் அறிஞர் வி.செல்வநாயம், ஈண்டு, பேராசிரியர் உரையுள் காணலாகும் இலக்கண நயங்களுக்கு இரு சான்றுகளைக் காண்போம்.

"வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉ என அவையும் அன்ன"

(பொருள். 423)

என்பது செய்யுளியலில் வரும் ஒரு நூற்பா. இந்நூற்பாவின் உரை விளக்கத்தில் பேராசிரியர் காட்டியுள்ள அரிய இலக்கண நயம் வருமாறு: "வாய் -வாய்மொழி; உறை-மருந்து. வாயுறைபெயன்பது, சொன்மருந்தெனப் பண்புத் தொகையாம்; இனி வாய்க்கட்டோன்றிய மருந்தென வேற்றுமைத் தொகையுமாம். மருந்து போறலின் மருந்தாயிற்று அவையடக்கியல் - அவையை வாழ்த்துதல் அவையடக்குதலென்பது வினைத்தொகை; தானடங்குதலாயின் அடங்கியலெனல் வேண்டும். அஃதாவது, அவயைத்தாடங்குமாற்றால் இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல். நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த ஒருவரே இத்தகைய நெஞ்சை அள்ளும் இலக்கண நயங்களை எடுத்துக்காட்ட முடியும்.

**கருத்து நயங்கள்**

'சிறிது வருந்தி முயன்று நல்ல தமிழறிவு பெற வேண்டும் என்று கற்பார்க்குத் தொல்காப்பியவுரைகள் அமுதசுரபிகளாகும்" என்பார் அறிஞர் வ.சுப.மாணிக்கம், தொல்காப்பிய உரையாசிரியர்கள் அரிதின் முயன்று தம் உரைகளின் வாயிலாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் பல எல்லாம் வல்ல இறையைப் போல் பழமைக்கும் பழமையான பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் பெற்றியினைக் காண்கிறோம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றியவையாக இருந்தாலும், அக்கருத்துக்கள் இன்றைய தலைமுறையினர்க்கும் அறிவூட்டவும் வழி காட்டவும் காண்கிறோம். இனி, பேராசிரியர் உரையுள் காணலாகும் கருத்து நயங்கள் சிலவற்றைக் காண்போம்.

"மரபே தானம்
நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன"

(பொருள். 392)

என்பது மரபினை விளக்கும் செய்யுளியல் நூற்பா. இந்நூற்பாவின் விளக்கத்தில் பேராசிரியர், செய்யுள் செய்வோர் பின்பற்ற வேண்டிய அடிப்படையானதொரு மரபினை–நெறியினை-வலியுறுத்துகின்றார். சொல்லும் பொருளும் அவ்வக்காலத்தார்

வழங்குமாற்றனே செய்யுள் செய்க' என்பது செய்யுள் செய்வோர்க்குப் பேராசிரியர் கூறும் அறிவுரை. "ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து இலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய, அதோளி இதோளி உதோளி (கலி.116) எனவுங் குயின் எனவும் நின்ற இவை ஒரு காலத்துளவாகி இக்காலத்திலவாயின. இவை முற்காலத்துளவென்பதே கொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்த காலத்துளவாயினுங் கடைச் சங்கத்தார் காலத்து வீழந்தமையிற் பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்திலர்.

'நகைச்சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறும் தமிழுங் குருடரும் முடவருஞ் செல்லுஞ் செலவும் பித்தருங் களியருஞ் சுற்றத்தாரை இகழ்ந்தாருங் குழவி கூறும் மழலையும் போல்வன' (பொருள். 249) என்றும் 'நகையென்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும் அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்பது (பொருள். 251) என்றும் பேராசிரியர் மெய்ப்பாட்டியல் உரையில் நகைச்சுவை பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் என காலத்திற்கும் பொருந்தி வருவனவாகும். இங்ஙனம் பல குறியீடுகளுக்கு நயமாகவும் நுட்பமாகவும் பொருள் சொல்லும் திறத்தைப் பேராசிரியரிடம் சிறப்பாகச் காணலாம்.

தொல்காப்பியர் மொழிபெயர்பை நூல் வகையுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். 'மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்' (பொருள்.652) என்பது அவர் வழங்கும் தொடர் பேராசிரியர் இத்தொடருக்கு உரை விளக்கம் எழுதும் போது அடிப்படையான மொழிபெயர்ப்பு நெறிகளைக் சுட்டிக்காட்டுகின்றார். மொழிபெயர்த்தென்பது பிற பாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்வது அதுவுந் தமிழி நூலுள் வழிநூற்கு மரபாமென்றவாறு அதர்ப்படவென்பது, நெறிப்படவென்றவாறு; நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும்; தொகுத்தும் விரித்தும் தொகைவிரியாகவுஞ் செய்ததனாற் பயமில்லைத் தமிழர்க்கும் ஆரியர்க்குமென்பது. மொழிபெயர்த்தெனவே, அருள் பிறழாமை பெற்றாம்" என்னும் அவரது கருத்து விளக்கம், மொழிபெயர்ப்பு ஒரு கலைத்துறையாகி வளர்நது வரும் இந்நூற்றாண்டிலும் ஏற்றுக்கொள்ளத்தக்காகும்.

**அரிய நயங்கள்**

உரையாசிரியர் என்ற நிலையில் பேராசிரியர் பெற்ற கிரேக்க, ரோம நாட்டுப் புகழினும் உயர்ந்தது" என்பர் அறிஞர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை. பிறர்காண்டற்கரிய இலக்கிய நயங்களையும் உண்மைகளையும் கண்டு, அவற்றை நுண்ணுணர்வுடையோர் நெஞ்சை அள்ளும் வகையில் சீரிய செவ்விய நடையில்

வெளியிட்டிருப்பதே பேராசிரியர் தமிழ் மொழிக்குச் செய்த பெருந்தொண்டாகும். பேராசிரியரின் உரை நயங்களுள் அவரது முத்திரை பதிந்துள்ள இரண்டினை ஈண்டுக் காண்போம்.

“புலியன்ன மறவ’ன்னபது ‘வினையுவமம்’ அது பாயமாறே பாய்வனென்னுந் தொழில் பற்றி ஒப்பித்தமையின்; அற்றன்றித் தோலும் வாலுங் காலும் முதலாகிய வடிவும் ஏனை எண்ணமும் பயனும் ஒவ்வாவென்பது; ஒழிந்தவற்றிற்கும் இஃத்தொக்கும்” (பொருள். 276) என்பது உவமவியலின் முதல் நூற்பா உரையில் பேராசிரியர் காட்டும் அரிய நயம்.

“மரபென்ற பொருண்மை என்னையெனின், கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ் செய்யுளியலுண் (செய்யுளியல் 1-உரை) மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமன்றி, இருதிணைப் பொருட்குணனாகிய இளைமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும், அவை பற்றி உலகியன் மரபும், நூன்மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது. மற்ற பொருள்களின் இளைமை பற்றி வரும் மரபு கூறினான் மூலம் பற்றி வரும் மரபு கூறானோவெனின்” அது வரையறையின் மையிற் கூடறானென்பது (பொருள்.556) என்பது மரபியலின் முதல் நூற்பா உரையில் பேராசிரியர் கூறும் அரிய நயம்.

**முடிவுரை**

‘இன்று நடைபெற்று வரும் தமிழாராய்ச்சியில் உரையாசிரியர்கள் தகவிடம் பெறவில்லை... செய்யுட்கவி பிரித்துப் படிக்கக் கூட வல்லாத படி நற்றழிடரிடை.........என்ற ஒன்று வளர்ந்து வரும் இந்நாளில் உரையாசிரியர் ஒதுக்கிடம் பெறுவது இறும்பூதன்று. ஒழிவிடம் ..............வில்லை என்பது மகிழ்ச்சிக்கு உரியது’ என்னும் அறத் கருத்தினை மனத்தில் இருத்திய பண்டை உரையாசிரியர்களைப் பயில்வோம் சிறந்த தமிழறிவும் சீரிய தமிழ் வும் பெறுவோம்.

# கூறு 6

## நச்சினார்க்கினியர் - சீவகசிந்தாமணி உரை

நச்சினார்க்கினியர் இலக்கணம் இலக்கியம் ஆகிய இருவகை நூல்களுக்கும் உரை எழுதிய சான்றோர். தலை சிறந்த தமிழ் நூல்கள் பலவற்றிற்கு உரை கண்ட, உரையாசிரியர்களுள் மிகச் சிறந்தவர் என்ற பெருமையுடன் மேலோங்கி நிற்பவர் பலநூறு பாடல்களை மனப்பாடமாகக் கொண்ட திறனும் பிறழாத நினைவாற்றலும் கலைச்சுவையுடன் அழகிய உரைநடை எழுதும் வன்மையும் கொண்டவர். பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் சங்க இலக்கியத்துள் பத்துப்பாட்டு கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை, குறுந்தொகையில் இருபது பாடல்கள் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி ஆகிய சிறந்த நூல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார். இலக்கண இலக்கியங்களையே அல்லாமல் ஏனைய கலைகளிலும் நிரம்பிய அறிவு பெற்றவர் வடமொழியிலுள்ள சிறந்த நூல்களில் தோய்ந்து மகிழ்ந்துள்ளார். நூல் எதுவும் இயற்றவில்லை. பண்டைத் தமிழ் நூல்களுக்கு உரை மாத்திரமே எழுதினார்.

பாண்டிய நாட்டின் தலை நகரமாகிய மதுரையில் வாழ்ந்தார். ஆசிரியத் தொழில் செய்தார். பாரத்துவாச கோத்திரத்தவர். பார்பன மரபினர் சைவ சமயக்கருத்துக்களை நன்கு உணர்ந்தவர். சைவ சமய நூல்களை நன்கு பயின்றுள்ளார். நச்சினார்க்கினியர் ஸ்மார்த்தர் என்பதற்கு அத்வைதக் கொள்ளையினர் என்பதற்கும் இவரது உரையில் சான்று உண்டு, இவரது காலம் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியாகும். சிறந்த பல நூல்களுக்கு அரிய உரை இயற்றிய இப்பெரியாரைப் புலவர் பெருமக்கள் பெரிதும் போற்றிப் புகழ்கின்றனர். ‘உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க் கினியர்’ என்று இலக்கணக் கொத்தின் ஆசிரியரும் ‘அமிழ்தினும்’ இனிய தமிழ் மடவரல் செய் அருந்தவத்தின் பெரும்பயனாக அவதரித்து அருளியவர்’ என்று டாக்டர். உ.வே.சாமிநாத ஐயரும் செந்தமிழ் மாமுகில் வள்ளல்’ என்று மறைமலையடிகளும் இவரைப் புகழ்கின்றனர். இவர் முதன் முதலில் உரை இயற்ற எடுத்துக் கொண்ட நூல் சீவசிந்தாமணி.

**உரையாசிரியர் வரலாறு:**

‘செந்தமிழ் மாமுகில் வள்ளல்’ என்றும், ‘அமிழ்தினும் இனிய தமிழ் மடவரல் செய் அருந்தவத்தின் பெரும் பயனாக அவதரித்து அருளிய மாபெரும் வள்ளல்’ என்றும், ‘சொல்லார் மதுரை நச்சினார்க்கினியன்’ என்றும் நல்லிசைப் புலவர் பெருமக்களால் நெஞ்சாரப் பாராட்டப் பெற்றவர்.

**பெயர்**

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர், திருநாகேச்சரப் பதிகத்தில்,

“இச்சையன் மலர்கள் தூவி இரவொடு பகலும்தம்மை
நச்சுவார்க் கினியர்போலும் நாகவீச் சரவனாரே”

(4.66.1)

என்று பாடியுள்ளார். இதன்கண் வரும் ‘நச்சினார்க்கினியர்’ என்னும் தொடர், இறைவன் அடியார்க்கு அடியான் என்பது போல், ‘நச்சுவார்க்கு (விரும்புவார்க்கு) இனியன்’ என்றும், ‘நச்சினார்க்கு’ (இறந்த காலத்தது) இனியன்’ என்றும் வழங்கப்பட்டிருக்கலாம். கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிவஞான முனிவர் தம் ‘காஞ்சிப் புராண’த்துள் ‘நச்சினார்க்கினியாய் போற்றி! (சத்ததானப் படலம், 11) என்று இறைவனைப் பாடிப் பரவியுள்ளார்.

**சமயம்:**

நச்சினார்க்கினியர் பெயராலும் கொள்கையாலும் சைவ சமயத்தினர். அவர் தொல்காப்பிய எழுத்ததிகார உரையில், ‘திருச்சிற்றம்பலம்’, பெரும்பற்றப் புலியூர்’ என்ற சிவத்தலப் பெயர்களை ஆறெழுத்து ஒரு மொழிக்கும். ஏழெழுத்து ஒரு மொழிக்கும் மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் அவர் திருமுருகாற்றுப்படை உரையில் பல இடங்களில் திருவாசகம், திருக்கோவையார், திருவுலாப்புறம் முதலிய நூல்களிலிருந்து இலக்கண இலக்கியப் பொருள்களுக்கும் தத்துவப் பொருள்களுக்கும் தக்க மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார்.

“தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க்கினியன்.”

என வரும் உரைச்சிறப்புப் பாயிரச் செய்யுட் பகுதியாலும் அவரது சமயக் கொள்கை சைவம் என்பது தெளிவாகும்.

**காலம்:**

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் ஆகிய உரையாசிரியர்களை நச்சினார்க்கினியார் தம் உரையுள் குறிப்பிட்டுள்ளார். இவர்களுள் இளம்பூரணர் கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்; சேனாவரையரும் பேராசிரியரும் கி.பி.13ஆம்

நூற்றாண்டைச் சார்ந்தவர்கள்' எனவே நச்சினார்க்கினியர் கி.பி. 13ஆம்நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் ஆகின்றார்.

நச்சினார்க்கினியர் தம் திருமுருகாற்றுப் படை உரையில் பரிமேலழகர் கொள்கையினை மறுத்து எழுதியுள்ளார். பரிமேலழகர் காலம், கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். ஆதலின், நச்சினார்க்கினியர், பரிமேலழகர்க்குக் காலத்தால் பிற்பட்டவர் ஆகின்றார்.

**உரை வகுத்துள்ள நூல்கள்**

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம், முத்தோர் பாடியருள் பத்துப்பாட்டு, கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை, நல்ல குறுந்தொகையில் இருபது பாடல்கள், முத்தி நூல் எனச் சிறப்பிக்கப்படும் சீவக சிந்தாமணி ஆகியவற்றிக்கு நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார்.

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையுள் ஐஞ்ஞானகும் - சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தாமணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே."

பழம்பாடல், அவர் உரை கண்ட நூல்களைக் குறிப்பிடுகின்றது. அவற்றுள், மெய்ப்பாட்டியல், உவமயியல் மரபியல் என்னும் தொல்காப்பியப் பொருளதிகார இயல்களுக்கும் குறுந்தொகையின் இருபது பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் எழுதிய உரைப் பகுதிகள் இன்று கிடைக்கவில்லை.

தமிழ் உரையாசிரியர் உலகில் நச்சினார்க்கினியர் நனிபெருஞ் சிறப்புடன் விளங்குகிறார். அவர், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய இலக்கண உரையாசிரியரும், பத்துப்பாட்டு, குறுந்தொகை, கலித்தொகை, சீவக சிந்தாமணி ஆகிய இலக்கியங்களுக்கு உரை வகுத்த இலக்கிய உரையாசிரியராகவும் ஒருங்கே விளங்குகிறார் உரைப் பணியில் நச்சினார்க்கினியரின் தொண்டு சாலப்பெரிது. இவர் ஒருவரே பல்லும் நாவும் போல, இலக்கண பேராசிரியராகவும் இலக்கிய உரையாசிரியராகவும் இணைந்து விளங்கும் பெருமகன் என நச்சினார்க்கினியரின் உரைத் தொண்டினை நெஞ்சாரப் பாராட்டுகின்றார். அறிஞர்.வ.சுப.மாணிக்கம், 'இலக்கண இலக்கியக் களஞ்சியம் என்று நச்சினார்க்கினியரைக் கூறுவது பொருந்தும்.

**உரை நெறிகள்**

செய்யுள் உரைநடைப்படுத்தல், பழமொழி ஆட்சி, இவர்க் காரணம் கூறல், அருஞ்சொற்பொருள் சுட்டல், உலகியல், இலக்கிய, இலக்கண வழக்குகளைக் கூறிச் சொற்பொருளைத் தெளிவுபடுத்தல், பல்கலைப் புலமையால் கருத்திற்கு அரண் கூறல், மேற்கோள் கூறி நிறுவுதல், உவமை விளக்கல், செயற்கையாகக் கொண்டு கூட்டிப் பொருள் கூறல், இடைச் சொற்களை இடம் மாற்றிக் கூறிப் பொருள் விரித்தல், வைப்பு முறை காட்டல், கதைப் போக்குகளை அறிந்து நயம் சுட்டல் முதலாயின நச்சினார்கினியரின் உரை நெறிகள் எனலாம். இக் கூறுகளை இது உரை எழுதிய எல்லா நூல்களிலும் காணலாம் என்பார் அறிஞர். இ.சுந்தரமூர்த்தி.

**சீவகசிந்தாமணி உரை**

நச்சினார்க்கினியர் தம் புலமைகொண்டு உழுது பயன் கண்ட விளைநிலங்களில் சீவக சிந்தாமணியும் ஒன்று சிந்தாமணி என்னும் காப்பியப் பொருங்கோயில், நச்சினார்க்கினியர் உரை என்னும் நந்தா விளக்கால் பொலிவு பெறுகின்றது. அக்கோயிலின் அழகு, விளக்கின் சுடரொளியால் மிகுகின்றது. காப்பியப் பெருங்கோயினுள் நுழைந்து காண்பவர் கண்களை நச்சினார்க்கினியர் ஏற்றி வைத்த சுடர்விளக்கு கவர்ந்து பேரின்ப மூட்டுகின்றது.

சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் இயற்றியுள்ள உரையின் திறத்தை உரைச் சிறப்புப் பாயிரம்.

திருத்தகு முனிவன் கருத்துஇது என்னப்
பருப்பொருள் கடிந்து கொருள்தொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை உரைத்தும்

என்று போற்றுகின்றது.

தேவர் தந்த காப்பியச் சிந்தாமணியைச் சிறந்த இலக்கியமாய் - கலைத்திறன் மிக்க காப்பியமாய்க் கண்டு மகிழ்ந்த நச்சினார்க்கினியரின் உரைத்திறன் பலமுறை கற்றுப் போற்றத் தக்கதாகும். சிந்தாமணி, நச்சினார்க்கினியரால் பட்டை தீட்டப் பெற்று ‘வண்ணச் சுடரொளியைப் பலவகையாய் வீசி மகிழ்விக்கின்றது. இவ்வுரை விளக்கம் தேவரின் புலமை மாண்பை நன்கு வெளிப்படுத்துகின்றது. தேவரின் புலமை வளத்தை அளந்து காணும் திறன் நச்சினார்க்கினியரிடம் உள்ளது.

சிந்தாமணி உரை அரங்கேறியதைப் பற்றிப் புலவர் பெருமக்களிடையே ஒரு கதை வழங்கி வருகின்றது. சமணர்களின் காப்பியமாகிய சீவக சிந்தாமணிக்கு

முதன் முறை உரை இயற்றி நச்சினார்க்கினியர் சமணப் பெரியவர்களிடம் சென்றபோது அவர்கள் அவ்வுரையினை வாங்கிப் படித்தப் பார்த்துச் சினமுற்று, “நச்சினார்க்கினியின் என்னும் கார் எருமை, சிந்தாமணி என்னும் தாமரைத் தடாகத்தினுள் புகுந்து குடைந்து, தாமரை மலர்களைக் கசக்கி எறிந்து பாழ்படுத்தி விட்டது.!” என்றனராம்.

மறுமுறை வேறுரை திருத்தமாக எழுதிச் சென்று சமணச் சான்றோர்களிடம் காட்டியோது பெரிதும் மகிழ்ந்து. “நச்சினார்க்கினியர் என்னும் வெள்ளையானை சிந்தாமணி என்னும் தாமரைப் பொய்கையினுள் நுழைந்து அழிகிய மலர்களைத் தன் கையால் பறித்துக் தலைமீது வைத்துக் கரைக்கு இனிது வந்து சேர்ந்தது!” என்றனராம்.

நச்சினார்க்கினியர் இருமுறை உரை எழுதினார் என்ற கருத்தை டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் உடன்படுகின்றார். தமக்கு இருவகையான உரை விளக்கங்கள் அமைந்த ஏட்டுப் பிரதிகள் கிடைத்தன என்று கூறி, உரை இரு வகையாக அமைந்திருப்பதற்கரிய காரணத்தைப் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்.

> “ஜைன அன்பர்களுடைய பழக்கத்தால் ஏட்டுப் பிதிகள் இரண்டு வகையாக இருந்ததற்குக் காரணம் தெரிந்து கொண்டேன். நச்சினார்க்கினியர் முதலில் சிந்தாமணிக்கு ஓர் உரை எழுதினாராம். பிறகு அதை ஜைனர்களிடம் படித்துக் காட்டிய போது சம்பிரதாய விரோதமாகச் சில பகுதிகள் உள்ளன என்று சொன்னார்களாம். அதனால் அவர் தம்மை ஒரு ஜைனராகச் சொல்லிக் கொண்டு சிற்றாம்பூர் என்னும் இடத்திலுள்ள ஜைன மடத்திற்கு வந்து சில காலம் தங்கி ஜைன நூல்கைளையும், ஜைனசம்பிரதாயங்களையும் கற்றுச் சென்று மீட்டும் புதிய உரையை எழுதினாராம். விசேஷ உரையுடன் இருக்கும் பிரதியிலுள்ளது பின்பு எழுதிய உரை என்று தெரிய வந்தது.

(என் சரித்திரம் (1950) பக்கம் 741)

நச்சினார்க்கினியர் அரிதின் முயன்று எழுதிய சிந்தாமணி உரையைக் காலந்தோறும் அறிஞர்கள் போற்றி வருகின்றனர். ‘பவர்’ என்னும் ஆங்கிலப் பேராசிரியர், சிந்தாமணி உரைச் சிறப்பையும், நச்சினார்க்கினியர் புலமை மாண்பையும் பின் வருமாறு புகழ்ந்துள்ளார்:

“ஐரோப்பிய இலக்கியத் திறனாய்வாளர்களின் விளக்கத்தைப் போல, இவர் உரைப்போக்கு அமைந்துள்ளது. செய்யுளின் பொருளை விளக்கி இலக்கணத்தின் தனித் தன்மைகளைக் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியச் சூத்திரங்களைத் தம் உரை முழுதும் மேற்கோள் காட்டுகின்றார். சிறப்பான சொற்றொடர்களை விளக்குகின்றார். தம் காலத்தில் வழங்கி வந்த பல பாட வேறுபாடுகளைத் தருகின்றார். இவரது உடைநடை செறிவான போக்கில் உயர்வான மொழியில் அமைந்துள்ளது. பாகுபாடு செய்யும் பேராற்றலை இவரது படைப்பில் காணலாம்.”

**இலக்கிய நோக்கு:** நாச்சினார்க்கினியர், சிந்தாமணியைச் சிறந்த இலக்கியமாகக் கருதிப் போற்றியுள்ளார். நூலின் தொடக்கத்தில்-முதற்பாட்டு உரையில், “யாமும் இவ்விலக்கியம் இனிது முடிதற் பொருட்டு அவன் திருவடிகளை வணங்குவோம் என்றார் என்க” என்றும், நூலின் இறுதியில் (3142), “இவ்விலக்கியம் இடுக்கண் இன்றி இனிது முடிந்த மகிழ்ச்சியான், மீண்டும் வணங்குகின்றார்” என்றும் கூறியுள்ளார்.

சிந்தாமணியை ஆழ்ந்து கற்று, கலையழகில் ஈடுபட்டு இலக்கியச் சுவையில் தம்மை மறந்து ஈடுபட்டவர் நச்சினார்க்கினியர். ஆதலின் சொற்களுக்குப் பொருத்தமான பொருளை உரைக்கின்றார்; பாட்டில் அமைந்திருக்கும் நுண்ணிய கருத்துகளை வெளிப்படுத்துகின்றார்; உவமைகளின் பொருத்தத்தை விளக்குகின்றார்; இலக்கிய மரபுகளைப் பேணிக் காக்கின்றார்; இலக்கிய மரபுகளைப் உலகியலை உணர்த்தி நயவுரை எழுதுகின்றார்.

**சொற் பொருள்** : சிந்தாமணியில் உள்ள சொற்களும் சொற்றொடர்களும் நச்சினார்க்கினியர் விளக்கத்தால் சிறந்த பொருளை உணர்த்துகின்றன. அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன.

உயர்மிக்க தந்தை (473)-பிள்ளை உயர்ச்சி மிகுதற்குக் காரணமான தந்தை.
மன்னுடை வேல் (1200)-அரசர் கெடுதற்குக் காரணமாக வேல்.
வாக்கு அமை உரு (1258)-கவிகளால் புகழ்தல் ஆகா வடிவு
நன் குரங்கு (1997)-பொல்லாங்குக்கு நன்றான குரங்கு.

இரும்பு உண்டு மிகுந்த மார்பு (2281)-இரும்பு (வாள் வேல் முதலியன) மேய்ந்து பசி தீர்ந்து மிகுத்து வைத்த மார்பு.

**நுண்கருத்து:** பாட்டில் அமைந்துகிடக்கும் நுண்ணிய கருத்துகளை வெளிப்படுத்துவது நச்சினார்க்கினியர் இயல்பு. அம்மி மிதந்து ஆழ்ந்து சுரை வீழ்ந்தது” (495 என்பதற்கு, ஆழ்தற்குரிய அம்மி மிதந்து மிதத்ததற்குரிய சுரை

ஆழ்ந்து வீழ்ந்தது என்றது, உயர்ந்தோர் வாழாதே தாழ்ந்தோர் வாழ்ந்ததனை'' என்று விளக்கம் எழுதுகின்றார்.

குணமாலையும் சுரமஞ்சரியும் தந்த சுண்ணப் பொடிகளில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கச் சீவகன் அழைத்த 'சுரும்பு வண்டு தேனீ மிஞிறு (892) ஆகிய நால்வகையான 'தாதுண் பறவை'களை நச்சினார்க்கினியர், வேறுபாடு காட்டி விளக்குகின்றார். அவற்றிற்குச் செவியுணர்வு உண்டா என்ற வினாவை எழுப்பிப் கொண்டு விடை கூறுகின்றார். இங்கே அவருடைய நுண்மாண் நுழைபுலம் வெளிப்படுகின்றது.

நந்தட்டன், சீவகனைப் பேணிக் காக்கும் முறையைப் பதுமுகுனுக்கு உரைக்கும்போது, ''பகைவர்கள் சீவகனைக் கொல்ல, சூடும்மாலை பூசும்சாந்து உடுக்கும் உடை அணி ஆகியவற்றில் நஞ்சு கலந்து விடுதல் கூடும். ஆதலின் அவற்றை அன்னத்தின் கண்ணிலும், சக்கரவாகப் பறவையின் முகத்திலும் ஒற்றி ஆராய்ந்து மேற்கொள்க சீவகனுக்கு உண்ணத் தரும் நீரையம் அமுதையும் முன்னதாகக் கருங்குரங்கிற்கு இட்டு ஆராய்க'' என்கின்றான் (1893). இப் பகுதியை அறிந்து கொள்ள நச்சினார்க்கினியர் தரும் விளக்கமே உதவி செய்கின்றது. அன்னம் கண் குருதிகாலும்; சக்ரவாகம் முகங்கடுக்கும்; கருங்குரங்கு உண்ணாது'' என்ற உரை விளக்கம் இன்றேல் பாடலின் நுண்கருத்து வெளிப்படாது.

**உவமை விளக்கம்** : உவமைகளின் பொருத்தத்தை இவர் நன்கு விளக்குகின்றார். எளிய உவமைகளும் இவர் தரும் விளக்கத்தால் சிறப்படைகின்றன. உவமை விளக்கம் சிலவற்றைக் காண்போம்:

சச்சந்த மன்னனைக் 'களிறு அ(ன்)னான்' (200) என்று சிறிய உவமையால் குறிப்பிடுகின்றார் தேவர். நச்சினார்க்கினியர், மதச்செருக்கால் (யானை), பாகன் தோட்டியை நீவுமாறு போலக் காமக்களிப்பால், தன் அமைச்சர் கூற்றைக் கடத்தல் நோக்கி 'களிறு அனான்' என்றார்'' என்று விளக்கம் தருகின்றார்.

கட்டியங்காரண் வயப்பட்ட சச்சந்தன் படையைத தேவர்

'உப்புடைய முந்நீர் உடன்று கரை கொல்வது
ஒப்புடைய தாளை' (280)

என்று உவமையுடன் சிறப்பிக்கின்றார். அவ்வுவமையை, தனக்கு வேலியாகிய கரையைக் கடல் தானே கொல்லுகின்றாற்போல் தனக்குக் காவலாகிய அரசனைப் படைதாமே கொல்லுகின்றது என்றார்'' என்று விளக்குகின்றார்.

‘கந்துக்கடன் மாரி போலவும் கற்பகம் போலவும் கொடை தந்தான்’ என்று தேவர் கூறிய உவமைகள் (865), “கரா வேண்டாமைக் கொடுத்தலும், கற்பகம் வேண்டக் கொடுத்தலும் இயல்பு” என்ற விளக்கத்தால் சிறப்படைகின்றன.

சீவகனை ‘ஈயின்றி இருந்த தேன்’ என்ற தேவர் குறிப்பிடுகின்றார் (712). உரையாசிரியர், “இதற்கு முன்பு ஒரு மகளிரும் இவனை நுகராது இருந்தமை உணர்ந்து” அங்ஙனம் கூறியதாகச் குறிப்பிடுகின்றார்.

படநாகம் தோல் உரித்தாற் போல் துறந்து

என்ற உவமைக்கு (1546) “படநாகம் தோல் உரித்தாற் போல அகமும் புறமும் துறந்து” என்றும், “நாகம் தோல் உரிக்கும் பொழுது நஞ்சும் காலும்” என்றும் விளக்கம் தருகின்றார்.

இலக்கணையைச் சீவகன்,

கரும்பே தேனே அமிர்தே
காமர் மணியாழே
அரும்பார் மலர்மேல் அணங்கே
மழலை அன்னமே
கரும்பார் சோலை மயிலே
குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய்
பூவாய் பிணைமானே (2452)

என்று பலவாறு பாராட்டுகின்றான். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதும் விளக்கம்பலமுறை கற்று இன்புறத் தக்கதாய் உள்ளது:

‘கணவற்கு மெய்ம் முழுதும் இனிதாய் இருத்தலின் கரும்பு நல்லார் உறுப்பெல்லாம் கொண்டு இயற்றலின் தேன். இவ்வுலகில் இல்லாத மிக்க சுவையும் உறுதியும் கொடுத்தலின் அமிர்து. காம வேட்கையை விளைவித்து இனிய பண் தோற்றலின் மழலையை யுடையதொரு யாழ். கணவற்குச் செல்வத்தைச் கொடுத்தலின் திரு.நடையால் அன்னம். சாயலால் மயில். காலமின்றியும் கேட்டார்க்கு இன்பம் செய்தலின் குயில். மன்னன் மகளே என்றல் புகழன்மையின் மன்னன் பாவாய் என்றது அவன் கண்மணிப் பாவை என்பது உணர்த்திற்று; இனி இவள் கொலிப் பாவையல்லன், மன்னன் பாவை என்றுமாம், சேடியர் கற்பித்த கட்டளை தப்பாமற் கூறலின் பூவை, நோக்கத்தால் மான்.”

**உலகியல் உரைத்தல்:** பல பாடல்களை ஒரு தொடராக்கி உரை எழுதுவது நச்சினார்க்கினியர் பண்பு இவ்வாறு எழுதுவதில் சிறந்த பயன் இருப்பதாய் இவர் கருதுகின்றார்.

பதுமையைப் பாம்பு தீண்டிய செய்தியை, சீவகனும் உலோக பாலனும் இருக்குமிடத்திற்கு ஒருவன் வந்து கூறுகின்றான். இச்செய்தியைத் தேவர் எட்டுப் பாடல்களில் (266-1273) அமைத்துள்ளார். பதுமையின் வரலாறு அழகு ஆகியவற்றை முதலில் கூறிய பின், அவள் சோலையில் முல்லைக் கொடி வளர்த்த செய்தியை உரைத்து, அது பூத்த போது, மலர் கொய்ய அவள் செல்ல அங்கே பாம்பு தீண்டிற்று என்று வந்தவன் கூறுவதாகத் தேவர் பாடியுள்ளார். பாடல்கள் இருக்கும் அமைப்பிலேயே பொருள் எழுதாமல் நச்சினாக்கினியர், அப்பாடல்களை எல்லாம் ஒரே தொடராக இணைத்துப் பாம்பு கடித்த செய்தியை முதலில் கூறி மற்றச் செய்திகளைப் பின் கூறுவதாய் அமைத்துள்ளார். இவ்வாறு செய்ததற்குக் காரணம் கூறும்போது, இங்ஙனம் ‘மாட்டு’ உறுப்பாகக் கூறாது செவ்வனே கூறின் பாம்பு கடித்தமை கடுகக் கூறிற்று ஆகாமை உணர்க’’ என்று உலகியலை நினைவூட்டி விளக்குகின்றார்.

**விளக்காத கதைகள்:**

பஞ்சதந்திரக் கதைகளில் சில, தமிழ்க் காப்பியங்களில் இடம் பெற்றுள்ளன. கீரியைக் கொன்ற பார்ப்பனி கதை சிலப்பதிகாரத்திலும் (15:54-75), ஆண் புறாவைக் கொன்று கையில் வைத்துக்கொண்டு காட்டில் மரத்தின் கீழ்க் காற்றும் மழையில் நனைந்து பசியுடன் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த வேடனின் குளிரைப் போக்கக் கொள்கிக்கட்டை ஒன்றைத்தந்து, அவன் பசியைப்போக்கத் தானும் நெருப்பில் வீழ்ந்து மாண்ட பெண் புறாவின் கதை கம்பராமாயணத்திலும் இடம் பெற்றுள்ளனர்.

இத்தகைய கதைகள் சீவகசிந்தாமணியிலும் வருகின்றன.

கடத்திடைக் காக்கை ஒன்றே
ஆயிரங் கோடி கூகை
இடத்திடை அழுங்கச் சென்(று) ஆங்(கு)
இன்னுயிர் செகுத்த தன்றே
முழையுறை சிங்கம் பொங்கி
முழங்கிமேற் பாய்ந்து மைதோய்
வழையுறை வனத்து வன்கண்
நரிவலைப் பட்ட தன்றே

இவை இரண்டும் பஞ்சதந்திரக் கதைகளை நினைவூட்டுகின்றனர். ஆனால் இரண்டாவதாக உள்ள கதையில் சிறிது மாறுபாடு உள்ளது. ‘சிங்கத்தைக் கொன்ற முயல்’ கதையைப் பஞ்சதந்திரம் கூறுகின்றது. ஆனால் சிந்தாமணியோ சிங்கத்தை நரி கொன்றதாகக் குறிப்பிடுகின்றது. பஞ்சதந்திரக் கதைகளை ஒத்த வேறு சில கதைகள் தமிழ் நாட்டில வழங்கி வந்தனவோ என்ற ஐயம் எழுகின்றது. தந்திரத்தில் வல்லதாய் - சூழ்ச்சி செய்து பிறரைக் கொல்வதில் தேர்ந்ததாய்க் குள்ளநரி தமிழ்நாட்டில கதைகளில் வருகின்றது. சிங்கத்தைச் சூழ்ச்சியால் நரி கொன்ற கதை ஒன்று அக்காலத்தில் வழங்கி இருக்கலாம். அக்கதையை உண்மை வடிவத்தை அறியத்தக்க சான்றுகள் இல்லை.

தேவையற்ற இடங்களில் எல்லாம் பொய்க் கதைகளைப் புனைந்து கூறும் நச்சினார்க்கினியர், இவ்விரு கதைகளையும் சிறிது விளக்கிக் கூறி இருக்கலாம். நாம் அவரிடமிருந்து இக்கதைக்கு விளக்கம் எதிர்ப்பார்ப்பது தவறாகாது. அவர் உரையைப் புரட்டிப் பார்த்து, இக் கதைக்கு அவர் விளக்கம் எழுதாமை கண்டு நாம் ஏமாற்றம் அடைகின்றோம்.

## காப்பியநோக்கு:

நச்சினார்க்கினியர் சிந்தாமணியைக் காப்பியமாக நோக்கி, உரைகண்டுள்ளார். காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுள் என்ற பெயரால் வழங்கி, அதன் இயல்புகளை முதற்பாடலின் உரையிலேயே பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> ‘‘மெல்லென்ற சொல்லான் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் விழுமிய பொருள் பயப்பப் பழையதொரு கதை மேல் கொச்சகத்தால் கூறின். அது தோல் என்று (தொல்காப்பியர்) கூறினமையின் இச்செய்யுள் அங்ஙனம் கூறிய தோலாம் என்றுணர்க.’’

காப்பியத்தின் கதைக்குரிய தலைவனை, ‘‘சீவகனை முற்கூறினார். கதைக்கு நாயகன் ஆதலின்’’ (6) என்று நூலின் தொடக்கத்திலேயே அறிமுகப்படுத்துகிறார்.

திருத்தக்க தேவர், சீவகனைத் தன்னேரியல்லாத தலைவனாய்ப் படைத்துள்ளார். அவன் இசைப் போட்டியில் காந்தருவத்தையை வெல்கின்றான். தன்னேரில்லாத தலைவனாகிய சீவகன் ஒரு பெண்ணை வென்றான் என்று கூறுவதைத் திருத்தக்க தேவர் விரும்பவில்லை. ஆதலின் அவர் சீவகனுக்குக் காந்தவதத்தை தோற்றான் என்று மிகவும் நயம்படக் கூறுகின்றார்:

> விஞ்கைக்கு இறைவன் மகள்

விணையில் தோற்றுவாறும் (11)

தோற்றனள் மடந்தை நல்யாழ் (702)

தோன்றலுக்கு (735)

மாதர் இசை தோற்று இருந்தனனே

என்று மூன்று இடங்களிலும் மறவாமல் தேவர் காந்தவருவதத்தை தோற்றாள் என்றே கூறுகின்றார். ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்பதில் வல்லவராகிய நச்சினார்க்கினியர், ''ஒரு மகளை வென்றான் என்றல் இவன் தலைமைக்கு இழிவு என்று அவள் செய்தியாகக் கூறினார்'' (11) என்று கூறுகின்ார்:

சீவகனைக் கருணை மறவனாகத் தம் காப்பியத்தில் காட்டுகின்றார் தேவர் சீவகன், வேடர்கள் கவர்ந்து சென்ற ஆனிரையை மீட்கப் போரிட்டு அவர்களைக் கொல்லாமல் அச்சுறுத்தியே நிரையை மீட்கின்றான். நூலாசிரியரின் உள்ளக் கருத்தை அறிந்து கொண்ட உரையாசிரியர் போரின் தொடக்கத்தைக் கூறும் பாட்டின் (448) உரையிலேயே, ''தனக்கு அவர் நிகரன்மையானும் தனது அருளும் வீரமும் மேம்படுத்துதற்குச் சென்றான். ஆகலானும், அவரை அஞ்சப்பண்ணி நிரைமீட்டான் என்பதே தேவர் கருத்து; அது மேற்காண்க'' என்று கூறுகின்றார். மீண்டும் இக்கருத்தினைப் பல இடங்களிலும் வலியுறுத்துவதைக் காணலாம்.

> ''மறவரைக் கொல்லாது உயிரை வழங்குதலில் வள்ளல் என்றார்'' (11) ''அவர் உயிரைக் கொடுத்தலின் வள்ளல் என்றார். பொராதே தேரொலியாலே அவரை அஞ்சுவித்து நிரை மீட்கின்றான்'' (449) ''கொல்லாதிருந்தலின் மாரிபோல் என்றார்'' (452). ''தம் உயிருக்கு ஊறு செய்யாது எய்தமை கண்டு போகடுதலின், தூவுதலான் அறுத்தான் என்றார்'' (453). ''தேவர், ஈண்டு வேடர் எம் முறையினும் கொல்லத்தகாதவர் ஆதலின், கொள்க. இன்று என்பது தோன்றக் களத்துப் பாவம் போக்கினான் என்று கூறாராயினர் என்க.'' (454)

சிந்தாமணிக் காப்பியத்தின் கட்டமைப்பு கதைநிகழ்ச்சி காப்பிய மாந்தர்களின் பண்பு வரலாறு ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கிய நச்சினார்க்கினியர் உரையில் தம் கருத்துக்களை ஆங்காங்கே வெளியிட்டுள்ளார். அத்தகைய இடங்களில் சிலவற்றைக் காண்போம்:

சீவகனுக்கு இசையில் தோற்ற காந்தருவத்தை அவனுக்கு மாலையிடுகின்றாள். அதனைக் கண்டு பொறாமை கொண்ட கட்டியங்காரனும் மற்ற

மன்னர்களும் சீவகனை எதிர்த்துப் போரிடுகின்றனர். சீவகன் அவர்களை வென்று வாகை சூடுகின்றான். இந்தப் போரில் காந்தருவதத்தையின்தந்தை கலுழவேகன் சீவகனுக்கு உதவி செய்திருக்கலாம். பலவகை ஆற்றல்கள் படைத்துள்ள அவன் போரில் ஈடுபட்டிருந்தால் கதை நிகழ்ச்சிகளில் தடைகள் பல ஏற்பட்டிருக்கும். ஆதலின் காப்பியம் படைத்த தேவர், கலுழவேகனைப் போரில் ஈடுபடுத்தவில்லை. இதனை உணர்ந்து கொண்ட நச்சினார்க்கினியர், "கலுழவேகன் வந்தால் சீவகன் கதை ஒன்றும் இன்றாம்" (846) என்று விளக்கியுள்ளார்.

**மரபு காத்தல்**

வழி வழியாக வருகின்ற இலக்கிய மரபை நினைவிற் கொண்டு இவர் பல இடங்களில் உரை எழுதுகின்றார். அத்தகைய இடங்களில் ஒன்றினைக் காண்போம்:

கனக மாலை, சீவகன் பிரிவால் வாடித் துன்பமிகுதியால் தனித்து இருக்கின்றாள். சீவகனின் தம்பியாகிய நந்தட்டன் கனக மாலையைச் சந்திக்கின்றான். இக்காட்சியைத் தேவர்,

திங்கள்வாள் முகமும் நோக்கான்
செங்கயற் கண்ணி னாள்தன்
எங்குளார் அடிகள்?" என்னா
இன்னணம் இயம்பி லானே ...1705

என்ற பாடலில் அமைத்துள்ளார்.

இப்பாடலுக்கு உரை காணும்போது நச்சினார்க்கினியர் தமிழ் இலக்கிய மரபை நினைவிற்கொண்டு சிறப்பான முறையில் விளக்கம் தருகின்றார்.

சொற்பொருள் கூறிப் பாடலை உள்ளவாறே விளக்கித் சொல்லாமல், பாடலில் இடம் பெறாத நிகழ்ச்சிகளை வருவித்து உரையில் அமைத்துக் கொண்டு விளக்குகின்றார். இவ்வாறு இவர் செய்வதற்குச் சிறந்த காரணங்கள் உள்ளன?

1. நந்தட்டன், கனகமாலையின் அடிகளில் உள்ள சிலம்புகளை மட்டும் நோக்கிப் பேசுகின்றான் என்று பாடல் கூறி சிறந்த பண்பாட்டை வெளிப்படுத்துகின்றது. என்றாலும் அவன் நோக்காத-நோக்கக் கூடாத-நோக்கக் கருதவும் கூடாத கனக மாலையின் மற்ற உறுப்புகளை நோக்கவில்லை என்று பாடல் உரைப்பது நயமாக இல்லை.

2. அவன் நோக்கவில்லை என்று கூறப்படும் கனக மாலையின் உறுப்புகளின் அழகு, இன்பச் சுவை தோன்றுமாறு புனையப்பட்டுள்ளது.

3. கணவன் பிரிவால் வருந்துகின்றவனின் உறுப்புகள் எழில் நலம் உடையவையாயப் பாடல் கூறுவது பொருத்தமில்லை.

4. பிரிவுத் துன்பம் வெளிப்பட்டு இரக்க உணர்வு தோன்ற வேண்டிய இடத்தில் இன்பச்சுவை தோன்றி, சுவை நலத்தைக் கெடுத்து விடுகின்றது.

இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்த நச்சினார்க்கினியர் அந்தப் பாடலுக்கு இலக்கிய மரபிற்கு ஒத்தவாறு பின்வரும் விளக்கத்தைத் தருகின்றார்.

“கயற்கண்ணினா ளுடைய, முன்பு திங்களை ஒக்கும் முகத்தில் இப்போது நிகழ்கின்ற வாட்டத்தையும் நோக்கானாய் முன்பு நன்றாகிய (மார்பு) இப்பொழுது பசந்த பசப்பையும் நேர்க்கானாய்-முன்பு கலாபம் மின்னும் (இடையில்) ஆடை மாசுண்ட தன்மைகளையும் நோக்கானாய் தான் இறைஞ்சி நிற்றலின், அடியிற் சிலம்பு ஒன்றையுமே நோக்கி, “எங்குளார் அடிகள்?” என்று இப்படி ஒரு வார்த்தை கூறினான் என்க”

இந்த உரைப்பகுதியில் நச்சினார்க்கினியர், பாடலில் இல்லாத சில நிகழ்ச்சிகளைப் புனைந்து கூறியுள்ளார்.

1. பாடல் கூறுகின்ற கனகமாலையின் உறுப்பழகும் உடைவனப்பும், முன்னைய நிலையில் அமைந்திருந்தவையாக் கூறியுள்ளார்.

2. இப்போதுள்ள நிலையில், பிரிவுத் துன்பத்தால் உறுப்புக்கள் பசந்தும், உடை மாசடைந்தும் இருப்பதாய் மாற்றியுள்ளார்.

3. கனகமாலை, பிரிவால் வாடி மெலிந்திருந்தும் கூட அவளை நோக்காமல், அவன் அடியில் உள்ள சிலம்பை மட்டுமே நோக்கி நின்றான் நந்தட்டன் என்று அமைந்துள்ளார்.

4. கனக மாலையின் துன்பநிலை கண்ட நந்தட்டன் பேசவும் இயலாத நிலையில் அமைதியாய்த் தானும் துன்பத்துடன் நின்றான் என்கிறார்.

இத்தகைய விளக்கங்களால் தேவர்பாடல் சிறப்படைகின்றது; இலக்கிய மரபு காக்கப்படுகின்றது.

**அறவுரை**

செகவீரபாண்டியனார், சிந்தாமணி தந்த தேவரை.

காமத்தின் சுவைகண்டார் காமநூல்
என்கின்றார்; தரும நீதித்
தாமத்தின் நிலைகண்டார் தருமநூல்
என்கின்றார்; தவங்கள் சார்ந்த
நாமத்தின் நலம்கண்டார் ஞானநூல்
என்கின்றார்; நயத்தோர்க் கெல்லாம்
சேமத்தை அருளுகின்ற சீவகசிந்
தாமணியைச் செய்து தந்தாய் !

என்று போற்றிப் பாடுகின்றார்.

இவ்வாறு நச்சினார்க்கினியர் தம் சீவகசிந்தாமணி உரையில் தம் சிறப்புமிகு கருத்துக்களை மிக நுணுக்கமாகவும் செம்மையாகவும் அழகுறப் பிணைத்துள்ளார்.

# கூறு 7

## பரிமேலழகர் - திருக்குறள் உரை

தென்பாண்டி நாட்டில் பரிமேலழகர் வாழ்ந்தாலும் அவர் தொண்டை மண்டலததில் வாழந்ததாகச் சிலர் கூறுவர். 'பரிமேலழகர் செய்த உரை' என்று சிவாசாரியார் குறிப்பிடுகிறார். எனவே இவருக்கு முற்பட்டபட்டவர் பரிமேலழகர். திருக்குறளுக்கு தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சினார்க்கினியர், பருதி, பரிமேலழகர், திருமலையார் மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என பதின்மர் உரை எழுதினர். ஆனால் அவற்றினுள் பரிமேலழகரில் உரையேச் சிறப்பு மிக்கது ஆகும். மணக்குடவர், பருதி காளிங்கர் முதலியோரின் உரையே உயிருடன் உள்ளன. பரிமேலழகரின் உரைத் திருக்குறளோடு மதித்துப் போற்றப் பெறுகிறது.

இவரது நடையில் செறிவையும் தெளிவையும் இனிமையையும் காணலாம். பரிமேலழகர் 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தென்பாண்டி நாட்டில் வாழ்ந்தவர் சமயச்சார்பற்ற திருக்குறளுக்கு அக்காலத்திற்கேற்பச் சமயச்சார்பற்ற திருக்குறளுக்கு அக்காலத்திற்கேற்பச் சமயக் கருத்துக்களையும் ஆரியக் கொள்கைகளையும் வலிந்து புகுத்தி உரையெழுதினார். காஞ்சிபுரத்தில் பிறந்தவர், பார்ப்பன இனத்தினர் வடமொழி தென்மொழிகளில் வல்லுனர், உரையெழுவதில் மிகவும் திறமையுள்ளவர். திருக்குறளின் பழைய உரைகளில் இவர் உரை மிகவும் சிறந்த உரை. ஆனால் பரிமேலழகர் ஒரு பார்ப்பனராகையால் தமிழ்நூல், உரை எழுதுவதன் மூலம் தமிழில் ஆரியர் கொள்கைகளைப் புகுத்திக் தனித்தமிழ் மரபைக் கொடுப்பதையே தங்கள் வாழ்க்கைப் பலனாக, கடமையாகக் கொண்ட பார்ப்பனா அறிஞர்களைப் போலவே இவரும் தமது உரையால் தனித்தமிழ் நூலாகிய திருக்குறளை ஆரிய மொழி பெயர்ப்பு நூலெனத் தமிழர் எண்ணும்படி செய்து விட்டார். தமிழர் நாகரிகம் என்னும் இன்சுவை மிக்க திருக்குறளாகிய நல்லாவின் பாலில் ஆரிய நாகரிகம் என்றும் கொடுங்குணமிக்க தம் உரையாகிய நஞ்சைக் கலந்து பாழ்படுத்தி விட்டார். பரிமேலழகர் உரை என்னும் கொடிய நஞ்சை அகற்றினாலன்றி முப்பால் நற்பாலாகாது.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ
பரித்தவுரை யெல்லாம் பரிமேலழகன் - நூலில்
தெரித்த வுரை யாமோ தெளி.

என்று போற்றப் பெறும் இவர் வள்ளுவர் கருத்தறிந்து உரையெழுதினார்.

**திருவள்ளுவ மாலை**

திருவள்ளுவர் திருக்குறளை மதுரைக் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றின போது, வள்ளுவரையும் குறளையும் சிறப்பித்துச் சங்கப்புலவர்கள் பாடியதாக 53 வெண்பாக்கள் உள்ளன. அவை திருவள்ளுவமாலை எனப்படும். இது திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை எத்தகையதோ அத்தகையதே.

திருக்குறள் அரங்கேற்றத் தொடங்கியபோது, அதற்குத் தலைமை தாங்கத் தகுதியுடையவர் யார் என்னும் ஐயப்பாடுண்டானது சங்கப் புலவர்களுக்கு, அப்போது, வானொலி (அசரீரி), ‘மதுரையில் உள்ள உருத்திர சன்மர் என்னும் பெயருடைய ஊமைப் பிள்ளையே தலைமை தாங்கத் தகுதியுடையவர்’ என ஒலித்தது, என்னும் கருத்துடையது முதற்பாட்டு.

‘உலகத்தார் விதிவிலக்குகளையறிந்து உய்யும் வகையை ஆராய்ந்து, நான் முதலில் நான்முகன் நாவிலிருந்து நான்கு வேதங்களையும் சொன்னேன்; இடைக்காலத்தே பாரதத்தைப் பகர்ந்தேன்; இப்போது வள்ளுவன் வாக்கிலிருந்து திருக்குறளைச் சொல்லினேன்’ என நாமகன் பாண்டியனைப் பார்த்துச் சொன்னதாகவுள்ளது இரண்டாவது பாட்டு.

“நாடா முதனுள் மறைநாள் முகனாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன் - கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு”

என்பது அப்பாட்டு, நாமகள் பாடினானென்பதே கற்பனைக் கூற்றாகும். நாடா-நாடி, பாடா-பாடி, பாரதத்தில் மக்கள் கடைப்பிடித் தொழுக்கூடிய விதிவிலக்குகள் என்ன உள்ளனவோ நாமகளைத்தான் கேட்க வேண்டும். வேதம், பாரதம் இவற்றினும் திருக்குறள் தாழ்ந்தது என்பதைக் காட்ட எழுந்ததே இப்பாட்டு.

மேலும், வள்ளுவர் அறம் பொருளின்பமே சொல்லியிருக்கத் திருவள்ளுவமாலை 7, 8, 19, 33, 38, 40 பாடல்கள் வள்ளுவர் வீட்டைப் பற்றியும் கூறியிருப்பதாகக் கூறுவதை நோக்கப் பரிமேலழகர் உரையெழுதிய பின்னர், அவ்வுரைக்கு உறுதுணையாகப் பாடப்பட்டதே திருவள்ளுவமாலை எனக்கொள்வதற்கு இடமேற்படுகிறது. 21- ஆம் பாடவில் வள்ளுவர் பெயராக வரும் மாதானுபங்கி என்பதும் சங்க காலச் சொல்லன்று.

“நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தன்னுரைத்த – நூன்முறை”
“செய்யா மொழிக்கம் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொரு ளொன்றே”
“வேதப் பொருளாய் மிகவிளங்கி”
“மெய்யாய வேதப் பொருள் விளங்க”
“.........தாமே தமைப் பயந்த
வேதமே மேதக்க ன”
“வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓதவழுக் கற்ற துலகு”
“வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழா லுரைசெய்தார்”

இவற்றால், வடமொழி வேதங்களின் கருத்துக்களையே வள்ளுவர் திருக்குறளாகச் செய்தனர் என்பது வலியுறுத்தப்படுகிறது. 32ஆவது பாட்டு ஆரிய வேதமே திருக்குறளுக்கு முதனூல் என்கின்றது. திருக்குறள் தமிழர் நாகரிகங் கூறு நூலாயிருக்க, தமிழுக்காகவே வாழ்ந்த சங்கப் புலவர்கள், வடமொழி வேதக்கருத்துக்களே திருக்குறள் என ஒருபோதும் மாறுபடக் கூறார். 4-ஆவது பாட்டுத் தமிழ் வாழத் தான் வாழ்ந்த பாண்டியன் பாடியதாக உள்ளது.

“...............முப்பாற்குப்
பாரதஞ்சீர் ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்”

என்னும் பாட்டுத் திருக்குறளுக்குப் பாரதம், இராமாயணம், மனுநூல், வேதங்கள் என்னும் இவையே ஒப்பாகும்; ஒப்பாவன பிற இல்லை என்கின்றது. மனு நூலும் வேதமும் ஆரிய அற நூல்களாகையால் அவை ஒப்பாகும் என்பதிலாகிலும் கொஞ்சம் பொருளுண்டு. தமிழர் ஒழுக்கம் கூறும் திருக்குறளுக்கு ஆரியப் புராணக் கதைகள் ஒப்பாகும் என்பது, பாலுக்கு நஞ்சொப்பாகும் என்பது போன்ற பொருந்தாப் பொய்க்கூற்றே யாகும்.

“தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்--கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்”

என்னும் பாட்டைப் போலப் பிற்காலத்தில் யாரோ பாடியவையே திருவள்ளுவமாலையும், நான்மறை முடிவு-உபநிடதங்கள். மூவர் தமிழ்-தேவராங்கள். முனிமொழி-வேதாந்த சூத்திரம், கோவை-திருக்கோவையார். திருமூலர் சொல் - திருமந்திரம். திருக்கோவையார் நீங்கலாக மற்றவை சமய நூல்கள். எப்படித் திருக்குறளும் இவையும் ஒன்றோ நமக்கு விளங்கவில்லை. எனவே, பரிமேலழகர் உரை, திருவள்ளுவமாலை போன்ற மாசு நீங்கித் திருக்குறளை மாசிலாமணியாக்குதல் தமிழர் கடமையாகும்.

**வள்ளுவர் காலநிலை**

வள்ளுவர் காலத்தே, அவர் காலத்திற்குப் பன்னெடு நான் முன்னர் இமயமலைக்கு வடபாலிருந்து வந்து, இமயமலைக்கும் விந்த மலைக்கும் இடைப்பட்ட நிலமாகிய வடநாட்டில குடியேறி வாழ்ந்துவந்த ஆரியர் என்போர் அத்துடன் அமையவில்லை. நாளடைவில் அவ்வடவர் சிலர் தமிழகத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் அவ் வடபுல மக்களை அன்புடன் வரவேற்றுப் போற்ற வந்தனர். அவ்வடபுல முதியோர், தமிழ்த் துறவிகாளன அந்தணர்களைப் போல மதிக்கப்பட்டு வந்தனர். அவ் வரியக் குடும்பத் தலைவர்களில் பெரும்பாலோர் தமிழ்ச் செல்வர்களிடம் பாங்கத் தொழிலின் ஒரு பகுதியான பார்ப்பனத் தொழில் செய்து வந்தனர். (குறள்-1103). வந்தேறிகளான அவ்வடபுல மக்கள் தங்கள் குலத்தொழிலெனக் கொலை வேள்வி செய்து வந்தனர் (259). அவ்வெள்வியால் பெரும்பயன் உண்டாகு மென்னும் அவ்வாரிய மக்கள் கூற்றினைத் தமிழ் மக்கள் ஒருவாறு நம்பி வந்தனர். (328) அவ்வடவர் கொள்கைகள் சில தமிழரிடம் பரவியிருந்தன. அன்னார் கூறிய பல கற்பனைக் கதைகளைத் தமிழ் மக்கள் தெரிந்திருந்தனர்; சில கற்பனைகளை உண்மையென நம்பியும் வந்தனர் (1146). அவ்வாரியப் பிறவி வேற்றுமைப் பிணி தமிழ் மக்களை ஒருவாறு பிணிக்கத் தொடங்கியிருந்தது (972). அதனால், தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஒருமை வாழ்வு சிதையத் தலைப்பட்டது. தமிழர் பண்பாட்டை ஆரியர் பண்பாடு விழுங்கிவந்தது.

**வடபுலத்தார்**

அவ்வடபுல மக்கள், தாங்கள் முன்பு இருந்துவந்த தங்கள் பழைய தாயகத்தில் வாழும் தம்மவர் மேலானவர்; இந் நாட்டு மக்களிலும் உயர்ந்தவர்; யாதொரு கட்டுப்பாடுமின்றித் தம் விருப்பம் போல் நடந்துகொள்ளும் இயல்பினர் (1072). அவர்கள் தலைவனான இந்திரன் மிக்க வலியும் பெருமையும் உடையவன் (25). அந்நாடு செல்வமிக்க நன்னாடு: துன்பமென்பது அங்கில்லை; இன்ப

வடிவானது (1103). என்பன போன்ற தம் இனப் பெருமையைத் தமிழ் மக்கள் நம்பும்படி செய்திருந்தனர்.

தமிழ் மக்கள் அவ்வடவரின் பழந்தாயகத்தினரான அவ்வடபுலத்தாரை வானோர் (18,346), விசும்புனார் (25), இமையார் (906), புத்தேளிர் (58, 213, 234, 290, 966). தேவர் (1072), தெய்வம் (50), புலவர் (234) எனவும்; அவ்வடபுலத்தார் வாழ்விடத்தை வானகம் (101), மேலுலகம் (222), புத்தேளுலகம் (213, 234, 290). புத்தேள் நாடு (966, 1323), தாமரைக்கண்ணானுலகு (1103) எனவும் அழைத்து வந்தனர். காரணங் கண்டு ஒரு பொருளுக்குப் பல பெயரிட்டு வழங்கும் தமிழர் பெருமைக்கு இ.்.தொரு சான்றாகும்.

**நூல்செய்தமுறை**

வள்ளுவர் ஓர் அறிவு நூற் புலவர்; அரசியலறிஞர்; வாழ்வியற் கணக்கர்; தமிழர் பண்பாட்டின் பெருமையை நன்குணர்ந்தவர்; தமிழினப் பற்றுடையவர்; தமிழர் நாகரிகத்திற்கும் ஆரியர் நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாட்டை நன்று அறிந்தவர்; ஆகையால், அவ் வடபுல மக்களின் பொய்க்கூற்றுக்களும், போலிக் கொள்கைகளும் தமிழ் மக்களிடைப் பரவி வருவதைத் தடுத்து விலக்கி, மேலும் அவை பரவாமலிருக்க, தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களாகிய ஒழுக்க முறைகளை, அகம் புறப் பாகுபாட்டைத் தழுவி, அறம் பொருள் இன்பம் என முப்பாலாக்கி ஒரு நூல் செய்து, தமிழர் பண்பாட்டை நிலைநிறுத்த எண்ணினார். எனவே, தமிழர் மரபுக்கொவ்வாத அயற் கொள்கைகளை மறுத்தும், அவற்றை நம்பி வாழும் பொது மக்களுக்கு எளிதில் பொருள் விளங்குதற் பொருட்டுப் பொது மக்களிடைப் பரவியிருந்த அவ்வயற் கொள்கைகளைத் கொண்டு கூறியும், தமிழ் மரபு சிறிதும் கெடாது.

**நூன் மரபு**

பொருள் குணங்களை ஆண்பாலாகவும், பெண்பாலாகவும் கூறுதல் நூல் மரபாகும். ‘நிலம் என்னும் நல்லாள்’ (1040), ‘அழுக்காறு என ஒரு பாவி’ (168) என நிலம் என்னும் பொருளைப் பெண்பாலாகவும், அழுக்காறு என்னும் குணத்தை ஆண்பாலாகவும் கூறுவதைக் காணலாம் பாவி – தீயோன்.

செய்யாள் (84), செய்யவள் (67), தாமரையினாள் (617) எனச் செல்வத்தையும், தவ்வை (167), முகடி (167, 936) என வறுமையையும் பெண்பாலாகக் கூறியவாறு. செய்வன்-இளையவன். தவ்வை-மூத்தவள், செல்வந் தீர்வதே வறுமையாதலால், செல்வத்தை இளையாள் எனவும், வறுமையை மூத்தாள்

எனவும் கூறினார். மேலும், செல்வம் விரும்பப்படுதல் பற்றிச் செய்யாள் எனவும், வறுமை வெறுக்கப்படுதல் பற்றிக் கரியாள் (617) எனவும் கூறினார். தாமரையினாள் - திருமகள். திரு-செல்வம், கல்வியும் செல்வமும் மனத்தைவிட் டகலா மாண்பொருள்களாதலால் அவற்றைப் பெண்களாக்கி, மனத்தைத் தாமரையாக்கி அதன் மேல் உள்ளனர் என்பது மரப.

**கூற்று** : உடலும் உயிரும் கூறுபடும் சாவினைக் கூற்று (326, 765, 1083) என உயிருடையதாகக் கூறியவாறு. கூற்று-உடலும் உயிரும் கூறுபடும் நேரம், கூறுபடுதல் - வேறாதல்-பிரிதல், கூறு உ-கூற்று, கூற்று-தொழிற்பெயர். கூறு அம்-கூற்றம் (269, 894, 1085) என்பதுமது. உடலும் உயிரும் கூறுபடும் காலத்தையும் தொழிலையும் உயிருடையதாகக் கூறியது. கூற்றுவன என ஆண்பாலாகக் கூறுதலுமொன்று.

**பேய் (565)** : பேய்-அச்சம், பேயிருள்-அச்சந்தரும் இருள். பேய்க்காய்ச்சல் - அச்சம்தரும் காய்ச்சல், அச்சத்தைப் பேய் என்பது உலகவழக்கு. அஃதே நூல் வழக்குமாயிற்று. ஒருவன் கொள்ளும் அச்சமே அவன் எண்ணும் உருவெளித் தோற்றமாகி, அவனை அச்சுறுத்தும், அவ்வச்சம் ஒருவகை வெறி நோயை உண்டாக்கும்.

**காமன், அணங்கு** : பெண்களை வருத்தும் ஆண்பாற் காமத்தைக் காமன் (1197) என ஆண்பாலாகவும், ஆண்களை வருத்தும் பெண்பாற் காமத்தை அணங்கு (918, 1081, 1082) எனப் பெண்பாலாகவும் கூறுதல் நூன்மரபு. அணங்கு வருத்தம்; 'தகையணங் குறுத்தல்' என்னும் அதிகாரத்தைக் (109) காண்க. இவ் வாண்பால் பெண்பால்களுக்குப் பெண்டு பிள்ளை சுற்றம் வாழ்விடம் முதலியன படைத்துக் கொண்டு கூறுதல் புராணம் கற்பனையாகும்.

**சொற்பொருள் விளக்கம்**

**எழுபிறப்பு** : 'நாலைந்தெடு, ஏழெட்டுப்பேர்'' என்னும் வழக்குப் போல, எருமை என்னும் எண்ணுப் பெயரைப் 'பல'' என்னும் பொருளிலேயே ஆளுகிறார் வள்ளுவர்-(62, 107, 126, 398, 538, 835) 'எழுபிறப்பு'' (62)-பல தலைமுறை, 'எழுபதுகோடி'' (639) என்பதும் பலகோடி – மிகப்பல என்னும் பொருளதே.

**பிறப்பு** : பிறப்பு என்னும் சொல்லுக்கு முற்பிறப்பு, மறுபிறப்பு என்பது சமயச்சார்பான பொருளாகும். குறளில் வரும் பிறப்பு என்னும் சொல், 'பிறவிப் பெருங்கடல்'' (10)-வாழ்க்கையாகிய பெரிய கடல், 'பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' (357) – பின்னர் இப்பிறப்பைப் பற்றி எண்ண வேண்டியதில்லை-இவ்

வாழ்க்கையைப் பற்றி; என வாழ்க்கையையும்; ‘எழுபிறப்பும் தீயவை தீண்டா’ (62)- பல தலைமுறைகளிலும் தீமைகள் சேரா; ‘எழுமை எழுபிறப்பும்’ (107) – எப்போதும் பல தலைமுறைகளிலும்; எனத் தலைமுறையையும்; ‘பிறப்பறுக்கல் உற்றார்க்கு’ – (345)-தீமையின் தோற்றங்களை நீக்கலுற்றார்க்கு; ‘பிறப்பறுக்கும்’ (349)-துன்பங்களின் தோற்றத்தை அறுக்கும்; எனத் தோற்றத்தையும்; ‘தவாப் பிறப்பு ஈனும்’ (361) – கெடாத துன்பத்தை விளைவிக்கும்; எனத் துன்பத்தையும்; ‘இழிந்த பிறப்பாய்விடும்’ (133)-தாழ்குடித் தன்மையாகி விடும்; ‘பிறப்பு ஒழுக்கம்’ (134)-மக்கட் பிறப்புக்கு உரிய ஒழுக்கம்; ‘இம்மைப் பிறப்பில்’ (1315)-இப் பிறப்பில்-உயிரோடுள்ளவரை; எனக் குடித்தன்மை, மக்கட் பிறப்பு, இப்பிறப்பு என்பவற்றைக் காணலாம்.

மேற்பிறந்தார், கீழ்ப்பிறந்தார் (409): மேற் பிறந்தார்- உயர்குடிப் பிறந்தார்-வழிவழியாக நல்லொழுக்கமுள்ள குடியில் பிறந்தார். கீழ்ப் பிறந்தார்-தாழ்குடிப் பிறந்தார்-நல்லொழுக்க மில்லாத குடியில் பிறந்தார்.

இம்மை, மறுமை (98): நாம் உயிரோடு இருக்கும் நிலை இம்மை. இது இம்மைவாழ் வெனப்படும். நாம் இறந்தபின் நம்மைப் பற்றி இங்கு பேசப்படுவது-மறுமை, இது மறுமைவாழ் வெனப்படும். வள்ளுவர் மறுமையில் உள்ளனர். மறுமை-உயிர் எடுக்கும் மறுபிறப்பு என்பது சமயக் கற்பனை.

வினை: இக்காலத்தார் ‘வீனை’ என்னும் சொல்லைக் கேட்டாலே படக்கென்று முன்வினை, நல்வினை, தீவினை என்று கூறிவிடுவர். வள்ளுவர் காலத்து வினை என்ற சொல் இத்தகைய பொருளைக் குறியாது. ‘செயல்-தொழில்’ என்னும் பொருளையே குறித்தது. தொல்காப்பிய வீனை இயல்வினைச் சொல்லின் இலக்கணங் கூறுதல் சில இடங்களில் துன்பத்தைக் குறிக்கும். ‘இருள்சேர் இருவினை’-அறியாமையால் வரும் பெருந் துன்பம். இருமை-பெருமை, இருங்கடல் எனக் காண்க. வினை (244, 439) – செயல். நல்வினை (335)-நல்ல செயல், தவாவினை (367)-கெடாத நற்செயல். தீவினை (201, 207, 209, 210)- தீச்செயல்-கெட்ட காரியம்.

அளறு (255)-தீ நாற்ற முடைய குழைந்தை சேறு தீராத பெருந் துன்பத்தைச் ‘சேற்றில் அழுந்துதல்’ என்னும் வழக்குண்டு. இழிகாமத்தைக் ‘காமச்சேறு’ என்ப தறிக. குறள் 335, 919-ல் துன்பம் என்னும் பொருளே குறிக்கிறது. பெருந் துன்பத்தையே நிரயம் (நகரம்) எனவும், நிரயவுலகம் தென்றிசைக் கண் உள்ளதெனவும், அங்கு பல கொடுந் துன்பங்கள் படவேண்டு மெனவும், பாவம் செய்தோர் நிரயத்தை அடைவர் எனவும் கூறுதல் புராணக் கற்பனை.

## உரைப்பாயிர விளக்கம்

### பாயிரம்

ஒரு நூலை எடுத்து விரித்ததும் முதலில் ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற்பெயர் முதலியன கூறும் சிறப்புப்பாயிரம் காணப்படும். சில நூற்களில் ஆசிரியரால் கூறப்படும் தற்சிறப்புப் பாயிரம் காணப்படும். அது நூலின் உட்பொருள் கூறும். ஒரு நூலுக்குப் பாயிரம் இன்றியமையாத தென்பது, ''ஆயிர முகத்தான் அகன்ற தாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே'' என்னும் ஆன்றோர் வாக்கால் விளங்கும்.

திருக்குறளினும் முற்பட்ட பழந்தமிழ் நூலாகிய திருக்குறளின் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்குக் கூட ஆக்கியோன் பெயர் முதலிய கூறும், ''வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லூலகத்து'' என்னும் தொடக்கத்தையுடைய சிறப்புப் பாயிரம் அமைந்திருக்க, திருக்குறளுக்கு அத்தகைய பாயிரம் அமைந்திலாமையின் காரணம் நமக்கொன்றும் விளங்கவில்லை. திருவள்ளுவரின் உண்மை வரலாறு தெரியாமற் போனதற்கு, திருக்குறள் செய்த காலம் முதலின அறிய முடியாமல் இருப்பதற்கும், திருவள்ளுவரைப்பற்றிய பொய்க் கதைக்கும் அச் சிறப்புப்பாயிரம் இல்லாமையே காரணமாகும்.

### உரைப்பாயிரம்

சிறப்புப் பாயிரமோ, தற்சிறப்புப் பாயிரமோ இல்லையெனினும், திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் கூறிய உரைப்பாயிரம் என்பது நூலின் முகப்பில் அமைந்துள்ளது. அது திருக்குறளில் கூறப்படும் பொருள் இன்னவென முதற்கண் விளக்கிக் கூறுகிறது. பாயிரம்-வரலாறு. உரைப்பாயிரம்-உரையின் வரலாறு. பரிமேலழர் தாம் எழுதப் போகும் உரை இத்தன்மைய தெனத் தமது உரைக்கேற்பத் திருக்குறளின் கருத்தைத் திரித்துக் கூறுவதே அவ்வுரைப் பாயிரமாகும்.

திருக்குறள் முழுக்க முழுக்க அப்படியே ஆரியர் பழக்க வழக்கங்களைத் தமிழாக்கிய நூல் என நம்பும்படி தமிழரை மருட்டியது அவ்வுரைப் பாயிரமேயாகும்.

1. ''இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன.

2. அவற்றுள், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின் நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

3. அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும்.

4. அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தந்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்.

5. வழக்காவது, ஒரு பொருளைத் தனித்தனியே எனதென தென்றிருப்பார் அது காணரமாகத் தம்முன் மாறுபட்டு அப்பொருள்மேற் செல்வது. அது கடன் கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம்.

6. அதுதான் (அவ்வொழுக்கம்) நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பில்புக னொழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது'' இதுதான் அவ்வுரைப் பாயிரம்.

**1. பிறப்பு**

''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'' (குறள் - 972)

எல்லா மக்களும் ஒரே பிறப்பினர்; பிறப்பில் ஏற்றத் தாழ்வு இல்லை, அவரவர் செய்யும் தொழில் வேற்றுமையால் பெருமை சிறுமை என்னும் சிறப்பு ஒவ்வா, சிறப் பொவ்வாமை-ஒருவன் செய்யும் நல்ல தொழிலினால் பெருமையும், கெட்ட தொழிலினால் சிறுமையும் அடைதல்.

**2. கல்வி**

''மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்கு ரனைத்திலர் பாடு'' (குறள் - 409)

கல்லாதவர் உயர் குடியில் பிறந்தாராயினும், தாழ்குடியில் பிறந்தும் கற்றாரைப் போலப் பெருமை யில்லாதவராவர். உயர்குடி-வழிவழியாக

நல்லொழுக்கமுள்ள குடிதாழ் குடி-நல்லொழுக்கமில்லாத குடி. எல்லோரும் கற்க வேண்டும்.

> "வேதத்தைக் கேட்கிற சூத்திரனது காதுகளில் ஈயத்தையம் மெழுகையும் உருக்கி விட வேண்டும். வேதத்தைச் சொல்லுகிற சூத்திரனது நாக்கை அறுத்தெறிய வேண்டும்; பொருளை யுணர்ந்து வைத்திருக்கிற நெஞ்சைப் பிளக்க வேண்டும்." (வேதம்)

எவ்வளவு அருளுள்ளம்?

**3. ஈகை**

"இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்" (குறள்-229)

தேடிய பொருளைப் பிறர்க்குக் கொடாமல் தாமேத் தனியாக உண்ணுதல் இரத்தலைக் காட்டிலும், கொடியது.

**4. இரத்தல்**

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்" (குறள்-1062)

இவ்வுலகத்தை யுண்டாக்கியவன், மக்கள் முயற்சியால் ஏதாவது தொழில் செய்து உயிர்வாழ்தலை விரும்பாது, பிறரிடம் சென்று இரந்தும் உயிர்வாழ்தலை விரும்புவானால், அக் கொடியோன் இரப்பாரைப்போல எங்குந் திரிந்து கெடக்கடவன். உலகம் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்னும் கொள்கையைக் கொண்டு கூறியது.

**5. உழவு**

"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்து முழவே தலை" (குறள் - 1031)

உழவுத் தொழிலால் உண்டாகும் மெய்வருத்தத்தை நோக்கிப் பிற தொழில்களைச் செய்தாலும், உலகத்தார் உணவுக்காக ஏருடையார் இடத்திற்கே வருவர், ஆதலால், வருந்தியும் உழுதலே தலைமையான தொழிலாகும்.

**6. பொய் சொல்லாமை**

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" (குறள் - 297)

ஒருவன் எப்போதும் பொய் சொல்லா திருப்பின், அவன் வேறு அறங்கள் செய்ய வேண்டியதில்லை. பொய்யாமை என்னும் அறம் மற்ற எல்லா அறங்களின் பயனையும் தரும்.

**7. கொலையும் புலையும்**

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று". (குறள் - 259)

நெய் முதலியவற்றை ஊற்றி ஆயிரம் வேள்வி செய்தலைக் காட்டிலும் ஒன்றன் உயிரைப் போக்கி அதன் ஊனை உண்ணாமை நல்லது. கொலை வேள்விகள் பல செய்தலை விட ஓருயிரைக் கொன்றுண்ணாமல் இருப்பது நல்லது.

**ஆரியக் கொள்கை**

தமிழர் நாகரிகம் மக்கட் பண்பாட்டினின்று இயல்பாகத் தோன்றிப் படிப்படியாக வளர்ந்து மாண்புற்றது. ஆரியர் நாகரிகம் மக்கட் பண்பாட்டுக்குப் புறம்பாக வலிந்து புகுத்தி வளர்க்கப்பட்டது. தமிழர் நாகரிகம் ஒத்த நீதியுடையது. ஆரியர் நாகரிகம் ஒருகுலத்துக் கொரு நீதியுடையது. தமிழ் நாகரிகம் தமிழனத்தின் பொதுவுடைமை. ஆரிய நாகரிகம் ஏற்றத் தாழ்வான பிறவி வேற்றுமை யுடையது. தமிழ் நாகரிகம் தமிழர் எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆரிய நாகரிகம் தமிழர் எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆரிய நாகரிகம் குல வேற்றுமையும் நிலைவேற்றுமையும் உடையது. (நிலை-ஆச்சிரமம்) தமிழ் நாகரிகம் இயல்பானது.

**1. வருணாச்சிரம தருமம்**

வருணாச்சிரம தருமமாவது-பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நால்வகை ஆரியச் சாதியனரும், பிரமசரியம், கிருக.்.ச்தம், வானப்பிர.்.ச்தம், சந்தியாசம் என்னும் நால்வகை நிலைகளிலும், அவரவர்க்கு விதிக்கப்பட்ட விதிப்படி ஒழுகும் ஒழுக்கமாகும். வருணாச்சிரம தருமம்-குலநிலை அறம், குலம்-வருணம், சாதி. நிலை-ஆச்சிரமம். குலநிலை அறம்-குலத்துக்கும் நிலைக்கும் ஏற்ற அறம்-பிரமசரியம்-கல்வி நிலை. கிருக.்.ச்தம்-இல்லறம். வானப் பிர.்.ச்தம்-தவநிலை. சந்தியாசம்-துறவு. வேதம், மனு முதலிய ஆரிய அறநூல்களில் ஒவ்வொரு சாதிக்கும், நிலைக்கும் தனித்தனி ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன. குல வேற்றுமை, நிலை வேற்றுமை ஆகிய அவற்றைக் குலநிலையொழுக்கம் எனவும் கூறலாம்.

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
   வேண்டும் பனுவற் றுணிவு. (21)

பனுவல் துணிவு-நூல்களது துணிவு ஒழுக்கத்து நீத்தார் பெருமை-நல்லொழுக்கத்தில் நின்று தீய ஒழுக்கங்களைத் துறந்தாரது பெருமையையே, விழுப்பத்து வேண்டும்-எல்லாப் பெருமைகளிலும் மேலாக விரும்பும்.

'தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது-தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும், அறம் வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும்' என அடுக்கிக்கொண்டு போகிறார்.

2. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
   நல்லாற்றி னின்ற துணை (41)

இல்வாழ்வான் என்பான் - குடும்ப வாழ்க்கை நடத்துபவன் என்று கூறப்படுவோன், இயல்புடைய மூவர்க்கும். அறத்தின் தன்மையை யுடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணை-நல்ல வழியில் நிலைபெற்ற துணையாவான்.

அறத்தின் தன்மையை யுடையார்-அறவாழ்வு வாழ்பவர், அவர் அடுத்த குறளில் வரும் துறந்தார் முதலிய மூவர். இக்குறள் தொகுத்துச் சுட்டல். அம் மூவரையும் நல்லாற்றில் வாழச் செய்பவர் இல்வாழ்வாரே.

> பரி : 'ஏனை மூவராவார் - ஆசாரிய னிடத்தினின் ஓதுதலும், விரதங் காத்தலுமாகி பிரமசரிய வொழுக்கத்தானும், இல்லை விட்டு வனத்தின்கண் தீயொடு சென்று, மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தானும், முற்றத்துறந்த யோக வொழுக்கத்தானும் எனுமிவர். இவருள் முன்னை யிருவரையும் பிறர்மத மேற்கொண்டு கூறினார்.

3. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கம் இறந்தார்க்கும்
   இல்வாழ்வா னென்பான் துணை.

துறந்தார்க்கும்-துறவிகளுக்கும், துவ்வாதவர்க்கும்-வறுமையினால் உண்ண உணவின்றித் தவிக்கும் ஏழைகளுக்கும். இறந்தார்க்கும்-பாதுகாப்போர் இல்லாதவர்க்கும். இல்வாழ்வான் என்பான் துணை-இல்லறத்தான் துணையாவான்.

துஆதவர்-துவ்வாதவர். து-உண். துவ்வாதவர்-உண்ண உணவில்லாதவர்-எளியர். இறத்தல்-கடத்தல், இறந்தவர்-கடந்தவர்-நீங்கினவர். குடும்பத்தினீங்கினவர்-

யாருமற்றவர்; தாமாக வாழமுடியாத இளைஞரும் முதியரும் (அனாதைகள்) துறவிகள், எளியவர், யாருமற்றவர் ஆகிய மூவர்க்கும் இல்வாழ்வார் துணையாவர்.

பரி : 'துறந்தார்க்கும்-கனைகண் ஆனவரால் துறக்கப்பட்டார்க்கும், துவ்வாதவர்க்கும் - நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கம்-ஒருவருமின்றித் தன்பால்வந் திறந்தார்க்கும்.

துறந்தார்க்கும் பாவம் ஒழிய அவர் கனைகணாய்நின்று வேண்டுவன செய்தலானும், இறந்தார்க்கு நீர்க் கடன் முதலியன செய்து நல்லூலகின் கட் செலுத்து தலானும் துணை யென்றார்.

கனைகண்-துணை, ஆதரவு. மேல் 41-ஆம் குறளுக்கு அவ்வாறு பொருள் கொண்டதனாலேயே இக்குறளுக்கு இவ்வாறு பொருள் கொள்ளலானார். 'துறந்தார்' என்னும் செய்வினைக்குத் 'துறக்கப்பட்டார்' எனச் செயப்பாட்டு வினைப் பொருள் கொண்டுள்ளார்.

4. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானெள்றாய்
கைம்புலத்தா றேம்பல் தலை (43)

தென்புலத்தார்-தென்னாட்டினர், தெய்வம். தன் முன்னோர், விருந்து-விருந்தினர், ஒக்கல்-சுற்றத்தார், தான் என்று ஐம்புலத்து ஆயு ஓம்பல் தலை-தான் என்னும் ஐந்திடத்தும் அறவழியைத் தவறாது செய்தல் இவ்வாழ்வானுக்குச் சிறந்தது.

புலம்-இடம், தென்புலத்தார்-தமிழர். வடபுலத்தாரும் இருந்ததால் தென்புலத்தார் என்றார். இது இனப்பற்று. அதாவது தமிழனப் பற்றுக் கொள்ளுதல், தெய்வம்-மேன்மை; தன் முன்னோரின் மேன்மை அல்லது பெருமை விளங்கச் செய்தல். அதாவது தன் குடிக்குரிய நல்லொழுக்கத்தில் தவறாதொழுகித் தன் முன்னோர் பெயர் விளங்கச் செய்தல், தன் உடலையும் ஒழுக்கத்தையும் போற்றதலும் இல்வாழ்வான் கடமையாயிற்று. இனப் பற்றுக் கொள்ளுதலும், முன்னோர் பெயர் விளங்கச் செய்தலும், விருந்தினரைப் போற்றுதலும், சுற்றந்தழுவலும், தம்மைப் பேணுதலும் இல்வாழ்வார் கடமையாகும்.

பரி : 'தென்புலத்தார்-பிதிரர். தெய்வம்-தேவர். பிதிர ராவார்-படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி, அவர்க்கிடம் தென்றிசை யாதலின் தென்புலத்தார் என்றார். ஐவகையும் அறஞ் செய்தற்கு

இடனாகலின் ஐம்புல மென்றார். இவ் வைம்புலத்திற்கும் ஐந்துகூறு வேண்டுதலான் அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்னாயிற்று’

பிதிர்க்கன் இறந்து போன முன்னோர்கள் (தகப்பன், பாட்டன்) என்று மனு, அத்தியாயம் 3. சுலோகம் 220, 221-ல் கூறியிருக்க, மனுவை அறநூலென்று ஒப்புக் கொண்டு, அதைக் குறளுரையில் வலிந்து புகுத்தும் இவர், அதற்கு மாறாக, ‘பிதிரராவார்-படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி’ என்பது, ‘மாறுகொளக்கூறல்’ என்னும் குற்றமாகும். ‘அவர்க்கிடம் தென்றிசை’ என்பது யமபுரம் அல்லது நரகவுலகத்தையேயாகும்.

**2. சாதி வேற்றுமை**

பிறப்பிலேயே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் சாதி வேற்றுமை தமிழர்க்குள் இல்லை. ‘ஒன்றே குலம்’ என்பது ஆன்றோர் மொழி, பிராமணன் பிரமாவின் முகத்திலும், சத்திரியன் மார்பிலும், வைசியன் தொடையிலும், சூத்திரன் காலிலும் பிறந்தனர் என்பதும், அவ்வவ் விடத்திற் கேற்றவாறு ஏற்றத் தாழ்வுடையர் என்பதும், பிரமாவின் உயர்ந்த இடமான முகத்தில் பிறந்ததால் பிராமணன் உயர்ந்த பிறப்பினன், பிரமாவின் தாழ்ந்த இடமான காலில் பிறந்ததால் சூத்திரன் தாழ்ந்த பிறப்பினன் என்பதும் ஆரியக் கொள்கை. அவ்வுயர்வு தாழ்வுக் கேற்றவாறே அன்னார் ஒழுகியும் வந்தனர். இச்சாதி வேற்றுமைக் கொள்கைக்குச் சான்றாக எழுதப்பட்டதே மனு நூல்.

1. மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
   கற்றா ரனைத்திலர் பாடு. (409)

கல்லாதார் மேற்பிறந்தா ராயினும்-கல்லாதவர் உயர் குடியில் பிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்துப் பாடு இலர்-தாழ்குடியில் பிறந்தும் கற்றாரைப் போலப் பெருமையில்லாதவராவர்.

உயர்குடி- வழியாக நல்லொழுக்க முள்ளகுடி, தாழ்குடி-வழிவழியாக நல்லொழுக்கமில்லாதகுடி. ஒருவன் உயர்குடியில் பிறந்தும் கல்லாவிட்டால் அக்குடிப் பெருமையை அவன் இழந்து விடுவான். தாழ்குடிப் பிறந்த ஒருவன் கற்கின் உயர்குடிக்குரிய பெருமையை அடைவான். இன்று கல்லூரிப்பட்டம் பெற்ற எத்தனையோ தாழ்குடியினர் உயர்குடியில் மணஞ் செய்துள்ளனர். கல்வியே பெருமைக்குக் காரணம்.

பரி : ‘கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தாராயினும் தாழ்ந்த சாதிக்கட் பிறந்து கற்றாரது பெருமை இலராவர்.’

‘பிறப்பொக்கும்’ (972) என்ற வள்ளுவர் கொள்கைக்கு முரணாக ‘உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி’ என்பது பொருந்தாது. மேலும், இவர், ‘உடலோ டொழியும் சாதியுயர்ச்சி’ என்பதால், ஆரியப் பிறிவி வேற்றுமையையே குறிப்பிடுகிறார்.

2. பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972)

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்-எல்லா மக்களுக்கும் பிறப்பு ஒக்கும், செய்தொழில் வேற்றுமையான் சிறப்பு ஒவ்வா-அவரவர்கள் செய்யும் தொழில் வேற்றுமையால் பெறுமை சிறுமை என்னும் சிறப்பு ஒவ்வா.

உயிர் என்றது மக்களை, எல்லா மக்களும் பிறப்பினால் ஒரு தன்மையினரே-ஒத்த பிறப்பினரே, செய்யுத் தொழிலுக்குத் தக்கவாறு மதிக்கப்படுகின்றனர்.

பரி : ‘எல்லா மக்களுயிர்க்கும் பொதுவகையாகப் பிறப்பு ஒக்குமே யெனினும், பெருமை சிறுமை என்னும் சிறப்பியல்கள் ஒவ்வா, அவை செய்யுந் தொழில்களது வேறுபாட்டான்.

உயிர் என்றது ஆகுபெயரால் மக்களை யுணர்ந்த, இவர் உயிரெனவே கொண்டு, அவ்வுயிர் செய்யும் தொழில்களது வேறுபாடென்றும், ‘வினை வயத்தால் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று, அதன் பயன் ஆநுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின் பிறப்பொக்கும் என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும், யாக்கைதோறும் வேறுபடுத்தலின் சிறப்பு ஒவ்வா என்றுங் கூறினார்’’ என்கிறார்.

3. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள (241)

செல்வங்களுள் சிறந்த செல்வமானது அருளாகிய செல்வம்; பொருட் செல்வம் கீழோரிடத்தும் உள்ளது. கீழோர்-நற்குணமும் நல்லொழுக்கமும் இல்லாதவர்.

பரிமேலழகர், ‘பூரியர்-நீசர்’ என்கிறார். நீசராவார்- ‘‘மக்கள் தேவர் நரகர் உயர்திணை’ என நன்னூலார் கூறும் நரகரேயாவர். நரகர்-தாழ்த்தப்பட்டோர். இது

தற்காலத்தே ஆரிய நாகரிக ஆதிக்கத்தால் உண்டானதே. இங்கு நீசர் என்னும் சாதிக்கும் அருளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. துறவற ஒழுக்கங்களுள் அருள் முதன்மையான தொன்றாகையால், பொருட்செல்வம் ஒழுக்க மில்லாது. கீழ் மக்களிடத்தும் உண்டென அருளின் சிறப்பை எடுத்துக் காட்டினார். 'உயர்ந்தோர் கண்ணே யல்ல தில்லாத அருட்செல்வம்' என உயர்சாதியைக் குறிப்பிடுகிறார். உயர்ந்த சாதியார்க்கே அருளுண்டென்பது இவ்விடத்திற்குச் சிறிதும் பொருந்தாது.

### 3. வேள்வி

வேள்வி என்பது தேவர்களுக்கு விருப்ப முண்டாகச் செய்யப்படும் தீத்தொழில். இது பாக வேள்வி, அவி வேள்வி, சோம வேள்வி என முப்பகுதியாய், ஒவ்வொரு பகுதியும் எவ்வேழாய் இருபத்தொரு வகைப்படும். இவையே யன்றி, நாடோறும் செய்யப்படும் பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என ஐம்பெரு வேள்விகளு முண்டு. வேள்வி, யாகம், யக்யம், ஓமம் என்பன ஒருபொருட் கிளவி. வேள்வி செய்தல் ஆரியர்க்குரிய தொழில்களில் தலையாய தொன்று. 259, 328ஆம் குறள்களில் வள்ளுவர் வேள்வியை மறுத்துக் கூறியுள்ளார். சமண பௌத்தர்களும் அவ் வேத வேள்வியை மறுத்து வந்தனர்.

> "வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
> ஆத மில்லி அமணொடு தேரரை
> வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
> பாதி மாதுட னாய பரமனே
> ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
> ஆல வாயி லுறையுமெம் மாதியே."

எனச் சம்பந்தர், வேள்வியை மறுத்த சமண பௌத்தரை அழித்துச் சைவத்தை வளர்க்கும்படி ஆலவாய்ச் சிவனை வேண்டுவதால், தேவார காலச் சைவர்கள் வேள்வியை உடன்பட்டு வந்துள்ளார் எனத் தெரிகிறது. ஆதம்-அன்பு, ஆதம் இல்லி – அன்பில்லாத. தேரர்-பௌத்தர். இவ்வாரிய வேத வேள்வியைப் பரிமேலழகர் வலிந்து புகுத்துகின்றனர்.

1. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
   துணைத்துணை வேள்விப் பயன் (87)

வேள்விப் பயன் இணைத்துணைத்து என்பதொன்று இல்லை – விருந்தோம்பலின் பயன் இன்ன அளவினது என்று கூறும் ஓர் அளவினை

யுடையதன்று, விருந்தின் துணைத்துணை-அவ்விருந்தினரது தகுதியின் அளவே அதற்கு அளவாகும். வேள்வி – உதவி.

பரி : ‘வேள்விப் பயன்-விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன், ஐம்பெரு வேள்வியின் ஒன்றாகலின் வேள்வி என்றும்’

ஐம்பெரு வேள்வியாவன-பிரமயாக முதலிய. பிரம யாகம்-வேதமோதல். தேவயாகம்-ஓமம்வளர்த்தல், மானுட யாகம்- விருந்தோம்பல். பிதிர்யாகம்-சிரார்த்தம செய்தல். பூதயாகம்-பலியீதல், யாகம்-வேள்வி.

வேள்வி என்னும் சொல்லுக்கு இவர் கொண்ட பொருளே தவறு. மற்ற வேள்விகளையும் தமிழரை நம்பும் படி செய்ய வேண்டும் என்று நோக்கத்துடன் கொண்டதேயாகும்.

2. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. (384)

அறன் இழுக்காது – அறனெறி தவறாது, அல்லவை நீக்கி –அறமல்லாத குற்றங்களை நீக்கி, மறம் இழுக்கா மானம் உடையது அரசு-வீரத்தினின்று தவறாத மானத்தையடையவனே அரசனாவான்.

பரி : ‘அறமாவது-ஓதல், வேட்டல், ஈதல், என்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லுயி ரோம்பல், பகைத்திறத் தெறுதல் என்னும் சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றல்’

இத்தொழில்கள் கூற வேண்டிய இடமே இங்கில்லை, அறம் என்பதற்கு அரசன் செய்யும் தொழில்களைக் கூறதல் பொருந்தா உரையேயாகும்.

3. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு (385)

இயற்றலும் - பொருள் வரும் வழிகளை மேன்மேல் உண்டாக்கலும், ஈட்டலும்-வந்த பொருளைச் சேர்த்து வைத்தலும், காத்தலும்-அவற்றைக் காப்பற்றதலும், காத்த வகுத்தலும்-அப்படிக் காப்பாற்றியவற்றை நாட்டு நலத்தில் செலவிடுதலும், வல்லது அரசு-வல்லவனே அரசனாவான்.

பரி : ‘காத்த வகுத்தலும்-காத்தவற்றை அறம்பெருளின்பங்களின் பொருட்டு விடுத்தலும். கடவுளர், அந்தணர், வறியோர் என்றிவர்க்கும், புகழுக்கும் கொடுத்தலை அறப்பொருட்டாகவும்’

கடவுளர்க்கு என்றது வேள்விக்கும், அந்தணர்க்கு என்றது பிராமணர்க்குங் கொடுத்தலை. இது ஒருசார் மனுமுறையையேயாகும். வேள்விக்குக் கொடுத்தல் தமிழரசர் அறமன்று.

4. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
   தந்தம் வீனையாள் வரும். (63)

அவர் பொருள்-மக்கள் தேடும் பொருள், தம்தம் வினையான் வரும்-அவரவர் தொழிலுடனே பெற்றோர்பால் வரும் ஆதலால், தம் மக்கள் தம்பொருள் என்ப-தம் மக்களைத் தம்பொருள் என்பர் அறிவுடையோர். மக்கள் பெற்றோரின் கீழ் வாழ்வதால், அம்மக்கள் செய்யும் தொழிலும், அத்தொழிலால் அவர் தேடும் பொருளும் பெற்றோரையே சேரும் என்பதாம். பெற்றோர்க்கு மக்களே பெருஞ் செல்வம்.

பரி : ‘தம் புதல்வரைத் தம் பொருளென்று சொல்லுவர் அறிந்தோர். அப்புதல்வர் செய்த பொருள் தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான், நன்மக்கட் பெற்றோர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.’

‘தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினை’ -இறந்து போன பெற்றோரை நோக்கி மக்கள் செய்யும் நிதி நல்வினை-நிதி. தம்பால்-அப்பெற்றோர்பால். சிரார்த்தத்தில் புரோகிதருக்குக் கொடுக்கும் பொருள் பெற்றோரைச் சேருமென்பது கருத்து, பெற்றோர்க்கு மறுமைப் பயன் அவர் மக்கள் செய்யும் சிரார்த்தமேயாகும்.

**துறக்கம், நரகம்**

துறக்கம்-சுவர்க்கம், துறக்கவுலகம், தேவருலகம், புத்தேனாலகம், வானுலகம், மேலுகலகம், விண்ணுலகம் என்பன வெல்லாம் ஒரு பொருட் சொற்கள், இவையெல்லாம் மண்ணுலகத்தில் உள்ள இடங்களேயன்றி, திங்கள் விண்மீன் முதலியன போல வானவெளியில் உள்ளனவல்ல, தேவர் என்பாரும் மக்களேயாவர். நரகம் என்பது பெருந்துன்பம். அது ஓரிடம் என்பதும், அது தெற்கே யுள்ளதென்பது கற்பனைப் படைப்பு.

1. அடக்கம் அமரருள் உயக்கும் அடங்காமை
   ஆரிருள் உய்த்து விடும் (121)

அடக்கம் அமர் அருள் உய்க்கும்-அடக்கம் மிக்க மேன்மையைக் கொடுக்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்து விடும்-அடக்கமின்மை மிக்க துன்பத்தைக் கொடுத்து விடும்.

அடக்கம்-மனமொழி மெய் அடங்குதல். அருள்-மேன்மை, அமர்தல்-பொருத்துதல். அமர் அருள்-அமர்ந்த அருள்-மிக்க அருள், இருள்-துன்பம், ஆர் இருள்-மிக்க துன்பதும்-பொருந்துன்பம். அடக்கம் இன்பத்தையும் அடங்காமை துன்பத்தையும் தரும்.

பரி : 'அடக்கம் அமரருள் உய்க்கும்-ஒருவனை அடக்கமாகிய அறம் பின்தேவருலகத் துய்க்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் - அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட் செலுத்தும். இருள் என்பது ஓர் நரக விசேடம்'

அடக்கமுள்ளவன் இறந்தபின் தேவருலகத்தை யடைவான், அடங்காதவன் இறந்தபின் நரகத்தை அடைவான் என்பதாம்.

**புராணக்கதை**

புராணம் என்பது சிறுவர்களுக்குச் சொல்லிய பஞ்சதந்திரக் கதைகளைப் போலப் பெரியவர்களுக்குச் சொல்லிய கற்பனைக் கதைகளேயாகும். புராணம்-பழங்கதை இது.

> 'இறைவன் வேதாகமங்களை ஓதியருளியதன்றி, அவற்றை ஓதவும் உணரவும் ஏலாத ஏனையோர் பொருட்டு அவ் வேதாகம சாரத்தை யுட்கொண்ட சரிதமாகிய புராணங்களை அருளி, நந்திதேவர் மூலமாக அகத்தியராதி முனிவர்களுக்கு உபதேசிப்பித்தார்.'

எனத் தெய்வத் தொடர்பாக்கப்பட்டுள்ளது. புராணக் கதைகள் பெரும்பாலன இயற்கைக்கு ஒவ்வாததும், மக்கட்டன்மைக்கு அப்பாற்பட்டதுமாகவே உள்ளன. அவற்றைக் கதைக்காகக் கொள்ளாமல் உண்மை நிகழ்ச்சியெனக் கொள்வதே தகாமையாகும்.

1. ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
   இந்திரனே சாலுங் கரி. (25)

ஐந்து அவித்தான் ஆற்றல் - ஐம்பொறிகளையும் அடக்கினவனது வல்லமைக்கு, அகல் விசும்பு உளார் கோமான் - இந்திரனே – அகன்ற வானுலகத்தார்க்குத் தலைவனாகிய இந்திரனே சாலும் கரி-தக்க சான்றாவான்.

பரி : ‘தான் ஐந்தவியாது சாபம் எய்தி நின்று அவித்தவன தாற்றல் உணர்த்தினானாகலின், இந்திரனே சாலுங்கரி என்றார்.’

அவித்தவன்-கௌதம முனிவர் கௌதமர் குளிக்கச் சென்றபோது அவர் மனைவி அகலிகையோடு இந்திரன் கூடியிருக்கக் கண்ட முனிவர் அவளை கல்லாகச் சபித்ததோடு, இந்திரனை உடம்பெல்லாம் பெண்குறி உண்டாகும்படி சபித்தனர் என்பது புராணம். இங்கே வள்ளுவர் தமிழ்த் துறவிகளின் பெருமை கூறுகிறேரேயன்றி, ஆரிய மூனிவர்களின் பெருமை கூறவில்லை.

2. மடியிலா மன்னவன் எய்து மடியளந்தான்
   றாயஅ தெல்லா மொருங்கு. (610)

மடியில்லா மன்னவன் - சோம்பலில்லாத அரசன், மடி அளந்து ஆன்றாயது எல்லாம் - சோம்பலடைந்ததால் முன்பு தன்னை விட்டு நீங்கிய செல்வத்தை யெல்லாம், ஒருங்கு எய்தும் - ஒருங்கே அடைவான்.

அளத்தல்-கலத்தல். அளவளாவி என அறிக. மடி-சோம்பல். மடி அளந்து-சோம்பலைக் கலந்து-சோம்பவடைந்து. ஆன்று-நீக்கி. முடிந்தது-முடிந்தாயது என நிற்பது போல, ஆன்றது – ஆன்றாயது என நின்றது. ஆன்றது – வினையாலணையும் பெயர். நீங்கிய செல்வத்தைக் குறித்தது. சோம்பலில்லாத அரசன், முன்பு சோம்பவடைந்ததால் இழந்த செல்வத்தை யெல்லாம் ஒருங்கடைவான் அடியளந்தான் - வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனவும், தாயது-அவன் கொண்ட நிலம் எனவும் கொள்ளலாம்.

பரி : ‘மடியிலா மன்னவன், அடியளந்தான் தாயது எல்லாம்-தன் அடியளவானே எல்லா வுலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதையும். ஒருங்கே எய்தும்.’

இது, திருமால் இந்திரன் வேண்டுகோளால் வாமனனாகப் பிறந்து, மாவலியிடம் மூன்றடி மண்ணிரந்து பெற்று, பின் முப்பேருருவனாகி, (திரிவிக்கிரமன்), அதாவது ஒரு கால் பாதாளத்தையும், மற்றெறாகால்

மேலுகத்தையும் பொருந்தா உலகமுழுவதும் தானேயாகி, மாவலி தலையில் மேலே தூக்கிய காலைவைத் தழுத்திக் கொன்றனன் என்னும் புராணக் கதையாகும்.

**பெண்ணடிமை**

பெண்களை உடைமைகளி லொன்றாகக் கொள்வது ஆரிய நாகரிகம். பெண்களை வாழ்க்கைத் துணையாகக் கொள்வது தமிழ் நாகரிகம். எனவே, பெண்ணடிமை என்பது தமிழர் பண்பாடன்று.

3. பெற்றாற்ப் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
   புத்தேளிர் வாழு முலகு. (58)

பெற்றார் பெறின்-கணவனை மனவுறுதியுடையராகப் பெற்றால், புத்தேளிர் வாழுமுலகு-தேவருலகில், பெண்டிர் பெரும் சிறப்புப் பெறுவர் - பெண்கள் பெருஞ்சிறப்பை அடைவர்.

பெற்றார்-பெண்களை மனைவியாகப் பெற்றவர் - கணவர். கணவரும் மனவுறுதி யுடையராகப் பெற்றால், ஒரு மனப்பட்டு உயரிய வாழ்க்கை நடத்தி, அயல் நாடரும் புகழும் பெருஞ்சிறப்பினைப் பெறுபவர் பெண்டிர் என்பதாம். மேல் (57) மனைவியர் கூறினார். இதில் கணவர் மனவுறுதி கூறினார். கணவர் மனமொத்து நடக்கும்படி நடந்து கொள்வது பெண்கள் கடமையாகும். இது ஆண்கட்கும் ஒக்கும்.

பரி : ‘பெண்டிர் பெற்றான் பெறின் - பெண்டிர் தம்மை யெய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின்.’

இது, திருமால் இறந்தபின் தேவர் சிறப்புச் செய்ய இப்போது கணவனை வழிபடுதல் வேண்டுமென்பது கருத்து. (மனு, அ-5, சு-155) கணவன் மனமொத்து நடக்கும்படி நடந்து குடும்ப நடத்தும் பெண்களைத் தந்நாடே யன்றி அயல் நாடும் புகழு மென்பது வள்ளுவர் கருத்தேயன்றி, இறந்தபின் புகழப்படுவதை யன்று, இவர் மறுமைப் பயன் கூறுவதாகக் கொண்டதே தப்பு.

2. பெறுமவற்றுள் யாமறிய தில்லை அறிவறிந்த
   மக்கட்பே றல்ல பிற. (61)

நாம் பெறும் பேறுகளுள் அறிவுடைய மக்கட் பேற்றைவிடச் சிறந்த பேறு வேறில்லை.

பரி : ‘அறிவறிந்த’ என்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது.

வள்ளுவர் ‘மக்கட்பேறு’ என்று அதிகாரத்திற்குப் பொதுவாகப் பெயரிட்டிருக்க, இவர் ‘புதல்வரைப் பெறுதல்’ என்று ஆண்பாலாகக் கொண்டதற் கேற்பவே இவ்வாறு கூறினார். சங்ககாலத்தே செந்நாப்புலமை யடைய பெண்கள் பலர் சங்கப்புலவர்களாய் இருந்திருக்க, இலக்கியம் இலக்கணம் இரண்டினாலும் ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டு நூல்கள் எழுதியிருக்க, அறிவுக் கொள்கலமாகிய அவ்வையா ரிருந்திருக்க, பெண்களுக்கு அறிவில்லையென்றோ. அறிவு பெறக்கூடாதென்றோ கொள்ளுதல் தமிழர் பண்பாடன்று வள்ளுவர் கொள்கை யுமல்ல. எல்லாத் தமிழரசியரும் சிறந்த புலமையுடையவராகவே விளங்கியுள்ளனர்.

3. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (69)

தன் மகனை அறிவில் நிறைந்தோ னென்று அறிவுடையோரால் சொல்லக் கேட்ட தாய், பெற்ற பொழுதைவிடப் பெரிதும் மகிழ்வான்.

ஒருமை பற்றி ‘மகன்’ என்றார், மகளும் கொள்க. தந்தையைவிடத் தாயே மக்கள் பெருமை கண்டு மகிவும் மகிழ்வாளாதலால் ‘தாய்’ என்றார். அறிவுடையோரால் உங்கள் மகன் சிறந்த அறிவுடையவன் என்று சொல்லக் கேட்ட பெற்றோர் மிகவும் மகிழ்வர் என்பதாம்.

பரி : பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாயெனவுங் கூறினார்.’

தம் மகனைத் தாமாக அறிவில் சிறந்தவனென்று யாருஞ் சொல்லிக் கொள்ளார். தாமாகச் சொல்லிக் கொள்வதில் பயனுமில்லை. பிறர் செல்வதுதான் ஏற்றதாகும்.

**பெண்வழிச் சேறல் (91)**

வாழ்க்கைத் துணைவர்களாகிய ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் ஒத்த உரிமையுடையவராய் நடந்து கொள்ள வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் அறம் பொருளின்பம் அடைந்து அமைவுடன் வாழலாம். இல்லறத்தார்க்குரிய கடமைகளையும் குறைவின்றிச் செய்து புகழுடன் வாழலாம். இங்ஙனமன்றி, ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அடங்கித் தன்னுரிமையிழந்து, அவரேவல் கேட்டு நடப்பாராயின் இல்லறம் இனிது நடைபெறாது. வாழ்க்கையில்

செய்ய வேண்டுவன செய்து இன்புற முடியாது. அறம்பொருளின்பம் அடைய முடியாது.

சில பெண்கள் தம் கணவர்களை அடக்கித் தம்கீழ்ப்படுத்தி, தாம் சொல்லுகிறபடி தம் கணவர் ஆடுமாறு ஆட்டிவைக்கின்றனர். அப் பெண்ணேவல் செய்தொழுகுவோர் தம் மனைவியர்க்கு வேண்டாத சுற்றத்தாரைப் போற்றவோ, தாம் விரும்பினவர்க்கு ஒன்று செய்யவோ, விரும்பிய தொன்றைக் கொடுக்கவோ முடியாமல் மானங் கேட்டு நிற்கின்றனர்.

**சமயக்கருத்து**

திருக்குறள் ஒரு சமயச் சார்பற்ற நூல். அகம் புறம் என்னும் மக்கள் வாழ்க்கை முறையை, அறம் பொருளின்ப மென முப்பாலாக்கிக் கூறும் வாழ்க்கைச் சட்ட நூலேயன்றித் திருக்குறள் ஒரு சமய நூலன்று. எச்சமயத்திற்கும் உடன்பாடான நூல் என்பதும் பொருந்தாது. வாழ்க்கை வேறு, சமயம் வேறு, வாழ்க்கைக்கும் சமயத்திற்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. சமயச் சார்பற்ற வாழ்க்கையே உயரிய நல்வாழ்க்கையாகும். வாழ்க்கைத் தேரை இனிது செல்லாமல் தடை செய்யும் மேடு பள்ளமும் மணலும் புழுதியும் சேறுமேயாகும் சமயங்கள்; வாழ்க்கை வழியிடைப்பட்ட பேரிருளேயாகும் சமயம்.

இத்தகைய சமயச் சார்பற்ற குறளில், பரிமேலழர் வேண்டுமென்றே வினை, பிறப்பு, வீடு முதலிய சமயக் கருத்துக்களை வலிந்து புகுத்தி, திருக்குறள் சமயச் சார்பான நூலென எண்ணும் படி செய்து விட்டனர்

**1. வினை**

வினை என்பது – ஒருவன் செய்த வினை அவன் உயிர் எடுக்கும் பல பிறப்புக்களிலும் அவ்வுயிரோடு தொடர்ந்து செல்லும், அவ்வினையே பிறப்புக்குக் காரணம். அது நல்வினை தீவினை என இரண்டு வகைப்படும் என்பது சமயக் கற்பனை.

1. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
   பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

இறைவன் பொருள் சேர்புகழ் புரிந்தார் மாட்டு - இறைவனது மெய்ப்பொருள் சேர்ந்த புகழை விரும்பினவரிடத்து, இருள் சேரும் இருவினை சேரா – அறிவின்மையால் உண்டாகும் பெரிய துன்பங்கள் சேரா.

இருள் - அறிவின்மை. வினை – துன்பம். இருமை-பெருமை. இருங்கடல் எனக் காணலாம்.

பரி : ‘இருள்சேர் இருவினையும் சேரா – மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையும் உளவாகா’.

அறியாமையால் -அறிவு மயக்கத்தால் தீவினை தான் செய்வார்களே தவிர, நல்வினை செய்வெதங்ஙனம்? அறியாமை நல்வினைக்குக் காரணமாயின் அறிவினாலாய பயனென்? இறைவன் புகழை விரும்பினார்க்குப் பெருந்துன்பங்கள் சேரா என்பதே நேர்பொருளாகும்.

2. தீவினையா ரஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
   தீவினை யென்னும் செருக்கு. (201)

தீவினை என்னும் செருக்கு-தீச்செயல் என்னும் களிப்பை, தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர் -தீச்செயலுடையார் அஞ்சார், சீரியர் அஞ்சுவர்.

களிப்பு-தீச்செயல் புரிந்ததால் ஏற்படும். மிகுமகிழ்ச்சி. தீவினையார்-தீச்செயல் புரிந்து பழகினர். தீவினை கெட்ட காரியம்.

பரி : ‘தீவினை என்னும் செருக்கு – தீவினை யென்று சொல்லப்படும் மயக்கத்தை, தீவினையார் அஞ்சார்-முன்செய்த தீவினை யுடையார் அஞ்சார், விழுமியாச் அஞ்சுவர்-அ∴திலராகிய சீரியர் அஞ்சுவர்.’

தீவினையார்-தீச்செயல் செய்து பழகினவர்; தீச்செயல் பரிபவரேயன்றி, முற்பிறப்பில் செய்த தீவினையார் அல்லர். முன்செய்த தீவினைப்படி தீவினை செய்யின் குற்றம் அவருடையதன்றே. வினைப்படி நடப்பதற்கு அவரென்ன செய்வர்? வினைப்படி நடக்கும் செயலை எப்படி அஞ்சிச் செய்யாது தவிர்க்க முடியும்?

3. அறந்தா றிதுவென வேண்டா சிவிகை
   பொறுத்தானோ டூர்ந்தா னிடை. (37)

சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை-பல்லக்கைச் சுமப்பானிடத்தும், அதில் ஏறிச் செல்வானிடத்தும். இது அறத்தாறு என வேண்டா-இது அறநெறி என்று கூறவேண்டா.

பொறுத்தல்- சுமத்தல். மக்களில் ஒருவரை ஒருவர் சுமக்கும் முறை அறமாகாது. இது மக்கட் பண்பாட்டுக்குத் தகாத முறையாகும். செல்வத்திலும்,

தன்மையிலும் இவ்வளவு ஏற்றத்தாழ்வு அறமாகாது என்பதாம். ஓடு-எண்ணொடு நீண்டது. இடை-இடம்.

பரி : 'அறத்து ஆறு இது என வேண்டா-அறத்தின் பயன் இதுவென்று' யாம் ஆகமவளவையான் உணர்த்தல் வேண்டா, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தா விடை-சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்.'

'பயனை ஆறென்றார், பின்னதாகலின்' என்பதால், முற்பிறப்பில் அறஞ்செய்தவன் பல்லக்கின் மேலும், அறஞ் செய்யாதவன் பல்லக்கைச் சுமந்தும் செல்கின்றனர் என்பது கருத்தாகும். ஆகமம்-நூல், அறம்-செய்வன தவிர்வனவே யன்றி ஈகையன்று.

4. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
   தொகுத்தார்க்கும் துய்த்த லரிது (377)

கோடி தொகுத்தார்க்கும்-கோடியளவு நுகரப்படும் பொருள்களைச் சேர்த்து வைத்தவர்களுக்கும், வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது-அப்பொருள்களை உண்டாக்கியவர்களது வகைப்படி யல்லாமல் வேறு வகையினால் நுகர்தல் முடியாது.

நுகர் பொருள் பலவாகலின், ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வகையினர் ஒவ்வொரு வகையாகச் செய்தனர் என்பது தோன்ற 'வகுத்தான்' என ஒருமையாற் கூறினார். குளிருக்குரிய கம்பளி வெயிலுக்காகாது. பனிநீரும் தேம்பாகும் சளிப் பிடித்தவனுக்காகா என, நுகர்பொருளின் தகுதியும், நுகர்வோன் தகுதியும் ஒவ்வாமை கூறினார். பொருள்களின் தகுதிக்கு மாறக நுகரப்படாதென்பது கருத்து.

பரி : 'வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது-தெய்வம் வகுத்த வகையா னல்லது நுகர்தலுண்டாகாது.'

தெய்வம்-ஊழ். 'ஓருயிர் செய்த வினையின் பயன் பிறிதோர் உயிரின் கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், வகுத்தானென்றார்' என்பதால், ஒருவன் செய்தவினை அவன் உயிரையே தொடருமென்பதும், வினைப்படியே எல்லாம் நடக்கும் என்பதும் சமயக் கருத்துக்களேயாகும்.

5. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
   கெடுக உலகியற்றி யான். (1062)

உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்-இவ்வுலகத்தை உண்டாக்கியவன் மக்கள் முயற்சியால் உயிர் வாழ்தலை விரும்பாது பிறரிடம் சென்று இரந்தும் உயிர் வாழ்தலை விரும்புவானால், பரந்து கெடுக-அக்கொடியோன் இரப்போரைப் போன்று எங்குந் திரிந்து கெடக்கடவன்.

தொழில் செய்தற்கேற்ற கை கால் முதலிய உறுப்புக்களும், பகுத்தறிவும் இருந்தும் ஒரு சிலர் பிறரிடம் சென்று இரத்தல் தகாது என்பதை இவ்வாறு கூறினார். இது உலகம் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்னும் சொள்கையைக் கொண்டு கூறியது.

பரி : 'மக்களுயிர்க் கெல்லாம் வாழ்நாளும், அதற்கு வேண்டுவதாய் உண்டியும், அதற்கேதுவாய் செய்தொழிலும் பழவினை வயத்தால் கருவொடு கலந்தவன்றே அவன் கற்பிக்குமன்றே'

கழவினையால் ஒருவற்குக் கருவொடு இவை அமையுமெனில், முயற்சியும், பிறர்க்குக் கொடுக்க வேண்டுமென்பதும், இரத்தல் இழிவென்பதும், வினைப்படி படைத்தவனுக்கு எதிரிடையாகச் செய்வதாகுமன்றோ? இது பச்சைச் சமயக் கருத்தாகும்.

## 1. பிறப்பு

உயிர், தான் செய்யும் வினைக்கீடாகப் பல பிறப்புக்கள் எடுக்கிறது. யோக ஞானங்களால் உயிர் பிறப்பற்று வீடு பெறும். நாம் பிறவா நிலையை அடைய முயல வேண்டும் என்பனவெல்லாம் சமயக் கருத்துக்களாகும். இத்தகைய கருத்துக்கள் எதுவும் திருக்குறளில் கூறப்படவில்லை. வேண்டுமென்றே பரிமேலழகர் புகுத்துவதே யாகும்.

1. யாண்டும் இடும்பை இல (4) –எப்போதும் துன்பம் இல்லை.

பரி : 'யாண்டும் இடும்பை இல-எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா. பிறவித்துன்பங்களாவன தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப் பற்றி வருவனவும் என மூவகையான வருந்துன்பங்கள்.'

பிறவித்துன்பம்-பிறவிக்குக் காரணமாகிய துன்பம், இடும்பை என்பது - இடுக்கண், வருத்தம் என்பனபோலவே, துன்பம் எனப் பொருள்பட, இவர் 'பிறவித்துன்பம்' என வலிந்து பொருள் கொண்டு, அதை மூவகையாக்கிச் சமயக் கருத்தை வலிந்து புகுத்துகிறார்.

2. தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. (7)

ஒப்பில்லாதவனது தாளைச் சேர்ந்தவர்க்கு அல்லாமல் மற்றோர்க்கு மனக்கவலையை நீக்க முடியாது. தனக்கு மேல் ஒருவன் இருந்தால் தானே தான் அவனினும் தாழ்ந்தவன் என்னும் கவலை யுண்டாகும்? வண்டியில் செல்வோர்க்குத் தானே வானூர்தி யில்லையே என்று கவலை? வானூர்தியில் செல்வோர்க்கு அதற்கு மேல் செல்லும் ஓர் ஊர்தியின்மையால் கவலையுண்டாக இடமில்லை என்பதையறிக. ஒப்பில்லாத உயர்குண முடையோர்க்கு மனக் கவலையில்லை.

பரி : 'தான் சேராதார் பிறவிக் கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து அவற்றான் வருந் துன்பங்களுள் அழுந்துவ ரென்பதாம்.'

காம வெகுளி மயக்கங்கள் பிறவிக்குக் காரணம் என்பது சமயக் கருத்தாகும். காம வெகுளி மயக்கங்கள் பிறவிக் கேது; அவற்றால் பிறந்து, பின்பும் காம வெகுளி மயக்கங்களால் வருந்துன்பங்களுள் அழுத்துவர் என்பது மறுபடியம் மறுபடியும் அவற்றால் பிறந்து கொண்டே துன்புற்றுக் கொண்டே இருப்பதென்னும் சமயக் கற்பனையே யாகும்.

3. எழுபிறப்பும் தீயவை தீண்டாய் பழிபிறங்காய்
பண்புடை மக்கட் பெறின் (62)

பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்-குற்றமற்ற நன்மக்களைப் பெற்றால், ஏழுபிறப்பும் தீயவை தீண்டா-எழு தலை முறைகளிலும் தீமைகள் சேரா.

ஏழ் என்னும் எண்ணுப் பெயர் பல என்னும் பொருளது. ஒருவன் தன்மை ஏழு தலைமுறை வரையிலும் இருக்கும் என்னும் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி முடிவு இங்கு நோக்கத்தக்கது. நல்லோர் பிறந்தகுடி பல தலைமுறை மதிக்கப்பட்டு தலையறிக. நன்மக்கள் பிறந்த குடும்பம் பல தலைமுறை மதிப்பும்பெறும்.

பரி : 'எழுப்பிறப்பும் தீயவை தீண்டா-வினைவயத் தாற் பிறக்கும் பிறப்பேழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவானாயின.

அவன் தீவினை வளராது தேய்தற்குக்காரணமாகிய நல்வினைகளைச் செய்யம் புதல்வரைப் பெறுவானாயின் என்றவாருயிற்று. தந்தை தாயர் தீவினை

தேய்தற் பொருட்டு, அவரை நோக்கிப் புதல்வர் செய்யும் தான தருமங்கட்கு அவர் (புதல்வர்) நற்குணங் காரணமாகலின்.'

மக்கள் செய்யும் தானதருமங்களால் பெற்றோர் பிறவித்துன்பங்கள் நீங்குமென்பது சமயக் கருத்தேயாகும். இது சிரார்த்தஞ் செய்தலாகும்.

4. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துலிடத்தவர் நட்பு. (107)

தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு-தமக்குற்ற துன்பத்தை நீக்கினவரது நட்பை, எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் - அறிவாளிகள் எப்போதும் நினைப்பர்.

எழுபிறப்பு-பல தலைமுறை, கோவலன், பல தலைமுறைக்கு முற்பட்ட தன் முன்னோ னொருவனைக் கடலினின்று கரையேற்றிக் காத்த மணிபல்லவத்து அரசியான மணிமேகலையின் நன்றியை மறவாது, தன் மகளுக்கு 'மணிமேகலை' என அவள் பெயரை இட்டமை அறிக.

பரி : 'தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்-எழுமையினையுடைய தம் எழுவதைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.

எழுமை என்றது-வினைப்பயன் தொடரும் எழுப்பிறப்பினை நினைத்தலாவது-துன்பத் துடைத்தலான் அவர் மாட்டுளதாகிய அன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்து அன்புடையராதல்'

ஓருயிர் எழுப்பிறப்பில் செய்த வினையின் பயன் அவ்வுயிர் ஏழு பிறப்பினும் தொடரும் என்பதும். ஒரு பிறப்பில் கொண்ட அன்பு பல பிறப்புக்களிலும் தொடர்ந்து அன்புடையராக்கும் என்பதும் சமயக் கருத்துக்களே யாகும்.

5. ஒருமையு ளாமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (126)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின் ஒரு கூட்டிற்குள் ஐந்துறுப்பினையும் அடக்கும் ஆமையைப் போல, ஐம்பொறிகளும் ஐம்புலன்கள் மேலும் விரும்பியவாறு செல்லாமல் அடக்கவல்லனாகில், எழுமையும் ஏமாப்பு உடைத்து –அச்செயல் பல தீமைகளும் அணுகாத பாதுகாப்பாக உடையது.

ஏழு – பல. ஐம்பொறி யடக்கமே துன்பம் அணுகாமைக்குக் காரணமாகும். காணவேண்டும், கேட்கவேண்டும், சுவைக்க வேண்டும். துய்க்க வேண்டும் என்னும் விருப்பமே துன்பத்திற்குக் காரணமாதலை அறியலாம்.

> பரி : ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் - ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பின் கண் ஐம்பொறிகளையும் அடக்க வல்லனாயின், ஏழுமையும் ஏமாப்பு உடைத்து–அவ்வன்மை அவனுக்கு ஏழுபிறப்பின் கண்ணும் அரணாதலையுடைத்து. ஒருமை மக்கட் செய்த வினையின் பயன் எழுமையும் தொடரு மென்பது இதனானறிக.'

ஒருமை என்பதை ஒன்றெனக் கொள்ளாது ஒரு பிறப்பனெக் கொண்டதே தவறு. 'ஒருமை மகளிர்' (973) என்பதற்கு இவர் ஒன்று என்றே பொருனெழுதி யுள்ளார். ஒரு பிறப்பிலும் தொடருமென்பது சமயக் கருத்தாகும்.

**வீடு**

ஒருவன் இறந்த பின்னர் அவன் உயிர் அடையும் பல இடங்களில் வீடும் ஒன்றாகும். மற்ற இடங்களை அடைந்த உயிர், தான் செய்த நல்வினை தீர்ந்ததும் மறுபடியும் பழையபடி இவ்வுலகில் பிறக்கும். வீடு என்பது பிறவா நிலையாகும். வீடடைந்த உயிர் மீண்டும் பிறப்பதில்லை என்னும் சமய நூற்கள்.

உரைப்பாயிரத்தில், 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடும்' என வலிந்து புகுத்துகிறார்.

1. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
   வீடில்லை நட்பாள் பவர்க்கு (791)

நட்டபின் வீடு இல்லை-ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடமுடியாது.

வீடு-விடுதல், முதனிலை திரிந்த தொழிற்பெயர், திருக்குறளில் வீடு என்னும் சொல் இந்த ஒரே இடத்தில் தான் வந்துள்ளது. உயிர் பிறப்பற்று வாழும் பொருளுடைய வீடு என்னும் சொல் எங்கும் வரவில்லை. இதற்குப் பரிமேலழகரும் 'நட்டபின் வீடு இல்லை-ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடுதல் உண்டாகாது' என்றே பொருளெழுதியுள்ளார். இனி இவர் வலிந்து புகுத்தும் இடங்கள் வருமாறு.

2. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (23)

இருமை வகை தெரிந்து –நன்மை தீமைகளின் பாகுபாடுகளை நன்கு அறிந்து, ஈண்டு அறம் பூண்டார் பெருமை-மிக்க அறத்தைக் கைக்கொண்டவர் பெருமையே, உலகு பிறங்கிற்று-உலகின்கண் உயர்ந்தது, ஈண்டுதல்-மிகுதல். ஈண்டறம்-வினைத்தொகை

பரி : இருமை வகை தெரிந்து-பிறப்பு வீடு என்னும் இரண்டனது இன்பதுன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, ஈண்டு அறம் பூண்டார் பெருமை அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே, உலக பிறங்கிற்று-உலகின் கண் உயர்ந்தது.’

ஒருவன் தனது பிறப்பை யறுத்து வீடு பெறச் செய்யும் முயற்சி ‘உலகின்கண் உயர்ந்தது’ என்பது பொருந்தாக் கூற்றாகும். அது தமிழர் துறவற நிலையன்ற. நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, பிற வுயிர்கட்கு நன்மையே செய்யும் பெரியோரை உலகத்தார் பெருமைப்படுத்துவர் என்பதே நேர் பொருளாகும்.

3. உரனென்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து (24)

உரன் என்னும் தோட்டியால்-அறிவு என்னும் குத்துக்கோலால், ஓர் ஐந்தும் காப்பான் - பொறிகளாகிய யானைகள் ஐந்தனையும் புலன்கள் மேல் செல்லாமல் காப்பவன், வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து-துறவறம் என்னும் சிறந்த நிலத்திற்கு ஒப்பற்ற விதையாவான்.

வரம்-சிறந்தது, ஐம்பொறி யடக்கத்தின் வளர்ச்சியே துறவறமாகும். பொறியடக்கமுள்ளவன் துறவறத்தில் நிலைத்து நிற்பதால் வித்தென்றார்.

பரி : பரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து-எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம். அந்நிலத்தில் சென்று முளைத்த வித்தென்றார். ஈண்டும் பிறந்திறந்துவரும் மகனல்லன் என்பதாம்.’

புலனடக்கம் உடையோர் உறுதியாக வீடு பெறுவர் என்பது கருத்து. புலனடக்க முடையவரே துறவறத்திற்கு ஏற்றவராவர்; புலனடக்கமே துறவறத்திற்குச் சிறந்த உறுப்பாகும் எனப் புலனடக்கத்தின் சிறப்புக்

கூறினாரேயன்றி, வீட்டைப் பற்றிய பேச்சிங்கில்லை. புலனடக்க முடையோரே துறவறத்தில் நிலைத்து நிற்க முடியுமென்பது கருத்து.

**கடவுள்**

திருக்குறள் மக்கள் வாழ்க்கைமுறை கூறும் நூலேயன்றிச் சமயக் கருத்துக்கள் எதுவும் குறளில் இல்லை. அவ்வாறே கடவுளைப் பற்றிய பேச்சும் திருக்குறளில் இல்லை. கடவுள் என்ற சொல்லே திருக்குறளில் வரவில்லை. திருக்குறளின் முதலதிகாரத்திற்குக் 'கடவுள் வாழ்த்து' எனப் பெயரிட்டதே உரையாசிரியர்களாவர். வள்ளுவர் ஓரதிகாரத்தில் வரும் சொல்லையோ, சொற்றொடரையோ கொண்டே அவ் வதிகாரத்திற்குப் பெயரிட்டுள்ளனர். முதலதிகாரத்தில் கடவுள் என்னும் சொல் வரவில்லை. அம்முதலதிகாரம் கடவுள் வாழ்த்தென்றுங் கூறவில்லை, மக்களின் உயர்ந்த குணங்களையே ஆண்பாலாகக் கொண்டு கூறியுள்ளார் வள்ளுவர்.

பரிமேலழகர் முதலதிகாரத்திற்குக் கடவுள் வாழ்த்து எனப் பெயரிட்டதோடு நில்லாது, அம் முதலதிகாரம் ஆரியக் கடவுள்களான மும்மூர்த்திகளின் வாழ்த்தெனவும் துணிந்து கூறுகிறார்.

'கடவுள் வாழ்த்து-கவி தான் வழிபடு கடவுளையாதல், எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளை யெனவறிக. சத்துவ முதலிய குணங்கனான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு, அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயையுண்டாகலான். அம் மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம் மூவரையம் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ் வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென வுணர்க.

வழிபடுகடவுள்-ஒருவன் நாடோறும் வழிபடுங் கடவுள். அதாவது அவனது சமயக் கடவுள். ஏற்புடைக் கடவுள்-நூலில் கூறும் பொருளுக் கேற்ற கடவுள். முக்குணம்-சத்துவம், இராசதம், தாமதம் என்பன. அக்குணங்களால் மூன்றாகிய உறுதிப் பொருள் - அறம் பொருள் இன்பம் என்பன. அவற்றான் மூவராகிய முதற் கடவுள்-அயன், அரி, அரன் என்பார். வள்ளவர் இம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனக் கொண்டு அதற்கேற்பவே அவ்வதிகாரக் குறள்களுக்குப் பொருள் எழுதியுள்ளார். வள்ளுவர் காலத் தமிழர்கள் இம் மும்மூர்த்திகளைக் கடவுளாகக் கொள்ளவுமில்லை; வாழ்த்தி வழிபடவுமில்லை. இவர் ஆரியப் புராணக் கடவுள்களேயாவர். இவர்களைப் பற்றிய குறிப்பொன்றும் அப்பத்துக் குறளிலும் இல்லை. ஏன்? ஆயிரத்து முந்நூறு முப்பது குறளினுமே வராதிருக்க, அம் மூவரையும் வாழ்த்துவதாகக் கூறுதல் பொருந்தாவுரையே யாகும். சமயச் சார்பான,

அம் மூக்குணங்கட்கும் அறம் பொரு ளின்பங்கட்கும் என்ன தொடர்பு? இன்பத்தைத் தாமத குணத்தா லாகிய தென்பது சிறிதும் பொருந்தாது.

**ஊழ்**

பரி : ‘ஊழாவது - இருவினைப் பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருட்கிளவி, இனிப் பொருளும் இன்பமும் கூறுவார் அவற்றின் முதற்காரண மாகிய ஊழின் வலி கூறுகின்றார்.

நல்வினை தீவினையாகிய இருவினைப்பயனும் அவற்றைச் செய்தவனையே சென்றடைதற்குக் காரணமானது ஊழ் எனப்படும். பொருளின் பங்களுக்கு ஊழே முதற்காரணம் என்பதால், ஊழின்படியே பொருளின் பங்கனை அடைய முடியும் என்பதால், ஓருயிரைப் படைக்கும்போதே படைத்தவன் இன்னின்ன காலத்தே இன்னின்ன இன்ப துன்பம் அநுபவிக்க வேண்டும் என விதிக்கும் விதியே ஊழ். ஊழின்படியே எல்லாம் நடக்கின்றன. நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. அன்றெழுதினவன் அழித்தெழுதவா போகிறான் எனப் பொதுமக்களும் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இது ஊழ்வினை, தலைவிதி, தலையெழுத்து எனப்படும். ஊழ்-கடவுள் கட்டளை என்பதாம்.

இது தப்பான கருத்தேயாகும். ஊழின்படியே எல்லாம் நடக்குமானால் செய்வன செய்து தவிர்வன தவிர வேண்டியதில்லை யன்றோ? எல்லாம் ஊழின்படியே நடைபெறுகின்றதெனில், ஒன்றையடையச் செய்யும் முயற்சிகளும், இரத்தல் இழிவென்பதும், குற்றங்கள் செய்யக்கூடாவென்பதும், நல்லவராக நடந்து கொள்ள வேண்டுமென்பதும் பயனில் கூற்றாக வன்றோ முடியும்? ஊழின்படியே ஒருவன் திருடுகிறான், கொலை செய்கிறான், அவன் எப்படிக் குற்றவாளியாவான்? குற்றஞ் செய்தோரைத் தண்டிப்பது, கொலையாற் கொடியாரை வேந்தொறுப்பது (550) ஊழைமீறிய செயலன்றோ? அவனைக் கொல்லவேண்டு மென்பது அவன் ஊழ். அப்படியிருக்க எப்படிக் கொலை செய்தவன் குற்றவாளியாவான்? எனவே, இது சமயச் சார்பான கருத்தேயாகும். வள்ளுவர் கூறும் ஊழ் என்பது இந்த கையதன்று.

ஊழ்-முறைமை, உலகியல் நிகழும் முறைமை; உலகியலின் இயற்கை நிகழ்ச்சி, அதாவது பொருளும் காலமும் செயற்படும் தகுதியும், சுற்றுச் சார்பின் தகுதியும், நமது எண்ணித்தின், முயற்சியின், செயலின் தகுதிக்கு ஒத்து வருதலும் ஒவ்வாது வருதலுமாம். ஒத்துவருதல்-ஆகூழ் எனவும், ஒவ்வாது வருதல்-போகூழ் எனவும்படும். செயற்படுதல்- நிகழுதல். ஊழ் -மக்களின் எண்ணம் முதலியவற்றினுள்

அடங்காமல் அப்பாற்பட்ட இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி; நமது எண்ணத்திற்கும் முயற்சிக்கும் செயலுக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமல் அதன் போக்கில் நிகழும் நிகழ்ச்சி. அந் நிகழ்ச்சியின் போக்கில் நாம் செய்வன ஆகும். அது ஆகூழ், அதற்கு எதிரிடையாகச் செய்வன ஆகா, இது போகூழ்.

ஒருவன் பனந்தோப்பிற்குப் பனம்பழத்திற்குச் செல்கிறான். பழம் விழுந்துகிடந்தால் எடுத்து வருவான். விழாமலிந்தாலோ, அல்லது முன்னமே ஒருவன் வந்து எடுத்துச் சென்றிந்தாலோ வெறுங்கையோடு திரும்புவான். திரும்பி வரும் வழியில் தொப்பென்று ஒரு பழம் விழுந்தால் ஆவலோடு எடுத்துச் செல்வான். பழமெடுத்து வரும்போது பனைக்குடையவன் கண்டு பிடுங்கிக் கொண்டாலும் கொள்வான். ‘வந்துவிட்டுச் சும்மா போகிறாய் பாவம்! இந்தா’ என அவன் தான் எடுத்துவந்த பழத்தில் ஒன்று கொடுத்தாலும் கொடுப்பான். பனம்பழம் கிடைக்காமல் வரும் வழியில் மாம்பழம் கிடைத்தாலும் கிடைக்கும். திருடனென்று பிடிப்பட்டாலும் படுவான், நாயோ, பாம்போ கடித்தாலும் கடிக்கும். வழியிலே இறந்தாலும் இறக்கலாம்.

ஒருவன் மாடு வாங்கச் சந்தைக்குப் போகிறான். அவன் குறித்துச் சென்ற தகுதியுள்ள மாடு சந்தைக்கு வந்திருக்காது. வந்திருந்தாலும் விலை இசையாது. விலை முடியும்போது மற்றொருவன் வாங்கிக் கொள்ளலாம். குறித்துச் சென்ற மாடு குறித்த விலையில் கிடைத்தாலும் கிடைக்கலாம். மாடு வாங்கப் போய் ஆடோ, எருமையோ வாங்கிவந்தாலும் வரலாம். மாடு கிடைக்காமல் மாடு வாங்கக் கொண்டுபோன பணத்தையும் இழந்து வெறுங்கையோடு வீட்டுக்கு வந்தாலும் வரலாம். திருட்டு மாட்டை வாங்கித் திருடனென்று பிடிபட்டாலும் பிடிபடலாம். மாடு முட்டி இறந்தாலும் இறக்கலாம்.

இவையெல்லாம் பொருளும் காலமும் செயற்படுத் தகுதியும், ஒருவன் எண்ணம், முயற்சி, செயல் இவற்றின் தகுதியும் ஒத்து வருதலும், ஒத்துவாராமையும் ஆகிய ஆகூழும், போகூழுமாகும்.

ஒருவனிடம் ஏதாவதொன்றை வேண்டி ஒருவன் செல்கிறான். அவன் அமைதியாக இருந்தால் அன்போடு இவனை வரவேற்பான். அன்பிருந்தால் வேண்டுவன செய்வான். அவன் ஏதோ மனக்கவலையுடன் இருந்தால் இவனைப் பார்க்க உடன்படான். உடன்படினும் கடுகடுத்துப் பேசுவான். வேண்டுவனவும் செய்யான் அல்லது உதவி செய்ய முன்வரும்போது வேறொருவன் குறுக்கே வந்து தடுத்தாலும் தடுக்கலாம். அவனை உதவும்படி தூண்டினாலும் தூண்டலாம். இவன் விரும்பிச் சென்ற பொருள் அவனிடம் இல்லாதிருந்தாலும் இருக்கலாம். இவன் எண்ணிச் சென்ற காரியம் ஆகாமல் வேறொரு காரியம் ஆனாலும் ஆகலாம்.

இன்ன பலவெல்லாம் சுற்றுச் சார்பின் தகுதி, நமது எண்ணம் முயற்சி செயலின் தகுதிக்கு ஒத்து வருதலும் வாராமையும் ஆகும். உலகியலின் இயற்கை நிகழ்ச்சியாகிய இவ்வுண்மையை அறியாது, எண்ணியது முடிந்தால் மகிழ்வதும், முடியாவிட்டால் வருந்துவதும் ஆகாது என அவ்வூழின் தன்மை கூறுகிறார். இவ் வதிகாரத்தில், இதையே,

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்-ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

எனக் கடவுள் செயலெனக் கொண்டு கூறினர். பிற்காலத்தார். ஈசன் செயல் என்றது தலைவிதி, தலையெழுத்து என்பதையாகும். பொருளும் காலமும் தன் எண்ணம் முயற்சி செயலுக்கு ஒவ்வாதபோது, எண்ணிய வெண்ணங் கை கூடவில்லையே, முயன்றும் பயனில்லாமல் போய் விட்டதே என்று வருந்துவதில் பயனில்லை, பொருளும் காலமும் தன் எண்ணம் முதலியவற்றிற்கு ஒத்த தகுதியறிந்து ஒன்றைத் தொடங்கித் பயன்பெற வேண்டும்.

**மாறுபட்ட உரை**

பரிமேலழகர் பெரும்பாலும் தமது கொள்கையை வலிந்து புகுத்துதலே யன்றிப் பல குறட்பாக்களுக்கு ஆசிரியர் கருத்துக்க மாறாகவும் உரை யெழுதியுள்ளார். உள்ளபடியே ஆசிரியர் கருத்துக்கும், தமிழா பண்பாட்டுக்கும் மாறுபட்ட உரையைத் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

1. சிறப்பீனும் செல்வமு மீனும் அறந்தினூஉங்
   காக்க மெவனோ வுயிர்க்கு. (31)

சிறப்பு ஈனும் - சிறப்பையும் கொடுக்கும், செல்வமும் ஈனும் - செல்வத்தையும் கொடுக்கும், அறத்தின் ஊங்கு – ஆதலால் அறத்தை விட, உயிர்க்கு ஆக்கம் எவன் - மக்களுக்கு வேறு சிறப்பு என்ன? ஒன்றுமில்லை சிறப்பு மதிப்பு.

பரி : சிறப்பு ஈனும் -வீடு பேற்றையும் தரும், செல்வமும் ஈனும்-துறக்க முதலிய செல்வத்தையும் தரும், உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன்-ஆதலான் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?

எல்லாப் பேற்றினும் சிறந்தமையின் வீடு சிறப்பெனப்பட்டது.

துறக்கம் -சுவர்க்கம், வானூலகம் 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் வீட்டுக்கும் துறக்கத்திற்கும் இடமேது? அறம் செய்வன தவிர்வன என்பதை மறத்தார் போலும்!

2. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
   வேளாண்மை செய்தற் பொருட்டு. (212)

தான் ஆற்றித் தந்த பொருளெல்லாம்-ஒருவன் முயன்று ஈட்டிய பொருளெல்லாம், தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு –தகுதியுடையார்க்கு உதவுவதற்காகவே.

தான் - முயற்சி, தக்கார்-ஓயாது உடல் தேய உழைத்தும் உண்ண உணவும், உடுக்க உடையும், உறையக் குடிசையும் இல்லாத ஏழைப்பட்டாளி மக்கள், உலக வாழ்க்கையின் அச்சாணி போன்ற ஏழைப் பாட்டாளி மக்களே ஏற்கத் தக்கவராவர். அன்னார் ஓயா உழைப்பால் வந்ததே செல்வரின் செல்வமாதலான் அப்பாட்டாளி மக்களுக்குக் கொடுத்தலே செல்வர் கடமையாகும். வேளாண்மை – உதவி.

பரி : 'தக்கார்க்கு - தகுதியுடையாாக்காயின், தான் ஆற்றித் தந்த பொருளெல்லாம் - முயறலைச்செய் தீட்டிய பொருள் முழுவதும், வேளாண்மை செய்தற் பொருட்டு –ஒப்பரவு செய்தற் பயத்தவாம்'

தகுதியுடைய செல்வர்களேதான் ஒப்பரவு செய்வாராகலின், தக்கார் - தகுதியுடைய செல்வர் எனக் கொள்வதில் பயன் இல்லை. தக்கார்க்குக் கொடுத்தற் பொருட்டு என்பதே நேர் பொருள்கோள்.

3. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
   போற்றாது புத்தே ளுலகு. (234)

நிலவரை நீள்புகழ் ஆற்றின் - நிலமுழுவதும் ஒருவன் நெடிய புகழைச் செய்வானாயின், புத்தேளுலகு புலவரைப் போற்றாது – வானுலகம் தேவர்களைப் போற்றாது.

புலவர் - தேவர். தேவருலகம் அங்கு வாழ் தேவரைப் போற்றாது மிகுபுகழுடைய இவனையே போற்றும் என்பதாம். புகழுடையோரை வெளியுலகும் புகழும்.

பரி : ‘புத்தேள் உலகு புலவரைப் போற்றாது – புத்தேளுலகம் அவனை யல்லது தன்னை எய்தி நின்ற ஞானிகளைப் பேணாது. புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ் வுலகும் ஒருங்கெய்தாமையின், அவன் (புகழுடையவன்) இரண்டுலகும் ஒருங்கெய்துவன்.’

புலவர் - ஞானிகள் எனவும், அவர் வானுலகை அடைவர் எனவும் கூறுதல். ஞானிகள் வீடடைவர் என்பதற்கு மாறுகொளக் கூறலாம். இங்கே ஞானிகளுக்கு யாதொரு தொடர்பும் இல்லை. ஓரூரில் புதிதாகக் குடியேறினவன், அவ்வூர்த் தலைவனின் செல்வாக்குப் பெற்றால், அவ்வூர் மக்கள் ஊர்த்தலைவனைப் போற்றாது அப் புதியவனையே போற்றுதல் இன்றுங் காணலாம். மாவலியின் புகழால் தேவர்கள் அவனைப் புகழத் தலைப்பட்டதனாலேயே இந்திரன் பொறாமைகொண்டு அவனைக் கொல்வித்தான் என்பது புராணம்.

4. தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது. (262)

தவமும் தவமுடையார்க்கு ஆகும் - துறவுபூண்டு நோன்பு நோற்றலும் இல்லற வொழுக்கங்களை நன்கு கடைப்பிடித்து ஒழுகியவர்க்கே முடியும், அஃதிலார் அதனை மேற்கொள்வது அவம்-அம் முற்றவம் இல்லாதவர் அதை மேற்கொள்வது வீணாகும்.

இல்லற வொழுக்கங்களை நன்கு கடைப்பிடித்து ஒழுகாதவர் மேற்கொண்டு செய்யும் தவங்கள் தப்புமாகையால், ‘தவமும் தவமுடையார்க்காகும்’ என்றார். இல்லறம் நன்கியற்றித் துறவறம் பயில வேண்டும். இல்லையேல், இல்லறத்தாசை யுண்டாகும்.

பரி : ‘தவமும் தவமுடையார்க்கு ஆகும் - பயனே யன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவ முடையார்க்கே, அதனை அஃதிலார் மேற்கொள்வது அவம்-ஆகலான், அத் தவத்தை அம் முற்றல மில்லாதார் முயல்வதும் பயனின் முயற்சியாம்.’

‘பயனே யன்றி’ என்பதால் முற்றவம் என்பது முற்பிறப்பில் செய்த தவத்தைக் குறிக்கும். முற்பிறப்பில் தவம் செய்தவர்க்கே இப்பிறப்பில் தவம் ஆகும் என்பது, முற்றவமில்லார் முயலுதல் வீண் என்று, அதிகாரத்தோடு மாறுபடுதலைக் காணலாம்.

5. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
மீண்டு முயலப் படும். (265)

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - விரும்பியவற்றை விரும்பியபடியே அடைதலால், செய்தவம் மீண்டும் முயலபடும் - செய்கின்ற தவம் மேன்மேலும் முயற்சிக்கப்படும். வேண்டிய வேண்டியாங் கெய்தல் 42, 264-ஆம் குறள்-குழந்தையுரை பார்க்க. (துறவிகளுக்கு இல்லறத்தார் வேண்டிய உதவி செய்யப் பெறுவதால் அவர் எண்ணியதைச் செய்ய வல்லவ ராகின்றனர். 264 குழந்)

பரி : ‘வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - முயன்றால் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம். ஆதலால், செய்தவம் ஈண்டு முயலப்படும் - செய்யப்படுவதாகிய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும். மேற்கதி, வீடு பேறுகள் தவத்தானன்றி எய்தப்படா வென்பதாம்.

மேற்கதி – உயர்பிறப்பு. இது தவத்தின்கண் சோர்வில்லாமல் முயலவேண்டும் என்பதே யன்றி மறுமைப் பயன் குறித்தன்று. 264-ஆம் குறளுக்கு இது மாறுபட்ட கருத்தாகும். தவம் செய்வது இம்மையிலேயே யாகலான் ‘ஈண்டு’ என்ற பாடம் பயனில்லதாகும்.

6. எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. (281)

எள்ளாமை வேண்டுவான் என்பான் - பிறரால் இகழாமையை விரும்புவோ னென்பான், எனைத் தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க – யாதொரு பொருளையும் திருட நினையாதபடி தன் நெஞ்சைக் காக்கக் கடவன். திருடுவோனை உலகத்தார் இகழ்வர்.

பரி : எள்ளாமை வேண்டுவான் என்பான் - வீட்டினை இகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப்படுவான், எனைத் தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை தன் நெஞ்சினைக் காக்க.

‘வீட்டினை இகழ்தலாவது – காட்சியே அளவையாவதென்றும், நிலம் நீர் தீ வளி யெனப் பூதம் நான்கே யென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின் கண்ணே அறிவு மதுவின் கட் களிப்புப் போல வெளிப்பட்டு அழியு மென்றும், இறந்தவுயிர் பின் பிறவா தென்றும், இன்பமும்

பொருளும் ஒருவனாற் செய்யப்படுவன வென்றும் சொல்லும் உலோகாயத முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து, அதற்கேற்ப வொழுகுதல்.'

இங்கு வீடு என்னும் சொல்லுக்கு இடமே இல்லை. மேலும், இது பிற சமய மறுப்புரையேயன்றி இக்குறளின் விரிவுரையற்று. கள்ளத்தனத்தை இகழுதல் உலகோரேயன்றிக் தவத்தோரன்று.

7. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாம் கொலையஞ்சிக்
   கொல்லாமை சூழ்வாள் தலை. (325)

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம்-தீமை நிலைக்கு அஞ்சி அத்தீமையை விட்டவர்கள் எல்லோரினும், கொலையஞ்சிக் கொல்லாமை சூழ்வான்தலை – கொலைப் பழிக்கு அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தைக் கருதுபவன் முதன்மையானவன்.

தீமைநிலை – தீமை புரிந்து வாழுநிலை. தீமைகளுக்கு அஞ்சி அவற்றை விட்டவர் பலரினும், கொலைக் கஞ்சிக் கொலையை விட்டவரே சிறந்தவராவர்.

பரி : 'நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனை வாழ்க்கையைத் துறந்தா ரெல்லாருள்ளும், பிறப்பு நின்ற நிலையாவது -இயங்குவ, நிற்ப என்னும் இருவகைப் பிறப்பினும் இன்ப மென்ப தொன்றின்றி உள்ளன வெல்லாம் துன்பமே யாய நிலைமை.

நிற்ப – மரவகை மரஞ்செடி கொடிகளுக்குத் துன்ப நிலை தெரியுமெனின், அவையேன் யோக ஞானங்கனெய்திப் பிறப்பறுக்க முயலுவதில்லை! இது, உலக வாழ்வே துன்ப நிலை யென்னும் சமயக் கருத்தேயாகும்.

8. நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
   கொன்றாகும் ஆக்கம் கடை. (328)

நன்று ஆகும் ஆக்கம பெரிது எனினும் - வேள்விக் கண் கொன்றால், நன்மையைத் தரும் செல்வம் பெரிது ஆகும் என்று பிறர் கூறினும், கொன்று ஆகும் ஆக்கம் சான்றோர்க்குக் கடை – ஓர் உயிரைக் கொல்வதால் வரும் செல்வம் பேரறிஞர்க்கு இழிந்ததாகும்.

நன்று ஆகும் ஆக்கம் - நன்மையைத் தரும் வேள்விப் பயன், இது வேள்வி மறுப்பு.

பரி : ‘நன்று ஆகும். ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்றால் இன்பமிகும் செல்வம் பெரிதாமென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும், சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை. இன்ப மிகுஞ் செல்வமாவது – தாமும் தேவராய்த் துறக்கத்துச் சென்றெய்தும் செல்வம்.’

இல்லறத்தோர் வேள்வி செய்தல் உண்டெனக் கூறுதல் ஆரியக் கொள்கையே யாகும். தமிழர்க்கு வேள்வி யுடன் பாடன்று. வேள்விப்பயன் தேவனாகித் துறக்கமடைதலென்பதும் அக் கொள்கையே.

பரி : ‘கொலை வினையர் (329) என்றதனால், வேள்விக் கண் கொலையன்மை யறிக.’

‘வேள்விக்காகவே பசுக்கள் பிரமனால் படைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வேள்வி செய்தால் உலமெல்லாம் நன்மை யடைகின்றது. ஆகையால், வேள்வியில் செய்யும் உயிர்க்கொலை கொலையாகமாட்டாது என்பதற்கு மாறுபட்டதாகும்.

10. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்க. (350)

பற்றற்றான் பற்றினைப் பற்றுக – பற்றற்றவனது அன்பை மனத்துட் கொள்க, பற்றுவிடற்கு அப்பற்றைப் பற்றுக – ஆசையை ஒழித்தற்கு அவ்வன்பையே உறுதியாகக் கொள்க.

முற்றத் துறந்தவரது அன்பே பற்றறுதற்குக் ஏதுவாகும். பழக்கம் பற்றறற்குக் காணரமாம்.

பரி : பற்று அற்றான் பற்றினைப் பற்றுக – எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றறற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறி யென்று மனத்துட் கொள்க. அப்பற்றைப் பற்றுக பற்றிவிடற்கு – கொண்டு, அதன்கண் உபாயத்தை மனத்தாற் செய்க, விடாது வந்த பற்ற விடுவதற்கு.

அதன்கண் உபாயமென்றது – தியான சமாதிகளை விடாது வந்த பற்றென்பது –அநாதியாய் வரும் உடம்பின் பற்றினை.

அநாதி-தொன்று தொட்டு, இறைவன் ஏன் பற்றற வேண்டும்? வீட்டைவதற்கா? பற்று அற்றான் பற்று என்பதற்கு-இறைவன் ஒதிய வீட்டு நெறி என்பது பொருந்தாவுரையேயாகும். உடம்பிற்பற்று –உடம்பின் மீதுள்ள பற்று. இங்குப் பொருட்பற்றே யன்றி உடம்பிற் பற்றன்று. உண்மைத் துறவிகளிடம அன்பு கொள்ளுதல் பற்றறுதற்குக் காரணம் ஆகும் என்பதே கருத்தாகும்.

**முடிவுரை:**

பரிமேலழகர் உரையிலுள்ள அயற்கருத்துக்கள் முழுவதையும் ஆராயப் புகின், மணற் சோற்றில் கல்லாய்வதனே டொக்கும். ஆனால், தமிழர் தனிச் சொத்தாகிய இன்பத்துப் பாலில் அவர் கையை வைக்கவில்லை. பொருட்பாலினும் அறத்துப்பாலிலேயே ஆரிய நஞ்சு அத்தனையுங் கலந்துவிட்டார். அதுதானே பிற்காலத் தமிழர்களை ஏமாற்ற வழி? திருக்குறள் அறத்துப்பாலில் கூறும் அறங்கள் தமிழர் அறங்கள் அல்ல. அவை ஆரியர் அறங்கன். ஆரியர் அறங்களையே வள்ளுவர் நூலாக்கி வைத்துள்ளார். ஆரியர் அறங்கள் தமிழர் அறங்களிலும் மேலானவை. அதனாலேயே பழந்தமிழர் அவற்றை மேற்கொண்டனர் எனப் பிற்காலத் தமிழர் நம்பினாற்றானே தமிழ்ப் பற்றின்றி ஆரியத்துக் கடிமையாகமுடியும்? அப்போது தானே ஆரிய மக்கள் நல்வாழ்வு வாழலாம். பரிமேலழகரின் இன்பற்றே பற்று ! அதுதானே தமிழர்க்கில்லை! இச்சிறு ஆராய்ச்சி நூல் தமிழர்க்கு அதை உண்டாக்குமாக. பரிமேலழகரின் மயக்க மருந்துண்டு மயங்காமல் தனித்தமிழ் முப்பாலுண்டு தமிழ் வாழ்வு வாழ்வார்களாக.

# கூறு 8

## அடியார்க்கு நல்லார் - சிலப்பதிகாரம் உரை

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகிய நெஞ்சையள்ளும் சிலம்பிற்குக் கிடைத்துள்ள பழைய உரைகள் இரண்டாகும். அவை அரும்பதவுரையும் அடியார்க்குக் உரையும் ஆகும். விநாயகர் வணக்கம் கூறித்தும் உரையைத் தொடங்குகின்றார். அரும்பதவுரைகாரர் எனவே அவருடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னாகலாம் என்பர் அறிஞர். அவ்வுரையாசிரியரைப் பின்பும் அடியார்க்கு நல்லார் உரை வகுத்துச் செல்கின்றார்.

அரங்கேற்றுகாதை 13ஆம் அடியை விளக்குமிடத்து. அவற்றின் பகுதியெல்லாம் கானல்வரியிற் கூறுதும்' (ப.88) எனவும், 26ஆம் அடியை விளக்குமிடத்து, ''கானல் வரியில் குற்றம் நீங்கிய யாழ் என்பதன் கண் விரியக் கூறுதும். (ப.100) எனவும் அடியார்க்கு நல்லாரே குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் நான்கு பூதங்களைக் (106-107) குறித்து, ''இப்பூத நான்கின் உண்டியும் அணியும் ஆடையும் மாலையும் சாந்தமும் பொழுதும் செயலும் முதலியவெல்லாம் அழற்படுகாதைக் கண்ணே விரித்துக் கூறுதும்'' (ப.115) என் எழுதுகின்றார். வேனிற் காதையில் (அடி.45-71) அவர், ''இவ்விழவின் முதலும் முடிவும் கடலாட்டும் புலவியும் புறப்பாடும் வதிச் செலவும் பொறையுயிர்த் திருப்பும் நிறைபதிப் புகலும் தீதுறு நாளும் ஊர்திப்பாடும் முதனடு விறுதியாகக் கட்டுரை காதையுள் விரியக் கூறுவாம்; அதனுட் கண்டு கொள்க.'' (ப.235) கூறுகின்றார்.

### பெயர்ச்சிறப்பு

அடியார்க்குநல்லார்; என்ற இனிய பெயரினை திருஞானசம்பந்தர் கூறக் காண்கின்றோம். அப்பாடல் திருக்கருவூரானிலைப் பதிகத்துள் வருகின்றது.

''விண்ணு லாமதி சூடி வேதமே
பண்ணு ளார்பர மாய பண்பினர்
கண்ணு ளார்கரு வூருள் ஆனிலை
அண்ண லார்அடி யார்க்கு நல்லரே''

என்பது இவண் எண்ணத்தகும். பெற்றான் சாம்பானுக்கு முத்தியளிக்குமாறு சிவபெருமான் உமாபதி சிவாசாரியருக்கு எழுதியதாக வழங்கிய பாட்டில் 'அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்' என்று கையெழுத்துட்டுள்ளார்: பின்னாளில்

வாழ்ந்த அருணகிரிநாதர் முருகனைக் குறித்துப் பாடும்போது, “அடியார்க்கு நல்லார் நல்லார் பெருமாள்” என்று பாடுவார். இவ்வாறு சைவ சமயத்தவர் போற்றுகின்ற பெயரையே சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் குடியுள்ளார் என்பர் சான்றோர்.

**காலமும் வாழ்விடமும்**

அடியார்க்கு நல்லாரின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறவந்த அறிஞர்.உ.வே.சாமிநாதையர்,” இவருடைய வருணம், சமயம், காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை. ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடைய கொள்கையாக இருந்தல் பற்றி இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியதாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது” என்று கூறித் தொடங்குகின்றார்.

“இந்திரவிழவூரெடுத்த காதை 88ஆம் அடி முதலிய இடங்களில் பலியூட்டுகின்ற செயல்களைக் கூறும்போது அடியார்க்குநல்லார் சில பரணித்தாழிசைகளை எடுத்துத் தருகிறார். இங்குக் காட்டப்பட்டுள்ள பாடல்களில் மூன்று கலிங்கத்துப் பரணியுள் காணப்படுகின்றன. (97, 98, 165 தாழிசைகள்). வேறு இரு தாழிசைகள் கலிங்கத்துப்பரணியுள் காணப்படவில்லை. கலிங்கத்துப் பரணி கொண்ட குலோத்துங்க சோழன் காலம் கி.பி.1070-1120. கலிங்கப் போரின் காலம் 1112க்குப் பின் என்று தெரிகிறது. ஆகவே கலிங்கத்துப் பரணியின் காலம் இதற்குப்பின், இந்நூலை மேற்கோள் காட்டும் அடியார்க்கு நல்லார். இதற்குப் பின்னரே உரை செய்துள்ளார் என்பது தெளிவு... சைனாளபொப்பண்ணன் தமிழருக்கு ஆதரவளித்தது இயல்பே ஆகும். இவன் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டே அடியார்க்குநல்லார் காலம் என்பது உறுதியாகும்.” என்று முடிபுரைக்கின்றார் அறிஞர்.மு.அருணாசலம்.

அடியார்க்குநல்லார் என்று கொண்டால் அவருடைய காலம் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்.

**சமயம்**

அடியார்க்குநல்லார் என்ற பெயர் சிவபெருமானின் பெயர் என்பதனை, ‘அண்ணலார் அடியார்க்கு நல்லரே (திருமுறை 1766) என வரும் திருஞானசம்பந்தர் திருவாக்கால் அறியமுடிகின்றது. மேலும் ‘பிறவா யாக்கைப் பெரியோன்’ (சிலப் 5-169) என்ற இடத்து அடியார்க்குக் நல்லார், என்றும் பிறவாத யாக்கையுடைய இறைவன் என்று எழுதுகின்றார். இறைவன் உறைக்கின்ற வெள்ளியம் பலம்,

இயமும் இறைவனும், இறைவன் நுதழ் விழியான் இழந்த மெய், கங்கையைச் சடைமுடியின் மீதணித்த இறைவன் என வரும் இடங்களில் அவர் எழுதும் உரைப் பகுதிகள் அவா சைவ சமயத்தைச் சாா்ந்தவர் என்பதனையே உறுதிப்படுத்தும். மேலும் அவர் திருக்கோவையார்த் தொடர்களை மேற்கோளாகத் தருவதோடு அவற்றை உரைநடையாகவும் கையாண்டுள்ளார். இனைய செய்திகளால் அவர் சைவ சமயத்தினைச் சாா்ந்தவர் என்பார் அறிஞர் மு.அருணாசலம்.

மேற்கண்ட கருத்துக்களை அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் பின்வருமாறு மறுத்துரைக்கின்றார்: “இறைவன் என்ற பொதுப்பெயர், எல்லாக் கடவுளரையும் குறிக்கும். இறைவன் என்ற சொல்லைச் சிவனுக்கு மட்டுமன்றி, அருக தேவரையும் குறிக்க நல்லார் பயன்படுத்துகிறார். அருகனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு உரை எழுதுகின்றார். எனவே நல்லார் சிவபெருமானையும் அருகனையும் பற்றிப் போற்றிப் பாராட்டுகிறார் என்று துணிந்து கூறலாம். எனவே நல்லாரைச் சைவர் என்பதைக் காட்டிலும், சமணச் சார்புடையவர் என்ற கூறுவதே பொருந்தும்.

**உரை வண்ணம்**

உரையாசிரியர்கள் தாம் உரை எழுதும் போது மூல நூலாசிரியரிடம் கற்பவர்கள் நன்கு மதிப்பு ஏற்படுமாறும் ஈடுபாடு ஏற்படுமாறும் கருத்துடன் இருப்பர். தகுந்த – தேர்ந்த –சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி அவர்தம் உரைநடையைச் செழுமைப்படுத்துவர்: பிறமொழி உரைநடையைச் செழுமைப்படுத்துவர்; பிறமொழிகளிலே காணலாகும் நல்ல குறிப்புக்களை ஆங்காங்கே ஒப்பிட்டுக் காட்டுவர். பல்கலைப் புலமையையும் பன்னூற் பயிற்சியையும் நாம் உணர்ந்து கொள்கின்ற வகையில் பண்டை உரையாசிரியர்களின் உரைவண்ணம் அல்லது உரை இயல்பு இருக்கும். மேற்கண்ட உரை இயல்புகளை அடியார்க்கு நல்லாரிடமும் நன்கு காணலாகும். எடுத்துக்காட்டாக, அவர் கூறுகின்ற அவையடக்கப் பாடலை அவர் உரை செல்லும் நெறிக்குச் சான்றாகக் கூறலாம்.

> “பருந்து நிழலுமெனப் பாவு முரையும்
> பொருந்துநெறி யெல்லாப் பொருளுந் -தெரிந்திப்
> படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தா னன்னூல்
> அடியார்க்கு நல்லானென் பான்.”

(சிலப். உரைச்)

**நடைச்சிறப்பு**

அடியார்க்கு நல்லாரின் உரைநடை சில இடங்களில் செய்யுள் அழகு தோன்ற அமைந்துள்ளது. இனிய சுவையுடையதாய், எதுகை மோனை ஆகிய தொடை விகற்பங்கள் பொதுள அவருடைய நடை சிறப்புடன் மிளிர்கின்றது. அவருடைய நடையில் இழுமென் மொழியான் விழுமியது நுவல்கின்ற ஓசையின்பம் நிறைந்து கவிதை சுவை நனி சொட்டக் காண்கின்றோம்.

பதிகத்தில் வருகின்ற முதலிரண்டு அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் விளக்கம் வரையும் பொழுது ஆற்றொழுக்கான செய்யுள் நடையில் இளங்கோவடிகளின் வரலாற்றை எழுதுவர். செய்யுள் போல அமைகின்ற அப்பகுதி வருமாறு:

‘‘அடிகளென்றது துறத்தலான். அத்துறவின் வரலாறு. யாதோவெனின்:

‘‘குமரியொடு வடவிமயத்
தொரு மொழிவைத் துலகாண்ட
சேரலா தற்குத் திகழொளி ஞாயிற்
றேழ்பரி நெடுந்தேர்ச் சோழன் றனமகள்
நற்சோணை யீன்ற மக்க ளிருவருள்
முன்னோன் றன்னைப் பின்ன ரியற்றிப்
பின்னோன் றன்னையும் பெருநம்பி யாகென
அன்னவர் தம்மொடு தென்னர் செம்பியர்
தன்னடி போற்றத் தமனிய மண்டபத்துச்
சிங்கம் சுமந்த பொங்கணை மீமிசை
உவரித் திரையிற் கவரி யிரட்ட
வேந்தன் இருந்துழிச் சார்ந்த நிமித்திகன்
அடிமுதல் முடிவரை நெடிது நோக்கி
இன்தோன் கழியப் பொன்திகழ் உலகம்
சேர்தி நீயெனச் சேரலற் குரைத்தவன்
மைந்தரை நோக்கி நந்தாச் செங்கோல்
அந்தமில் இன்பத் தரசாள் உரிமை
யிளையோற் குண்டென உளைவனன் நன்வெகுண்
டழுக்காற் றொழுக்கத் திழுக்கு நெஞ்சினன்
கண்ணெறி தவழ வண்ணலை நோக்கும்:
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல் நீங்கப்

பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பார மகல நீக்கிச்
சிந்ததை செல்லாச் சேணெடுக் தூரத்
தந்தமி லின்பத் தரைசாள் வேந்தனாயினான்

என்பது (சிலப். பதிகம். ப.12)

“இப்பகுதியினுள், முதல் மூன்று வரிகள் 29ஆம் காதை-வாழ்த்துக் காதையின் தொடக்கமான உரைப்பாட்டுமடையின் முதலிலுள்ள வரிகள்; இறுதி வரிகள் ஆறும் வரந்தரு காதையில் 177-182 வரிகளாயுள்ளன ஏனைய வரிகள் - இடையிலுள்ள 17-அடியார்க்கு நல்லார். இளங்கோவடிகள் துறவுபூண நேர்ந்த அச்சந்தாப்பத்தைக் தாமே விரித்துக் கூறும் பகுதியாகும்” என்று அறிஞர்.மு.அருணாசலம் தெளிவுபடுத்துவர்.

எதுகை, மோனை, அளபெடை இனைய செய்யுடப் பண்புகள் நிறைந்து காணப்படும் அவருடைய நடைக்குப் பல சான்றுகள் காட்டலாம். பின்வரும் பகுதி அவற்றள் ஒன்று:

“இந்நகர் காப்போர் யாரென நினைதலும்
நேரிய னெழுந்த நீவரு காறும்
தார்கெழு மார்ப தாங்கலென் கடனென்
உவந்தனன் கேட்டுப் புகழ்ந்தவிப் பூதம்
நின்வழி யாகென நிறீஇப் பெயர்வுழிக்
கடுவிசை யவுணர் கணங்கொண் டீண்டிப்
பொருதுபோர் தொலைந்தன ராகிப் பெரிதமிழ்ந்
தாழ்ந்த நெஞ்சிற் சூழந்தனர் நினைத்து
வஞ்ச மல்லது வஞ்சத் தல்லது
வேற லரிதெனத் தேறினர் தேறி...”

(சிலப். படலாடு. ப. 184)

இப்பகுதியின் செய்யுட் பண்புகள் பயின்று வந்திருந்தல் தெளிவு.

“ஒழுக்க முடைய விழுக்குடிப் பிறந்தோர்
நானுடை மகளிரொடு நீணெறிச் செல்லார்”

என்பது கருதி ‘நெறியினீங்கியோர் நீர்மையேனாகி என்றானென்றுணர்க (சிலப். ஊர்காண். ப.368) என அவர் கூறுவது ஓர் அறநூலின் பாடலடிகளைப் போல் அமைதல் கண்கூடு.

உரையினைப் படிக்கும் உணர்வை விடவும் ஒரு செய்யுளைப் படிக்கும் உணர்வே அடியார்க்கநால்லாருடைய உரையைப் படிக்கும் போது நமக்கு ஏற்படுகின்றது.

**பிறமொழிப் புலமை**

அடியார்க்குநல்லார் வடமொழிப் புலமை மிகவும் பெற்றவர் என்பதனை அவருடைய உரையின் வாயிலாக அறிய முடிகின்றது. முத்தமிழ்ப் புலமையும் நிறையப் பெற்ற அவர் பிறமொழியையும் கற்றுத் தேர்ந்த புலமையானவர் ஆவார். இசை, நாடகம், சமயக் கருத்துக்கள் ஆகியவற்றை விளக்கும் போது வடமொழிக் கருத்துக்களையும் தவறாது தந்து, அவர் தம்முடைய ஒப்புமை அறிவை வெளிப்படுத்துகின்றார். மேலும் அவர் சொற்பொருளுக்கும், சொற்றொடர்களுக்கும் உரை வகுக்கும்போதும் மிகுதியாக வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துகின்றார்.

தமிழ்ச் சொற்களுக்கு அவர் வடமொழிச் சொல்லால் பொருள் கூறும் இயல்பினைக் கீழே காண்போம்:

| | | |
|---|---|---|
| அறனோம் படை | - | தருமம் போதிக்குமிடம் |
| அறிதுயில் | - | யோக நித்திரை |
| ஆடுதல் | - | அனுபவித்தல் |
| இறும்பூது | - | அதிசயம் |
| ஈசன் | - | ஐசுவரியவான் |
| உயிர்மருந்து | - | மிருத சஞ்சீவினி |
| நீரணிவிழா | - | அபிடேக விழா |
| வாளாமை | - | ஆசௌசம் |
| கண்கூடு | - | பிரியதரிசனம் |
| கதிர் | - | ஆரும் கிரணமும் |
| கல் | - | அனுசுரணம் |
| திருமொழி | - | ஆகமம் |
| நாள்வழிபடு மடிசில் | - | யோசனம் |
| பொற்குடம் | - | அபிடேக கலசம் |
| மறம் | - | அகிதம் |
| விடறு | - | சரீரவீணை |
| வழுத்தல் | - | அபிமந்தரித்தல் |

வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும்போது தமிழ்மொழியின் இயல்புக்கு ஏற்ப வருதல் வேண்டும். இவ்வியல்புக்கு நன்குணர்ந்த அடியார்க்குநல்லார், ‘காவியம்’ என்ற சொல் காவியம் என்றாகிச் காப்பியம் எனத் தமிழ் மரபிற்கு

ஏற்ப மாற்றியமைந்த நுட்பத்தினைச் தம்முடைய உரைப்பாயிரத்திலே விளக்கிப் போகின்றார்.

**அடியார்க்குநல்லார் காட்டும் வழக்குகள்**

நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்னும் இருவகை வழக்கினையும் அடியார்க்குநல்லார் தம் சிலப்பதிகார உரையினூடே பயன்படுத்தி ஒருவகைச் சிறப்பியல்பைப் பின்பற்றியுள்ளார். பேச்சு வழக்கினையும் நாட்டார் வழக்காற்றில் பயின்றுவரும் பழமொழிகளையும் அவர் ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார். அவருடைய மொழியியல் உணர்வை நமக்குத் தெரிவிக்கும் சான்றுகளாக அவை துவங்குகின்றன.

“விளையாட்டுப் பூசல் வினையாயிற்று என்னும் வழக்குப்பற்றி (சிலப். வேனிற்.ப.230) என்று அவர் கூறுவது, விளையாட்டு வினையாயிற்று’ என்று மரபுத்தொடர் போன்று இன்றும் நம் பேச்சுவழக்கில் பயின்று வருகின்றது.

“திருவாணைக்கு மேலாய ஆணை இல்லையென்பது வழக்கு’ (சிலப் வேனிற் பக். 234-235) என வரும் தொடர் பழிமொழியாம். மாதவியிடம் ஊடல் கொண்டு ‘கானல்வரி பாடிப் பிரிந்து வந்த கோவலன் கண்ணகியிடம் இலம்பாடு நாணுத்தரும்’ என்று கூறுவதற்கு அடியார்க்கு நல்லார், “இன்று நாணுத்தருமென்றது, ‘கெட்டால் மதி தோன்றும்’ என்னும் வழக்கு” (சிலப். கனாத். ப.251) என்று கூறுவர். ‘கெட்டால்தான் புத்திவரும்’ என்று இன்று உலக வழக்கில் பழமொழியாகக் கூறுவதே இ∴து என்பதனை எண்ணும்போது நமக்கு இறும்பூது ஏற்படுகின்றது.

கவுந்தியைக் கண்ட கோவலன், அவரும் மதுரை வருவதனை எண்ணி மகிழ்ந்தனன்; மகிழ்ந்து,

“அடிகள் நீரே அருளுநிதி ராயினித்
தொடிவனைத் தோழி துயர் தீர்த்தேன்.”

என்று கூறினான். இதற்கு உரை விளக்கம் கூறுமிடத்து அடியார்க்கு நல்லார், “நீயிரே இது செய்வீராயினென்றது ஒரு வழக்கு” (சிலப். நாடு.ப.271) என்று கூறுவர்.

பொற்கொல்லன் தன்னுடன் வந்த காவலர்களுக்கு கள்வர்களின் மாயங்களைக் குறித்துப் பேசுவான் அப்போது,

"மருந்திற் பட்டீராயின் யாவரும்

பெரும்பெயர் மன்னனிற் பெருசவைப் பட்டீர்"

என்று அவன் அவர்களுக்கு எச்சரிக்கை கூறுவான். இவ்வடிகளுக்கு விளக்கம் கூறவந்த அடியார்க்கு நல்லார், "பட்டீர் விளைபொருள்: சொன்னோம் சொன்னோமென்னும் வழக்கு இது முற்கூறினான். அவர் அஞ்சிக்கடுகக் கோறற்கு இது முற்கூறினான், அவர் அஞ்சிக்கடுகக் கோறற்கு (சிலப். கொலைக். ப.434) என்று கூறுவது மக்களின் பேச்சு வழக்கினை நினைந்து கூறியதாகும்.

**பல்கலைப் புலமை**

"இளங்கோ அடிகள் பலகலைகளை நுணுகிக் கற்றகலைச் செல்வர். சிலப்பதிகாரத்தில் தொட்ட இடமெல்லாம் கலைமணம் கமழும். இளங்கோ அடிகள் முத்தமிழ் கற்றுத் துறை போகிய வித்தகர் எனில், அவர் நூலுக்கு உரை இயற்றிய அடியார்க்குநல்லார், அவரது புலமைப் பரப்பைக் கண்டு வியந்தவர் என்னலாம்; அவர் கூறும் கலைகளை விளங்கிக் கொண்டவர் என்னலாம்."

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் ஆகிய மூன்றுங் குறித்த புலமை மட்டுமல்லாமல், இவற்றுடன் தொடர்புடைய செய்திகளையும் அடியார்க்கு நல்லார் நன்கு அறிந்திருந்தார். பல்வேறு வகையான ஆடைகள் குறித்தும், கணக்கியல் பற்றியும் ஓவியம், மருத்துவம் வானநூற்கலை ஆகிய கலைகள் பற்றியும் அவர் ஆழமாக அறிந்து வைத்திருந்தார் என்பதனை அவர் உரையினால் நாம் அறிய முடிகின்றது. வயிரங்கள், கூலங்கள் ஆகியன பற்றிய அவருடைய புலமையும் ஆங்காங்கே பளிச்சிடக் காண்கின்றோம்.

அரங்கேற்று காதைக்கு அடியார்க்குநல்லார் இயற்றியுள்ள உரையிலிருந்து அவர்தம் இசை நுணுக்க அறிவையும், நாடகத் தமிழ் குறித்த புலமைச் செறிவையும் அறிய, ஒண்ணும். இந்திர விழவூரெடுத்த காதையினால் ஆடை அணி, மணிகளைப் பற்றிய அவருடைய புலமைத்திறம் வெளிப்படுகின்றது. கடலாடு காதையில் அவர் ஒப்பனை வகைகளை மிக விளக்கமுற விரித்துச் சொல்கின்றார். ஊர்காண் காதையில் நவமணிகள் குறித்தும் அவற்றின் நுண்ணிய இலக்கணங்கள் பற்றியும் அவர் நுட்பமாகக் கூறுகின்றார். இத்தகைய செய்திகளை ஒருங்கே வைத்து எண்ணுகிறபோது, அடியார்க்குநல்லாருடைய பல்கலைப் புலமை குன்றிடை இட்ட விளக்குப் போல் தெளிவாகத் தெரிகின்றது.

அடியார்க்குநல்லாரின் இசைப்புலமையின் ஆழத்தையும் அகலத்தையும் 'இசைத்தமிழ்' என்ற நூலில் பேராசிரியர் க.வெள்ள வாரணனார் மிக நன்றாக

விளக்கியுள்ளமை இவண் அறியத்தரும் செய்தியாகும். அரங்கேற்று காதை உரையில் இசைத் தமிழின் நுட்பங்களைத் தீட்டிச் செல்கின்றார் அவர். மேலும் அவர் சிலம்பின் உரைப்பாயிரத்தில் உரை எழுதுவதற்குப் பயன்பட்ட மூலநூல்கள் குறித்துச் சுட்டிக்காட்டியுள்ளார். அப்பகுதி வருமாறு:

“இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவ விருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீயம் முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும்.”

(சிலப். உரைச்சிறப்புப்.ப.9)

“இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி என்னும் அருந்தவ முனி, இடைச் சங்கத்து அநாகுலனென்னும் தெய்வம் பாண்டியன் தேரோடு விசும்பு செல்வோன் திலோத்தமை என்னும் தெய்வமகளைக் கண்டு தேரிற் கூடின விடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியா நிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப்பெயர் பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கமும் பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய் இந்திரகாளியமும் அறிவானார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதியமும், கடைச் சங்க மரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக் கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்து இயன்ற மதிவாணர் நாடகத் தமிழ்நூலுமென இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களென்றேனும் ஒரு புடையொப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக்கொள்க”

(சிலப். உரைச்சிறப்பு.ப.10)

“ஏழாண் டியற்றியோ ரீரா றாண்டிற்
சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி.”

(சிலப். அரங்.அடி 10-11)

என்ற பகுதிக்கு விளக்கம் கூறுமிடத்து அடியார்க்குநல்லார், பரத சேனாபதியார் கூறுகின்ற,

“நன்னார் விருப்புடையோ ணற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்ன குலத்தாலமைந்த தொன்மையாளாய்ப் பன்னிரண்டாண்
டேய்ந்ததற்பி னாடலுடன் பாடலழ கிம்மூன்றும்
வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு”

(சிலப். அரங். ப.79)

என்ற பாடலைச் சான்று காட்டுவார். கூத்துப் பற்றி அவர் கூறும் நுட்பமான விளக்கங்களும் அறிந்து இன்புறத்தக்கன.

“இருவகைக் கூத்தாவன: வசைக்கூத்து; புகழ்க்கூத்து; வேத்தியல், பொது வியல்; விரிக்கூத்து, வரிச்சாந்திக் கூத்து; சாந்திக்கூத்து, விநோதக் கூத்து; ஆரியம், தமிழ்; இயல்புக் கூத்து, தேசிக் கூத்து எனப் பல வகைய” – (சிலப். அரங் ப.79) என்று அவர் கூறுவது சிறப்பாக எண்ணத்தகும்.

“குணத்தின் வழியது அகக் கூத்தெனப் படுமே”

என்று குணநூலுடையார் கூறுவதனையும்,

“அகத்தெழு சுவையான் அகமெனப் படுமே”

என்று சயந்த நூலுடையார் கூறுவதனையும் அவர் அரங்கேற்று காதை உரையில் சுட்டுகின்றார்.

அரங்கேற்றுகாதையில் யாழ், குழல் ஆகியன குறித்து அடியார்க்குநல்லார் விளக்கும் பாங்கு நம் நெஞ்சைப் பிணிப்பதாக அமைக்கின்றது. “யாழ் நால்வகைப்படும்; அவை: பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழென்பன. இவை நாலும் பெரும்பான்மையை, சிறுபான்மையான் வருவன பிறவுமுள...” என்றும், “குழல் வங்கியம்: அதங்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்துமாம்; இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம்: வெண்கலம் மத்திமம்: ஏனைய அதமமாம். மூங்கில் பொழுது செய்யும், வெண்கலம் வலிது; மரம் எப்பொழுதும் ஒத்து நிற்கும்.

இக்காலத்துக் கருங்காலி, செங்காலி, சந் தனம் இவற்றாற் கொள்ளப்படும்; கருங்காலி வேண்டுமென்பது பெருவழக்கு. இவை கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருக வளர்ந்து நாலு காற்று மயங்கின் நாதமில்லை யாமாதலான் மயங்கா நிலத்தின்கண் இளமையும் நெடும் பிராயமுமின்றி ஒரு புருடாயுப்புக்க

பெரிய மரத்தை வெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே ஆற இட்டு வைத்துத் திருகுதல் பிளத்தல் போழ்ந்து படுதலின்மையை அறிந்து ஓர் யாண்டு சென்றபின் இலக்கண் வகையான் வங்கியம் செய்யப்படும்'' (சிலப். அரங்.ப.100) என்றும் அவர் கூறுவதால் அவர்தம் இசைக்கலைப் புலமையின் ஆழமும் அகலமும் நன்கு தெளிவுறும்.

''ஏழிசையாவன, சட்சம், ரிடபம், காந்தாரம் மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதமென்பன. இவை பிறந்து இவற்றுள்ளே பண்கள் பிறக்கும்; என்னை? 'சரிகமபதநியென் றேழெழுத்தாற்றானம், வரிபரந்த கண்ணினாய் வைத்துத் தெரியவரிய, ஏழிசையுந் தோற்று மிலற நள்ளே பண்பிறக்கும், சூழ்முதலாஞ் சுத்தத்துளை' என்றாராகலின்'' (சிலப். அரங். ப.101) என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்ற விளக்கம் அவருடைய ஏழிசைப் புலமை கலத்தைக் துலக்கிக் காட்டும்.

நால்வகை உத்தமத் தோற்கருவிகள் குறித்து அவர், ஊர்காண்காதை உரையில் குறிப்பிடுவார். அவை மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லிகை என்பவாம்.

(சிலப். ஊர்காண். ப.378)

''நாடகம் கதை தழுவி வரும் கூத்து'' என்று விளக்கிப் பேசும் அடியார்க்கு நல்லார் பல்வகையான கூத்துக்களைக் குறித்தும் விரிவாகக் கூறியுள்ளமை இவண் எண்ணத்தகும் (சிலப். அரங். பக்.80-81) பதினோரு வகை ஆடல்களை அவர் அரங்கேற்றுகாதை உரையில் விளக்குவர். அரங்கின் அமைப்புக் குறித்து இளங்கோவடிகள் கூறும் செய்திகளையும் அடியார்க்கு நல்லார் மிக நுட்பமாக விளக்குகின்றார். சிற்ப நூலாசிரியர் கூற்றுக்களை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு அவர் விளக்குகின்றார். பரத சேனாபதியார், செயிற்றியனார் ஆகிய நாடகத் தமிழ் நூல் வல்லாரின் கருத்துக்களை அவர் மேற்கோள் காட்டிக் குறிப்பிடுவதும் இவண் எண்ணத்தகும். கணக்கியலறிவும் அவருக்கு நிரம்பவுண்டு என்பதும் இப்பகுதியினால் தெளிவுறும்.

அரங்கினை அமைப்பதற்கு உரிய அளக்குங்கோல் பற்றி அடியார்க்குநல்லார் கூறுவது நம் சிந்தையைக் கவர்கின்றது. ''பொதியின்மலை முதலிய புண்ணியவரைப் பக்கங்களிலே நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ணொடு கண்ணிடை ஒரு சாணாக வளர்ந்தது கொண்டு நூல்களிற் சொல்லுகிறபடியே அரங்கஞ் செய்ய அளக்குங்கோல் உத்தமன் கைப் பெருவிரலில் இருபத்து நாலு கொண்டது ஒரு கோலாகி நறுக்கியென்க'' என உரை எழுதியபின், மேலும் அவர்,

“இதனுள் அணுமுதற் பெரு விரலளவு உயர்ந்து வருமாறு; அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள்; தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி; இம்மி எட்டுக் கொண்டது எள்ளு; எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரல் என்க கொள்க” (சிலப். அரங். ப.114) என்று கணக்கிட்டுக் கூறுவது நினைதற்பாற்று.

“பட்டு நூலானும் எலி மயிரானும் பருத்தி நூலானும் நுண்ணிய தொழில்களை ஊசியாற் பிணிக்கும் பட்டுச் சாலியர் இருக்குமிடங்களும்” (சிலப். இந்திர. ப.153) என்று அவர் கூறுவது கொண்டும், “நிலவரைப்புத் தருங்கொலென்றார். சல்லியகரணி, சந்தானகரணி, சமனியகரணி, மிருதசஞ்சீவினி யென்னும் இவை முதலிய மருந்துகளைத் தரும் நிலவரைப்பு இவ்வூடல் முதலியவற்றிற்று மருந்து தரமாட்டதென்றற்கு” (சிலப். இந்திர. ப.171) என்று உரைப்பது கொண்டு அவருடைய ஆடைகளைப் பற்றிய புலமை, மருத்துவப் புலமை ஆகியன புலனாகும். திருநெல்வேலி நகரத்தில் இன்றும் ஒரு வீதியின் பெயர் சாலியார் தெரு என்பதாக வழங்குகின்றது.

“இதனுள் விருத்தியென்பது இருப்பு: ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல் இயங்குதலென்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள..” (சிலப். வேனிற். ப.230) என்று தொடங்கி அவர் விளக்குவது கொண்டு அவரின் ஓவியக்கலை பற்றிய புலமை தெளிவாகின்றது. நாள், கிழமை ஆகியன குறித்துக் கணக்கிடும் வானநூற் கலையறிவும் அடியார்க்குநல்லாரிடம் இருந்தமையை நாடுகாண் காதை முதல் மூன்று அடிகளுக்கு அவர் எழுதிய உரை விளக்கத்தினால் அறிய முடிகின்றது. அப்பகுதி வருமாறு:

“அந்தச் சித்திரைச் திங்கட் புகுதி நாள்-சோதிதிதி மூன்றாம் பக்கம், வாரம்-ஞாயிறு. இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங் கூடிய சனி வாரத்திற் கொடியேற்றி ‘நாலேழ் நாளினும்’ (மணி 1:8) என்பதினால் இருபத்தெட்டு நாளும் விழா நடந்து கொடியிறக்கி வைகாசி இருபத்தெட்டினிற் பூருவ பக்கத்தின் பதின்மூன்றாம் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில நாட் கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்றநாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருளிலே யென்றவாறு” (சிலப். நாடு ப.267) இவ்வாறு அவர் கூறுவதனால் அவர் தம் சோதிடப் புலமையும் வெளிப்படுகின்றது.

அடியார்க்குநல்லாரின் சமணசமயப் புலமை வியந்து பாராட்டும் வகையில் உள்ளது. நாடுகாண் காதையில் அவர், ''குடங்கயையாவது ஐந்து விரலுங் கூட்டி உட்குழப்பியது என்னை? 'குடங்கை.. உட்குழிப்பதுவே' (2:17, அடியார்) என்றாராகலின். இதனாற் சொல்லியது: நமது தரிசனத்துக் கடியப்பட்டவாற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க வென்றதாம். எனவே ஊனையும் உடன் கூறிற்றாம்'' (சிலப். நாடு. ப.273) என்று கூறுவார். இதில் வருகின்ற 'தரிசனம்' என்பது சமணசமய சாத்திர நூலாகும். இதே போன்று அடைக்கலக் காதையில் அவர், ''பட்டினி நோன்பிகள் இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப்பாடும் பட்டினி விட்டுண்ணும் விரதிகள்'' (சிலப். அடைக். ப.408) என விளக்கமுரைப்பார். அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள் ஆகிய பஞ்ச பரமேட்டிகள் பற்றியும் (சிலப். நாடு. ப.268) அ, ஸி, ஆ, உ, ஸா அசிஆஉசா எனப்படும் பஞ்ச மந்திரங்கள் (சமணர்கள் பஞ்ச நமஸ்காரம் என்ப) குறித்தும் (சிலப். நாடு. ப. 274), 'முக்குடையாவன: சந்திராதித்தம், நித்தியவினோதம், சகலபாசனம் என்பன' (சிலப். காடு. ப.298) என்றும் அடியார்க்குநல்லார் கூறும் கருத்துக்களால் அவருடைய சமணசமய நூற்புலமை இனிதே புலனாகும்.

மாடலனுக்குத் தான் கண்ட கனவினை விளக்குகின்றான் கோவலன். அவ்விடத்தில் அடியார்க்குநல்லார், கனாநூலிலிருந்து நான்கு பாடல்களை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். அவற்றுள் ஒன்று கனவு கண்ட நேரத்திற்கும் கண்ட கனவின் பயனுக்கும் உள்ள தொடர்பினைச் சுட்டிக் காட்டுகின்றது. அப்பாடல் வருமாறு:

''படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டே
கிடைத்த பிற் சாம மிகுதிங்க ளெட்டிற் கிடைக்கு மென்னும்
இடைப்பட்ட சாம மோர் மூன்றினிற் நிங்களோர் மூன்றென்பவால்
படைப்பட்டசாமமு நாள்பத்து ளேபலங் கைபெறுமே.''

(கனாநூல். 2)

இவ்வாறு அடியார்க்குநல்லார் மிக விரிவாகக் கனா நூலின் கருத்துக்களை (சிலப். அடைக். பக். 404-405) விளக்குவது கொண்டு அவர்தம் கனாநூற் பயிற்சி தெளிவாகின்றது.

சிலம்பை விற்க வந்த இடத்தில் கருந்தொழிற் கொல்லனால் கோவலன் கள்வனென்று குற்றம் சுமத்தப்படுகின்றான். பொற்கொல்லன் தன்னுடன் வந்த காவலர்களுக்குக் கள்வர்களின் இயல்பை மிகவும் விரிவாக எடுத்து

விளம்புகின்றான் (சிலப். கொலைக். அடி 165-189) இவ் அடிகளின் உரையில் களவுநூல் கருத்துக்களை அடியார்க்கு நல்லார் சுட்டக் காண்கின்றோம். கள்வரிகளின் இயல்புகளைக் கூறும் திறத்தை விளக்க வந்த இடத்து அவர் ‘‘கொலைத் தொழில் புரிந்த பொற்கொல்லன் களவு நூலிலுள்ள ஏதுக்களைக் காட்டினனாய் ‘களவு நூல்’ பற்றிய அறிவு புலனாகும். இதன் அடிக்குறிப்பில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர், ‘களவுநூல் ஸ்தேய சாஸ்திரமென்று வழங்கப்படுகிறதென்றும், அந்நூலைச் செய்தவர் கசரென்பவரின் ஆசிரியராகிய கர்ணீஸுதர் என்பவர் என்றும் வடமொழியாளர் கூறுவர்’’ (சிலப். கொலைக். ப.433) என்று குறிப்பதும் இவண் அறியத்தக்கதாகும். அக்காதையின் 180-181 ஆகிய அடிகளின் உரையிலும் அடியார்க்கு வல்லார், ‘‘களவுநூலிற் சொல்லிப் போதுகின்ற தொழில் களையறிந்து எண்ணிச் செய்வராயின், தாம் மண்ணுலகத் இருப்பினும் விண்ணுலகத்திருக்கும் இந்திரனது மார்பிணிந்த ஆரத்தை எய்த வேண்டின் அதனையும் எய்துவஎன்றானென்க’’ (சிலப். கொலைக். ப.434) என்று கூறுவர். இவற்றால் களவு நூல் குறித்து அவர் அறிந்து வைத்துள்ள புலமை வெளிப்படுத்துகின்றது.

இங்ஙனம் அடியார்க்கு நல்லாரின் பல்கலைப் புலமைக்கு மிகுந்த பல சான்றுகளைச் சிலப்பதிகார உரையினின்றும் காட்ட இயலும்.

**உரை வளம்**

நீர்வளம் நிறைந்திருக்கும் நாடு செழிப்புடன் விளங்குமன்றோ! அதுபோல உரை வளம் நிறைந்து விளங்கும் அடியார்க்குநல்லாரின் உரையினால் இலக்கியம் செழிப்புடன் விளங்குகின்றது. அடியார்க்குநல்லார் பல்வேறு உத்திகளையும் நுட்பங்களையும் பின்பற்றித் தம்முடைய உரையினை வளமுடையதாக்கி நம்மை ‘மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்து’ வியக்கும் வண்ணம் செய்து விடுகின்றார். தருக்க நூலறிவுடன் வினாவிடைப் போக்கில் உரை சொல்லிப் போவது உரையாசிரியர்களின் திறன்களும் ஒன்றாகும். அரிய சொற்களின் பொருள் கூறியும், சொல் பொருள் விளக்கம் கூறியும், இலக்கண நுட்பங்களை விளக்கியும் போவது அவ்வுரையாசிரியர் தம் போக்காகும். அணி நலன்களைச் சுட்டிக்காட்டியும், புலமை நயங்களையும் எடுத்துக் காட்டியும் அன்னோர் உரை கூறுவார். மேற்கண்ட திறன்களைச் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்குநல்லாரிடம் சிறப்பாகக் காண ஒண்ணும். ஆகவேதான் அவர் உரை வளம் நிறைந்து விளங்குகின்றது எனலாம்.

**வினாவிடைப் போக்கு**

மூல நூலாசிரியர் கூற்றினை விளக்கும் அடியார்க்கு நல்லார், வினாவை எழுப்பித் தருக்க முறையில் விடை கூறிஉரை கூறுவார். இத்திறனால் மூலநூலுக்கு நல்லதொரு விளக்கம் கிடைக்கும் என்று அவர் கருதினார். ஒரு வினாவைத் தாமே எழுப்பிக் கொண்டு அதற்கு விடை கூறும் முறையில் அடியார்க்குநல்லார் உரை கூறியுள்ளமை அறிந்தின்புறத்தக்கது. ஒரு மாணாக்கனுக்கு ஆசிரியர் கூறும் பாங்கில் அமைந்த அவரது உரைப்பகுதி வருமாறு "'ஆகும்மே' என்ற இலேசினான் உய்த்துணரற்பாலதனை மாணாக்கன் ஐயந்தீர்தற்கன்றே பின்னும், 'சிதைந்தனவரினும் இயைந்தன வரையார்' (தொல். எச்ச-6) என்றார் எனக்கொள்க." (சிலப்.உரைப்.ப6)

"உலகத்துக் காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடும் கூறல் வேண்டுமென்றே! என்று மாணாக்கன் வினா எழுப்புவது போன்று கூறி அவர் அவ்வினாவுக்கு உரிய விடையினைப் பகர்கின்றார். "இந்நாடகம் காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமும் கூறி சிறிதாயினும் வீடு கூறிற்றிலர்; என்னை எனின், 'யானறிகுவனது பட்டதென்று' (பதி.11) உரைத்த சாத்தனார் நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதி இருக்கின்றாக்கு அடிகள், 'நாட்டுதும் யாமோர் நாட்டுடைச் செய்யுள்' (பதி.66)" (சிலப். உரைப். 10-11) என்று தொடங்கி அவர் விரிவாகக் காரணங்களைக் காட்டி விளக்குகின்றார்.

"இதனை மங்கல வாழ்த்துக் காதையுமென்னாது மாடலுமென்றது என்னையோவெனின், -இ∴து ஆசிரியப் நாவால் வாராது கொச்சகக் கலியால் வருதலானும், கதையையுடையது காதையாமாதலானும், அவ்வாறு இதிற் கதை நிழச்சியின்மையானும், வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர் கொடுத்தாரென உணர்க. அ∴து அற்றாக; மேலும் கானவல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை, ஊர்சூழ்வரி, வஞ்சினமாலை, குன்றக்குரவை இவையிற்றையும் காதை என்றிலராலெனின், அவற்றைக் கூறாததும் சில வேறுபாடு கருதிப் போலும்" (சிலப். பதிகம். ப.25) என்று அடியார்க்குநல்லார் 'மங்கல வாழ்த்துப்பாடல்' என்பதற்குக் கூறுகின்ற விளக்கம், தருக்க முறையில் வினா விடைப் பாங்கில் அமைந்துள்ளமை கண்கூடு.

அரங்கேற்றுகாதையில் பூதங்கள் ஐந்தானும் இவ்வுடம்பு ஆகும் என்று கூறிய ஆசானை மாணாக்கன் வினவுவதாகக் கூறி தக்க விடையிறுப்பார் அடியார்க்குநல்லார்: "இப்பூதங்களைந்தானும் புற்கலமாம் என்ற ஆசானை

மாணாக்கன் பணிந்து பூதங்கள்தாம் ஒன்றோடொன்று கூடுவனவல்ல; மண் செறிதலைக் குணமாக வுடைத்து; நீர் நெகிழ்தலைக் குணமாகவுடைத்து: காற்று ஓரிடத்தும் நிலைபெற்று நிற்பதன்று; ஆகாயமென்பது ஓருருவுண்டில்லையன்று; அன்றியும் 'செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே, அப்பரிசு மண்ணைந்து நீர் நாலாம்-ஒப்பரிய, தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று, வேயாரும் தோளி விளிம்பு' என்பதனால் மண் ஐந்து பயனுடைத்து; நீர் நான்கு பயனுடைத்து: தீ மூன்று பயனுடைத்து; காற்று இரண்டு பயனுடைத்து; வான் ஒரு பயனுடைத்து; ஆதலால் இவை ஒன்றோடொன்று கூடுவன வல்லவாகவும், இவற்றின் கூட்டம் உடம்பென்றிராதலால் இவ்வைந்தின் கூட்டம் உடம்பாவது எவ்வாறோ எனின், - இதற்கு விடை 'மெய்வாய் கண்மூக்குச் செவியெனப் பேர்பெற்ற, ஐவாயுவாயவற்றின் மீதெடுத்துத் -துய்ய சுவையொன்றையூற்றோசை நாற்றமென் றைந்தால், அவைமுதற் புற்கலமாம்' என்பது.'' (சிலப். அரங். ப.102).

### சொற்பொருளை வேற்றுமைப் படுத்துதல்

சொற்களின் பொருள் வேற்றுமையினையும் அடியாக்குநல்லார் தவறாது குறித்துச் செல்கின்றார். இதனை ஒன்றிரண்டு சான்றுகள் வாயிலாகக் கண்டு தெளிதல் சிறப்பாகும்.

''மறம்-அகிதம், அறம்-இதம், திறம்-தீது நன்றென்னும் திறம்'' (சிலப். ஊர்.ப.369) என்றும், ''சுருங்கண் செங்கண்ணென்றார், இருவர்க்கும் கூட்டமின்மையும் உண்மையும் உணர்த்தற்கு'' (சிலப். இந்திர, ப.172) என்று அவர் கூறுவன தக்க சான்றுகள் ஆகும். கண்ணகியின் கண்களைப்பற்றி இவ்வாறு பொருள் கூறி விளக்கிய அடியார்க்குநல்லார், துன்பமாலையுள் வரும் 'செங்கண்' என்பதற்குக் கூறும் பொருள் அறிந்து இன்பறும் வண்ணம் உள்ளது. ''ஆண்டு'' 'கண்ணகி சுருங்கண்' (15-237) என்றவர் ஈண்டு, 'செங்கண்' என்றார். காலையில் தலையனியாற் பிறந்த செல்வி தோன்ற' (சிலப். துன்ப. ப. 463) பொருளை இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்பச் சொற்பொருளை வேறுபடுத்திக் கூறுகின்ற அடியார்க்குநல்லார் புலமை வளம் நினைந்து போற்றுமாறு உள்ளது.

### சொற்பொருள் விளக்கமும் கருத்து விளக்கமும்

சொற்களுக்குப் பொருள் கூறுவதோடு அமையாது அடியாக்குநல்லார், அவற்றிற்கு விளக்கமும் கூறிச் சுவையூட்டுகின்றார். அதே போன்று கருத்துக்களை அவரது திறனும் அறிந்தின்புறமாறு உள்ளது எனலாம்.

‘ஊடலளித்தல்’ என்று சொல்லிற்கு அவர் கூறும் விளக்கத்தினையும் கருத்துரையினையும் ஈண்டுக் காண்போம். ‘‘பின்னர் உடலளித்தவாவது, எண்ணில் காமமெரிப்பினும் வேற்சொலாப் பெண்மையும் நானும் அழிந்து வந்து குறையுற்றுக் கூடுந்துணையும் நீயிர் பிரிவாற்றியிருந்தீர்: அன்பிலீரென ஊடுவது. ஊடலை அளித்தல்-அதனான் வருந்துன்பத்தையளித்தல்’’ (சிலப். கடவாடு. ப.196) என்பது அவரது உரைப்பகுதி.

இதேபோன்று ‘வம்பப் பரத்தை’ வறுமொழியாளன்’ என்பவற்றிற்கு அவர் கூறுகின்ற விளக்கங்களும் சுவை பயப்பன.

‘‘வம்பப் பரதகை – புதிய பரத்தைத் தன்மையுடையாள்; குண்டமென்றபடி. இனி, மனவெழுச்சியால் தோன்றினபடி சொல்லித்திரியும் பரத்தையென்றுமாம். வறுமொழியாளன்-பயனில் சொல்லாளன்; விடனென்றபடி’’ (சிலப். நாடு.ப.283)

‘‘ஆரிடை-அரியவழி; ஆவது ஆறலைப்போரும் ஊறு செய் விலங்குமுடைத்தாய் ஏற்றிழிவும் கவலைச் சின்னெறியுமாயிருப்பது’’ (சிலப். காடு. ப.303) என்று அடியார்க்கு நல்லார் விளக்குவார்.

ஊர்காண்காதையுள் வரும் ‘அறத்துறை’ என்பதற்கு அடியாாக்குநல்லார் தரும் விளக்கம் சிறப்பாக அமைகின்றது அது வருமாறு: ‘‘அறத்துறை: அறமும் அறத்தின் துறையுமென உம்மைத்தொகை. அறமாவது இரு வகைத்து: இல்லறமும் துறவறமும் என அவற்றுள் இல்லறமென்பது கற்புடை மனைவியொடு இவ்வின்கண் இருந்து செய்யும் அறம்... இனித் துறவறமாவது நாகம் தோலுரித்தாற்பேல அகப்பற்றும் புறப்பற்றுமற்று இந்திரீயா வசமறுத்து முற்றத்துறத்தல்’’ (சிலப். ஊர்காண். ப.367)

‘‘நாணும் மடனும் பெண்மையவாதலின் இவற்றைக் கழிந்தே கடைகழியவேண்டுதலிற் கடைகழி மகளிரெனப் பொதுமகளிர்க்குப் பெயர் கூறினார்; இவர்க்குக் காதல் பொருளின் கண்ணாதகலிற் காதலஞ் செல்வரென்றார்; தம்மேற் காதலையுடைய செல்வரோடெனவுமாம்’’ (சிலப். ஊர்காண். ப.372) என்ற அவர் விளக்கம் மிக நுண்மையானது.

‘முந்நீர் என்ற சொல்லிற்கு அடியார்க்குநல்லார் கூறுகின்ற விளக்கம் ஏற்றம் மிக்கதாக அமைந்துள்ளது. இது பலரையும் கவர்ந்துள்ள விளக்கமுமாகும். ‘‘முந்நீர்-கடல் ஆகுபெயர்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று;

ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீரும் இன்றாமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று; முதியநீரெனின், ‘நெடுக்கடலுந் தன்னீர்மை குன்றும்’ (குறள் 17) என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; ஆனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; ஆனால் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின், முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது; முச்செய்கையாவன மண்ணைப் படைத்தலும், மண்ணையழித்தலும், மண்ணைக் காத்தலுமாம்’’ (சிலப். ஆய்ச் .ப.455) என்பதே அவ்விளக்கமாகும். இவ்வாறு சொற்பொருள் கூறுவதோடு மட்டும் அமையாது. நுட்பமான விளக்கவுரையினையும் உடன்கூறிச் செல்லும் பாங்கினை அடியார்க்குநல்லார்பால் பெரிதும் காணமுடிகின்றது.

**பொருத்தம் காட்டி விளக்கும் புலமைத்திறன்**

அடியார்க்குநல்லார் தம் உரையின் இடையிடையே பொருத்தம் கூறி விளக்குவதும், வைப்புமுறைக்குரிய காரணம் காட்டி விளக்குவதும், முன்பின் நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்திக் கூறுவதும் அவருடைய உரைத்திறனை வெளிப்படுத்தும் சான்றுகளாகும்.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரை மாநகருக்குப் புறப்பட்டுச் செல்லும்போது பற்பல இடங்களில் தங்கிச் சென்றனர். இதனை இளங்கோவடிகள்.

‘‘மாதவத் நாட்டியு மாண்புற மொழிந்தாங்கு
அன்றவர் உறைவிடத் தல்கினர் அடங்கி’’

(சிலப். காடு. 8.9)

என்பர். இவ்வரிகளுக்கு விளக்கம் கூறுமிடத்து அடியார்க்கு நல்லார், தக்க காரணங்கூறி விளக்குகின்றார். ‘‘இங்ஙனங் கூறியது, ‘ஆறைங்காதம்’ (10, 42) என்றமையாலும், ‘காவத மல்லது கடவாராகிப், பன்னாட்டங்கிச் சொன்னானொருநான்“ (10:154-5) என்றமையானும், ஈண்டும் ‘அன்றவ ருரைவிடத் தல்கின ரடங்கி’ என்றமையானும் சிலநாட் சென்றவழிச் செலவொழித்தொழிந்து ஆண்டாண்டிருந்து ஆறிச்சென்றமை ஊணர்தற்கெனக் கொள்க’’ (சிலப்.காடு.ப.299) என்பது அவர் தரும் உரை விளக்கம்.

“அரவுஞ் சூரும் இரைதேர் முதலையும்
உருமுஞ் சார்ந்தவர்க் குறுகண் செய்யா”

(சிலப். புறஞ் 7-8)

என்று அடிகளுக்குப் பின்வருமாறு அடியார்க்குநல்லார் விளக்கம் கூறிப் பொருத்தம் காட்டுவார்:

“இவற்றான், இவனாணையும் ஐவகை நிலத்திற்கு உரிமையும் கூறினார். ஐவகை நிலமென்பது எவற்றாற் பெறுதுமெனின்: கான மென்பதனால் முல்லையும், சூர் கரடி என்பவற்றாற் குறிஞ்சியும், வேங்கை யென்பதனாற் பாலையும், உருமுவென்பதனால் மருதமும், முதலை யென்பதனால் நெய்தலும் பெறுதும்.”

(சிலப். புறஞ். ப.340)

அணிநலன்களில் உள்ள ஆர்வம்

சிலப்பதிகாரக் காப்பிய உரையில் அணிகளுக்கு நிரம்ப இடமுண்டு. அவ்வாறு அணிகள் வரும் இடங்களை நன்கு குறித்து தகுந்தவாறு விளக்கத் தவறவில்லை அடியார்க்குநல்லார். அவர் உதாரம் என்னும் அலங்காரத்தைப் பற்றிக் கூறுமிடத்து,

“உதார மென்ப தோதிய செய்யுளிற்
குறிப்பி னொருயொரு ணெறிப்படத் தோன்றல்”

எனவரும் அணியியல் என்னும் நூலின் நூற்பா ஒன்றினைச் சுட்டியுள்ளார். ஆக அவர் ‘அணியியல்’ என்றொரு அலங்கார நூலைக் கற்றுள்ள புலமையாளர் என்பது பெறப்படும்.

கோவலனும் கண்ணகியும் ஞாயிறும் திங்களும் ஒருங்கே இருந்த தோற்றம் போல இருந்தமையினை இளங்கோவடிகள் மனையறம்படுத்த காதையில் கூறுவர். இதனை விளக்கவந்த அடியார்க்குநல்லார், “ஒருங்கிருத்தல்: இல்பொருளுவமம்” (சிலப். மனை. ப.49) என்று கூறுவர். கண்ணகியின் அழகினைப் பாராட்டிப் பேசும் கோவலன்,

"மலையிடடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தல் தையால்..."

(சிலப். மனை. 77-80)

என்று பலபடப் பாராட்டுவான். இவ்வடிகளில் அமைய கிடக்கும் பல்வேறு அலகாரங்களை அடியார்க்குநல்லார் ஒன்று விடாமற் குறித்திருப்பது நினைவிற் கொள்ளத்துக்கு அவ்வுரை விளக்கம் வருமாறு:

"காட்சியின் உயிர் மயக்குறுதலிற் பாவாயென்று அவ்வாறு அழியுமுயிரை இமைப்பிற் றருதலின் மருந்து என்றுங் கூறி, மலையிடைப் பிறக்குமணி குழையாமையில் அதிற் பிறவாமணியே என்பேனோ! அலையிடைப் பிறக்கும் அமிர்திற்கு இவ்வடிவு இன்மையின் அதனிற் பிறவா அமுதேயென்பேனா யாழ்கட்கு இன்னாதாகலின் அதனிடைப் பிறவாத இசையே யென்பேனோவெனதெரிதரு தேற்ற வுவமை யென்னும் அலங்காரமும், மலைகடலென விரோதமும், பின்வருநிலையென்னும் அலங்காரமும் புலப்படுத்தினாரெனவுணர்க."

(சிலப். மனை. ப.55)

"செம்மலாக் கண்கண் முழுநீர் வார என்பதற்குச் செம்மலரிடமெல்லாம் கள்ளாகிய நீர் முழுவதும் வாரவெனவும், சிவந்த மலர்போலும் கண்கள் இரண்டும் வார வெனவும், சிவந்த மலர்போலும் கண்கள் இரண்டும் நீர் வார வெனவும் சிலேடைப் பொருண்மை காண்க." (சிலப். அந்தி 129) என்று அவர் கூறுவது நயமான பகுதியன்றோடு.

அடியார்க்குநல்லார் 'புகழுவமம்' என்னும் அலங்காரம் (சிலப். மனை. ப.51) 'உருவகமென்னும் அலங்காரம் (சிலப். அந்தி. ப.134), 'பரியாய அலங்காரம்' (சிலப். ஊர்காண். ப.367), 'சமாதி என்னும் அலங்காரம்' (சிலப். கொலைக். ப.427), விரோதமென்னும் அலங்காரம் (சிலப். ஆய்ச். ப.427) எனப் பற்பல அணிகளைக் கூறும் தம்முடைய உரையினைச் செழுமைப் படுத்திச் சிறப்பித்துள்ளார்.

**உரைநயங்கள்**

அடியார்க்குநல்லாரின் உரை தொட்ட இடம் எங்கணும் சுவைக்கும் பலாச்சுளையினைப் போன்று நயம் மிகுந்து விளங்கும் பான்மையினை அதனைக் கற்பார் எளிதில் உணர்வர். சொல்நயம், பொருள்நயம், கருத்துநயம் ஆகிய பல்வேறு நயங்களை அவர் உரையினூடே கண்டு சுவைக்க முடிகின்றது. அத்தகைய நயங்கள் சில எவ்வாறு அமைந்து நம் எண்ணத்தைக் கவர்கின்றன என்று காண்போம்.

அடியார்க்குநல்லார் பதிகப் பகுதியிலே வரும் சில தொடர்களுக்குத் தொடர்நயம் கண்டு கூறுவர். அவர் நாடக மேத்தும் நாடகக் கணிகை'' என்பதற்கு ‘‘நாடக மேத்துமென்றது – நாடகம்தான் இவளாற் சிறப்பெய்தது ஆதலின் ஏத்திற்றென்றவாறு'' (சிலப். பதிகம். ப.20) என்றும் ‘‘கண்டனன் பிறனோர் கள்வன்'' என்ற அடிக்கு பிறனோர் கள்வன் கையிற் கண்டனனென்றார். தன்னையும் கள்வனென்றமை தோன்ற'' (சிலப்.பதிகம்,ப.21) என்றும் கூறுவார்.

‘திங்களைப் போற்றுதும்' என்று இளங்கோவடிகள் தம் காப்பியத்தினைத் தொடங்கினார். இதற்கு அடியார்க்குநல்லார் பின்வருமாறு பொருத்தநயம் புகல்வார்; திங்களை முற்கூறினார், இத்தொடர்நிலைச் செய்யுட்குச் சிறந்த முதன்மொழி அதுவாகலான்'' (சிலப். மங்கல ப.37) கோவலன் கண்ணகியை,

> ‘‘மாசறுபொன்னே வலம்புரிமுத்தே
> காசறு விரையே கரும்பே தேனே''

எனப் பாராட்டுவான். இவ்வாறு பாராட்டும் இவ்வடிகளின் பொருட் பொருத்தத்தை அறத்தின் புற்ற அடியார்க்குநல்லார், ‘‘கட்கு இனிமையான் மாசற வோடிய பொன்னை யொப்பாய்'' ‘‘ஊற்றின் இன்பத் தான் முத்தையொப்பாய்'' ‘‘உயிர்ப்பின் இனிமையாற் குற்றமற்ற விரையை யொப்பாய்'' ‘‘இனிய மொழியை உடைமையால் தேனையொப்பாய்'' என்றும் கூறி, ‘‘இவற்றாற் சொல்லியது ஒளியும் ஊறும் நாற்றமும் சுவையும் ஓசையுமாகலின், ‘கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும வைம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள' (குறள் 1101) என நலம் பாராட்டப்பட்டன'' (சிலப். மனை. ப.53) என்றும் காட்டும் பொருத்தநயம் அவரது அரிய புலமை நயத்தை வெளிப்படுத்தும்.

‘‘ஊடற் கோலமோடு இருந்தோன் உவப்ப’ என்ற அடிக்கு அடியார்க்குநல்லார் விளக்கவுரை கூறும்போது ‘‘ஊடலோடு என்னாது கோலமோடென்றார். மனத்தில் நிகழ்ந்த ஊடலை முகம் காட்டுதலின்’’ (சிலப். கட.ப.193) என்று கூறிக் குறிப்புநயம் சுட்டுவார். இதே காதையில் வரும் ‘‘திருந்து கோன் நல்யாழ்’’ என்ற அடிக்கு அவர், ‘‘திருந்துகோனல் யாழ் இன்பத்தை விளைத்தற்குக் காரணமாகிய கோலையுடைய யாழ்; எனவே மேல் துன்பத்தை விளைவிக்குமென்பது கருத்து’’ (சிலப்.கட.ப.200) என்று கூறுவதும் நயமான பகுதியாகும்.

‘‘ஊழடி யொதுக்கத் துறுநோய்’’ என்ற நாடு காண்காதை அடியில் வரும் ‘உறுநோய்’ என்ற சொல்லினை விளக்கும்போது அவர், ‘‘நோயஎன்றார்: கொலையென்று வாக்காற் கூறவுமாகாமையின்’’ (சிலப். நாடு. ப.274) என்று கூறிச் சொல்நயத்தைப் புலப்படுத்துவார் வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் கவுந்தியடிகளிடம்,

> ‘‘உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
> கடவது முண்டோ கற்றறிந் தீர் என’’

என்று வம்பு பேசியதை நாம் அறிவோம். ‘கற்றறிந்தீர் என்று இளங்கோவடிகள் கூறியுள்ள சொல்லின் நயத்தை ‘‘கற்றறிந்தீர் என்றது இகழ்ச்சி’’ (சிலப். நாடு. ப.284) என அவர் உரை கூறி வெளிப்படுத்தியள்ளார். இதே பகுதியில் ‘‘இழிப்பிறப்புற்றோர்’’ என்றதொரு சொல்லாட்சியால் மேற்கண்ட வம்பப் பரத்தையையும் வறுமொழியாளனையும் இளங்கோவடிகள் சுட்டுவார். இதனை நன்கு சுவைத்தறிந்த அடியார்க்குநல்லார், ‘‘இன்று பிறப்பற்றோரென்பது நெடுங்காலம் தவஞ் செய்து பெற்ற மக்கட் பிறப்பை ஒரு வார்த்தையினிழந்து இழிபிறப்புற்றார் என்றவாறு’’ (சிவப். நாடு. ப.285) என்று கூறும் விளக்கத்திலும் ‘சொல்நயம்’ பளிச்சிடுகின்றது.

> வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்’’

என்று கண்ணகியைப் பற்றிக் கவுந்தியடிகள் கூறுவார். இவ்வடியின் கருத்துநயம் நம்மையே கவரும்போது அடியார்க்குநல்லாரின் உள்ளத்தைக் கவர்வதில் வியப்பில்லை. இவ்வடிக்கு அவர் காட்டும் கருத்து நயம் வருமாறு:

“இவளடியைப் பூமிதேவியும் கண்டறியாள் என்றது அகம்விட்டுப் புறப்பட்டறியாள் என்றவாறு. இனி மண் மகள் இவன் மென்மையைத் தானறிந்து நெகிழ்ந்திலன் என்றுமாம். இன்னும் கால் கொப்புளங் கொண்டு நிலத்திற் பாவாமையிற் கூறினாள் எனினும் அமையும்”

(சிலப். அடைக். ப.406)

கண்ணகி ‘தன்துயர் காணாத’வளாக இருந்தமையினைக் கவுந்தியடிகள் கூறினார். இதன்கண் அமைந்துள்ள கருத்துநயத்தை அடியார்க்குநல்லார், “இன்ப துன்பம் தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வருதலின், தன் துயர் காணாவென்றார்” (சிலப். அடைக். ப.406) என்று கூறி உரைநயக் புலமையின் உச்சியில் நிற்பார்.

ஆய்ச்சியர் குரவையில், “கயலெழுதிய இமய நெற்றியின் அயலெழுதியபுலியும் வில்லும்” எனவரும் அடிகளுக்கு அவர் காணும் உரைநயம் உணர்ந்து இன்பறுமாறுள்ளது. “அக்கயலைச் சேவிக்க அயலெழுதிய புலியும் வில்லுமென்க: ஒப்பாக எழுதிற்றிலர் என்பதாம் புலியும் வில்லும் மன்னரும் ஏவல் கேட்ப இப்பாருக்குத்தான் அரசனாயாண்ட பாண்டியனென்க” (சிலப். ஆய்ச். ப. 446) என்னும் அவரது நயவுரை நம் கருத்தைக் கவர்கின்றது.

அவலச்சுவையிலே பளிச்சிடும் கருத்தின் நயத்தை அடியார்க்குநல்லார்,

“கள்வனோ அல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரேஈதொன்று”

என ஊர்சூழ்வரியில் வரும் அடிகளுக்கு, “என் காற்சிலம்பு என்றாள்; தான் அரசன்: யான் ஒரு வணிகன் மனைவி என் காலணியினொன்று பெற்ற விலை தாராமைக் கள்வெனென்று ஒரு பெயரிட்டுக் கொன்றார்களேயென்று இஃதோர் அநியாயம் இருந்தபடி என்னவென்று தெளிந்து கூறினாள்.கொன்றாரேயெனப் பன்மை சுறினாள். அரசனோடு அமைச்சனையுங் கருதி” (சிலப். ஊர்.ப.470) என்று உரை வகுப்பதிலே உணர்ந்து இன்புற முடிகிறது. இவ்வாறு அடியார்க்குநல்லார் தாம் உரை கூறும் இடங்களில் பல்வேறு நயங்களையும் துலக்கிக் காட்டியுள்ளார்.

**திறனாய்வு உணர்வு**

அடியார்க்குநல்லார் மேலைநாட்டுத் திறனாய்வாளர்களைப் போலச் சிலப்பதிகாரத்தைப் பல்வேறு திறனாய்வுப் பார்வையில் ஆராய்ந்துள்ளனர். காப்பிய

அமைப்பு, கதையின் கட்டுக்கோப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தரின் பண்புகள், நூலாசிரியரின் புலமைச் செறிவு செயல்நிகழும் கால எல்லை, இடம் ஆகிய செய்திகளை எல்லாம் தம் நுண்மாண் நுழை புலத்தினால் அடியார்க்கு நல்லார் நுணுகி ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

காப்பியப் பகுதியில் காலம் பற்றிய செய்திகள் குறிப்பாகச் சுட்டப்பெறும். காலப் நீட்டிப்பைச் காப்பியத்தினுள் நீட்டிக் கூறமுனையின் அது சலிப்பு ஏற்படுத்தும். எனவே சுருங்கிய சில சொற்களில் விரைவு படுத்திக் கதை நிகழ்ச்சியினைக் கூறிப்போவது மூலநூலாசிரியரின் இயல்பாகும். இவ்வியல்பை நன்குணர்ந்து திறனாய்வு நெறியில் உரை வகுத்தவர் அடியார்க்குநல்லார் என்பதனைப் பின்வரும் சான்று உறுதிப்படுத்தும்.

“கண்ணகிக்குச் சில யாண்டு கழிந்தனவெனவே மாதவிக்குப் பல யாண்டு கழிதலும் கொள்ளப்பட்டது என்னும் மேற் ‘கனாத் திறமுரைத்த காதையில், தேவந்தி, கண்ணகி நல்லாளுக்குற்ற குறையுண்டென்று’ (41) என்புழி எச்சவும்மை விரிக்க இவட்கு அவள் இளமைப் பருவத் தொடங்கி நிகழும் பார்ப்பனத் தோழியாய் மாநாய்கன் மனைவளர்தலின், ஒரு காலத்தே குடிபுக்குச் செல்கின்றுழிப் பிரிவும் ஒரு காலத்தாயிற்றென்பதாகலின், ‘நாலீராண்டு நடந்ததற் பின்னர்’ (30:85) என்பதனை இருவர்க்குமாக்கி மாதவிக்கு எட்டினிறந்த பலயாண்டு சேறலிற் கண்ணகிக்குச் சில யாண்டு கழிந்தவெனப் பொருள்கூறலுமொன்று; இதனான் மிக்க பலமின்று; ஏற்குமேற் கொள்க. இது போலி.” (சிலப். மனை. ப.55)

கோவலன் பிரிந்திருந்தமையினால் கண்ணகி பல்வகை அணிகளையும் புனைந்து கொள்ளாது இருந்தாள். இதனைக் கூறும் பகுதி அந்திமாலைச் சிறப்புச் செய்காதைக் கண் வருவது.

“அஞ்செஞ்சீறடி அணிசிலம் பொழிய...” (சிலப். அந்தி. 47) என்று தொடங்கும் அடிமுதல், “தவள வாணகை கோவலன் இழப்ப” (சிலப். அந்தி.55) என்ற அடி வரையுள்ள பகுதியே அப்பகுதி. இதன் உரை விளக்கத்தில் அடியார்க்குநல்லார், “இனித் தவளவாணகை கோவலனிழப்ப வென்றதனான் அவன் பிரிவென்பதாம்; ஆகவே இவ்வுறுப்புக்கள் அவன் பிரிவுக்கு உடம்பட்டனவென்று முனிந்து ஒழிய நீங்கப் பிரிய மறப்ப இழப்ப இவற்றோடு குழையையும் துறந்த காதினன் எழுதாள் மகிழாள் ஆதலான் இவையும் பயனிழப்பத் தானும் அழகும் இன்பமுமிழத்தலாற் கையற்ற நெஞ்சினையுடைய கண்ணகி என உரைப்பினுமமையும்” எனக் கூறுவார். (சிலம். அந்தி. ப. 132)

**நாகரிகமும் பண்பாடும் புலப்படுத்தல்**

உரையாசிரியர்கள் உரைஎழுதிச் செல்லும் போது தாம் வாழ்கின்ற காலத்துப் பண்பாடு, நாகரிகம், நடைமுறைப் பழக்க வழக்கம் ஆகிய செய்திகளையும் துணைக் கொண்டு சான்று காட்டி எழுதுபவர். இப்பண்பினை அடியார்க்குநல்லாரிடமும் காண ஒண்ணும்.

“நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்”

(சிலப். மங்கல. ப.49)

என்பதற்கு அடியார்க்குநல்லார் விளக்கம் கூறும்போது, “நீல விதானங்கூறினார், முத்து ஒளிபெறுதல் நோக்கி; அ.்.து அக்காலத்து முத்து நோக்குவார் ஒப்புக்கு விரித்து நோக்குப” (சிலப். மங்கல. ப.40) என்று கூறி அக்காலத்துப் பழக்கத்தைச் சுட்டிக் காட்டுவர்.

கண்ணகி தான் கண்ட கனவு குறித்துத் தேவந்தியிடம் கூறும்போது ‘இடுதேளிட்டமை’யினைக் கூறுவாள். இதனை விளக்க வந்த அடியாாக்குநல்லார், “இடுதேளிடுதல் தேளிடப் படுவார் காணாமே தேளல்லாதது ஒன்றை மறையக் கொடுவந்து மேலேயிட்டு அவரைக் கலங்கம் பண்ணுதல்; பாய்ச்சுத் தேள் என்பாருமுளர்” (சிலப். கனாத். ப.249) என்று கூறுவது இவண் அறியத்தக்க ஒன்று ‘கருங்கை வினைஞரும் களமரும்’ (சிலப். நாடு. 125) என்பதனைவிளக்குமிடத்து அவர், “வினைஞர்-பறையர், பள்ளார்-முதலாயினார்; களமர்-உழவர், கீழ்க்குடிமக்கள்” (சிலப். நாடு ப. 277) என்று கூறுவர். இதனால் அக்காலச் சமுதாயக் கண்ணோட்டம் புலனாகும். “தோளும் ஆகமும் தோய்ந்து சேறாடுதல்-களித்து ஒருவர் மேல் ஒருவர் சேற்றை இறைத்துக் கோடல்” (சிலப். நாடு. ப.276) என்று அவர் பிறிதோரிடத்துக் கூறுவதும் அன்றைய நடைமுறை வாழ்க்கையினை எதிரொலிக்கும்.

“சுடுமண் ஏறா வடுநீங்கு சிறப்பின்
முடியர சொடுங்குங் கடிமனை வாழ்க்கை”

(சிலப். ஊர்காண். 146-147)

என்ற அடிகளுக்கு விளக்கம் கூறும் போது அடியார்க்குநல்லார், “ஈண்டு சுடுமண் என்றது செங்கலை. வடு-குடிக்குற்றம்; ஆவது பதியிலாரிற் குடிக் குற்றப்பட்டாரை ஏழு செங்கற் சுமத்தி ஊர் சூழ்வித்துப் புறத்திடுதல் மரபு” (சிலப். ஊர்காண்.

ப.377) என்கிறார். இதுவும் அக்காலப் பண்பாட்டை நினைவுகூர்ந்து கூறும் இடமாகும்.

மேலும் அவர் தம் உரையுள் சோணைக்காரை (சிலப். இந்திர. ப.162) என்னும் ஆறு, அமராவதி என்னும் கோநகர் (சிலப். கடலாடு. ப.185), உறையூரின் வரலாறு (சிலப். நாடு காண். ப.285), கோழியூர் (சிலப். காடுகாண். ப.299), கொடும்பாளூர், நெடுங்களம் (சிலப். காடுகாண். ப.302), சிறுமலை, மதுரை, அழகர் திருமலை (சிலப். காடுகாண். ப.303), தலைச்செங்காடு (சிலப். அடைக். ப.399) ஆகியன பற்றியும் குறிப்பிட்டுள்ளார். யானையை ‘ஓய்’ என்னும் வடமொழி கூறி வையும் பழக்கம் உண்டு என்பார் அவர் (சிலப். அடைக். ப.402)

‘அம்பணம்’ என்பது தரகர் அளக்கும் மரக்கால் (சிலப். ஊர்காண். ப.386) என்று அவர் கூறுவதனால் அக்கால அளவைக்கருவி பெறப்படும். அடைக்கலக் காதையில் வரும் ‘பிறவும்’ என்ற சொல்லிற்கு அடியார்க்குநல்லார் சதக்கினி, தள்ளி வெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப் பொறி, புலப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, அரிநூற்பொறி ஆகிய பல்வேறு பொறிகளைக் கூறியுள்ளமை இவண் அறியத்தகும் (சிலப்.அடைக்.ப.411) பலா, கனிக்காய், மூதாரிக்காய் (சிலப். கொலை. ப.426) ஆகிய பல்வேறு வகையான காய்களை அவர் கூறுவது அக்காலச் சமையலுக்குப் பயன்பட்ட காய்கள் சிலவற்றை உணர்த்தும்.

**அரும்பதவுரையும் அடியாக்குநல்லார் உரையும் - ஓர் ஒப்புமை**

அரும்பதவுரையியற்றிய ஆசிரியர் குறித்து அறிஞர் உ.வே.சாமிநாதையர் ‘இவருடைய பெயர் முதலியவற்றுள் யாதொன்றும் தெரியவில்லை. இவ்வரும்பதவுரையையே பெருங்கருவியாகக் கொண்டு இந்நூலுக்கு அடியார்க்கு இலார் உரை செய்தனர்; அஃது இவ்விரண்டு உரைகளை வைத்து ஒப்புநோக்கின் நன்கு விளங்கும்’’ என் என்றார். ஆக அடியாக்குநல்லார் மூல நூலாக அமைந்திருப்பது அரும்பதவுரை என்பது பெறப்படும். அடியார்க்கு நல்லார் தாம் எழுதியுள்ள இசை, நாடகம் ஆகிய பகுதிகளுக்கு உரைகூறும் இடங்களில் அரும்பதவுரையையே பெரிதும் தழுவிச் செல்கின்றார். அவ்வாறு அவர் செல்வதற்குக் காரணம், அரும்பதவுரையை விடவும் மேற்கொண்டு சிறப்பாகச் சொல்வதற்கு ஏதும் இடம் இல்லை என்பதேயாகும். மேலும் முன்னைய உரைகாரர் மேற்கோள் காட்டிய சான்றுகள், மரபுகள், வழக்குகள் முதலியன பின்னைய ஆண்டுகளில் மறைந்து வருகின்ற முதன்மையை நோக்கியும் அவர் அவற்றை அப்படியே எழுதியிருத்தல் வேண்டும்.

இந்திரவிழவூடுரத்த காதை 157-160 வரையுள்ள அடிகளுக்கு விளக்கம் எழுத வந்த அடியார்க்குநல்லார், ''அரும்பதவுரையாசிரியர்'' (சிலப். இந்திர. ப.166) என்று குறிப்பிட்டுப் பேசுவது இவண் நினையத்தகும். அரும்பதவுரையாசிரியர் சொற்பொருளுரையே பெரும்பான்மை எழுதிச் செல்வார் இடையில் சிற்சில விளக்கங்களும் காதையின் இறுதியில் முடிப்புரையும் கூறிச் செல்வது அவ்வுரையாளரின் இயல்பாகும். அடியார்க்குநல்லார் அரும்பதவுரையினைப் பெரும்பான்மை தழுவியும் சிறுபான்மைம வேறுபட்டும் உரைகூறும் பாங்கினைக் காண்கின்றோம்.

அரும்பதவுரை கூறும் உரையினை அப்படியே அடியார்க்குநல்லார் தழுவிச் செல்லும் போக்கினைப் பின் வரும் பகுதியினால் உணரலாகும்.

மங்கல வாழ்த்துப் பாடலில் கோவலனை அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள் ''மண்தேய்த்த பகழினான்'' (சிலப். மங்க. 36) என்பர். இதற்கு அரும்பதவுரையாசிரியர் 'பூமிசிறுகும்படி வளர்த்த புகழ்' என்பர். '''மண்தேய்த்த' என்றார், புகழ் வளரப் பூமி சிறுகலான்'' என்று உரை கூறுகின்றார் அடியார்க்குநல்லார். ''பெருந்தோள் மடந்தை'' (சிலப். அரங். 6) என்ற தொடருக்கும் ''மகளிர்க்குத் தோள் பெருக்கை இலக்கணம்'' என்று அரும்பதவுரை கூறும். அடியார்க்குநல்லார் ''மகளிர்க்குத் தோள்பெருத்தல் மரபாதலின்'' (சிலப். அரங்.ப.78) என்று கூறி முன்னைய உரையின் கருத்தை அவ்வாறே தழுவிச் சென்றுள்ளார். அம்மட்டோடு நில்லாமல், அவர் ''அகலல்குல் தோள்கண்ணென மூவழிப் பெருகி'' என அரும்பதவுரைகாரர் காட்டும் கலித்தொகைப் பாடல் அடியையும் (கலித்.108:2) சான்று காட்டும் போக்கு இவண் அறியத்தக்க ஒன்று.

'அத்தரி-கோவேறு கழுதை' என்று கூறுவார் அரும்பதஉரைகாரர். அடியார்க்குநல்லாரும் 'கோவேறு கழுதை' (சிலப். கடலாடு. ப.197) என்றே பொருளுரைக்கின்றார். ''கருணை மறவ'' (சிலப். அடைக். 53) என்று மாடலன் கோவலனைப் புகழந்துரைப்பான். இதற்கு அரும்பதவுரையாசிரியர் ''கிருபா வீரனே'' என்று பொருள் கூறினார். அடியார்க்குநல்லாரும் அப்படியே (சிலப். அடைக். ப.401) பொருள் கூறி முன்னைய உரையாசிரியருக்குப் பெருமைப் சேர்க்கின்றார்.

அடியார்க்குநல்லார் அரும்பதவுரையாசிரியரிடமிருந்து வேறுபட்டுச் செல்லும் இடங்களும் உண்டு என்பதனைப் பின்வரும் சில சான்றுகள் உணர்த்தும்.

“பெருங்குணத்துக் காதலாள்” (சிலப். மங்கல. 28-29) என்ற அடிக்குப் ‘பெருங்குணத்தாற் காதலித்தவள்’ என்ற அரும்பதவுரையாசிரியர் உரை சொல்ல, அடியார்க்குநல்லாரோ “பெருங்குணங்களைக் காதலிப்பாள்” (சிலப். மங்கல. ப.39) என்று உரை சொல்லி வேறுபடுவார். மாசாத்துவான்” (சிலப். மங்கல. 33) என்ற பெயாக்கு அரும்பதவுரைகாரர் “குடிப்பெயர்” என்றும், அடியார்க்குநல்லார் “இயற்பெயர்” (சிலப். மங்கல. ப.39) என்றும் மாறுபட்ட உரை வழங்கக் காண்கின்றோம்.

பதிகத்தில் இளங்கோவடிகள் “கன்றிய காவலர்” (சிலப். பதிகம். 29) என்பர். அரும்பதவுரையாசிரியர் காவலில் தழும்பியவர்” என்று இதற்கு உரை கூறினார். அடியார்க்குநல்லாரோ இதனின்றும் வேறுபட்டுச் சென்று, கன்றிய காவலரென்றார். அவரும் முன்னர்த் தீது செய்யாரென்பது தோன்ற’ (சிலப். பதிகம்.ப.22) என்று உரை கூறியுள்ளார். இந்திரவிழவூரெடுத்த காதையில் வருகின்ற “பரத்தர்” (சிலப். இந்திர.200) என்ற சொல்லிற்கு அரும் பதவுரைகாரர் “தூர்த்தர்” என்று பொருள் கூறினார். அடியார்க்குநல்லார் “கழிகாமுகர்” (சிலப். இந்திர. ப.169) என்று வேறுபட்டுப் பொருள் உரைப்பார். இவ்வாறு அடியார்க்குநல்லார் அரும்பதவுரைகாரர் கூறிய உரையைப் பெரும்பான்மை தழுவியும் சில இடங்களில் வேறுபட்டும் சென்றுள்ளார்.

தென்றல் எவ்வாறு நம் உடலையும் உள்ளத்தையும் தீண்டி மகிழ்வித்து இன்பந்தருகின்றதோ அதே போன்ற முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு அரியதோர் உரையினைப் படைத்துத் தந்த அடியார்க்குநல்லார் இலக்கிய நெஞ்சங்களை இனிதே மகிழ்க் கடலில் ஆழ்த்துகின்றார்.

# கூறு 9

## பெரியவாச்சான் பிள்ளை – திருப்பாவை உரை

நம்மாழ்வார் பாடியுள்ள திருவாய் மொழிக்குப் பலர் உரை வகுத்துள்ளனர். அவ்வாறு உரை வகுத்து அதனைக் காத்தருளிய உரைகாரர்தம் பெருமையினைப் பின்வரும் வெண்பா ஒன்று வெளிப்படுத்துகின்றது:

“பிள்ளான்நஞ் சீயர் பெரியவாச் சான்பிள்ளை
தெள்ளார் வடக்குத் திருவீதிப் - பிள்ளை
மணவாள யோகிதிரு வாய்மொழியைக் காத்த
குணவாளர் என்றுநெஞ்சே கூறு.”

பிள்ளான் ஆறாயிரப்படியையும், நஞ்சீயர் ஒன்பதினாயிரப் படியையும், வாதிகேசரி அழகியமணவாளச்சீயர் பன்னீராயிரப் படியையும், பெரியவாச்சான் பிள்ளை இருபத்துநாலாயிரப் படியையும், வடக்குத் திருவீதிப் பிள்ளை முப்பத்தாறாயிரப் படியையும் இயற்றினர். முப்பத்தாறாயிரப்படியினை ‘ஈடு’ என்று கூறிச் சிறப்பிக்கும் வைணவ உலகம். இவை இவ்வாறு இருக்க, ஆழ்வார்கள் பாடியருளிய பாடல்கள் எல்லாவற்றிற்கும் உரையெழுதியவர் பெரியவாச்சான்பிள்ளை ஒருவரே. ஆண்டாள் பாடியுள்ள திருப்பாவைக்கு அவர் வகுத்துள்ள வியாக்கியானம் மூவாபிரப்படி என்று குறிப்பிடப்பெறும்.

இப்பெரியார் சோழவள நாட்டில், திருவெள்ளியங்குடி என்கிற திவ்ய தேசத்திற்கு ஒரு கல் தொலைவில் உள்ள, சேங்கநல்லூர் எனும் ஸ்தலத்தில் கலி 4329 சர்வஜித்து ஆவணி மாதம் ரோஹிணி நட்சத்திரத்தில் (க்ருஷ்ணபகவான் திருவவதரித்த அத்தத்தின் பத்தாநாளில்) அவதரித்தார். இவர் கி.பி.1228 –ல் பிறந்தார் என்பது வரலாறு.

“தந்தை யாமுன தேசிகர், தாய் நச்சியாரம்மை; இயற்பெயர் ஸ்ரீ கிருஷ்ணபாதர்; அபயப்ரததாசர் என்றும் பெயர்.

“இளமையிலிருந்து இவருக்குக் கிருஷ்ணபக்தி அதிகமாயிருந்தது. ஊரார் அனைவரும் ஸ்மார்த்த வேதாந்திகள் ஆனபடியால், இவருடைய கிருஷ்ணபக்தியும் வைணவச் சார்பும் யாருக்கும் பிடிக்கவில்லை.

திருவரங்கத்திலே தங்கி வாழ்ந்து வந்த பெரியவாச்சான்பிள்ளை நஞ்சீயரிடத்தும் நம்பிள்ளையிடத்தும் எல்லா வகையான சாத்திர

உண்மைகளையும், திருவாய்மொழி வியாக்கியானங்களையும் நன்கு கேட்டுணர்ந்தார். நம்பிள்ளையை அவர் தம்முடைய ஆசாரியராகக் கொண்டிருந்தார். அவர்தம் புலமையை நன்குணர்ந்து நம்பிள்ளை, திருவாய்மொழிக்கு வியாக்கியானம் எழுதுமாறு கட்டளையிட்டார். அன்னாரின் கட்டளையின்படி அவரும் திருவாய்மொழிக்கு உரை வகுத்தார். இராமாயணத்தில் அவருக்கு அளவிறந்த ஈடுபாண்டுண்டு.

திருப்பாவை வியாக்கியானச் சக்கரவர்த்தியான பெரியவாச்சான்பிள்ளை தென்கலை வழியைப் பின்பற்றியவர்.

பெரியவாச்சான்பிள்ளை நாலாயிர திவ்விய பிரபந்தம் முழுமைக்கும் வியாக்கியானம் இயற்றியுள்ளதோடு வேறுபல நூல்களையும் படைத்துத் தந்துள்ளார். திரிமத சித்தாந்தசார சங்கிரகம், பாசுரப்படி ராமாயணம் கலியன் அருள்பாடு, பரந்த ரகஸ்ய விவரணம்; மாணிக்கமாலை, நவரத்னமாலை, சகலப்ரமாண தாத்பர்யம் உபகார ரத்னம், கத்யத்ரய வ்யாக்யானம், ஆளவந்தார் தோத்திர ரத்ந வ்யாக்யானம், தனிச்லோகி வ்யாக்யானம், பரந்தபடி, அபயப்ரதான வ்யாக்யானம். சரமரஹஸ்யம், அனுசந்தான ரஹஸ்யம், நிகமனப்படி என்பன அவர் இயற்றியுள்ள நூல்கள்.

**புகழ்மாலை**

பெரியவாச்சான் பிள்ளையின் உரை விளக்கம் தொண்டினை எண்ணிய சான்றோர் பலர் அவரை புகழ்ந்து போற்றியுள்ளனர். அவற்றை இங்கே காண்போம்.

‘‘ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் அனைத்திற்கு வ்யாக்யானம் கண்டவர் இவர் ஒருவரே. இக்காரணம் பற்றி இவர் ‘வ்யாக்யான சக்ரவர்த்தி’ என்று புகழ் பெறுவர்’ என்று புகழ்மாலை சூட்டுகின்றார் பதிப்பாளர் மயிலை மாதவதாசன்.

‘‘உரை மன்னன் பொயிவாச்சான் பிள்ளை’’ என்று சுட்டி அறிஞர் ந.சுப்பு ரெட்டியார் பெரியவாச்சான் பிள்ளையின் உரைத் திறனைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பார்.

‘‘திருப்பாவைக்கு மூவாயிரப்படி என்று வியாக்கியானம் எழுதினார். திருப்பாவைக்குப் பலர் வியாக்கியானம் எழுதியிருப்பினும், இவர் உரையே மிக்க சிறப்புற்று விளங்குவது’’ என்று பாராட்டுரை மொழிகுவார் அறிஞர் மு.அருணாசலம்.

ஆழ்வார்களையும் அவர்தம் அருளிச் செயல்களையும் அவற்றின் உரைகளையும் வாழ்த்தும் வகையில் பின்வருமாறு கூறுகின்றார் மணவாளமாமுனிகள்:

“ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதும் இல்குரவர் தாம்வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து”

பொதுவாகக் கூறப்பட்ட வாழ்த்தேயாயினும் பெரிய வாச்சான்பிள்ளை எழுதிய உரையினையும் உள்ளடக்கிய வாழ்த்துரையே இஃது எனலாம்.

**உரை நெறி**

மயர்வற மதிநலம் வாய்க்கப் பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச் செய்த தெய்வப் பனுவல்களை ‘அருளிச்செயல்’ என்று போற்றுவர். அவ்வருளிச் செயல்களுக்குச் கற்றுவல்ல சான்றோர்களால் இயற்றப் பெற்ற பேருரைகளாகிய ‘வியாக்யானங்கள்’ தமிழும் வடமொழியும் கலந்து விளங்கும் நடையினவாக அமைந்துள்ளன. அவர்கள் ‘தென்சொற் கடந்து வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்த’ அருளாளர்களாக விளங்கினர். இவ்வாறு அமையும் நடையினை ‘மணிப்பிரவாள நடை’ என்று கூறும் தமிழ்கூறும் நல்லுலகம். “ஆழ்வார்களின் பாடல்களுக்கு உரை எழுதியவர்கள், வடசொற்களும் தமிழ்ச் சொற்களும் விரவிக் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதினார்கள்.

பெரியவாச்சான் பிள்ளையின் பேருரையும் மேற்கண்ட பகுதியிலேயே அமைந்துள்ளது என்பதனைப் பின்வரும் பகுதிகளால் உணரலாகும்:

“செய்யாதன செய்யோம்’ என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை அநுஷ்டாநபர்யந்த மாக்க வேணுமே. ததீயரை முன்னிட்டுப் பற்றாதவன்று முறைதப்பின சூர்பணகை பட்டதுமத்தனை. ‘வல்ல வருவிப்பரேலது வேண்டும் என்னும் பெரியாழ்வார் திருமகளிரேயிவன்.” திருப் பெரிய பக்.208-209)

பொதுவாக் இவ்வுரையில் வடமொழிச் சுலோகங்களும், புராணமரபுச் செய்திகளும் நிறைந்து விளங்கக் காண்கின்றோம். இப்பொழுது இயல்புகளை நன்குணர்ந்த அறிஞர் ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், “திவ்வியப் பிரபந்த உரைகள், சாதாரணமாகத் தமிழில் காணப்பெறும் இலக்கிய உரைகள் போன்றவை அல்ல.

பாடல்களை எடுத்துக் கொண்டு, அவைகளை விளக்கும் முறையில், வைணவ சமயத்தின் சொரூபம், சம்பிரதாயங்கள், விஷ்ணுவின் அவதார மாண்புகள், விசிஷ்டாத்வைதத்தின் தத்துவ நுட்பங்கள் ஆகியவை எல்லாம், வேதங்கள் உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவைகளிலிருந்து எடுக்கப் பெற்ற ஏராளமான மேற்கோள்களோடு விளக்கப்பட்டிருப்பதுமன்றிப் பாடல்களின் உட்கருத்தென்றும், தத்துவார்த்தம் என்றும், பல அரிய விஷயங்களை நுண்ணிய அறிவுப் பாங்குடன் உரையாசிரியர்கள் கூறியிருக்கின்றார்கள்.

**நடைச் சிறப்பு**

திருக்குறள், திருக்கோவையார், சிலப்பதிகாரம் சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களுக்கு எழுந்துள்ள உரைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நடைத்தன்மை (Unique Style) உடையது திருப்பாவையின் உரை. பெரியவாச்சான் பிள்ளையின் உரையில், "அஃதென்னென்னில் "என்கிறபடி", "தோற்றும்படி," "என்கை" "இன்றிக்கே", "அன்றிக்கே" ஆகிய சில அரிய சொல்லமைப்புக்கை மிகுதியும் காண ஒண்ணும். ஆங்காங்கே வான்மீகிராமாயணம், கீதை, விஷ்ணுபுராணம், சாந்தோக்யோபநிஷத், பாகவதம், மகாபாரதம், யஜுர்வேதம் ஆகிய வடமொழி நூற்பகுதிகளையும் ஆழ்வார்களின் பாடல் அடிகளையும் சான்றுகாட்டி விளக்கம் எழுதி செல்லும் நடையினைக் காணலாம்.

திருப்பாவை பத்தொன்பதாம் பாட்டில் வரும் 'குத்துவிளக்கெரிய' என்பதற்குப் பெரியவாச்சான்பிள்ளை எழுதிக்காட்டும் விளக்கத்தினை இவண் காண்போம். "அர்த்திகள் வாசலிலே நிற்க ஓரநுபவமுண்டோ என்கிறார்கள். எங்களைப் போலே ஊராரிசையும் வேண்டாதே, 'கீழ்வானம் வெள்ளென்றது' என்கிற பயமின்றிக்கே, "நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின்' என்று இருட்டுத் தேடவும் வேண்டாதே, பகலையிரவாக்கிக் கொண்டு விளக்கிலே க்ருஷ்ணன் முகத்தைப் பார்த்துக் கொண்டு படுக்கையிலே கிடக்கப் பெறுவதே! இதென்ன ஐச்வர்யம்! என்கிறார்கள். 'அதீவராமச்சுசுபே' என்று இவள் அவனுக்கும் ப்ரகாசமான விளக்காயிருக்க ஓர் நிலைவிளக்குண்டாவதே" (திருப். பெரிய. பக். (258-259).

திருப்பாவை இருபத்து நான்காவது பாட்டில் வரும் 'அடிபோற்றி' என்ற தொடரின் பொருளை விளக்கும் பகுதியில் பெரியவாச்சான்பிள்ளை மேலே கண்ட பொதுமைப் பண்புகளைச் சிறப்புற உள்ளடக்கிய நடையில் எழுதிச் செல்வதைக் காண இயலும். அது வருமாறு:

“அடிபோற்றி: தாங்கள் சொல்லுமளவில் புறப்பட்டு ஸுகுமாரமான திருவடிகளைக் கொண்டு உலாவி யருளினபடி திருவுலகளந்தருளின் ஆயாஸம் போருமென்று மங்களாசாஸநம் பண்ணுகிறார்கள். திருவுலகளந்தருளுகிற போது இரண்டடியிலேயிட்டது, இப்போது எங்களுக்காக பத்தெட்டடி இடுவதே! திருவுலகளந்தருளின அன்று இந்த்ரன் ப்ரயோஜநத்தைக் கொண்டு போனான், மஹாபலி ஔதார்யம் பெற்றுப் போனான், “தாங்கள் அன்று உதவப் பெறாத இழிவுதீரத் திருப்பல்லாண்டு பாடுகிறார்களென்றுமாம். (அடிபோற்றி) ‘உன் செல்வடி செல்வி திருக்காப்பு என்னுமவர்களிறெ” (திருப். பெரிய. பக். 327 - 328)

நல்ல தமிழ் நடையினையும் அவரிடம் காணமுடிகின்றது. இதனைப் பின்வரும் உரைப்பகுதியினால் உணரலாகும்:

“பறைக்குப் பாரோர்களெல்லாம் மகிழப் பறைகறங்கக் குடக்கூத்தாடினபோது திருவடியிற் கட்டின பறையையும், திருப்பல்லாண்டு பாடுகைக்குப் பெரியாழ்வாரையும், விளக்குக்கு நப்பின்னைப் பிராட்டியையும், கொடிக்குப் பெரிய திருவடியையும், மேல் கட்டிக்கு அத்தவாளத்தையுங் கொள்ளுங்கோ ளென்றான். விதானத்துக்கு திருவவதரித்தவன்று பணத்தையிட்டுக் கவித்துக்கொண்டு போந்த திருவநந்தாழ்வானைக் கொடா தொழிவானென்னென்னில்; எல்லாரையம் போகச் சொன்னாலும் தன்னையொழிய ஓரடியிட மாட்டாதவனாகையாலே அத்தவாளத்தைக் கொடுத்தான்; ‘பெருமானரையில் பீதக வண்ணவாடை’ கொண்டிறே வாட்டந் தணியச் சொல்லிற்று. ஓரொன்று போராது இப்படியிருப்பன பலவேணுமென்ன; இல்லாதத்தைத் தேடப்போமோ வென்ன; உனக்கு அரியதுண்டோ வென்ன; எனக் கெளியதாயிருந்ததோ வென்ன” (திருப். பெரிய. பக். 365-366). இதே போன்று ஆங்காங்கே சிறுசிறு உரைப்பகுதிகளை நற்றமிழ் நடையில் அவர் எழுதிச் சென்றுள்ளார்.

மணிப்பிரவாள நடையின் தன்மை குறித்து அறிஞர் மு.அருணாசலம் தம்முடைய ‘தமிழ் இலக்கிய வரலாற்றில்’ கூறுவது அறியத்தக்க செய்தியாகும். “பொதுவாக வியாக்கியானங்கள் வடமொழியை அதிகம் தமிழில் கலந்ததனால், தமிழுக்குக் குறைவும் வடமொழிக்கு ஏற்றமும் கற்பித்தார்கள் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இது பெரிதும் பிழைப்பட்ட கருத்து. அவர்கள் ஆழ்வார்களுடைய பாசுரங்களில் ஈடுபட்ட பக்தி விசேடத்தால், தமிழே உய்தி தருவது என்ற கருத்தும் அவர்கள் நூல்களில் காணப்படும்.

மிக நீண்ட தொடர்களை எழுதுவது பெரியவாச்சான் பிள்ளையின் இயல்பு. இருப்பினும் ஆங்காங்கே சின்னஞ்சிறு தொடர்களும் அவருடைய பேருரையில் பயின்று வாராமல் இல்லை.

“உன்னுடைய ஔதார்யத்திலொன்றும் மாறாதபடி தோற்ற வேணும். ‘கை’ என்று –கொடை. கரக்கை- மாறுகை.” (திருப். பெரிய. ப.75).

“இவர்களாகில் இப்படி சொல்லுகையே பணியென்று பேசாதே கிடக்க; அறிந்து வைத்துக் காற்கடைக் கொள்வாயே! மதிகேடீ? என்கிறார்கள்” (திருப். பெரிய. 119)

“இக்குலத்துக்கு மங்கள தீபமானவளே. பெண் பிறந்தார்க்கெல்லாம் த்ருஷ்டியான விளக்கே என்னவுமாம் (திருப்.பெரிய.ப.231)

“நீ யுகந்த வடிமை செய்வோம், உனக்கும் எங்களுக்கு மாயிருக்கிற இருப்பைத் தவிர்ந்து ‘தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே’ என்னுமா போலே நீ யுகந்த அடிமையாக வேணும். அஹங்காரகர்ப்பமான அடிமை பருஷார்த்தமாகாது” (திருப். பெரிய. பக். 435-436). இவ்வாறு வருகின்ற பகுதிகளும் அவர் உரையில் உண்டு. அவர் தம் உரியல் தூய தமிழ்ச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். “இழிந்தவர்களுக்கு” (திருப். பெரிய. ப. 102), செம்மினால்” (=அடைத்துவிட்டால்) (திருப். பெரிய. 150), “பிச்சேற்றவல்ல” (திருப். பெரிய. 162), நாவீறுடைமை” (திருப், பெரிய. ப. 193) “வடிவழகு” (திருப். பெரிய. ப.429) என அவர் கையாண்டுள்ள சொற்கள் நம் கருத்தைக் கவர்வனவாகும்.

**நல்லாட்சி**

வைணவ சமுதாயத்திற் பயின்று வழங்கும் பல சொல்லாட்சிகளைப் பெரியவாச்சான்பிள்ளையின் பேருரையில் நாம் கண்டு சுவைக்க முடிகின்றது. அவர் உரையில் புதிய சொல் வழக்குகளைக் காண்கின்றோம். வேறு இலக்கிய உரையாசிரியர்களின் உரையில் காணவியலாத சொல்லாட்சிகளை அவர் உரையில் காண ஒண்ணும்.

வெரியவாச்சான் பிள்ளை உரையில் வரும் இடைச் சொற்கள் சில புதுமையாக அமைந்துள்ளன. சான்றாக “இறே, ஆய்த்து” என வருவனவற்றைச் சுட்டலாம். “அகவாயில் வாத்ஸல்யடையத் திருக்கண்களிலே தோற்றம்

படியாருக்கை; ஐச்வர்யத்தாலும் குதறியிருக்குமிறே. வடிவாலே யணைத்துக் கண்ணாலே குளிர நோக்குகையிலேயிறே கருத்து'' (திருப். பெரிய. ப.27)

''பன்னிரு திங்கள் கொண்டவிறே''

(திருப். பெரிய. ப.343)

''இதிறே உன்னைப் பொறுகைக்கு நாங்கள் அநுஷ்டித்த கர்மயோக மென்கிறார்கள்.''

(திருப்.பெரிய.ப.394)

''திருவுலகளந்தருளின ஸர்வேச்வரனைக் கண்ட அநுகூலர் பட்டது படாநிற்கு மாய்த்து இவை.''

(திருப்.பெரிய.ப.65)

''அசேதநத்துக்கும் சைதந்யமுண்டாம்படி ஸ்த்வோம் தரமான காலமாயிற்று எழுந்திராயென்ன; அசேதநத்துக்கு சைதந்யமுண்டாய்த்தது.''

(திருப். பெரிய. ப.135)

''இத்தால் சொல்லிற்றாய்த்து – அவன் எருமைகள் கறவா விட்டால் அவை படும்பாட்டை நாங்கள் உன்னாலே படாநின்றோமென்கை.''

(திருப்.பெரிய ப.169)

அன்றோ ('இறே'), ஆயிற்று (ஆய்த்து) என்னும் பொருளில் பெரியவாச்சான்பிள்ளை இச்சொற்களைக் கையாண்டுள்ளார். 'அங்குத்தை', 'இங்குத்தை' போல் சொற்களை அவர் அவ்விடத்து, இவ்விடத்து என்னும் பொருளிலும், அவர்களுடைய, இவர்களுடைய என் பொருளில் 'அவர்களோட்டை', இவர்களோட்டை என்ற சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.

'அத்தை' 'இத்தை' 'எத்தை' என்பவற்றை அதனை, இதனை, எதனை என்னும் பொருளில் அவர் வழங்குகின்றார்.

''இத்தை ஸாதித்துத் தருவாராரென்னில்,''

(திருப். பெரிய ப. 29)

"இத்தை இவர்களுக்கு ஒரு உபகாரம் பண்ணினானாகவன்றிக்கே தன்பேறாக நினைக்கிறபடி."

(திருப். பெரிய. ப.60)

"பண்டு போலன்றிக்கே கருவடைந்த பயிர்போலே நிறத்திலே வருவதொரு வேறுபாண்டு; அத்தை நினைக்கிறார்கள்."

(திருப்.பெரிய. ப. 78)

"அத்தையறிந்தும பேசாதே கிடக்கையாலே சொல்லுகிறார்கள்."

(திருப். பெரிய. ப. 120)

அத்தாலே – பெரிய திருவடியாய், அவனுக்கு நிர்வாஹனானவனுடைய கோயிலென்னுதல்."

(திருப். பெரிய. ப. 108)

"பாடுவது எத்தையென்ன."

(திருப். பெரிய. ப. 132)

"எல்லார்க்கும் கிருஷ்ணனோட்டை ஸம்பந்தமொத்திருக்க நீங்கள் என்பக்கல் ஸாபேக்ஷராய் வந்தோமென்று சொல்லக்கடவிகளோ வென்ன" (திருப். பெரிய. 130) என்றும், "நீ அவனோட்டை ஸம்பந்தத்தாலே எங்களுக்கு எல்லையாயிருப்புதி" (திருப். பெரிய. ப.131) என்றும் அவர் வழங்குவன இவண் நினையத்தகும்.

"அதுக்கு அடையாளமென்னென்ன..." (திருப். பெரிய. 118) என்றும், "இதுக்கு முன்பு நாம் பெற்ற ஐச்வர்யம் போலேயோ இப்போது நாம் பெறப்புகுகிற ஐச்வர்யம்" திருப். பெரிய. ப.132) என்றும் அவர் கூறுவன 'அதற்கு' 'இதற்கு' என்ற சொற்களின் திரிபு வடிவங்கள் ஆகும்.

'வேண்டும்' என்னும் வினைமுற்று வடிவத்தைப் பெரியவாச்சான்பிள்ளை 'வேணும்' என்றும் 'இருந்தாற் போலே' என்ற தொடரை 'இருந்தாப்போலே' என்றும் வழங்கியுள்ளார்.

“அநுகூலர் வாழவும் ப்ரதிகூலர் முடியவும் ஆகவேணும்” (திருப். பெரிய. ப.81) என்றும், “ஒரு ஆனைச்சாத்தான் பேசுங்காட்டில் விடிந்ததாக வேணுமோ என்ன” (திருப். பெரிய. ப. 118) என்றும், ‘செய்யாதன செய்யோம். என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை அநுஷ்டாநபர்யந்தமாக்க வேணுமே” (திருப். பெரிய. ப.208) என்றும், “திருவடிவாரத்தில் பிராட்டி, ப்ரஹர்ஷேணாவருத்தரஸா வ்யாஜ் ஹாரநகிஞ்சக’ என்றிருந்தாப்போலே’ (திருப். பெரிய. ப.149) என்றும் வரும் பகுதிகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

**தூய தமிழ் சொல்லாட்சி:**

கணக்கற்ற வடசொற்களை மிகுதியும் கலந்து எழுதும் போக்கினைப் பெரியவாச்சான் பிள்ளையிடம் பரக்கக்காணலாகும். ஆயினும் தனித்தமிழ்ச் சொற்களையும் அவர் கையாண்டுள்ளார் என்பதும் அவர் உரையினைக்கற்பவர் நன்கறிகுவர், பொசியாதபடி, கண்ணெச்சிற்படுவர், தலைஎடுத்தல், மேனாணிப்பு இனைய நற்றமிழ்ச்சொற்களையும் அவர் பதித்துள்ளார் என்பதனைப் பின்வரும் வரைப்பகுதிகளால் நாம் உணரலாம்.

“இன்னமும், தன்னுடைய தம்பபன்மார் சொல்லவும் கேட்டிருக்குமிறே.”

(திருப். பெரிய. ப.28)

“இவன் தமப்பனார் எம்பெருமானை எழுப்பினார்.”

(திருப். பெரிய. ப.128)

“ஒருவர்க்கொருவர் இட்டீடு கொண்டு சொன்னவை கிருஷ்ணன் செவிப்படுத்தக் கடவோமல்லோம்.”

(திருப். பெரிய. ப. 50)

“இட்டீடு கொள்ளுகைக்கு விடவொண்ணாத உறவு சொல்லுகிறார்கள்.”

(திருப். பெரிய. ப.140)

“அந்த ஆச்சர்யத்தைச் சொல்லுவதற்கு முன்னே ஆழங்கால்பட்டு, ‘எத்திறம்’ என்கிறார்களாகவுமாம்.”

(திருப். பெரிய. ப.90)

“உறங்குகிறவர்களை எழுப்பத் தட்டில்லை” (திருப். பெரிய. ப.104)

“புறம்பொசியாதடி யடக்கிப் போந்தோம்” (திருப். பெரிய. ப.132)

“இவன் மிடுக்கைக்கண்டு கண்ணெச்சிற்படுவர் என்று பயப்பட்டு..”

(திருப். பெரிய. ப. 335)

“...ஸத்வம் தலையெடுத்த காலத்திலே.” (திருப். பெரிய. ப. 419)

“இவள் ப்ரியமே நடத்துமவளாகையாலே, செருக்கும் மேனாணிப்புந் தோன்ற நின்ற நிலையைச் சொல்கிறது.”

(திருப். பெரிய. ப.25)

**புதிய சொல்லாட்சி**

பெரியவாச்சான் பிள்ளை சில புதிய சொல்லாட்சிகளையும் தம்முடைய உரையில் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். வேறு பொருளில் வழங்கும் சொற்களை மற்றொரு பொருளின் கண் வழங்குதல் அவரின் இயல்பு

‘புதைத்து’ என்பதன் பொருளை நாம் நன்கறிவோம் அப்பொருளில் பெரியவாச்சான் பிள்ளை கையாளாமல் ‘சிலபகுதிகளில் மழை பொய்யாமல் நீரை அடக்கிக்கொண்டு என்ற பொருளில் கையாளுகின்றார். “எங்கள் பாக்யதையே நினைத்து புஜிக்கும் நாடாகையாலே நீ யங்஖ன் புதைத்துப் பார்க்கவொண்ணாது, ‘பாபா நாம் வாசீப நாம்வா’ என்கிற எங்கள் கோடியிலே யாகவேணும்.

(திருப். பெரிய. ப.75)

‘நீர்மை’ என்ற சொல் ‘தன்மை’ என்ற பொருளுடையது. ஆனால் பெரியவாச்சான் பிள்ளையோ க்ருவை என்ற பொருளில் இதனை எடுத்தாளுவதனை, “அகவாய் நீர்மை உங்களாலுண்டாக்க வொண்ணாதிறெ” (திருப். பெரிய. ப.78) எனவரும் தொடரினால் அறிய ஒண்ணு.

‘அந்தப்புரத்திற்கு விட்ட பகுதி’ என்ற பொருள் அவர் ‘படுக்கைப் பற்று’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். “நாட்டுக்கு இட்ட நினைவைக் கண்டு படுக்கைப் பற்றிலே சொல்லாதே கொள்” (திருப். பெரிய. ப.75)

‘அகம்படியர்’ என்ற சொல்லை ‘அந்தரங்கர் என்ற பொருளில் அவர் வழங்குகின்றமையினை, அவ்வர்க்குரிய அகம்படியரானவர்கள், அந்தப் ப்ரீதிக்குப் போக்குவிட்டு நெய்யாடல் போற்றிக் கொண்டு திரியுமாப் போல (திருப். பெரிய. ப.81) என்னும் பகுதியால் அறியலாம்.

இவற்றைப் போன்ற பெரியவாச்சான்பிள்ளை தம் உரையில், ‘‘சிலுகிடாதே’’ (திருப். பெரிய. ப.198) ‘‘சிவிட்கென்னக் கூசி’ (திருப். பெரிய. ப.199), ஒடியெறிகை’’ (காற்கட்டு) (திருப். பெரிய. ப.174) ‘‘கமர் பிளந்த நெஞ்சு’’ (திருப். பெரிய. ப.175) ஆகிய சொற்களைப் பயன்படுத்துவதனைக் காண்கின்றோம்.

பெரியவாச்சான்பிள்ளை தம் பேருரையில் பல இடங்களில் குறிப்பிட்ட சில சொற்கூறுகளை, தொழிற்பெயர் அமைப்புகளைக் கையாண்டுள்ளமையினையும் காண முடிகிறது.

‘படி’ (உதவினபடி, என்றபடி, இருக்கிறபடி), ‘இறே’, ‘போகை’, ‘பெறுகை’, ‘காண்கை’, ‘என்கை’, ‘சொரிகை’, ‘இருக்கை’, ‘கலக்குகை’, ‘அனுமதி பண்ணுகை’ என்பன அவர் பயன்படுத்துவன. ‘இழவுக்கு’ என்ற சொல்லையும் அவர் பல இடங்களில் கையாளுகின்றார். ஏன்? ‘என்னென்ன’, ‘என்ன?’ ஆகிய சொல்வடிவங்கயையும் அவர் அடிக்கடி பயன்படுத்துகின்றமையம் அறியத்தக்க செய்தியாகும். ‘‘வியாக்கியானங்கள் பேச்சுநடையில் அமைந்துள்ளன. கொச்சை மொழிகள் விரவியுள்ளன. இவற்றிலும் ஒரு வகை அழகும் ஆற்றலும் வெளிப்படுகின்றன’’ என்று இவ்வுரைநடை குறித்து அறிஞர் வ.அரவிந்தன் கருத்துரைக்கின்றார்.

**மொழிப்பயிற்சி**

பெரியவாச்சான் பிள்ளை திருப்பாவை மூவாயிரப்படி உரையில் விளக்கங் கருதியும், ஒப்பீடு கருதியும், வைணவ சமய ஈடுபாடு கருதியும் வடமொழிச் சுலோகங்களை முழுவதுமாகவோ தொடராகவோ மேற்கோள் காட்டி விளக்குகின்றார். அந்த அளவிற்கு அவருடைய வடமொழி புலமை மேலோங்கி விளங்கிற்கு எனலாம். வடமொழிச் சொற்களை மட்டுமல்லாமல் வடமொழிப் பாடலடிகளையும் அவர் எடுத்துக் காட்டுவதன் வாயிலாக அவரின் வடமொழிப் பயிற்சி நன்கு வெளிப்படக் காண்கின்றோம். அவர் வாழ்ந்த நாளில் வடமொழியின் செல்வாக்கு வைணவ மரபிலே எந்த அளவிற்கு ஆழமாக பேரூன்றி விழுது விட்டிருந்தது என்று உணர முடிகின்றது.

‘மார்கழித் திங்கள்’ என்ற திருப்பாவை முதற்பாட்டின் முதல் சொல்லிற்கு விளக்கம் கூறவந்த பெரியவாச்சான் பிள்ளை, “நாதி சீதா நகர்மதா’ என்கிற ந்யாயத்தலே அத்யுஷ்ணமாதல் அதிசீனமாதலின்றிக்கே யிருக்கும் மாஸம். நாளுக்கு ப்ராஹ்ம முஹுர்த்தம் போன்ற ஸம்வத்ஸரத்துக்கு இம்மாஸமாகையாலே ஸத்தவோத்தரமான காலம். ‘மாஸாநாம் மார்க்சீர் ஷோம்ஹம் என்று – மாஸங்களில் வைத்துக் கொண்டு மார்கழி மாஸமாகிறேன் என்று அவன்றானே அருளிச் ‘செய்கையா வைஷ்ணவமான மாஸம். ஸர்வ வஸ்துக்களும் அங்குரிக் காலமாகையாலே தங்களுடைய உந்மேஷத்துக்கு அர்ஹமான காலம்” (திருப். பெரிய. பக். 8-9) என்று எழுதிச் செல்கின்றார். மேற்கண்ட பகுதியில் வடசொற்களும் வடமொழிப் பாடல் அடியும் பயின்று வந்துள்ளமைக் கண்கூடு.

பெரியவாச்சான் பிள்ளை பகவத் கீதை, காருடபுராணம், வான்மீகி ராமாயணம், கீதை, யஜுர்வேதம் விஷ்ணு தாமம், மாங்கல்யஸ்தவம், விஷ்ணுபுராணம் ஸ்தோத்தர ரத்நம், பாரதம், தைத்தரீயோபநிஷத் ஆகிய பல நூல்களிலிருந்து மேற்கோள் கூறித் தம்முடைய வடமொழி அறிவைப் புலப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட வடமொழி நூல்களின் கருத்துக்களை பெரியவாச்சான் பிள்ளை எவ்வெவ்வகையில் கையாண்டு தம்முடைய பேருரையின் சிறப்பினை வெளிப்படுத்துகின்றார் என்று காண்பது நன்று. திருப்பாவை இரண்டாவது பாட்டிலே வரும் ‘கேளீரோ’ என்ற விளிக்கு விளக்கம் கூறு முளைந்த அவர், “ ‘ஸம்ச்ரவே மதுரம் வாக்யம்’ என்னும் படியே ச்ரவணந்தானே ப்ரயோஜநமாயிருக்கிறபடி” (திருப். பெரிய. ப.41) என்கிறார். இத்தொடர் வான்கீகி ராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் (31.1) வருவதாகும். வானரர்களுக்குச் சிறந்தவனான திருவடி (அனுமன்) கீழே சொன்னபடியே பலவகையான ஆரோசனையைச் செய்து கேட்ட மாத்திரத்தில் மதுரமானதொரு வாக்கியத்தைப் பிராட்டியை நோக்கிக் கூறினார்’ என்று வரும் வடமொழிப் பகுதியை அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

**நன்னூற் பயிற்சி**

உரையாசிரியர்கள் பணி பன்முகப் பணியாகும். அவர்கள் உரை கூறும்போது தமிழ் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டித் தம்முடைய உரைக்கு மேலும் வலுவூட்டுவர். அவ்வகையில் பெரியவாச்சான் பிள்ளை பன்னிரு ஆழ்வார்களும் பாடியருளிய அருளிச் செயல்களிலிருந்து மிகப் பல மேற்கோள்களைக் காட்டித் நம்முடைய சமய ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றார்.

பெரியவாச்சான் பிள்ளை ஆண்டான் இயற்றிய திருப்பாவைக்கு உரை வகுக்கும் போதும் பிற ஆழ்வார்களின் பெயர்களைச் சுட்டிக் கூறுவதில் இன்பங் காண்கின்றார். இவர் ‘திருமங்கையாழ்வார்’ (திருப். பெரிய. ப.62), ‘திருமழிசைப்பிரான்’ (திருப். பெரிய. ப. 71), பிள்ளைப்பிள்ளையாழ்வார் திருப். பெரிய. ப. 107) ‘பெரியாழ்வார் திருமகள் இரேயிவள்’ (திருப். பெரிய. ப.209) பெரியாழ்வாரைப் போல’ (திருப். பெரிய. ப.294) என்று கூறும் இடங்கள் இவ்வகையில் அறியத்தக்கன.

பெரியவாச்சான்பிள்ளை ஏனைய தமிழ் இலக்கியங்களை மேற்கோளாக எடுத்தாளுவதனை விடவும் ஆழ்வாரின் திருப்பாடல்களையே பெரிதும் போற்றிச் சான்று காட்டியுள்ளார். இதனால் இவர்தம் சமயப்பற்று நனி விளங்கும். இங்கே சில சான்றுகளைக் காண்போம்.

பெரியாழ்வாரின் திருமொழிப் பாடல் அடிகளைப் பெரியவாச்சான் பிள்ளை, ‘பையத் துயின்ற’ என்பதனை விளக்குமிடத்துச் (திருப். பெரிய. ப.42) சான்று காட்டுகின்றார்.

“வெள்ள வெள்ளத்தின்மே லொரு பாம்பை மெத்தையாக விரித்து
அதன்மேலே கள்ளநித்திரை கொள்கின்ற...”

(நாலா. 439)

என்ற அடிகளே அவை,

‘பாடி நெய்யுண்ணோம் பாலுண்ணோம்’ என்பதற்கு விளக்கம் கூறும் (திருப். பெரிய. ப.45) போது அவர்,

“..உண்ணாநாள் பசியாவ தொனிறில்லை ஒவாதே நமோ நாராயணாவென்று
எண்ணாநாளும் இருக்கெசுச் சாமவேத நாண்மலர் கொண்டுன பாதம்
நண்ணாநாள், அவைதத்துறுமாகி லன்றெனக்கவை பட்டினி நாளே”

(நாலா. 438)

என வரும் பெரியாழ்வாரின் திருமொழிப் பாடலைச் சுட்டிக் கூறுவார்.

‘நாட்காலே நீராடி’ என்ற தொடரின் விளக்கவுரையில் அவர், “அவன் திருப்பாற்கடலிலே வந்து சாய்தருளினதை அஸத்ஸமமாக்கக் கடவோம். மஹிவ்யானவள் ஸ்வரஷணத்திலே ப்ரவர்த்திக்கும்படியாக இருகைக்கு மேற்பட

புருஷனுக்கு அவத்யமில்லையிறே அதாவது –தங்கள் த்வரையாலே அத்தலையில் உபாயபாவத்தை அழிக்கிறார்கள். ‘ஓதிநாமங் குளித்துக் தன்னாலொளிமாமலர்ப் பாதநாளும் பணிவோம் நமக்கே நலமாதலில்’ என்றார்கள்’’ (திருப். பெரிய. ப.47) என்பார்.

மேற்கண்ட உரையில் திருமங்கையாழ்வார் அருளிள பெரியதிருமொழிப் பாடல் (நாலா.1776) அடிகளை அவர் மேற்கோள் காட்டியுள்ளார். ‘‘ஓங்கி உலகளந்த’’ என்ற அடிக்கு விளக்கம் கூறும் போது பெரியவாச்சான் பிள்ளை, திருமங்கையாழ்வாரின் ‘அமலனாதிபரான்’ என்பதனுள் வருகின்ற ஒரு பாடல் (நாலா.928) அடியினைச் சான்று காட்டிப் போகின்றார். அது, ‘‘உவந்த உள்ளத்தனா யுலக மளந்து, என்னக் கடவதிறே’’ (திருப். பெரிய. ப.58) என்பதாகும்.

**இராமாயண மேற்கோள்கள்**

‘‘வைணவ உரையாசிரியர்கள் வால்மீக் இராமாயணத்தினையே நிரம்ப மேற்கோள் காட்டி விளக்கியுள்ளனர். அவர்களுள்ளும் பெரியவாச்சான் பிள்ளை வான்மீகியின் சுலோகங்களுக்கு அரிய விளக்கங்களை மேற்கோள் காட்டுமிடங்களில் எழுதிச் சென்றுள்ளார்.

பாவைக்குச் செய்கின்ற நோன்பு குறித்து அவா விளக்கும் போது இந்திரசித்தன் செய்த யாகத்தைக் காட்டுவார். இந்திரசித்துச் செய்த யாகம் அவனும், அவனைச் சார்ந்த தோரும் அழியவே பயன்பட்டது. ஆனால் அடியவர் செய்யும் யாகம் வாழ்க்கைக்குப் பண்ணும் யாகம் ஆகும். இக்கருத்தினை அவர், ‘‘அவனையும் அவனுடை யாரையும் அழிக்கைக்குப் பண்ணும் இந்திரஜித் ப்ரப்ருதிகளுடைய யாகம் போலன்றியே, ததீயரும் அவனும் வாழ்க்கைக்குப் பண்ணும் யாகம்.’’ (திருப். பெரிய. ப.40) என்று குறிப்பிடுவார்.

‘‘சார்ங்கமுதைத்த சரமழை போல்’ என வரும் திருப்பாவை நான்காம் பாட்டின் அடிக்கு விளக்கம் கூறும்போது, ‘‘இரை பெறாத பாம்பு போலே, முன்பு விஷயமில்லாமையாலே அடங்கியிருந்த, ஸ்ரீசார்ங்கம், சக்ரவர்த்தித் திருமகன் கடைக்கணித்தவாறே நூறாயிரம் சரவ்ருஷ்டியைத் தானே பண்ணிற்கு’’ (திருப். பெரிய. ப.82) என்று அவர் கூறுவார்.

‘தூயயோமாய் வந்தோம்’ என்பதனை விளக்குமிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை, வீடணனைப் பற்றிச் சுக்கிரீவன் இராமபிரானிடம் கூறும்

பகுதியினை விளக்கக் காண்கின்றோம். ‘‘அங்குத்தைக்கு நாம் யோக்யரோ அயோக்யரோ என்று பாராதே இருந்தபடியே வந்து இருந்தபடியே வருகைக்கு மேற்படி சுத்தி தேடவேண்டாவிறே. ‘சுத்தம வேத்தி விபீஷணம்’’ என்றதிறே. இருந்தபடியே வந்த விபீஷணாழ்வானை’’ (திருப். பெரிய. ப.96-97) என்ற அவர் காட்டும் நயம் அறிந்து இன்பறுத்தக்கது.

அசோகவனத்திலே அனுமனைக் கண்ட சீதை மிகுந்த மகிழ்ச்சியுற்றாள்; அம்மகிழ்ச்சி மேலீட்டினால் ஒன்றும் பேசவில்லை. இச்செய்தி வான்மீகியில் யுத்தகாண்டத்தில் (116-115) வருவது. ‘அம்மே’ என்று எழுப்பின அளவிலும் அவள் பேசாதே கிடக்கின்றமைக்கு உவமை கூறவந்த பெரியவாச்சான்பிள்ளை மேற்கண்ட இராமாயண நிகழ்ச்சியினைக் (திருப். பெரிய. ப.149) குறிப்பிடக் காண்கின்றோம்.

இவ்வாறு திருப்பாவையுள் வரும் ஒவ்வொரு சொல்லிற்கும் தொடருக்கும் பெரியவாச்சான் பிள்ளை இராமாயண மேற்கோளைச் சான்று காட்டிப் போகும் பண்பினராக உள்ளார். எனவே தான், வால்மீகி இராமாயணத்தின் கதைப் போக்கையும் பொருளையும் சிறப்புடன் பல இடங்களில் எடுத்துக்காட்டி அந்நூலை வைணவ சமயத்திற்கு ஒரு பிறந்த பிரமாண நூலாகவே காட்டியுள்ளனர்; அதன் மூலமாகத் தமக்கு உள்ள இலக்கியப் படைப்புத்திறனையும் வளமான கற்பனை ஆற்றலையும் பலப்படுத்தியுள்ளனர் என்று ஆய்ந்து கூறுகின்றார் பேராசிரியர் மு.பை.அரவிந்தன்.

**உரை நயம்**

பெரியவாச்சான் பிள்ளை தம்முடைய மூவாயிரப்படி உரையில் சொற்பொருளை விளக்கும் போதும், ஒரு சொல்லிற்குப் பல பொருள்களைக் குறிப்பிடும் போதும், அவதாரிகையினை உரைக்கும் போதும், உவமைகளைக் கூறிக் கருத்துரைக்கும் போதும் அவருடைய உரைத்திறன் நன்கு வெளிப்பட்டு நமக்கு வியப்பை ஏற்படுத்துகின்றது. அவர் தம் உரையில் தாம் வாழ்ந்த காலத்துப் பண்பாட்டையும் இணைத்துச் செல்லும் பாங்கினைக் காண முடிகின்றது.

**வினா விடைப் போக்கு**

பண்டை இலக்கிய இலக்கண உரையாசிரியர்கள் பால் காணலாகும் ஒரு பொதுப்பண்பு, உரையை ஒரு மாணவனுக்குக் கூறுவது போன்று அமைக்கும் வினாவிடைப் போக்கு ஆகும். இப்போக்கு பெரியவாச்சான் பிள்ளையிடம் அருகியே காணப்படுகிறது. சமயநிலையில் அவர் உரைவகுக்கின்றார். பக்குவம் பெற்ற பக்தர்களுக்கு ஏற்ப அவர் உரை அமைகின்றது. எனவே, வினாவிடையாக எழுதும்

பாங்கு அவரிடம் பெரிதும் காணப்படவில்லை என்றாலும், வினா விடையாக அமையும் ஒன்றிரண்டு இடங்களை நாம் சுட்டிக் கூற ஒண்ணும்.

திருப்பாவை ஒன்பதாம் பாட்டில் வருகின்ற 'சுற்றும் விளக்கெரிய' என்ற தொடரை விளக்கும்போது அவர் பின்வருமாறு கூறுவார் ' "க்ருஷ்ணன் வந்தால் தன் கையைப் பிடித்து உலாவு மிடமடையப் படுக்கையும் விளக்குமாக்கி வைத்தபடி. புறம்பு நிற்கிறவர்களுக்கு உள்ளுவிளக்கரிந்தது தெரிகிறபடி எங்ஙனே?" என்ற ஒருத்தி வினா எழுப்பவான். உடனே மற்றவள், "என் என்னில் மாணிக்கக் குப்பிபோலே, புறம்பே நிற்க உள்ளுள்ளதெல்லாம் தோற்றாநிற்கும்"

(திருப். பெரிய. ப.138)

என்று மறுமொழி கூறுவாள். இது தருக்கநெறியின் அமைந்து மறுமொழி தருகின்ற விடை என்பது கூறாதே அமையும்.

**உரையாடல் நயம்**

திருப்பாவை வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளை உரையாடல் நயம் தோன்றும் வண்ணம் தம்முடைய விளக்கத்தினை எழுதிச் செல்கின்றார். சான்றுக்கு கூறு இங்கே கண்டுணர்வோம்.

'புள்ளும் சிலம்பின' என்பது ஆறாம் பாட்டின தொடக்கச்சொல். அதன் விளக்கம் உரையாடல் பாங்கில் அமைந்துள்ளது.

"இப்பெண்கள் போதோடே வாசலிலே சென்று உணர்த்தக் கடவதாக ஸங்கல்பித்துப் போதுவிடியச் செய்தே கிடந்துறங்குவதே' என்று சிஷ்டகர்ஹை பண்ணினவாறே. போது விடிய வேண்டாவோ எழுந்திருக்கவென்ன; எப்போது விடிந்தது எழுந்திராயென்ன; விடிந்தமைக்கு அடையாளமென் என்று கேட்க; நாங்களுணர்ந்து வந்தது பேராதோவென்ன; உறங்கினா ருணரிலன்றோ விடிவுக் கடையாளமாவது, 'உண்டோ கண்கள் துஞ்சுதல்' என்கிறயே உங்களுக்கு உறக்கமுண்டோவென்ன, உங்களுணர்த்தி விடிந்தமைக்கு அடையாளமன்று, வேறடையாள முண்டோவென்ன (புள்ளும் சிலம்பின காண்) போது விடிந்து பஷிகள் அகப்படக்கிளம்பி யிரைதேடிப் போகா நின்றன வென்ன; அது விடிந்தமைக் கடையாளமோ வென்ன; அல்லவோ வென்ன, ஓம், அல்லவீ என்ன; ஆவதென்ன; நீங்கள் அவற்றை யுறங்கவொட்டாதே கிளப்பினறே கிளம்பிற்றின வல்லது விடிந்தமைக் கடையாளமோ என்ன; இவ் விடத்திலே பிள்ளைப் பிள்ளையாழ்வான்,

பகவத் ஸமாச்ரயணத்துக்கு அநுகூலமான காலத்தை ஸூசிப்பிக்கிற பஷிநாதமல்லது இவ்வாத்மாவுக்கு உத்தேச்யமில்லை என்று பணிக்கும்' என்றருளிச் செய்வர். நீங்கள் பிறந்தவூரில் பஷிகளுக்கு உறக்கமுண்டோ; 'காலை எழுந்திருந்தது கரிய குருவிக் கணங்கள்' என்றிரேயிருப்பது' வேறடையாள முண்டாகில் சொல்லுங் கோளென்று கிடந்தாள்'' (திருப். பெரிய. பக்.105-107). இவ்வாறு உரையாடல் பாங்கு தோன்ற உரை எழுதிச் செல்லும் பாங்கினை அவரிடம் பல இடங்களில் கண்டுணர முடிகின்றது.

**சொற்பொருள் நயம்**

பெரியவாச்சான் பிள்ளையின் பேரறிவின் ஆழத்தை அறிந்து கொள்வதற்குக் களமாக அமைவன அவர் கூறுகின்ற சொற்பொருள் நயங்கள் எனலாம்.

அவர் ''கார்மேனி'' என்பதற்கு ''நம்முடைய ஸகல தாபங்களும் ஆறும் படியான வடிவு'' (திருப் பெரிய. ப.26) என்றும், ''ஓங்குபெருஞ்செந்நெல்' என்பதற்கு ''ஒரு முதலே ஒரு செய்யை விளாக்கொலை கொண்டு அங்ஙனனொனரு வரம்பில்லாமையாலே ஆகாச அவகாசமுள்ளவளவும் வளர்ந்திருக்கை'' என்றும் கூறும் பொருள் விளக்கங்கள் நயம் சிறந்து விளங்குகின்றன.

ஆயர்பாடியிலே இருக்கும் பசுக்களின் முலையினைச் ''சீர்த்த முலை'' என்கிறது திருப்பாவை. அதற்கு விளக்கம் கூற வந்த உரைகாரரோ, ''விரலிட்டுச் சுற்றிப் பிடிக்கவொண்ணாது, இரண்டு கையாலும் அணைத்துக் கறக்க வேண்டும்படி கனத்திருக்கை'' (திருப். பெரிய. பக். 66.6) என்று கூறுவார். ஆயர்பாடியின் செல்வ வளத்தையே சிந்தையின் முன்னே கொண்டு வந்து காட்டிவிடு நுட்பமான நயம் இதில் அமைந்துள்ளது.

**''வித்தினை''** என்ற சொல்லிற்குப் பெரியவாச்சான் பிள்ளை, ''திருவவதாரத்துக்கு நாற்றங்கால்'' (திருப். பெரிய. ப.112) என்பர். ''தூபம் கமழ'' என்பதனை விளக்கும் அவர், ''புகை காணவொண்ணாதே பரிமலை வெள்ளமிட'' (திருப். பெரிய. ப.139) என்று கூறும் போதும் நம்முடைய மூக்கினையே நிறைக்கின்றது நறுமணம்.

''கள்ளம் தவிர்த்து'' என்பதனை விளக்குமிடத்தும் பெரியவாச்சான் பிள்ளை ''கள்ளமாவது-தனியே க்ருஷ்ணகுண சேஷ்டிதங்களை நினைத்துக் கிடக்கை'' என்று

சொல்லுவார். இதன் வாயிலாக ஒரு படுக்கை அறையையே நம் முன் கொண்டு காட்டி விடுகின்றார். அவர்.

**பல்வொருள் கூறும் பாங்கு**

பெரியவாச்சான்பிள்ளை சொற்களுக்குப் பொருள் கூறும்போது பல பொருள்களைச் சொல்லி நயம் புலத்துப்படுத்துவார்.

திருப்பாவை இரண்டாம் பாட்டில் வரும் 'வாழ்வீர்காள்' என்ற சொல்லிற்கு அவர் பல பொருள்கூறி விளக்குவார். அவ்வூர் தன்னிலே பிறந்து வைத்துப் பருவம் நிரம்பியிருக்கையன்றிக்கே, அவனுடைய கடாஷத்துக்கு இலக்காம்படி ஒத்த பருவமாயிருக்கை. க்ருஷ்ணாவதாரத்துக்கு முன்னாதல் பின்னாதல் அன்றிக்கே ஸமகாலத்தில் பிறக்கப் பெறுவதாம்; அது தன்னிலும் இவ்வூரை யொழிந்தவிடத்தே யன்றியே இவ்வூரிலே பிறக்கப் பெறுவதாம்; அது தன்னிலும் அவனோ டொத்த பருவமாகப் பெறுவதாம்; இதொரு பாக்யாதிசயமிருக்கும்படியென்'' (திருப். பெரிய. பக். 38-39) என்பது அவர் கூறும் பல பொருள் நயம்.

சொற்களின் பொருளை வேற்றுமைப் படுத்தும் இயல்பினைப் பெரியவாச்சான் பிள்ளை தம் உரை விளக்கத்தில் ஆங்காங்கே கடைப்பிடித்துள்ளார். ''உத்தமன், மத்யமன், அதமன்'' ஆகிய மூவரையும் அவர் பின்வருமாறு விளக்கித் தெளிவு கூறுவார். ''பிறரை ஹிம்ஸித்துத் தன் வயிற்றை வளர்க்க வேணுமென்றிருக்குமவன் -அதமன்; பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்க வேணும் என்றிருக்குமவன்- மத்யமன்; தன்னை அழியமாறியாகினும் பிறர் ஜீவிக்க வேணுமென்னுமவன் உத்தமன்'' (திருப்.பெரிய.ப.61)

''குலவிளக்கே-இக்குலத்துக்கு மங்கள தீபமானவளே பெண் பிறந்தார்க்கெல்லாம் த்ருஷ்டியான விளக்கேயென்னவுமாம்'' (திருப்.பெரிய.ப.231) என்றும், ''பஞ்ச சயநத்தின் மேலேறி-பஞ்ச விதமானப் படுக்கையின் மேலேறி. அதாவது-அழகு, குளிர்த்தி, மார்த்தவம், பரிமளம், தாவள்யம் ஆக இவை. இவர்களுக்கு மென்மலாப் பள்ளி வெம்பள்ளியாயிறே யிருப்பது. அஞ்சு உருவிட்டுச் செய்த படுக்கை யென்றுமாம். பஞ்சாலே செய்த படுக்கை யென்னவுமாம்'' (திருப். பெரிய. பக் 262-263) என்றும் அவர் கூறுவன நயமுடைய பகுதிகள் ஆகும்.

**இலக்கணக் குறிப்பு**

பெரியவாச்சான் பிள்ளை தம்முடைய உரையில் இலக்கணக் குறிப்புகளை அவ்வளவாகக் கூறுவில்லை. ஒரே ஓர் இடத்தில் மட்டும் அவர் இலக்கணக் குறிப்புக் கூறுவார். ‘‘கப்பம் தவிர்க்கும்’’ என்பது இருபதாம் பாட்டில் வருவது. இங்குக் ‘கப்பம்’ என்பது குறித்து அவர், ‘‘கம்பம்’’ என்கிறவித்தை ‘‘கப்பம்’’ என்று வலித்துச் சொல்லுக்கிறது’’ (திருப். பெரிய. ப.274) என்கிறார்.

**உவமை நயம் காட்டி விளக்குதல்**

பெரியவாச்சான்பிள்ளை தம்முடைய பேருரையில் பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். அவை கற்பவர் உள்ளத்தில் களிப்பை ஏற்படுத்துவதுறுதி. அவர் வழக்கிலிருந்தும், இராமாயணம் போன்ற இலக்கியங்களிலிருந்தும் பற்பல உவமை கூறி விளக்குவார். அவர் எடுத்துப் பேசும் உவமைகள் நம் அறிவிற்கு விருந்தாக அமைவனயாவும்.

பாம்பணைப் பள்ளியலெ பையத்துயின்று கொண்டிருக்கின்றான். பரமன். இதனை விளக்கும்போது அவர், தகட்டில் அழுத்தின மாணிக்கம் போலே, திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தருளின பின்பு வடிவிற் பிறந்த புகரின் பெருமையைச் சொல்கிறது’’ (திருப். பெரிய. ப.43) என்று எழுதுகிறார்.

மாவலி கொடுத்த மூன்றடி மண்ணைத் தன் திருவடி கொண்டு அளக்கும்போது திருமால் எவ்வாறு பேருருவம் கொண்டு எழுந்தான் என்பதனைப் பின்வருமாறு அவர் விளக்குகின்றார். ‘‘பனிப்பட்டுச் சாய்ந்த மூங்கில் போலே போய், அது ஆதித்ய கிரணம்பட்டுக் கிளம்புமா போலே மஹா பலியாலே நோவுபட்ட தேவர்கள் ஆர்த த்வநி கேட்ட பின்பு பேர்ந்து வளர்ந்தபடி’’ (திருப். பெரிய. பக். 57-58).

‘உத்தமன் பேரினை’ விளக்கும்போது அவர். ‘‘கட்டிப் பொன் போலே அவன்; பணிப் பொன் போலே திருநாமம்’’ (திருப். பெரிய. ப.62) எனக் கூறும் உவமை நயம் பொன் போலும் மதிப்புடையது.

**பொருள் நயங்கள்**

பெரியவாச்சான்பிள்ளையின் உரை நயங்கள் உவந்து போற்றத்தக்கவனாக விளங்குகின்றன. ‘‘கும்பகரணனும் தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ’’ என்ற அடிக்கு அவர், ‘‘உறக்கத்தில் தலையானவனும் உனக்குத் தோற்றுத் தன்

உறக்கத்தையுந் தானே தந்து போனானோ. அவனது துயில்: உன்னதுபெருந்துயில்'' (திருப். பெரிய. ப.153) என்று கூறும் கருத்துநயம் அறிந்துணரத்தக்கது.

ஆயர்பாடியில் இளம் எருமைகள் கனைத்தனவாம். கனைத்தமைக்குப் பெரியவாச்சான் பிள்ளை பின்வருமாறு நயங்காண்பார். ''கறப்பாரில்லாமையாலே முலைகடுத்துக் கதறுகை'' (திருப். பெரிய. ப. 168) என்பதே அந்நயம். இதே பாடலில் வரும் 'கன்றுக்கு இரங்கி' என்னுமிடத்து. ''தன் முலைக் கடுப்புக் கிடக்க, 'கன்று எனப்படுகிறதோ!' என்றிரங்கி'' (திருப். பெரிய. ப.169) என்று விளக்கி நயமுரைப்பர்.

பதின்மூன்றாம் பாட்டிலே வரும் பொல்லா அரக்கனை' என்பதற்கு அவர் இராவணனைக் குறிப்பிட்டு விட்டு வீடணனைக் சுட்டிக் காட்டி நல்ல அரக்கனும் உண்டென்று வலியுறுத்தவார். (திருப். பெரிய. ப.180). ''இளங்கிளியே'' என்றவிடத்து அவர், ''கிளி இவள் பேச்சுக்கொப்பா மித்தனை, பருவத்துக்கு ஒப்பன்று என்கை'' (திருப். பெரிய. ப. 198) என்பார். ''சீரார் வளைக்கை'' என்ற விடத்து ''வளைக்குச் சீர்மையாவது கழலா திருக்கை'' (திருப். பெரிய. ப.252) என்று உரையாசிரியர் நுட்பங்கூறும் நயம் அறியத்தகும்.

**பழக்க வழக்கங்களும் பண்பாடும் பளிச்சிடல்**

உரைகள் அவை எழுந்த காலத்து மக்களின் பழக்க வழக்கங்களையும், ஒழுகலாறுகளையும், பண்பாட்டையும் பாங்குடன் பதிவு செய்து வைத்திருக்கும் கருவூலங்களாக விளங்குகின்றன. பெரியவாச்சான் பிள்ளையின் பேருரையிலும் பழக்க வழங்கங்களும், பண்பாடும் இன்னபிற செய்திகளும் பயின்றுவ வரக் காண்கின்றோம்.

உறுதிமொழி சொல்வது போன்றதொரு பழக்கத்தினைப் பெரியவாச்சான் பிள்ளையின் உரையில் காண்கின்றோம். '''செய்யக் கடவ படியை', 'இன்ன படியும் இன்ன படியும்' என்ற கையோலை' செய்து கொடுக்கிறார்கள்'' (திருப். பெரிய. ப.72) என்பது அவரது உரைப் பகுதி.

நெருப்பிலே இட்ட பஞ்சு போல இறையனுபவத்தில் ஈடுபட்டால் உரு மாய்ந்து போகும் என்பர். இவ்விடத்து அவர் பொருள் விளக்கம் கருதி, ''பாலும் கண்ட சர்க்கரையும் குடிக்கப் பித்தம் தன்னடையே போமா போலே'' (திருப். பெரிய. ப.100) என்று கூறுவார். இதனால் இவருடைய காலத்து மருத்துவ அறிவு

புலனாகும். ‘‘அச்சுத்தாலியும் முளைத்தாலியும்’’ (திருப். பெரிய. ப.120) ஆகிய ஆயர் குலத்து அணிகலன்களை அவர் கூறுவார். பனிப்புல் மேயவிடுவதற்கு மேட்டிள மேதிகளை விடிகாலைப் பொழுதிலேயே அனுப்பும் பழக்கத்தினை அவர் உரைப் பகுதியினால் (திருப். பெரிய. ப.128) அறிய ஒண்ணும்.

‘‘ப்ளிக் கிடத்தியோ’ என்ற தொடரை விளக்கும் போது பெரியவாச்சான் பிள்ளை; ‘‘விளைந்து கிடக்க உதிர் நெல் பொறுக்கிறாயோ’’ (திரு. பெரிய. ப.185) என்பர். கதிர்கள் வளைந்து முற்றிக் கிடக்கவும், உதிர்ந்த நெல்லைப் பொறுக்கும் பழக்கமும் அன்று இருந்தது என்பது இதனால் புலனாகின்றது.

‘‘உறங்குகிற ப்ரஜையை அணைத்துக் கொண்டு கிடக்கும் மாதாவைப் போலே’’ (திருப். பெரிய. ப.59) என்றும், ‘‘பிள்ளைகளைத் தொட்டிலிலே வளர்த்திப் புற்பாயிட்டுப் பூரித்து ஆயுதங் கொண்டு நோக்கியிருப்பாரைப் போலே’ (திருப். பெரிய. ப.80) என்றும் கூறுவன தாய்மார்களின் குழந்தைப் பாசத்தைப் போற்றும் அக்காலவுணர்வைக் காட்டும் சான்றுகளாகும்.

கருவுற்ற பெண்டிர் தம் வயிற்றுள் வளர்கின்ற கருவிற்கு ஊறு ஏற்படாதவாறு மெல்ல எழுந்திருப்பர். இப்பழக்கத்தினைப் பெரியவாச்சான் பிள்ளை கூர்ந்து நோக்கியுள்ளார் என்பதைப் பின்வரும் பகுதியினால் உணரலாகும்: ‘‘கர்ப்பிணிகள் ப்ரஜைகளுக்கு நோவு நேராமே எழுந்திருக்குமா போலே’’ (திருப். பெரிய. ப.113). மற்றுமோர் இடத்திலே அவர், ‘‘உறங்குகிற ப்ரஜையைத் தழுவிக் கொண்டு கிடக்கும் தாயைப் போல’’ (திருப். பெரிய. ப.233) என்பார். இவற்றால் பெரியவாச்சான் பிள்ளையின் பிள்ளைப் பாசம் வெளிப்படுவதோடு, தாய்மார் தம் செயல்களும் பழக்கங்களும் தெளிவாகின்றன.

சிங்கம் மழைக்காலத்தில் மலை முழைஞ்சினை விட்டு வெளியே புறப்படாது. இதற்கு உவமையாக அவர், அக்கால மன்னர்களின் பழக்கத்தினைக் கூறுகின்றார். அது வருமாறு : ‘‘வர்ஷா காலம் ராஜாக்கள் படைவீடுவிட்டுப் புறம்படாதாற் போலே’’ (திருப். பெரிய. ப. 311).

‘‘கோயிற்சாந்தை உன்னால் ஒளிக்கப்போமோ என்ன’’ (திருப். பெரிய. ப.151) என்றொரு பழமொழியை அவர் பயன்படுத்தும் பாங்கும் இவண் அறியத்தகும்.

‘‘வழிக்குத் தாரகம் திருநாமமிறே’’ (திருப். பெரிய. ப.182) என்று அவர் கூறுவது கொண்டு அக்காலத்து மக்கள் வழிநடைப் பயணத்தின் போது இறைவனின் திருநாமத்தினைக் கூறிச் சென்றமை புலனாகும்.

‘‘மாணிக்கத்தாலே செய்யனும் ‘கட்டில்’ ஜாதிப் பேச்சு’’ (திருப். பெரிய. ப.261) என்று அவர் கூறுவது கொண்டு அக்காலப் பேச்சு வழக்குப் புலப்படுகின்றது. அக்கால மக்கள் பொருளைப் போற்றி வைக்க உண்டியல் போன்றதொரு கலத்தினை வைத்திருந்தனர். இதனைப் பின்வரும் பெரியவாச்சான் பிள்ளை உரையினால் உணர முடிகின்றது. ‘‘நிதி இட்டு வைக்கும் செப்புப்போல’’ (திருப். பெரிய. ப.278) மாணிக்கத்தைப் பட்டைதீட்டிய வழக்கினை உணர்த்தும் வகையில் ‘‘சாணையிலிட்ட மாணிக்கம் போலே ஒளிவிடா நிற்கை’’ (திருப். பெரிய. ப.291) என்னும் அவர் உரை விளக்கம் அமைகின்றது.

பெரியவாச்சான் பிள்ளை, ‘‘குப்பி, குழைச்சரக்கு, பூசினி, நிலை விளக்கு, சூடகம், பரியட்டம்’’ ஆகிய பல்வேறு பொருள்களையும் தம் உரையிலே குறிப்பிட்டுச் செல்வார். இவ்வாறு பெரியவாச்சான் பிள்ளையின் திருப்பாவை மூவாயிரப்படி உரை தமிழ் இலக்கியானத்தில் தனிச்சிறப்படன் ஒளிவீசும் முழு நிலவாய் விளங்குகின்றது. பல்வேறு சிறப்புக்களும் ஒருங்கே நிறைந்து விளங்கும் மூலபண்டாரமாகத் துலங்கும் இப்பேருரையினை இயற்றிய பெரியவாச்சான் பிள்ளை ஓர் ‘உரை வித்தகர்’ என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

# கூறு 10

## பண்டிதமணி - திருவெம்பாவை உரை (கதிர்மணி விளக்கம்)

மு.கதிரேசச் செட்டியார் (1881-1953) அவர்கள் தலைசிறந்த தமிழ்மணி; நகரத்தார் மரபில் - கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊரில்-தோன்றிய பெருமணி; தென்மொழி, வடமொழி இரண்டிலும் பழுத்த புலமை பெற்றுப் புலவர்க்கெல்லாம் புலவராக விளங்கிய அறிவுமணி; இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியருள் ஒப்பற்ற புகழ்மணி. அன்னாருக்கு மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையினர் அறிஞர். உ.வே.சாமிநாத ஐயர் தலைமையில் பண்டிதமணி' (1925) என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர்; நடுவண் அரசினர் 'மகாமகோபாத்தியாய' (1942) என்ற பட்டத்தை அளித்துப் போற்றினர்; புலவர் பெருமக்கள் 'முதுபெரும் புலவர் பெரு மக்கள் 'முதுபெரும் புலவர்' (1951), 'சைவ சித்தாந்த வித்தகர்', 'தமிழ் நயத் தந்தை' என்னும் பட்டங்களைச் சூட்டி மகிழ்ந்தனர்.

பண்டிதமணியின் வரலாற்றில் குறிப்பிடதக்க சில செய்திகள் வருமாறு: பண்டிதமணி இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த மகிபாலன்பட்டியில் 16.10.1881-ல் பிறந்தார். முத்துக்கருப்பன் செட்டியார் என்பது அவரது தந்தையின் பெயர்; சிவப்பி ஆச்சி என்பது அவரது தாயின் பெயர். அவரது திருமணம் 1912ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. வாழ்க்கைத் துணைவியின் பெயர் மீனாட்சி என்பதாகும். மனை வாழ்க்கையின் பயனாக அவருக்கு நன்மக்கள் எண்மர் (ஆண் 5, பெண் 3) பிறந்தனர். பண்டிதமணி சோழவந்தான் அரசஞ் சண்முகனாரிடம் தமிழ் கற்றார்; தருவை நாராயண சாத்திரியாரிடம் வடமொழி பயின்றார்; காரைக்குடி சொக்கலிங்க ஐயாவிடம் சமய அறிவு பெற்றார். 1909 ஆம் ஆண்டில் பண்டிதமணி மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையைத் தோற்றுவித்து அதன் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் செல்லும் வகையெல்லாம் அருந்தொண்டு ஆற்றினார். அவர் 1933ஆம் ஆண்டில் ஈழச் செலவு மேற்கொண்டார். அவரது மணிவிழா 1941ஆம் ஆண்டில் வள்ளல் அண்ணாமலையரசர் தலைமையில் நிகழ்ந்தது. ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் இடையறாது சீரிய தமிழ்ப்பணி புரிந்து, செம்மல் உள்ளத்தோடு வாழ்ந்து வந்த பண்டிதமணி 24.10.1953-ல் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

'உதயன சரிதம்', 'சுலோசனை', 'மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்), 'சுக்கிர நீதி, 'கௌடலீயம் - பொருள் நூல்' என்பன பண்டிதமனியின் மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகும். பண்டிதமணியின் உரைநடை நூல்களுள் 'உரைநடைக் கோவை' (இரு பகுதிகள்), 'இலக்கிய நயம்', 'நாட்டுக் கோட்டை

நகரத்தார்களின் சீர்திருத்தம்' ஆகியன அடங்கம். பதிற்றுப்பத்தந்தாதி' என்பது பண்டிதமணி இயற்றியுள்ள செய்யுள் நூல். பண்டிதமணியின் 'கதிர்மணி விளக்கப் பேருரை' திருவாசகத்தின் 'திருச்சதகம்', 'நீத்தல் விண்ணப்பம்', 'திருவெம்பாவை' ஆகிய பகுதிகளுக்கு வெளி வந்துள்ளது.

1982ஆம் ஆண்டில் அறிஞர் வ.சுப.மாணிக்கத்தின் அருமுயற்சியால் 'பண்டிதமணி நூற்றாண்டு விழா'வின் நிலைப் பயனாகப் பண்டிதமணியாரின் பெரும்பாலான நூல்கள் மறுபடியம் பதிப்பிக்கப் பெற்றுள்ளன; 'ஊன்று கோல்' (கவியரசு முடியரசன்), 'பண்டிதமணியின் நாடகத் தமிழ்' (புலவர் ஆ.பழநி), 'பண்டிதமணியின் நடைநயம்' (அறிஞர் இரா.மோகன்) என்னும் பண்டிதமணியைப் பற்றிய திறனூல்கள் மூன்றும் வெளிவந்துள்ளன.

**உரைமுறை**

ஒவ்வொரு திருப்பாட்டிற்கும் கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலங் கூறல் என்னும் நான்கு வகையாகக் கொண்டு உரை விளக்கம் செய்யப்படும். அவற்றுள் கருத்துரைத்தலாவது, திருப்பாட்டை அடுத்து அதன் திரண்ட கருத்தையம் முன்னைத் திருப்பாட்டோடு உள்ள இயைபையும் சுருக்கிக் கூறுதலாகும்.

'முன்னைத் திருப்பாட்டில் இறைவனது அருமையில் எளிய அழகைப் புலப்படுத்தருளிய அடிகள், இத்திருப்பாட்டில் அவ்வருமையில் எளிமை அன்பு செய்வார்க்குப் பயன்படுமுறையைப் புலப்படுத்தத் தொடங்கி முதலில் மொழியால் பாராட்டுதற்குரிய எளிமையை அருளிச் செய்கின்றார்' (ப.25) என்பது பண்டிதமணி திருவெம்பாவையின் மூன்றாம் பாடலுக்கு எழுதியுள்ள கருத்துரை ஆகும். இதில் அவர் பாடலின் திரண்ட கருத்தினையும் முன்னைய பாடலோடு இப்பாடலுக்கு உள்ள இயைபினையும் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

பதவுரை என்னும் பகுதியில் பாண்டிதமணி பாடலில் சொற்பொருளைத் தெளிவுறுத்தியுள்ளார்.

பண்டிதமணியின் உரைத்திறன் அவர் பாடலுக்கு எழுதியுள்ள விளக்கவுரைப் பகுதியில் நன்கு மிளிரக் காண்கின்றோம். அவர் இப்பகுதியில் பாடலில் உள்ள பல்வேறு நயங்களையும் நுட்பமாக எடுத்துக்காட்டியுள்ளார். "பத்திமையிற் சிறந்த இந்நங்கை வாக்கு மனம்மெய் மூன்றானாலும் ஈடுபட்டாள். இங்ஙனம் ஒருங்கு நிகழ்தல் நமக்கு அரிதாயினும் மொழிப் பணியையேனும் முந்துறச் செய்வோமாக

என்பது கருத்து. இவள் இறைவன் திருவடி முதலியவற்றின் உறுப்பழகை அகக் கண்ணாற் கண்டு கண்ணீரிலாடினாள். அத் தகுதி நமக்கு இன்றெனினும் அவ்வுறுப்புக்களை உவமை முகமாகக் காட்டும் அழகிய தோற்றமுடைய மலர்களைப் புறக்கண்ணாற் கண்டு நாம் தண்ணீரிலேனும் ஆடுவோமாக என்பார். 'ஒருருவப் பூம்புனல் பாய்ந்தாடு' என்றாள்'' (ப.79) என்பது பண்டிதமணி பதினைந்தாம் பாடலின் விளக்கவுரையில் எழுதியுள்ள நயக் குறிப்பு ஆகும். 'ஆண்டவனிடத்தில் எனக்கு அன்புண்டு என்று ஒருவன் வாயளவிற் கூறுதனினும் செயலளவில் மேற்கோடலே சிறந்த தென்பதும், இறைவழிபாடு செய்தற்குரிய காலத்தை அது செய்யாமல் வேறு நிகழ்ச்சிகளால் கழித்தல் கூடாதென்பதும், தேவர்க்கும் அரிய இறைவன் அன்பிற்கு எளியனாவன் என்பதும் இறையன்பிலீடுபட்டு ஒழுகுவோர் நிலை என்றும் இழிந்தும் தாகாதென்பதும் பிறவும் இத் திருப்பாட்டால் புலப்படுத்தப்பட்ட படியாம்' (ப.24) என்பது பண்டிதமணி இரண்டாம் பாடலின் விளக்கவுரையில் தெளிவுறுத்தி உள்ள நுட்பக் குறிப்பு ஆகும்.

**நூலாசிரியரைப் போற்றால்**

''திருவாசகத் திருப்பாடல்களுக்கு உரை கண்டார். அவராவர். அவ்வுரைகளைக் கொண்டு நூலின் உண்மைப் பொருளைப் பெரும்பாலும் உள்ளவாறு அறிதற்கியலாமையால் 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' என்று அடிகள் ஆணையிட்டருளியபடி, அவனருளே கண்ணாகக் கொண்டும், அடிகள் திருவுருவத்தை இடையாறாது நினைவுகூர்ந்தும் கூடியவரை பொருள் காண முயன்றேன், அம் முயற்சி திருவருளால் ஒரளவிற் பயனுடையதாயிற்று'' எனப் பண்டிதமணி நீத்தல் விண்ணப்ப உரைக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதி திருவருளின் மேல் அவருக்கு இருக்கும் ஆழ்ந்தபற்றையும், நூலாசிரியரான மாணிக்கவாசர்பால் அவருக்கு இருக்கும் அளவற்ற மதிப்பையும் துலக்கிக் காட்டுவதாகும்.

பண்டிதமணி திருவாசகத்தின் அருமை பெருமைகளைக் குறித்துத் தனிநூல் ஒன்று எழுத வேண்டும் என்று நுழைந்தார். ''இன்னும் இத்திருவாசகத்தின் அருமை பெருமைகள் அளப்பரியனவாம். இதனைப் பற்றித் தனித்து ஓர் உரைநடை நூல் எழுத எண்ணியிருக்கின்றோம். ஆதலின், ஈண்டு இம்மட்டில் அமைகின்றோம்'' என்றும், தசகாரியவுண்மை இத் திருச்சதகத்தில் அமைந்திருத்தலைத் தனியே ஆராய்ந்து, 'திருவாசகத் தேன்' என்னும் குரலில் விளக்கிக் கூறுவோம்.'' என்றும் அவர் தம் விழைவை இரு இடங்களில் வெளியிடவும் செய்தார். எனினும் அவர்

காலத்தில் அவ்விழைவு நிறைவேறாமலே போயிற்று. அது நம் தவக்குறையே ஆகும்.

**மேற்கோள் காட்டுதல்**

பண்டிதமணியின் திருவெம்பாவை உரை அவரது பரந்துபட்ட தமிழ் இலக்கண, இலக்கிய, சமய நூலறிவைத் தெள்ளிதின் காட்டவல்லதாகும்.

பண்டிதமணி தமக்குமுன் வாழ்ந்த நூலாசிரியர்களைப் பெரியோர் என மதிப்போடு சுட்டுகின்றார்; அவர்களது கருத்துக்களை 'அருளுரை' என்றும், 'பொருளுரை' என்றும் 'திருவாக்கு' என்றும் கூறுகின்றார்.

திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சேக்கிழார், சிவஞான முனிவர், தாயுமானவர், இராமலிங்க அடிகள், நம்பியாண்டார் நம்பி, பரஞ்சோதியார், குமரகுருபரர் ஆகிய சிவநெறிச் செல்வர்களின் பாடல்களைப் பண்டிதமணி தம் திருவெம்பாவை உரையுள் பல இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார். திருநாவுக்கரசர் தேவாரத்தை அவர் 12 இடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

சைவ சாத்திரங்களுள் மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்தையும், அருணந்தி சிவாச்சாரியார் இயற்றிய சிவஞான சித்தியாரையும் பண்டிதமணி மிகுதியாக மேற்கோள் காட்டியுள்ளார். சிவஞான மாபாடியத்திலிருந்தும் அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலிருந்தும், திருமுருகாற்றுப்படை, பட்டினப்பாலை, திருக்குறள், நான்மணிக்கடிகை, சிலப்பதிகாரம், நைடதம் ஆகிய இலக்கிய நூல்களிலிருந்தும் பண்டிதமணி பொருந்திய மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக்காட்டியுள்ளார். அவர் திருக்குறளை 8 இடங்களில் மேற்கோள்யாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வடமொழிப் பயிற்சி**

பண்டிதமணி தருவை நாராயண சாத்திரியார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஐந்து ஆண்டுகள் வடமொழி பயின்றார்; அவருக்கு மாதம் எட்டு ரூபாய் வீதம் சம்பளம் கொடுத்து வந்தார். 'தமிழும் வடமொழியும் கற்றவர்களில் முதன்முதல் பெரும் பேராசிரியர் (மகாமகோபாத்தியாயர்) என்னும் பட்டம் பெற்றவர். பண்டிதமணியே என்பார் பேராசிரியர் கா.சுப்பிரமணியபிள்ளை.

பண்டிதமணியின் வடமொழிப் புலமையைக் காட்டும் சான்றுகள் பலவற்றைத் திருவெம்பாவை உரையில் காண்கிறோம். அவர் திருவெம்பாவையின் தொடக்கத்

திருப்பாட்டுக்கு எழுதிய விளக்கவுரையில், அரும்பெருஞ்சோதியாக விளங்கும் இறையியல்பைக் குறித்துச் சிவானந்தலகரி என்னும் வடமொழி நூலில் சங்கராசாரிய சுவாமிகள் கூறிய ஒரு சுலோகக் கருத்தினை எடுத்துக்காட்டியுள்ளார்.

பண்டிதமணியின் வடமொழிப் புலமையைக் காட்டும் சான்றுகள் பல அவரது திருவெம்பாவை உரையுள் காணப்படுகின்றன. அவற்றுள் சில வருமாறு:

1. திருவெம்பாவையின் பதினொன்றாம் பாடலில் வரும் 'செல்வா' என்னும் விளிக்குப் பண்டிதமணி 'வீட்டுத் திருவினையுடையாய்' எனப் பொருள் கூறுவார்; விளக்க உரையுள் 'செல்வம் -வீட்டுத் திரு; மோஷ ஐசுவரியம் என்பர் வடநூலார்' (ப.61) எனக் குறிப்பிடுவார்.

2. திருவெம்பாவையின் பதின்மூன்றாம் பாடலில் வரும் 'தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்' என்னும் வரிசுக்குப் பொருள் எழுதும்போது பண்டிதமணி, வடமொழி மதம் பற்றித் தம் என நீர் பன்மையாகக் கூறப்பட்டது' ப.69) எனக் குறிப்பிடுவார்.

3. 'இசையின் தோற்றத்திற்குச் சாம வேதம் இடனென்பது வடமொழி வாணர்' (ப.73) என்றும், 'அலி ஆணாகவும் பெண்ணாகவும் இல்லாமல் ஆண்மையும் பெண்மையும் திரிந்தவுருவாகும். அது பொருள் வகையான உயர்திணையாயினும் சொல் வகையால் அஃறிணைப்பால்படும். வடமொழியில் பிரமம் என்னும் சொல்லும் அவ்வாறே நபுஞ்சக லிங்கமாதல் ஈண்டுக் கருத்தக்கது (ப.92) என்றும் பண்டிதமணி தம் திருவெம்பாவை உரையில் வாய்ப்பு உள்ள இடங்களில் எல்லாம் வடநூலாரின் கருத்துக்களைச் சுட்டிச் செல்வதைக் காண்கிறோம்.

**பிறர் கருத்தைச் சுட்டல்**

பிறர் கருத்தைச் சுட்டியும் மறுத்தும் எழுதித் தம் கருத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஓர் உரையாசிரியருக்கு உண்டு. பண்டிதமணி தம் திருவாசகம் பேருரையில் இப் பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

திருவெம்பாவை, உரையில் பண்டிதமணி பிறர் கருத்தைச் சுட்டும் இடங்களே காணப்படுகின்றன. மறுக்கும் இடங்கள் காணப்படவில்லை.

"பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்" என்பது திருவெம்பாவையில் வரும் இரண்டாம் பாடலின் தொடக்க வரி. இவ்வரிக்கு எழுதிய விளக்கவுரையில்

பண்டிதமணி ‘என்பாய்-என்று கூறுவாய். என்பாய் என்றதற்கு எலும்பாகக் கரையுமாறு எனப் பொருள் கூறுவாருமுளர்’ (ப.21) எனப் பிறர் கருத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருவெம்பாவையின் பத்தொன்பதாம் பாடல் உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்’ என்னும் பழமொழியோடு தொடங்குகின்றது. “இப்பழமொழி திருமண காலத்தில் மணமகளை மணமகன்பால் ஓம்படுத்தப் பொருட்டுப் பெற்றோர் கூறுங் கூற்றாகப் பண்டு வழங்கியது என்ப. மணமகன் கைப்பிடித்த ஞான்றே அவனுக்கு அப்பெண் உரியவளாகவும், அவளைப் பெற்றோர் ஆர்வத்தால் ‘சிறப்பு முறையிலும் பாதுகாக்குங்குமை நின்பாலதே’ என வற்புறுத்துக் கூறுமுகமாக இழந்தாகும் இப்பழமொழி” (ப.95) என்பது பண்டித பணி இப்பழமொழிக்குத் தரும் விளக்கம். இவ்விளக்கத்தைத் தருவதோடு அமையாது இத் திருப்பாட்டிற்யாந்த ‘உங்கையிற் பிள்ளை உனக்கே யடைக்கலம்’ என்னும் பழமொழி ஒரு தாய் தன் குழந்தையைக் கையிலேந்தி யிருக்குங்கால் பிறரொருவர் கூற்றாக எழுந்தன்பாரும், பெற்றோர் தம் குழந்தையைப் பாதுகாக்கும் நிமித்தம் மற்றோர்பால் கையடைப்படுத்து நிலையிற் சிறயதாக எழுந்ததென்பாரும் உளர்” (ப.99) என இப்மொழி பற்றிய பிறரது கருத்து விளக்கங்களையும் பண்டிதமணி தம் உரையின் முடிவில் எடுத்துக்காட்டியுள்ளார்.

**அடைமொழி நயங்கள்**

திருவாசகத்தில் சொல்லினிமையும் பொருளழகும் வாய்ந்த அடைமொழித் தொடர்கள் மலிந்து கிடக்கின்றன. பண்டிதமணி தம் ‘கதிர்மணி விளக்க’ த்துள் இவ்அடைமொழிகளின் நயங்களை ஆங்காங்கே அழகுற எடுத்துக்காட்டியுள்ளார். சான்றாக, அவர் காட்டும் இரு அடைமொழி நயங்களைக் காண்போம்.

திருவெம்பாவையின் முதற்பாடல் ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை’ எனத் தொடங்குவது ஒரு நயம் ஆகும். பாவை நோன்பு மேற்கொண்ட கன்னியருள், வைகறையில் தாமே துயில் உணர்ந்து எழுந்து உடலைத் தூய்மை செய்து கொண்டு நீராடப் போகின்ற சிலர், அந்நோன்பு மேற்கொண்டு நீராடுவதற்கு உடன் வருவதாக உறங்கும் ஒருத்தியைத் துயில் உணர்த்து முகமாக அருளிச் செய்யப்பட்டது இப்பாடல் ஆகும். இப்பாடலில் மாணிக்கவாசகர் உறங்கிக் கிடக்கும் பெண்ணின் கண்ணுக்கு அடைமொழி கொடுத்து, ‘வாட்டங்கண் மாது’ என அவளைச் சுட்டியுள்ளார். “‘வாட்டடங்கண்’ எனக் கண்ணுக்கு அடைமொழி கூறியது, வைகறைப் பொழுதில் ஒளியுடைமையும் அகற்சியும் இயல்பின் அமையுமாறு விழிக்கத்தக்க கண்கள், எதிர்மறையான இருளுடைமையும் சுருக்கமும்

அமைய மூடப்பட்டுக் கிடத்தில் தக்கதன்று என்னுங் குறிப்புத் தோன்ற நின்றது. விழிப்பு நிலையில் ஒளியுடைமையும் அகன்றிருந்தலும், துயிலும் நிலையில் ஒளியின்மையும் சுருங்கியிருந்தலும் கண்களுக்கு உளவென்பது எளிதினறியத் தக்கது'' (ப.12) எனப் பண்டிதமணி தம் திருவெம்பாவை உரையுள் 'வாட்டடங்கண்' என்னும் அடைமொழிக்கு எழுதியுள்ள விளக்கம் நயமும் நுட்பமும் பொருந்தியதாகும்.

### சொல் நயங்கள்

சொற்களின் நயங்களைப் பண்டிதமணியவர்கள் இன்பம் சுரக்க எடுத்துக்காட்டும் பகுதிகள் நினைக்க நினைக்க இன்பப் பெரு விருந்தாக நம்மை மகிழ்விக்கின்றன எனத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் 'கதிர்மணி விளக்கத்திற்கு எழுதிய தம் அணிந்துரையில் குறிப்பிடுகிறார். பண்டிதமணி காட்டும் சொல் நயங்களுக்கு இரு சான்றுகளைக் காண்போம்.

திருவெம்பாவை ஆறாம் பாடலின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ள 'மானே' என்ற விளிச்சொல்லுக்குப் பண்டிதமணி எழுதியுள்ள உரை விளக்கம் படிப்பவர் சிந்தனையைத் தூண்ட வல்லதாகும். அவ்விளக்கம் வருமாறு: ''மான் - உவம ஆகுபெயர்; பெண்ணையுணர்த்தன்ற. கன்னிய ரெல்லோரும் முன்னை நாளில் ஒருங்கே இடப்பாவை நோன்பு குறித்து விடியுமுன் நீராடப் போதல் சுற்றிச் சூழ்ந்த பொழுது இப்பொழுது எழுப்பப்படும பெண்யானே விடியுமுன் எழுந்து வந்து நும் எல்லோரையும் எழுப்புவேன்' என்று சொல்லிவிட்டுப் போய்ப் பின் அதனை மறந்து மற்றெல்லோரும் தன் கடைவாயிலில் வந்து இறைவன் புகழ் பாடுதலைப் படுக்கையிற் கிடந்தவாறே அறிந்து நாணத்தால் அஞ்சி நோக்கினளாதலின், அது குறிப்பறிந்த மகளிர் மருட்சி நோக்குக் குறித்து, 'மானேயென்று அழைப்பாராயினர். சமணர் வஞ்சகச் சூழ்ச்சியான மனம் வருந்தியிருந்த மங்கயைர்க்கரசியரை நோக்கி அது குறிப்பையுணர்ந்த திருஞான சம்பந்தர் 'மானி னேர்விழி மாதராய்' என்று அழைத்ததும் ஈண்டுக் கருதத்தக்கது (பக். 41-42)

### தொடர் நயங்கள்

'பாவெனப்படுவது உன்பாட்டு' என்று மாணிக்கவாசகர்கரைப் பார்த்து, சிவப்பிரகாசர் கூறுவது முழு உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை. 'திருவாசகம் ஒரு தித்திக்கு தேன் விருந்து. பாட்டுலகில் எழுந்த விந்தைகளில் எல்லாம் சிறந்த விந்தை இதுவே ஆம் என்பர் அறிஞர். நூல் புலவரால் ஒருங்கே பாராட்டப்பெறும் திருவாசகத்தில் பொருள் பொதிந்த தொடர்கள் பற்பல காணப்படுகின்றன.

இத்தொடர்களின் நயங்களையும் நுட்பங்களையும் பண்டிதமணி தம் உரையுள் செவ்விதின் எடுத்துக் காட்டியுள்ளார்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவையின் தொடக்கப் பாடலில் இறைவனை, ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருங் சோதி’ எனப் போற்றிப் பாடுகின்றார். இப்பாடலில் வரும் ‘அரும்பெருஞ்சோதி’ என்னும் தொடருக்குப் பண்டிதமணி எழுதியுள்ள உரை விளக்கம் வருமாறு: ஒளி நிலையைத் திருமூலர், அண்டவொளி, பிண்டவொளி, அகண்டவொளியென மூவகைப்படுத்திக் கூறுவர். அண்டவொளி ஞாயிறு திங்கள் விண்மீன் முதலியவற்றிலுள்ளது. பிண்டவொளி உடம்போடு கூடிய உயிரறிவிலுள்ளது. அகண்டவொளி ஞான மயமாகிய இறைவன்பாலுள்ளது. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்’ என்று தாயுமானவர் கூறியதுங் காண்க. ஒற்றுமை நயத்தால் அகண்டவொளியாகவே இறைவனைக் குறிக்கொண்டு பரஞ்சோதியெனவும், பெருஞ்சோதி யெனவும், பேரொளிப் பிழம்பு எனவும் பெரியோர் வழங்குவர். இங்ஙனம் அறைவன் பேரொளிப் பிழம்பாகத் திகழவும், மாயாகாரியமாகிய உலகப் பார்வையுடைய ஆன்மாக்கள் உணர்தற்கு அரியனாவன் என்பது தோன்ற, ‘அரும்பெரும் சோதியை’ என்றார். அருமை-பாசஞான பசு ஞானமாகிய அநுபவ வுணர்வுக்கே புலப்படும் இயல்பினன் என்பதாம்.

**பொருள் நயங்கள்**

‘இறைவனோடு பாடலால் நேராகப் பேசும் பேறு பெற்றவர்களுள் மணிவாசகப் பெருமானை நிகர்த்தார். எவருமிலர். தன்னை அடியார்க்கத் தந்து அடியாரைத் தான் கொண்டதில் சிவவெருமானை விடத் தானே சதுரப் பாடுடையார் என்று மணிவாசகர் வழுத்துவது முகமன். மணிவாசகரை ஆட்கொண்டு, திருவாசகம் என்ற எய்ப்பில் வைப்பைப் பெறும் பேறு பெற்ற சிவபெருமானே சதுரப்பாடுடையார் என்பது தேற்றம். திருவாசகத்தைப் போன்ற ஒரு நூலை யாரும் பெற முடியுமா? எனத் திருவாசகத்தின் அருமை பெருமையினை அழகுற எடுத்து மொழிவர் தமிழ்க் கடல் ராய.சொக்கலிங்கம். மனம் கலந்து-பாட்டின் பொருளுணர்ந்து-படித்தால் திருவாசகத்தில் நூற்றுக்கணக்கான நயங்களை உணரலாம். இங்ஙனம் திருவாசத்தைப் பன்முறை ஓதி ஓதி உணர்ந்த தன் விளைவே பண்டிதமணியின் ‘கதிர்மணி விளக்கம்’ எனலாம்.

திருவெம்பாவையின் ஐந்தாம் பாடல் “மாலறியா நான்முகனும் காணா மலை’ என இறைவனைப் போற்றுகின்றது. திருமாலால் அறியப்படாத அடியினையும் பிரமனால் காணப்படாத முடியினையுமுடைய மலையுருவாய் நின்ற இறைவன்’ என்பது இவ் வரியின் வெளிப்படையான பொருள். இவ் வெளிப்படையான

பொருளைத் தருவதோடு, இவ் வரி உணர்த்தும் நுட்பமானதொரு குறிப்புப் பொருளையும்-நயப் பொருளையும்-பண்டிதமணி தம் கதரிமணி விளக்கப் பேருரையில் சுட்டிக் காட்டுகின்றார்.

**நிரல் நயங்கள்**

மாணிக்கவாசகர் பாண்டி நாட்டின் நல்லமைச்சராய் இருந்து தொண்டாற்றியவர். எனவே நிரல் எண்ணம்-வைப்புமுறைப் பார்வை-வரிசையறிவு அவருக்கு இயல்பாகவே வாய்த்திருந்தது. வாழ்வில் சிறந்து விளங்கிய இவ்வறிவின் தாக்கம் அவரது வாக்கிலும் ஆங்காங்கே படிந்தது. மாணிக்கவாசகர் சொற்களை அடுத்தடுத்து வைத்து, செய்திகளை நிரந்து இனிது சொல்லுவதில் வல்லவர்.

திருவெம்பாவையின் பதினான்காம் பாடலின் கண்ணிப் பெண்கள்,

“காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்”

சீதப் புலனாடும் பாங்கினை மாணிக்கவாசகர் சிறப்பித்துக் கூறுகிறார். இவ்வரிகளில் அடிகள், மகளிர் நிலத்தினின்றும் நீர் நிலையிற் புகுந்து நீராடு முறையில் நிகழ்வனவற்றை முறையே குறிப்பிடுகிறார். “முதலில் நீராடுதற்கு ஏற்ற முறையில் எழுந்து நின்று நீரிற் பாயத் தொடங்கியவுடன் காதுகளில் அணிந்த தோடுகள் அசைந்தனவென்பார் காதார் குழையாட எனவும், நிலத்தினின்ற நீர்நிலைக்கு விரைந்து செல்லுங்கால் உடம்பில் அணிந்த ஏனை அணிகலன்கள் ஒலித்தனவென்பார் ‘பைம்பூண் கலனாட’’ எனவும், நீருட் புகுந்து நீராடத் தொடங்குங்கால் கூந்தலிணிந்த மலர் மாலைகள் அசைந்தனவென்பார் ‘கோதை குழலாட’ எனவும், நீருள் முழுகத் தொடங்குங்கால் கூந்தலிலணிந்த மலர் மாலைகளில் உள்ள தேனை நுகரும் வண்டினங்கள் எழுந்து ஆரவாரித்தனவென்பார் ‘வண்டின் குழாமாட’ எனவும் முறைப்படுத்திக் கூறினர். இங்ஙனம் நிகழா நிற்க, குளிர்ந்த நீர் நிலையில் நீராடினர் என்பார். ‘சீதப் புனலாடி’ என்றனர். பொய்கை நீர் இயல்பாகவே குளிர்ந்ததாயினும் சீதப் புனல் என்றது, பனிப்பருவத்து வைகறைப் பொழுதில் மிக்க குளிர்ச்சியுடைய பற்றி (ப.72) என இவ்வரிகளுக்கு எழுதிய உரை விளக்கத்தில் பண்டிதமணி நுண்ணிதின் நிரல் நயம் சுட்டுகிறார்.

**கருத்து நயங்கள்**

பண்டிதமணி திருவாசகத்தில் 170 பாடல்களுக்குப் பேருரை கண்டவர். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய மூன்று பகுதிகளுக்குக்

‘கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை’கள் வெளிவந்துள்ளன. அப் பேருரைகளில் பண்டிதமணி, கவிமணி கூறுவது போல் ‘வையகம் போற்றுதிரு வாசகத்தின் உட்பொருளைக் கையிற் கனியாகக் காட்டுகின்றார்.

அறிஞர் உலகம் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் குறுந்தொகை உரையில் எழுதியுள்ள ‘நூலாராய்ச்சி’ என்னும் பகுதியை விதந்து கூறும். 81 பக்கங்களாலான அப்பகுதியைப் படிப்போர் உ.வே.சா. அவர்களின் அறிவுக் கூர்மையினை உணர்வர். அதுபோல், பண்டிதமணி தம் திருவெம்பாவை உரையில் ‘வரலாறு’ என்னும் பகுதியை எழுதியுள்ளார். 10 பக்கங்களானலான அப்பகுதியில் அவர் வெளியிட்ட சில நயமான கருத்துக்கள் வருமாறு:

1. பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் சைவ வைணவக் கன்னிப் பெண்கள் மழை வளங்குறித்தும், சிறந்த கணவரைப் பெறுதற் பொருட்டும் மார்கழித் திங்களில் வைகறையில் நீராடிப் பராசக்தியாகிய கௌரியை வழிபட்டு, நோன்பு மேற்கொண்டொழுகினர் என்பது, அடிகளருளிய இத் திருவெம்பாவையாலும் திருமால் பத்தியிற் சிறந்த ஆண்டாள் அருளிய திருப்பாவையாலும் அறியத்தக்கது (ப.2)

2. மார்கழி நீராடல் திருவாதிரைக்குப் பத்து நாள்கள் முன் தொடங்கித் திருவாதிரையில் முடிவு பெறும்; தைந்நீராடல் மார்கழித் திருவாதிரையில் தொடங்கி நடைபெறும் (ப. 4)

3. மார்கழி நீராடலால் விரும்பப்பட்ட பயன் பொதுவும் சிறப்புமாக இரு வகைப்படும். பொதுப் பயன், நாடு செழிக்க மழை பெய்தல். சிறப்புப் பயன், கன்னியர் சிறந்த கணவரைப் பெறுதல் (ப.5)

4. திருவெம்பாவையின் உள்ளுறைப் பொருளாகக் குறிக்கப்பட்டது. சக்தியை வியந்தது என்பது. சக்தி யென்றது பராசத்தியாகிய உமையம்மையை, அம்மையப்பனாகிய இறைவனை யடைதற்குரிய நெறிகள் பலவற்றுள்ளுஞ் சிறந்தது அன்புநெறி, அந்நெறியாமுகத் தலைப்படுவாரெல்லோரும் முதலில் அம்மையை வழிபட்டு அவள்மூலம் அப்பனையடைதல் வேண்டுமென்பது பெரியோர் கண்ட வுண்மை (ப.6)

5. ஆன்ம நாயகனாகிய இறைவனை அடைதற்குரிய பக்குவ முதிர்ந்த உயிர்களையே கன்னிப் பெண்களாகவும், ஆணவ மலவிருளிற் பிணிப்புண்டிருந் தலையே உறங்கிக் கிடத்தலாகவும், மலவாற்றலொழியப் பெறும் நிலையே துயில் நீத்தெழும் நிலையாகவும், மலபரிபாகமுடைய

வுயிர்கள் அ∴தில்லாத உயிர்களை உணர்த்தி அன்பு நெறிப்படுத்து இறையருளிற் றோய்வித்தற்கு அழைத் தலையே நீராட அழைத்ததாகவும் அமைத்துக் கொண்டு இ∴து (திருவெம்பாவை) அருளிச் செய்யப்பட்டது (ப.7)

6. கன்னியர் ஐந்தாண்டு முதல் பன்னீராண்டுத் தொடக்கம் வரை ஆண்டு வகையால் எண் வகைப்படுவர். ஈண்டுப் பாவை நோன்பு மேற்கொண்டவர் இவ்வெண் வகையினரே. முதலில் பன்னீராண்டுத் தொடக்கமுடைய பெரிய கன்னிப் பெண்கள் சிலர் தாமே விடியுமுன் துயில் நீத்தெழுந்து உடல் தூய்மை செய்து கொண்டு இறைவன் புகழைப் பாடிக் கொண்டு தம்மோடு ஒத்த பருவத்தினளான பன்னிராண்டுத் தொடக்கப் பருவத்து ஒரு பெண்ணை எழுப்பினர் எனவும், பின்னர் முறையே பதினொன்று பத்து ஒன்பது எட்டு ஏழு ஆறு ஐந்து ஆண்டுகளான பெதும்பைப் பருவத்தினரையும் பேதைப் பருவத்தினரையும் எழுப்பினர் எனவும் கொள்ள வேண்டும் (பக். 8-9)

7. ஐந்து முதல் பன்னிரண்டு ஆண்டுப் பருவத்தினர் சிறுமியராக இருத்தலின், வைகறையில் அன்னார் எழுந்து நீர்த்துறை சென்று நீராடற்கு எங்ஙனம் துணிவர் என்று சிலர் ஐயுறக்கூடும். இவ்வினம் பெண்கள் நீராடச் செல்லுங்கால், தாய்மாரும் உடன் செல்லுவர் எனவும், தாயருகே நின்று நீராடுதலின் இ∴து அம்பா வாடல் ஆகும் எனவும் பரிபாடல் கூறும் (ப.10)

'திருவாசகத்தை ஒத்த ஞானப் பனுவல் வேறு எம் மொழியிலும் காண்டதற்கு அரிதாம். என்பது பண்டித மணியின் கருத்து. அவர் தம் திருவாசக உரை விளக்க நூல்களில் எடுத்துக்காட்டியுள்ள கருத்து நயங்கள் மிக பலவாகும். அவை திருவாசகத்தை அவர் எந்த அளவிற்கு மணம் ஒன்றிப் பயின்றுள்ளார் என்பதைத் தெள்ளிதின் காட்டுகின்றன.

**அரிய நயங்கள்**

பண்டிதமணியை 'நயங் காண்பதையே வாழ்க்கையாகக் கொண்ட இலக்கியத் தும்பி' என வழங்கலாம். அவரது எழுத்துக்களில் 'நயம்' என்ற சொல்லின் ஆட்சி பயின்று வரக் காணலாம். 'நயச்சுவை நனி சொட்டச் சொட்ட எழுதிய உரை வலவர்' அவர்! எழுத்துக்களில் மட்டுமன்று, அவரது சொற்பொழிவுகள், வகுப்புக்கள் ஆகியவற்றிலும் நயங்கள் மலிந்து காணப்பட்டன. "நம் பண்டிதமணி அவர்கள் இன்று திருவாசகத்திற்குக் கதிருரை ஒன்று எழுதி வருவது தமிழின் நல்ல காலமே ஆம். திருவாசகத்தினைப் பற்றி அவர் செய்த சொற்பொழிவுகளையும் 'இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து' என்பது

முதலிய பகுதிகளுக்கு அவர்களுக்கு அவர் கூறிய நயங்களையும் கேட்டவர்கள் 'இவர் உரை ஒன்று எழுதி வெளியிட்டாரா?' என்று விரும்பிய விருப்பம் எல்லாம் இன்று நிறைவேறி வருகிறது. இது கண்டு எந்தத் தமிழன் மனந்தான் மகிழாது? என்பர் அறிஞர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். 'பண்டிதமணியிடம் மாணவராய் இருந்த எவரும் வாழ்க்கையில் தாமாகப் பிறகு இலக்கியச் சுவை பெற முயலாமல் இருத்தல் அரியதொன்று என்றே கூறுதல் வேண்டும்' என்பர் அறிஞர். அ.சிதம்பரநாதனார். உ.வே.சா. 'பதிப்புத் தந்தை' எனில், மறைமலையடிகள் 'தனித்தமிழ்த் தந்தை' எனில், பண்டிதமணி தமிழ் நயத் தந்தை ஆவார்.

'செங்கணவன்பால்' எனத் தொடங்கும் திருவெம்பாவைப் பாடலின் (பா.17) விளக்கவுரையில் பண்டிதமணி காட்டியுள்ள நயம் நுண்ணறிவுடையோர் வியந்து போற்றத்தக்க ஒன்றாகும். அந்நயம் வருமாறு:

"இது நீராடுங்கால் ஒருத்தியை நோக்கிக் கன்னியர்பலருங் கூறியதாக அருளிச் செய்யப்பட்டது. இப்பகுதியில் மகளிரை முன்னிலைப்படுத்திய பிற இடங்களிலெல்லாம் 'வாட்டங்கண் மாதே' (1), 'நேரிழையாய்' (2), 'முத்தன்ன வெண்ணகையாய்' (3), 'ஒண்ணித்தில நகையாய்' (4) 'தேன்வாய்ப் படிறீ' (5). 'வாருருவப் பூண் முலையீர் (6) என்று அவர்தம் முன்னழகு சுட்டப்பட்டன. அவ்வாறாகவும் ஈண்: 'கொங்குண் கருங்குழலி' ('மணம் தங்கிய கரிய கூந்தலையுடைய பெண்ணே') எனப் பின்னழகைச் சுட்டிக் கூறியது விளிக்கப்பட்டவள் இறைவனுடைய அருட்பெருக்கையும் பேருகாரத்தையும் விளையாட்டு நிலையில் அவள் கூந்தலழகைப் புகழ்வது போலச் சுட்டிக் கூறி வற்புறுத்தியபடியாம்." (பு.86). இங்கே ஆசிரியர் மகளிரது இயற்கைப் பண்பினை மனத்திலே கொண்டு அழகியதொரு விளக்கத்தினை அளித்துள்ளார். இப்பகுதியைப் படிப்பவர் மனக்கண்ணின் முன்னே, விளையாட்டு நிலையில் புறக்கணிப்பது போல் திரும்பி நிற்கும் ஒரு பெண்ணின் அழகிய ஓவியம் வந்து நிற்பது திண்ணம்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவையின் ஐந்தாம் பாடலில் 'ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்' என ஞாலத்தினை முதலில் வைத்தும், ஆறாம் பாடலில் 'வானே நிலனே பிறவே அறிவரியான்' என வானை முதலில் வைத்தும் இறைவனின் அருமைப் பண்பினைச் சுட்டுகின்றார். இங்ஙனம் அடிகள் இரண்டனையும் மாறிச் சுட்டுவதற்கான காரணத்தைப் பண்டிதமணி தம் உரை விளக்கத்தில் நன்கு எடுத்துக்காட்டுகின்றார். "இதன் முன்னைத் திருப்பாட்டில் 'ஞாலமே விண்ணே பிறவோ அறிவரியான்' எனவும் கூறியவற்றின்

பொருளொன்றேயாயினும், அத் திருப்பாட்டில் இறைவன் திருமேனி தரித்துக் கொண்டு எழுந்தருளிக் காட்சியளித்து துன்புறுத்தியதற்கு இடனாதல் பற்றி ஞாலத்தை முதற் கண்ணும் இத்திருப்பாட்டில் வானுலகத்துக்கும் அப்பாலுள்ள சிவலோகத்திலிருந்து வானுலகத்துள்ள தேவர்க்கும் அரியனாய் ஏழைகளாகிய தம்மை யாட்கொள்ள வருவதற்கு வான்வழி இடனாதல் பற்றி வானை முதற்கண்ணும் கூறினர். (ப.42-43) என்பது அவர் தரும் அரிய விளக்கம் ஆகும்.

''புத்தி நுட்பங் கண்டேன் உன்
புலமை கண்டேன் சிவநெறிசேர்
பக்தி கண்டேன் செந்தமிழின்
பாகின் இனிய சுவை கண்டேன்
சித்தம் மகிழ்ந்து நண்பா நீ
செய்த கதிர்மா மணிவிளக்கை
எய்த்த நாளில் வைப்பாக
எண்ணிப் போற்றி வாழ்வேனே.''

என்னும் கவிமணியின் வாக்கு, பண்டிதமணியின் உரைச் பிறப்புக்குக் கட்டியம் கூறுவதாகும்.

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2018**

**SECOND YEAR NON – SEMESTER**

**TAMIL**

**தாள் - 10 விருப்பப்பாடம் (அ) உரையாசிரியர்களும் உரைமரபுகளும்**

**நேரம் : 3 மணி** **மதிப்பெண் : 100**

**பகுதி - அ**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் ஐந்தினுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.** (5 x 5 = 25)

1. நூலாசிரியரே எழுதிய உரைகளைக் கூறுக.
2. திருக்குறளில் சிறப்புப்பாயிரம் பெறும் இடத்தினை விளக்குக.
3. இறையனார் களவியல் உரையின் தொடரமைப்பு குறித்து எழுதுக.
4. சேனாவரையரின் இலக்கணப் புலமையினைத் தெளிபடுத்துக.
5. பேராசிரியரின் பன்னூற் பயிற்சியை எடுத்துக் காட்டுக.
6. அடியார்க்கு நல்லாரின் உரை இயல்பு யாது?
7. நச்சினார்க்கினியரின் சமயம் பற்றி குறிப்பிடுக.
8. பண்டிதமணியின் பொருள் நயங்களைக் குறிப்பிடுக.

**பகுதி - ஆ**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.** (5 x 15 = 75)

9. களவியலுரையில் காணப்பெறும் நாடகப் பாங்கின் சிறப்பினைத் தொகுக்க
10. இளம்பூரணரின் தொல்காப்பியப் பொருளதிகார உரையின் உரைநயங்களை விரித்துரைக்க
11. நச்சினார்க்கினியரின் உரைநெறிகளை விரித்துரைக்க
12. பரிமேலழகரின் திருக்குறள் உரையில் இடம் பெறும் மாறுபட்ட உரையினைத் தெளிவுபடுத்துக.
13. அடியார்க்கு நல்லாரின் உரைத்திறனைப் புலப்படுத்துக.
14. திருப்பாவை உரையின் சிறப்பு மிக கருத்துக்களை விரித்துரைக்க
15. திருவெம்பாவை உரையின் தனித்தன்மைகளைத் தொகுக்க
16. பேராசிரியரின் தொல்காப்பிய பொருளதிகார உரையினைத் தொகுக்க